கணக்கு

மேலாண்மை பொன்னுச்சாமி

திருவரசு புத்தக நிலையம்

கணக்கு

மேலாண்மை பொன்னுச்சாமி

திருவரசு புத்தக நிலையம்

23, தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை – 600 017.

முதற்பதிப்பு : மார்ச், 1994
இரண்டாம் பதிப்பு : நவம்பர், 2010
© உரிமை: ஆசிரியருக்கு

பதிப்பாசிரியர்: வானதி திருநாவுக்கரசு

விலை: ரூ. 60.00

❐	Title	**KANAKKU**
❐	Author	**MELAANMAI PONNUSAMY**
❐	Language	Tamil
❐	Subject	Short Stories
❐	Edition	Second Edition, November - 2010
❐	Pages	192
❐	Published By	**THIRUVARASU PUTHAKANILAYAM** 23, Deenadayalu Street, Thyagaraya Nagar, Chennai-600 017. ☎ 24342810 / 24310769
❐	Price	**Rs. 60.00**

Laser typeset at : Sivaa Graphics, Chennai-94. Ph: 8939475707

Printed at : **NOVENA OFFSET PRINTING CO.,** Chennai - 5 ✆ 28446166, 28446891

இரண்டாம் பதிப்புக்கான முன்னுரை

1994 மார்ச் மாதம் முதல் பதிப்பாக வெளியான ‘கணக்கு’ என்ற இந்தச் சிறுகதைத் தொகுப்பு, அறந்தாங்கி தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடத்திய கலை இலக்கிய இரவில் வெளியிடப்பட்டது. ‘உதிரிப்பூக்கள்’ இயக்குநர் மகேந்திரன் நூலை வாழ்த்திப் பாராட்டி உரையாற்றினார்.

பதினாறு வருடங்கள் கடந்த பிறகு, அத்தனை சிறுகதைகளையும் மீண்டும் முழுமையாக வாசித்தேன். இப்போதும் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவையாக உள்ளன. வாசிப்போட்டமான சரளத்திலும், கரிசல் கிராமத்தின் வெக்கைமிகு வாழ்வின் உள்மர்மப் புதிர்முகங்களை உணர்த்துவதிலும் வாசித்த மனசை வசியப்படுத்துகிற வசீகரம் இருக்கிறது.

நிலமில்லா கூலிமக்களின் வறுமைப்பட்ட அவலப் பிழைப்பும், கண்ணீர் வெதுவெதுப்பும்... மானமிழக்காத சூடு சுரணையுள்ள போர்க்குணமும், ரோஷாக்னியின் கனல்தெறிப்பும் பதிவாகியுள்ளன. புறஉலக மூர்க்கமும், மனஉலக நுட்பங்களும் பிணைந்துள்ள இக்கதைகளின் தனித்துவச் சிறப்புகள் நிறைய.

வாழ்க்கையை மேன்மைப்படுத்த விழைகிற முற்போக்குச் சிந்தனையும் யதார்த்தவாதமும், சமகாலத்து சமுதாய உள் வெளிமுகங்களை உணர்த்துவதுடன், காலத்தைக் கடந்தும் உயிர் வாழும் அமரத்துவ ஆயுளும் ஆற்றலுமிக்கவை என்பதை இக்கதைகள் உணர்த்துகின்றன.

இந்த இரண்டாம் பதிப்பை அழகாக வெளியிடுகிற புகழ்மிகு திருவரசு புத்தக நிலையம் பொறுப்பாளர் திருமிகு இராமநாதன் அவர்களுக்கும், 'வெற்றிப்படிகள்' எழுதி எத்தனையோ பேருக்கு நம்பிக்கைச் சுடர் ஏற்றிவைத்த ஐயா 'வானதி திருநாவுக்கரசு' அவர்களுக்கும், எனது இலக்கியப் பயணத்திற்கு ஆணிவேராகவும் ஆதாரபலமாகவும் எப்போதும் திகழ்கிற எனது தம்பி செ. கரிகாலனுக்கும், இந்தத் தொகுப்பின் ஒழுங்கமைப்பில் உதவிய எனது துணைவியார் பொன்னுத்தாய், இளைய மகள் தென்றல் உள்ளிட்ட எனது குடும்பத்தினர் அனைவருக்கும் எனது நன்றிகள் என்றென்றும் உரித்தாகும்.

நன்றி!

என்றும் உங்கள்
மேலாண்மை. பொன்னுச்சாமி

மேலாண்மறைநாடு - 626127
இராஜபாளையம் வழி
விருதுநகர் மாவட்டம்
04562-271233
9942610700

சமர்ப்பணம்

தேச நலனுக்காக சிந்தனைக்காக
தனது ஆத்மாவையும் வாழ்க்கையையும்
முழுக்க அர்ப்பணித்துவிட்டு, இன்றைக்கும்
தியாகம் செய்து கொண்டிருக்கிற
சுதந்திரப் போராட்ட தியாகி
ரெட்டியபட்டி சுவாமிநாதன் அவர்களுக்கு...

சுதந்திரம் பெற்ற பிறகும்
சர்வோதயா நூல் உழைத்து,
தனது பிள்ளைகள்அனைவருக்கும்
கலப்புத் திருமணம் செய்வித்து,
ஜாதி மறுப்பு வாழ்க்கை வாழ்ந்து
அமரராகிவிட்ட அவரது நினைவுகளுக்கு...

உள்ளே

1.	கணக்கு	7
2.	'அப்'பாவி	22
3.	அக்கதை	38
4.	ரௌத்ரம்	50
5.	வேலி முள்	65
6.	வளத்தையா	83
7.	புரிதல்	94
8.	பொய்விலை	104
9.	விலக்கு	119
10.	அந்நியமாய்...	134
11.	யார் நான்?	151
12.	மரணத்தின்விலை	165
13.	பிரம்புதேசம்	179

1.கணக்கு

வண்டிக்காரத் தேவருக்கு வழக்கம் போலில்லை மனசு. இண்ட முள் செடியில் கால் வைத்த மாதிரி ஒரு காந்தல். பூ முட்கள் குத்தின வலி. தாங்க முடியாத வலி ஒன்றும் கிடையாது. ஆனால், மனநிம்மதியைக் கிழித்து நாசம் பண்ணுகிற வேதனை.

'இப்படியும் ஒரு பயலுக்குப் புத்தி போகுமா? இம்புட்டு அற்பத்தனம் இந்தப் பயகிட்டே இருந்துருக்கா...? ச்சே...'

குடிகாரன் வார்த்தை மாதிரி இந்த நினைப்புத் திரும்ப, திரும்ப அவருள். புண்ணைச் சுற்றுகிற ஈ மாதிரி, சள்ளை பிடித்த இந்த நினைப்பிலிருந்து தப்பிக்கவும் முடியவில்லை வண்டிக்காரத் தேவருக்கு.

இந்நேரத்துக்கு ஒரு உறக்கம் போட்டு முழித்திருப்பார். இன்றைக்கு என்னடாவென்றால்... பொட்டென்று இமை மூடவில்லை. உறக்கம் கிட்டத்தில் அண்டவே மாட்டே னென்கிறது.

மாடுகள் தன்னடையாய் நடக்க, வண்டிப் பைதாவின் 'டொடக், டொடக்' என்கிற ஒரு சத்தம். வண்டிச் சட்டத் தில் பருத்தி விதை மூட்டை. அதன் மேல் வைக்கோல் திணித்த சாக்கு மெத்துமெத்தென்று. அதில் படுத்திருக்கிற தேவருக்கு மேல் விரிந்து கிடக்கிற இருட்டு வானம். சிதறிக் கிடக்கிற நட்சத்திரப் பருக்கைகள். புகலிடமற்ற தூசி மேகங்கள் கிழிந்து கிடக்கிற ஒளித் துணிகளாக திட்டுத் திட்டாய்...

எப்போதாவது கீச்சென்று அலறிக் கொண்டு பறக்கிற ராக்குருவி. சத்தமில்லாமல் கிட்டத்தில் வந்து விட்டு, பதற்றத்தோடு விர்ரென்று பறக்கிற குருட்டு வெளவால்.

பாரவண்டி. நீளவாக்கில் ரெண்டு தேக்குவாரிகள். அதன் குறுக்காக மூட்டைகள். அரிசி மூட்டை, புண்ணாக்கு மூட்டை, பலசரக்கு மூட்டைகள் எல்லாம் கீழ் வரிசையில். வெல்ல மூட்டைகள், பருத்தி விதை மூட்டை கள், தேங்காய் மூட்டைகள் எல்லாம் மேல் வரிசையில், போட்டு இறுக்கிக் கட்டப்பட்டிருந்த பாரக்கயிற்று இடைவெளியில் எண்ணெய் டின்கள், கூடைகள், பழத்தார், இன்னும் பொடி பொட்டுச் சாமான்கள்.

எல்லாச் சாமான்களையும் பாரமேற்றி, கட்டிமுடித்து, அரிக்கேன் லைட்டை அடியில் கட்டி உண்டு முடித்து விட்டு ராசபாளையத்தில் மாட்டைப் பூட்டினால்... வண்டி தன் போக்கில் நகரும். இவர் பாட்டுக்கு நீட்டி நிமிர்ந்து படுத்து விடுவார். ஹெட்லைட் வெளிச்சத்துக்கு விலகி விலகி ரோடேறிக் கொள்கிற பழக்கம், மாடுகளுக்கு. தார் ரோட்டில் பைதா பதிகிற சத்தமும், 'டொடக், டொடக்' என்கிற குடத்தின் சத்தமும், மாட்டுச் சலங்கைகளின் ஒரு சீரான சிரிப்பும், தார்ரோட்டில் மோதி எழுகிற மாட்டுக் குளம்புகளின் ஓசையும் ஒன்று கலந்து, பின்னிப்பிணைந்து சங்கீதமாய்க் கலவை பெற... அதன் மயக்கத்திலேயே மனுஷர் அம்சமாய்க் கண்ணயர்ந்து விடுவார். ரோடுகளில் ஓடியலைந்து மூட்டை சுமந்த அலுப்பு.

சந்திரப்பட்டிக்கு வந்து சேரவும், அவருக்கு விழிப்புத் தட்டிவிடும். வண்டியை ஓரமாய் நிறுத்தி விட்டு இறங்குவார். ராவுத்தர் கடையில் டீ சொல்வார். அதற்குள் ஒரு இனிப்புப் போண்டாவையும், முறுக்கையும் நொறுக்கி உள்ளே தள்ளிக் கொள்வார். வெத்தலை பாக்கு வாங்கிக் கொண்டு வண்டிச் சட்டத்தில் ஏறிக் கொள்வார். அவர்

'தம்ம்' பிடித்து ஏறுகிற சத்தத்திலேயே மாடுகள் கிளம்பி விடும்.

சங்கம்பட்டியைத் தாண்டுவதற்குள் உறங்கி விடுவார். அப்புறம் கரிசல் குளம் வந்துதான் விழிப்பு. கண்மாய்ப் பட்டி வரைக்கும் பாதை மோசம். கிடங்குகளும் நொடிகளு மாய்க் கிடக்கும். கைக்குள் கயிறை வைத்துக் கொண்டு கண் விழிப்பாய் ஓட்டணும். கொஞ்சம் அசந்து விட்டால் கூட 'குடை வண்டி' தூக்கிப் போட்டு விடும். கதை கந்தலாகிப் போகும்.

கண்மாய்ப்பட்டி கடந்து விட்டால் ஊர் வரைக்கும் ஒரே தூக்கம் தான்.

அப்படித் தூங்குகிற தேவர்தான், இன்றைக்குக் கண்ணை மூடாமல் வண்டியில் கிடக்கிறார். பின்னோக்கி நகரும் நட்சத்திரங்களின் சிமிட்டல்களைக் கூட கவனிக்க முடியாமல், மனம் முழுக்க அந்தச் சனியன் பிடித்த நினைப்பு.

சின்னையாத்தேவர் நல்ல பாட்டாளி. மாடு வண்டி வைத்துச் சம்சாரித்தனம் செய்கிறவர். ராவ்வும் பகலுமாய் முரட்டுப்பாடாய்ப் பாடுபடுகிறவர். வஞ்சனையில்லாமல் சாப்பிடுவார். கும்பா நிறைய கட்டிக் கம்பஞ்சோற்றை வைத்துக் கொண்டு பிய்த்து உருட்டி விழுங்குவார். அப்புறம் ஒரு கும்பா கரைசலாய்க் கரைத்துக் குடிப்பார். நல்ல விரிந்த தேகக்கட்டு. அகலமுதுகு. எலும்பு தெரியாத சதைத்திரட்சி. சதையும் வைரம் பாய்ந்து உருளைக் கட்டையாய் நகர்ந்தலையும்.

காடுகரை உண்டு, பாடு ஜோலி உண்டு என்று கிடந்த சின்னையாத்தேவர் வேறு எங்கும் போனதேயில்லை. வருஷத்துக்கொரு தடவை மிளகாய் வத்தல் விற்கப் போய் வருகிற சங்கரன் கோவில், அவரைப் பொறுத்தமட்டில் வேறோர் உலகம்.

அப்படி... குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டிருந்த சின்னையாத்தேவரை உள்ளூர்க் கடைக்காரன் ராமசாமிதான் மெள்ளச் சிம்பி விட்டான்...

"அண்ணாச்சி... ராசபாளையத்துக்கு வண்டி போடுதீகளா?"

"எதுக்கு?"

"கடைப்பாரத்துக்கு..."

"வேண்டாமய்யா. உண்டான பாடு சோலிகளைப் பார்த்துக்கிட்டுக் காட்டைக் காத்துக்கிடந்தா... போதும்."

"உண்டான பாடுசோலிகளை யாருவிடச் சொன்னது? பாருங்க... வாரத்துக்கு ஒரு நா மட்டும் வண்டியைப் போடுங்க. வர்ற வாடகை வெவசாயச் செலவுக்கு ஆகும்லே?"

"அம்புட்டு வாடகைக்கு... பாரம் கெடைக்காதுப்பா..."

"என்னண்ணாச்சி அப்படிச் சொல்லிட்டீக? நம் மூர்லே ஆறு கடைக்காரங்க இருக்காங்க. ராசபாளையம் சந்தைக்கு வருவாக. பாரம் போடாம எப்படிக் கொண்டாந்துர முடியும்?"

"அவுகளைத் தொண்ணாந்துக்கிட்டுத் தானே திரியணும்? அந்தப் பொழைப்பு நமக்கு வேண்டாமப்பா..."

"அதென்ன அப்படிச் சொல்லுதீக? கடைக்காரங்க வாங்குன சரக்கை ஊரு கொண்டுவந்து சேக்க வழியில்லாம முழிச்சிக்கிட்டிருக்காங்க. அவங்கதான் உங்களை தொண்ணாந்துக்கிட்டு அலையணும்..."

"அப்படியா சொல்றே? வண்டியடிக்கலாம்ங்குறீயா?"

"நானாச்சு. என்ன நம்பி வண்டி போடுங்க. மத்ததை நா பாத்துக்கிடுதேன்..."

அப்படி வண்டி போட்டவர் தான் சின்னையாத்தேவர். மழைக் காலம், பனிக்காலம் எதுவானாலும் சரி... தவறாமல் பதிவாய் வண்டியடித்தார். வாராவாரம் வியாழக்கிழமை வரத் தவறினாலும் தவறிப் போய் விடும். இவரது வண்டி ராசபாளையம் சந்தைக்கு வருவது தவறுவதேயில்லை.

நாளாவட்டத்தில் சின்னையாத்தேவர் என்கிற அம்மா அய்யா வைத்த பெயர் மறந்து போய்... அவரே உண்டாக்கிக் கொண்ட 'வண்டிக்காரத்தேவர்' என்கிற பெயரே நிலைத்துப் போய் விட்டது.

எல்லாக் கடைக்காரர்களும் சரக்குகளை வாங்கி வண்டிக்கருகில் கொண்டு வந்து சேர்த்து விடவேண்டும். ராமசாமிக்கு மட்டும் தனிச் சலுகை. பாதை போட்டுக் காட்டியவனல்லவா!

ராமசாமி என்றால் இவருக்குத் தனிப்பாசம். வயசில் சின்னவன்தான். முப்பது முப்பத்தொன்று தான் இருக்கும். நல்ல விவரக்காரன். நல்ல மனசுக்காரன். ஏவாரிக்குரிய கள்ளத்தனம், கபடுசூது இருக்காது.

ஊரிலிருந்து கலிங்கப்பட்டி ரெண்டரை மைல். சைக்கிளை அங்கே நம்பிக்கையாக ஓரிடத்தில் போட்டு விட்டு பஸ் ஏறி ராசபாளையம் வரணும். வந்து சேர்ந்து விட்டால் போதும், சாக்குக் கட்டும் டின்னுமாய் அவன் பின்னாலேயே 'லொக் லொக்' என்று அலைவார்.

வெல்லக்கடையில் விலை 'திகைந்த'வுடன் அவர் தான் சாக்குப் பிடிப்பார். பலசரக்குக் கடையில் இவன் சிட்டை சொல்லி விட்டு போய் விட வேண்டியது. அவர்தான் கடுகு, சீரகம், பருப்பு அயிட்டம் எல்லாத்துக்கும் பை பிடித்து, கழுத்துக்கட்டு கட்டி, மூட்டையாக்கி தைத்துப் போடுவார். எல்லா மூட்டைகளையும் இவரே தூக்கிக் கொண்டு வந்து வண்டியில் சேர்த்து விடுவார். தூக்குக் கூலி என்று அஞ்சுபைசா செலவுக்குக் கூட வழி வைக்க மாட்டார்.

அவன் வந்து விட்டால்... இவருக்கும் சல்லிக்காசு செலவிருக்காது. டீ, வெத்தலை பாக்கு எல்லாம் அவனே வாங்கிக் கொடுத்து விடுவான். மதியச் சாப்பாடு 'சிங்க விலாஸ்' கிளப்கடையில். முட்டை, மீனோடு சாப்பாடு வயிறுமுட்ட. ரெண்டு கும்பா கம்பஞ்சோற்றை விழுங்குகிற தேவருக்கு இந்த சிங்கவிலாஸ் சாப்பாடும், பொரிக்கறி வகைகளும், மீன் ருசியும் தேவாம்ருதமாயிருக்கும். சோற்றை 'கொண்டா கொண்டா' என்று இழுக்கும். எல்லாம் அவன் செலவுதான்.

'அவன் துட்டு விஷயத்துலே கணக்கு வழக்கே பாக்க மாட்டான். செலவழிக்கிறப்பவும் 'இம்புட்டுக் காசு பணம் கரையுதே'ன்னு நினைக்க மாட்டான். மனுசத் தரத்தை மட்டும்தான் மதிப்பான்.'

இதுதான் வண்டிக்காரத் தேவரின் மனசுக்குள் உட்கார்ந்திருக்கிற மதிப்பு. ராமசாமி மீது இவருக்குத் தனிப் பாசம் வருவதே இதனால்தான்.

''இந்த உலகத்துலே மனுசனை மனுஷனா எவன் மதிக்கான்? அணா பைசாவா – கூலிக்காரனா – கால்லே ஒட்டுன தூசி துரும்பாத்தானே நெனைக்கான்? அம்புட் டுத் தூரத்துக்கு எல்லாப் பயலுக மனசும் காய்ஞ்சு கனல் பறந்து போய்த்தானே கெடக்கு! மனுஷனை மனுஷத் தரத்தோட மதிக்கிறதுக்கு மனசிலே ஈரம் இருக்கணும்லே? ஏவாரியாயிருந் தாலும் ராமசாமிகிட்டே அந்த ஈரம் இருக்குல்லே...'' என்று தேவர் சத்தம் உயர்த்திக் கேட்கிற போது, அவரது நெஞ்சு உடைந்து, சத்தம் நெகிழ்ந்து கரகரத்து விடும். கண்ணோரங் களில் மனநெகிழ்வு நீர்த் துளியாய் முகம் காட்டும். தார்ப்பாய்ச்சி வேட்டி கட்டிய வெற்றுடம்பில் ரோமங்கள் சிலிர்த்து அடங்குகிற உணர்ச்சிப் பரவசம் மின்னி மறையும்.

மற்ற கடைகளில் மூட்டைகளை இறக்கிப் போட்ட கையோடு வாடகையைக் கணக்குப் பார்ப்பார். கசறுவார். 'அம்புட்டு இம்புட்டு' என்று அழிச்சாட்டியம் பண்ணுவார்.

"இப்படித்தான் ராமசாமி கடையிலேயும் செய்வீரா?"

"அது கதையே வேற. நீ ஒங்கணக்கைப் பாரு" என்பார் கட்டன்ரைட்டாக.

ராமசாமி கடைக்குப் போனால்... நிஜமாகவே கதை வேறுதான். மூட்டைகளை இறக்குவார். பாரக்கயிற்றைச் சுருட்டுவார். அப்போதே ராமசாமி கலர் உடைத்துக் கொடுப்பான்.

"குடிங்க அண்ணாச்சி..."

"ம்..."

"இந்தாங்க, வாடகை ரூவா."

"சரி."

அப்படியே சுருட்டிய நிலையில் மடிக்குள் சொருகு வார்.

"எம்புட்டுன்னு எண்ணிப் பாருங்க."

"என்னத்துக்கு அதெல்லாம்?"

கணக்கே பார்க்கமாட்டார். கணக்குப் பார்ப்பது அவன் மனசை இழிவுபடுத்துவது போல். அந்த உறவைக் காறித்துப்புவது போல. அப்படித்தான் தேவர் நினைப்பார்.

அது மட்டுமல்ல... அந்தக் கடையே தன் கடை போல நினைப்பார். ஊருக்குச் சாமி கும்பிட வெளியூர்க் கூட்டம் வரும். அதை நைஸ் பண்ணிப் பேசி, ராமசாமி கடைக்கு கொண்டு வந்து விடுவார், சாமான்கள் வாங்க.

கல்யாணம், சடங்கு போன்ற நல்லது நடத்துகிற குடும்பத் தாட்களிடமும் ராமசாமி பெருமை பேசி, குழை யடித்து... ராமசாமி கடையிலேயே சரங்கு வாங்கி விடச் செய்வார். மூட்டைகளைத் தூக்கிப் போடுவது போன்ற முரட்டு வேலைகளில் கணக்கு வழக்கில்லாமல் உதவி செய்வார்.

இவரது சொந்தக்காரர்கள் தேவரை ரொம்ப இளப்ப மாய் நினைத்துக் கேலி பண்ணுவார்கள்.

"இந்தா, ஒனக்கென்ன கோட்டியா? இப்படி ராமசாமி கிறுக்குப் பிடிச்சுப் போய் திரியுரியே, என்ன சோலிக்கு? கடைவெச்சுக் கொள்ளையடிக்கிற ஏவாரி. அவனுக்கு நீயென்ன சப்போர்ட்டு?"

அவர்களை அலட்சியமாய்ப் பார்ப்பார். 'கிணற்றுத் தவளைகளாய்க் கிடந்து பழமையில் ஊறிக் கிடக்கிறீர்களே...' என்கிற பரிகாசத் தொனியில் பார்ப்பார். அதே பரிகாசத்தோடு ஒரு சிரிப்பு வேறு.

"அண்ணன் தம்பிகளுக்குள்ளேயே ஆயிரம் சண்டைச் சத்தம், பங்காளிக் காய்ச்சல், வெட்டுக்குத்து வெவகாரங்க. இப்பேர்ப்பட்ட ஒலகத்துலே ஒத்துமையும் பாசமும் எங்கிட்டு இருந்து வந்துரும்? சொல்லுங்க" என்று ஆவேசமாய் கேள்வி கேட்கிற தேவர், சட்டென்று குரலை மிருதுவாக்கித் தணிந்த கனிவோடு சொல்வார்:

"அவன் ஏவாரிதான். ஆனா, கணக்குப் பாக்காத பாசக் காரன். மனுசனை மனுசனா மதிக்கிற மனுசன். அது தான்ய்யா முக்கியம். பெருசா பேச வந்துட்டாக... போங் கய்யா" என்று பரிகாச உச்சமான சிரிப்போடு முடிப்பார்.

அப்படிச் சொல்கிற போது அவரது நெஞ்சு ரொம்பக் கம்பீரமாய் நிமிரும். வெற்றிலைக் காவியேறிய உதடுகளில் பெருமிதப் புன்னகை ஒளி வீசும். கண்களில் ஒரு புதிய உலகை– உறவைக் கண்டுவிட்ட பூரிப்பு...

எல்லாவற்றையும் பொய்யாக்கி விட்டானே பாவி ராம சாமி... இதை நினைக்க நினைக்க வண்டிக்காரத் தேவருக்குள் பூ முள்ளின் நறுக், நறுக்.

வண்டி சத்திரப்பட்டிக்கு வந்தது. வழக்கம் போல மாடுகளே ஓரங்கட்டி நின்றன. தேவருக்கு மனநிலை

சரியில்லை. டீ குடிக்க விருப்பமில்லை.

வலத்து மாட்டை சுண்டிப் பிடித்து இடத்து மாட்டைப் பத்தினார். மாடுகள் புரியா தன்மையோடு வாலைச் சுழற்றிக் கொண்டு அரை மனசாய் தார் ரோட்டில் கால் வைத்து நடந்தன. ராவுத்தர் கடையைத் தாண்டி வண்டிப் பைதாக்கள் நெறுநெறுப்பாய் உருண்டன.

சரக்குகளையெல்லாம் வாங்கி முடித்து, கணக்கு வழக்குகளைக் கண்டு கழித்து, கச்சாத்துச் சிட்டைகளைத் தேவரிடம் ஒப்படைத்து விட்டு ராமசாமி பஸ் ஸ்டாண் டுக்குப் போய் விட்டான்... நாலு மணி பஸ்ஸுக்கு.

ராமசாமி போன பிறகு கொஞ்ச நேரம் கழித்துத்தான் தேவர் தேடிப் பார்த்தார். பருத்தி விதை மூட்டைகளுக்கான கச்சாத்துச் சிட்டை இல்லை. பச்சை மையில் அச்சடித்த பில்தான் விதைக்கடை பில்.

“அட இழவே, சிட்டை இல்லாம வெதை மூட்டை களைத் தூக்க விடமாட்டானே வெதைக் கடைக்காரன். இப்ப என்ன செய்ய?” என்று ஒரேயடியாகப் பரபரத்தார். வேறு வழியில்லை... லொக் லொக்கென்று ஓட்டமும் நடை யுமாய் பஸ் ஸ்டாண்டை நோக்கிப் பாய்த்தார். சந்தைக் கூட்டம். கூடுதலான ஜனசந்தடி. கடந்து போவதே பெரும்பாடு.

பஸ் புறப்படுவதற்குள் போய் ராமசாமியைப் பிடிச்சா கணுமே. நடையை எட்டிப் போட்டார். தார்ப் பாய்ச்சிய வேட்டி. தலையில் வட்டக் கட்டாகத் துண்டு. வெற்றுடம் பில் வியர்வை வரிகள். தோளிலும் முதுகிலும் அப்பிக் கிடக்கிற சாக்குத் தூசிகளான மெல்லிய சணல் புள்ளிகள்.

நல்லவேளை... அந்த பஸ் நிற்கிறது. உள்ளே நிறைய ஆட்கள். கண்டக்டர் டிக்கெட் அடித்துக் கொண்டிருந்தார். பஸ்ஸுக்குள் ஏறிப் பார்த்தார். ராமசாமி மண்டையைக் காணோம்.

பஸ்ஸுக்கு வலதுபுறம் ராமசாமி பேசுகிற சத்தம். இறங்கி பஸ்ஸைச் சுற்றிப் போனபோது...

வண்டிக்காரத் தேவரைப் பற்றிய பேச்சு. சட்டென்று இவருள் ஒரு நிதானம். உள்ளுக்குள் ஆர்வக் குறுகுறுப்பு... நின்று உன்னிப்பானார்.

"வண்டிக்காரத் தேவருக்கு நீ பாட்டுக்குச் செலவு பண்ணுதே... காபி, வெத்தலை, மீனோட சாப்பாடுன்னு திகிடு முகிடா செலவு பண்ணுதே... நாம பண்ற சில்லறை ஏவாரத்துக்கு இந்தச் செலவெல்லாம் கட்டுப்படியாகுமா? ரொம்ப இளிச்சவாய்த்தனமா இருக்கீயோன்னு நெனைக்கேன்..."

இது மேலத்தெரு கடைக்காரன். அவருக்குள் 'பக்... பக்'கென்கிற ஆவல் பரபரப்பு. என்ன பதில் சொல்வானோ என்கிற பதைப்பு...

"யாருக்கு எப்படியோ... தேவரு என்னைப் பொறுத்த வரைக்கும் தங்கமான மனுசரு. அவரு வண்டி போடலேன்னா... நாம சரக்குகளைக் கடைக்குக் கொண்டு போக முடியுமா? ரொம்பச் சீரழிவாப் போயிருமே."

"அதுக்காக... இம்புட்டுச் செலவா? கட்டுப்படியாகுமா?"

"கட்டுப்படியாகாம போவாது. நானும் நீ நெனைக்கிற மாதிரி இளிச்சவாயன் கிடையாது. காரியத்தோட தான் நா பழக்க வழக்கம் வெச்சிருக்கேன்."

"என்ன காரியம்? என்ன கணக்கு?"

"நா போடுற மூட்டை முடிச்சுகளுக்குத் தூக்குக் கூலி கொடுத்து வண்டிக்குக் கொண்ணாந்தா எம்புட்டுச் செலவாகும்? தேவருக்குச் செலவழிக்கிறதை விட கூலி ரொம்பப் போயிரும்லே?"

“அப்போ... ஒங்குடுமி ஆடுதுன்னா சும்மா ஆடலை? பாசத்துலே ஆடலே? காரியத்தோட, கணக்கோடதான் ஆடுது?”

‘நா ஒண்ணும் கூறுகெட்டவனில்லை... விவரமானவன் தான்’ என்கிற சுயதம்பட்டமாய் ராமசாமி சொன்ன சொற்கள்... தேவருக்குள் நறுக் நறுக்கென்று இறங்கின. இண்ட முள் செடியில் கால் வைத்துவிட்ட மாதிரி திடுக் கிடலாய் வலியை உணர்ந்தார்.

பாசமும் உறவுமாய், குழைந்து கனிந்து அவருள் பிரமாண்டமாய்க் கொலுவிருந்த ஒரு மாய பிம்பம் உடைந்து... நொறுங்கி... தூசிக்காடாய்...

மனுசப் பயலோட மறுபக்கம் இம்புட்டு இருட்டா? இருண்ட வனமா? நரிகளும் ஓநாய்களும் காகங்களும் ஓலமிடுகிற தந்திர பூமியா? மனுசன் இம்புட்டு சூட்சுமமா? ச்சே!

அவரது முட்டாள்தனமே அவரைப் பரிகசிக்கிற மாதிரி... அவரது அறியாமையே அவர் முன் நின்று கொண்டு திங்குபுங்கென்று ஆடுகிற மாதிரி... அவரே அவரை உணர்ந்த வேதனை உணர்ச்சி.

‘ஒரு சின்னப் பயலைப் பத்திக் கூட எடை போடத் தெரியாத கோணத்தராசா இருந்துட்டோமே...’ என்கிற சுய பச்சாதாபம்.

எப்படித்தான் போய் ராமசாமியைப் பார்த்தாரோ... சிட்டையை வாங்கினாரோ... அவருக்கே தெரியாது. அவர் முகத்தில் ஒரு சவக்களை.

கணக்குக்குள் பிடிபடாத மாய உறவு என்று நம்பி யிருந்தாரே... அவன் கணக்கோடுதான் இருந்திருக்கிறான். லாப நஷ்டம் கூட்டி பார்க்கிற தன்மைக்கேற்ற உறவாகத் தான் வைத்திருக்கிறான்... கணக்குப் பார்க்கிற இடத்தில் உறவுக்கு என்ன அர்த்தம்?

நாம்தான் பேய்த்தனமா... இளிச்சவாய்தனமாய் இருந் திருக்கிறோம். கணக்கு வழக்குப் பார்க்காத பாசத்தோடு பாடுபட்டிருக்கிறோம். உறவு உறவு என்று ஏமாளித் தனமாய் உருகி வழிந்திருக்கிறோம்... அடச்சே!

கீழராஜகுலராமனை வண்டி தாண்டிவிட்டது. அந்தஇருட்டிலும் தெரிகிற சிமிண்டாலைக் குழாய். பிரமாண்ட ராட்சஸ உலக்கையாய் வானைத் தொடுகிற குழாயில் புகைத் தொடர்கள். மேகச்சங்கிலிக் கோர்வை யாய்ப். புகைப்பயணம். நட்சத்திர வெளிச்சத்தில் கரும் பழுப்பாய் தெரிகிறது. கன்னி மூலைக்காற்று, புகையை வடகிழக்காய் தள்ளுகிறது.

தேவர் ஆழ்ந்த பெருமூச்சு விட்டார். மனசின் ரணத்தை உரசி வந்த பெருமூச்சு. பூ முள்ளின் நமைச்சல். சள்ளை பிடித்த அதே நினைப்பு.

'சரி... விட்டுத் தள்ளு... இல்லைன்னு தெளிவாயிருச்சு. இனி உறவு, பாசம்னு நெனைக்குறதுலே என்ன அர்த்தம் இருக்கு? ரெண்டு கை தட்டுனாத்தானே சத்தம்? ஒரு கையிலே என்ன வரும்? அவன் கணக்கை பார்த்தான்னா... நாமளும் பாத்துட்டுப் போக வேண்டியதுதான். 'தாயும் பிள்ளையும்னாலும் வாயும் வயிறும் வேற வேற'ன்னு சும்மாவா சொன்னாக? அனுபவிச்சுத்தான் சொலவடை சொல்லியிருக்காக... நாம அனுபவிச்சுத் தெரிஞ்சுக்கிட அம்பத்தஞ்சு வயசாயிருக்கு...'

அவரே அவருக்குள், ஆறுதலாய் நினைத்துக் கொண் டார். அதையும் மீறிக் கொண்டு முகம் காட்டுகிற கோபம்.

ரைட்... நாமளும் கணக்குப் பாத்துர வேண்டியதுதான். மனசுக்கு மனசு... பாசத்துக்குப் பாசம்... கணக்குக்கு கணக்கு. அவன் விதைச்சதை அவனே அறுத்துக் கிடட்டும்.

மூட்டைகளை இறக்கி முடித்துவிட்டு, என்றைக்கு மில்லாத புதிசாய் ''கணக்குப் பாரு'' என்று சொன்னால்

அவன் முகம் எப்படிப் போகும்? பேயறைஞ்ச முகமாய் எப்படி மாறும்? அதை நினைக்க நினைக்க அவருக்குள் திருப்தி.

கணக்குப் பார்க்கிற அற்பத்தனத்தைப் பழிவாங்கி விட்ட நிம்மதி. மனிதன் போல வேஷம் போட்ட வியாபாரிக் குணத்தைக் குத்திக் காட்டிவிட்ட திருப்தி.

டீ, காபி வாங்கித் தந்தால் வேண்டாம் என்று சொல்லிவிட வேண்டியது தான். சிங்கவிலாஸ் சாப்பாடும் வேண்டாம்... அவனும் தூக்குக் கூலி கொடுத்து மூட்டை களை வண்டிக்குக் கொண்டு வரட்டும். அவனுக்கென்ன தனிச்சலுகை? ஏவாரிக்கு என்னத்துக்குப் பாசம்? கணக்கைக் கட்டிக்கிட்டு அவனே மாரடிக்கட்டும்...

கோபம் கோபமாகச் சீறுகிற நினைவுகள்... மாறி மாறி நினைத்து... நினைத்து... மனசுக்குள்ளேயே பழி வாங்குவதில் ஒரு சந்தோஷம்... ஆறுதல்.

எல்லாக் கடைகளிலும் பாரம் இறக்கிப் போட்டு விட்டு ராமசாமி கடைக்கு வண்டி வந்து சேர்ந்தது.

தேவரைப் பார்த்தவுடன் கடையை விட்டு வெளியே வந்த ராமசாமியிடம் வழக்கமான மலர்ச்சி இல்லை. ''வண்டி வந்துருச்சா?'' என்று கேட்கிற துள்ளல் இல்லை... அவன் முகம் வாடிக் கிடந்தது.

அவன் பேசியதை இவர் கேட்டு விட்டார் என்பதை அவனும் உணர்ந்து கொண்டானோ...? வாடட்டும். உப்புத் தின்றவன் தண்ணீர் குடிச்சாகணும். மூட்டைகளைநிமிர்த்தி வண்டி நுனியில் நிறுத்தினார். முதுகைக் கொடுத்து ஏந்தி இழுந்தார். குவிண்டால் மூட்டையைத் திணுங்காமல் சுமந்து கொண்டு போய், உரிய இடத்தில் போட்டார்.

ஒன்றும் பேச்சில்லை. மன ஆழத்தின் உளைச்சல், மௌனமாய் அங்கே கால் நீட்டிப் படுத்திருந்தது.

பாரம் இறக்கி முடிந்தவுடன் கலர் உடைத்துக் கொடுப்பான். மூஞ்சியில் அடித்த மாதிரி வேண்டாம் என்ற மறுத்துவிட வேண்டும். அதில் வைராக்கியமாய் இருந்தார். அந்த மாற்றத்திலேயே இவரது கோபத்தை அவன் புரிந்து கொள்ள வேண்டும்.

அரிசி மூட்டைகள் இறக்கிய பிறகு, வெல்ல மூட்டைகள். அப்புறம் விதை மூட்டைகள்...

கடை வாசலில் ராமசாமி மகனின் சிணுங்கல்.

"ஸ்கூலுக்கு நேரமாச்சுப்பா... நோட்டு வேணும்பா."

"அம்மாகிட்டே வாங்கிக்கடா..."

"நீங்க சொன்னாத்தான் தருவாகளாம்பா."

"குடுத்துரம்மா... நோட்டைக் குடுத்துட்டு 'வீட்டுச் செலவு'ன்னு ஒரு லிஸ்ட் இருக்கே, அதுலே கணக்கை எழுதி வெச்சிரு..."

தேவர் அதிர்ந்து போனார். பெற்ற பிள்ளைக்கு நோட்டு கொடுத்தால்... அதற்கும் கணக்கா? வீட்டுக்கு எடுக்கிற சாமான்களுக்கும் தனிக்கணக்கா?

விதை மூட்டைக்கு முதுகைக் கொடுத்துக் கொண்டே ராமசாமியைப் பார்த்தார்.

இவன்... மனுசன்தான். ஏவாரி மனுசன். ஏவாரிக் கொணம் மட்டுமில்லே, அதோட சேர்ந்து மனுசக் கொணமும் உள்ளவன். வண்டிக்காரனை மனுசனா நெனைக்குற மனுசன்.

"யாருக்கு எப்படியோ.... தேவரு என்னைப் பொறுத்த வரைக்கும் தங்கமான மனுசரு..." அவன் சொன்ன குரல்... தங்கத்தின் அருமையை உணர்ந்திருக்கிறவன்தான்.

அவருள் நெருக்கடியான ஊசலாட்டம். சட்டென்று முடிவுக்கு வர முடியவில்லை. ஆனால், சட்டென்று முடிவுக்கு வந்தாக வேண்டிய நிலை.

'கணக்கை நம்பிப் பொழைக்குற ஏவாரிப் பொழைப்பு அவன் தொழில். அவன் இப்படித்தான் இருப்பான். இருக்க முடியும். அவனை மாதிரியே நாமும் இருந்தா எப்படி? உழைப்பை நம்பி வாழ்றவனும், கணக்கை நம்பிப் பொழைக்கிறவனும் சமமா? ஒண்ணா? உழைப்பு சூரியனைப் போல நிரந்தரமானது. கணக்கு நிலாவைப் போல தேயும்... மறையும்...

வயசுலே மட்டுமில்லே... தொழில்லேயும் நாம அவனை விட ஒசந்துருக்கோம். அந்த ஒசத்தி, நடத்தையிலே தெரிய வேண்டாமா...?'

அவருள் ஆழம் ஆழமாய் ஓடுகிற நினைவுகள். ஆணி வேரைப் போல் உள்பாய்ந்து வலிமை சேர்க்கிற நினைவுகள்.

மூட்டைகளை இறக்கி முடித்து விட்டு... பாரக் கயிற்றைச் சுருட்டினார் வண்டிக்காரத் தேவர். கலரை உடைத்துக் கொண்டு வந்தான் ராமசாமி. அவனுக்குள் சஞ்சலம்... வாடிக்கிடக்கிற முகம்... குற்ற உணர்வில் நிலையற்றுப் பாய்கிற பார்வை.

வாங்கிக் கொண்டார் தேவர்... கலருக்குள் வளர்கிற வெண்ணுரை... நுரையைப் பார்த்த கண்ணோடு ஒரு குளிர்ச்சியின் மிருதுவோடு அவனைப் பார்த்தார்.

அவன் கண்களிலும் அதே குளிர்ச்சி. மனுசத்துவ உணர்வின் மலர்ச்சி. வானுக்கும் பூமிக்குமாய் விசுவரூபமாய் தெரிந்தார் வண்டிக்காரத் தேவர், உழைப்பைப் போல. அவன் பாச நெகிழ்வோடு தேவரைப் பார்த்தான்.

ஆனந்த விகடன் – அக்டோபர், 1993

2.'அப்'பாவி

கல்யாண வீடு போல களைகட்டியிருந்தது, அந்த இழவு வீடு. இளவட்டங்கள் கிண்டல் சிரிப்பும் கேலிப் பேச்சுமாய் வேலை பார்த்தனர். கலகலப்பான சூழல். பரஸ்பரம் எகத்தாளப் பேச்சுகள்.

நாலு குழி தோண்டி கம்புகளை ஊன்றினர், வீட்டு முற்றத்தில். அகத்திக் குச்சிகளை குறுக்காகப் போட்டு சணல் கட்டு கட்டினர். மேலே ரெண்டு கிடுகுகளைப் போட்டு விரித்துப் போட.... ஒரு நொடியில் பந்தல்.

'அப்படிப் போடு' 'இப்படிக் கட்டு' என்று பக்கத்திலிருந்து ஊர்ப்பெரிசு, இளவட்டங்களுக்கு 'தார்' வைத்துக் கொண்டிருந்தார்.

பந்தல் ரெடியானவுடன் ஏகாலி வந்தான். வெள்ளை வேட்டியை விரித்து, மாத்து கட்டினான். பூமாலையும் பூச்சரப் பந்துமாய் வந்து பூசாரி, அவற்றை 'மாத்து'க்குள் எக்கிப் போட்டான்.

"யப்பா... கெழவி நல்ல மனசுக்காரி. மணக்குற மாலையாப் பாத்துப் போடப்பா..."

"ஆமா, நீங்க குடுக்குற அஞ்சு ரூவாய்க்கு ரோசாப்பூ மாலையா கட்டியாந்து போட முடியும்? கேந்திப்பூதான். போதும் போதும்."

"கெழவி பெரிய உசுர். போக மனசில்லாம பெறப்பட்டு போகுது. நல்ல மாலையா போட்டு அனுப்புவீயா... நயா பைசா கணக்குப் பாக்கிரியே...?"

"இருக்கிற உசுருக வவுறு நனையனும்லே? கணக்குப் பாக்காம என்ன செய்ய? கெழவியோடு போய் நாங்க குழியிலே விழவா?"

ஜாலிக்கான பேச்சுகள். வாதாட்டம் போல தோற்றம் காட்டுகிற வாய்ச்சரசம். வெடித்தெழுகிற சிரிப்ப(ா)ணிச் சத்தங்கள்.

வீட்டுக்கு முன்னால்...

கூரை நிழல்களில் 'குத்த' வைத்திருக்கும் ஊர்ஜனம், சம்சாரிகள். எல்லார் முகங்களிலும் ஒரு மலர்ச்சி. பொங்கல் திருவிழா மாதிரி மகிழ்ச்சி.

"காடுகரைகளுக்குப் போற ஜோலி, இன்னிக்குத்தான் இல்லே."

"பாடு, ஜோலின்னு ரவ்வும்– பகலுமா பாடுபட்டு பாடு பட்டு நாம என்னத்தைக் கண்டோம்? பாடும் தும்பமும்தா மிச்சம்."

"நல்லவேளை... ஒரு எடத்துலே உக்காந்து, ஒருத்தரு முகத்தை ஒருத்தரு பார்த்துப் பேச முடிஞ்சதே..."

"எல்லாம்... கெழவி புண்ணியம். அவ மண்டையைப் போட்டு நமக்கு ரெஸ்ட் குடுத்துட்டா..."

"அதைச் சொல்லு" என்று ஒரு சம்சாரி கைதட்டி ஆமோதித்துச் சிரிக்க, ஒரே சிரிப்பலைகள்.

"தந்தியெல்லாம் குடுத்தாச்சா?"

"அததுக்கான பயக சைக்கிள்ளே போய்ட்டாக."

"துட்டி சொல்லி ஆள் அனுப்பவேண்டிய ஊர்களுக் கெல்லாம் அனுப்பியாச்சா?"

"ம். எல்லாம் ஆச்சு."

"மேளத்துக்கு யார் போயிருக்குறது?"

"நம்ம கணேசன்– கன்னையா மகன்."

"எந்த ஊரு மேளம்?"

"காளிசாத்தான் டங்காமேளம்."

"அடிசக்கை! டங்காமேளமா? அப்ப... ஆட்டம் தூள் கௌம்பிரும்."

"ஆமா. ஆட்ட பாட்டத்தோட கெழவியை மணக்க மணக்க கொண்டு போய்ச் சேர்க்கணும்லே?"

"ஆமாமா. அது நெசந்தான். பாவம் கெழவி. வாழ்க்கையிலே ஒன்னும் அனுபவிச்சுப் பாக்காதவ. சாவுலேயாச்சும் சந்தோஷமா போய்ச்சேரட்டும்."

சாங்கோ பாங்கமாய் நடக்கிற பேச்சுகள். ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொருவிதப் பேச்சுகள்.

அக்னி மூலையில் நாட்டாண்மை குத்துக்கால் வைத்து உட்கார்ந்திருக்கிறார். வாய் நிறைய வெற்றிலைக்குதப்பல். முதுகை மூடிக் கிடக்கிற கபிலநிறத் கதர்த் துண்டு. அவர் முன்பு, நார்ப்பெட்டி. அதில் கட்டவிழ்ந்த வெற்றிலைக்கட்டும் பாக்கும்...

வெற்றிலையைச் சுருட்டி மூன்று பாக்கு வைத்து நாட்டாண்மை நீட்ட, பவ்யமாய் நாவிதன் உட்கார்ந்திருந்த சம்சாரிகளிடம் விநியோகிக்க...

கோலாகலமாய் நடக்கிற வெற்றிலைச்செலவு. வெற்றிலைச்சிவப்பும் வெடிச்சிரிப்புமாய் விதவிதமாய் பேச்சுகள், அனுமார் வாலாய்.

கிழவி செல்லம்மா வலுத்த பழங்கட்டை. நாள்பட்ட உயிர். இந்த ஆறு மாதமாய்த்தான் சட்டடியாய்ப் படுக்கை. எழுந்திருக்க வழியில்லை. நார்க்கட்டிலில் நனைந்த சேலைத் துணியாய் சப்பிப்போய்க் கிடந்தாள்.

முதுமையோடு நோயும் கூடிக் கொண்ட பேயாட்டம். ரத்தமும் சதையும் கரைந்து வற்றி வரண்டு போக... தோல் மூடிய முள் எலும்பாய்க் கிடந்தாள். ஆயுள் நாட்களாய் சுருக்கங்கள் நிறைந்த சிவந்த உடம்பு, நாள்பட்ட நிழல் வாட்டத்தில் அசிங்கமாய் வெளுத்துக் கிடந்தது.

சோறு சுத்தமாய் இறங்கவில்லை. இந்த ஒரு மாசமாய் பாலும் தண்ணீரும் தான் தொண்டைக் குழியை நனைக்கிறது. அதில்தான் உயிர் ஒட்டிக்கொண்டு நின்றது. நெஞ்சுக்குழி, 'கொர்ரட், கொர்ரட்' என்ற சத்தத்துடன் ஏறியிறங்க, 'இருக்கட்டா, பறக்கட்டா' என்று நூலிழை யில் நின்றாடுகிறது உயிர், ரொம்ப நாளாய்.

மகன்வழிப்பேத்திதான் ஆதாரம். அவள்தான் கெழவிக்கு நல்லது கெட்டதுக்குத் துணையாக. பேத்தியின் புருஷனுக்கு எரிச்சலும் ஏகக் கடுப்பும், 'இப்படி கெழடு கெடந்து உசுரை வாங்குதே' என்று.

வீட்டில் தங்குவதேயில்லை. சாப்பிட வருகிறபோது கூட பல்வலிக்காரனுக்கு மாதிரி, முகம் ஏழு கோணலாகி யிருக்கும். அவன்மேலும் வஞ்சகமில்லை. வீட்டுக்குள் நிரந்தரமாய் ஒரு கொச்சை வாடை. குடலைப் புரட்டிப் பிடுங்குகிற நாற்றம்.

பேத்தி புருஷனின் மனஓட்டத்தைப் புரிந்துகொண்டு செல்லம்மாக் கிழவி முன்பெல்லாம் வாய்க்கும் கைக்குமாய் புலம்புவாள். "யார் யார் ஓலையெல்லாம் கிழிச்சுப் போடுற கூத்துவனுக்கு என்னோட ஓலை மட்டும் கெடைக்க மாட்டேங்குது. நா என்ன செய்ய? இப்படிச் சாவு வராம கெடந்து சீப்பட்டுச் சீரழியுதேனே... அடக்கூத்துவனே, ஒனக்குமா கண்ணவிஞ்சு போச்சு?"

வாய் ஓயாமல் புலம்புவாள். போலித்தனமில்லாத நிஜம்புலம்பல்.

உயிர் அவளுக்கே தாங்கமாட்டாத தண்டனையாக அழுத்திக் கொல்கிறது. அவளது இருப்பு, மற்றவர்களுக்கும் பெரும் பாரமாய் கனத்து மூச்சுத் திணற வைத்தது. 'எப்படா... இந்தக் கெழவி செத்துத் தொலையும்' என்று ஏங்க வைத்து விட்டது.

முற்றிக் காய்ந்துவிட்ட நெற்று, உதிராமல் ஒட்டியிருப் பது செடிக்கு இடைஞ்சல்தான். என்ன செய்வது? சாவு வரணுமே.

அமாவாசை கனத்த நாள். கிழடு கட்டைகளை வாரிக் கொண்டு போய் விடும் என்று நம்பிக் கிடந்தாள் பேத்தி. நாலைந்து அமாவாசை வந்து போனதுதான் மிச்சம்.

பாதம் வீங்கியது. புறங்கையும் வீங்கிவிட்டால் சாவு நெருங்கி விட்டது என்று அர்த்தம். அதுவும் அர்த்தமிழந்து போய்விட்டது.

குரைக்க வேண்டிய நாய்கள் ராவ்வெல்லாம் ஓடி ஓடி ஊளையிட்டது. வீட்டைச் சுற்றிச் சுற்றி ஆந்தை அடித்தது. பேத்தி சந்தோஷப்படுவாள்.

ஆர்வமாய் எதிர்பார்த்து ஏமாந்து போவாள். மரணத்தின் அறிகுறியெல்லாம் பலிக்கவேயில்லை.

"இதேதுடா... பெரிய வம்பாய்ப் போச்சு" என்று தவித்தாள். ஊர்ப் பெரிசுகளிடம் கிசுகிசுத்து, காதைக் கடித்து யோசனை கேட்டாள். விளக்கெண்ணெயை குளிரத் தேய்த்து, பச்சைத் தண்ணீரில் குளிப்பாட்டும்படி யோசனை சொன்னார்கள். அதிலும் பருப்பு வேகவில்லை.

"இம்புட்டுக்கும் சாகலேன்னை... எதுக்கோ ஆசைப்பட்டு ஏங்கிக் கிடக்குதுன்னு அர்த்தம். அந்த ஏக்கத்துலே தான் உயிர் ஒட்டிக் கிடக்கு" என்று அனுபவப்பட்ட பெரிசுகள் சொல்ல– கிழவிக்குப் பிரியமான பண்டமெல்லாம் செய்து ஊட்டி விட்டுப் பார்த்தாள். ஊஹும், கதையாகவில்லை.

கொரட் கொரட்டென்ற இழுப்புக்கிடையில் எப்போதாவது ஒரு தடவை தொண்டைக்குள் சத்தமாய் ஹீனமாய்ப் புலம்புவாள், கிழவி.

"சாகக்கிடக்கிற இந்தப் பாதகத்தியை ஒரு பாவியும் வந்து பாக்கலியே..."

'இதுதான் கிழவியின் ஏக்கமாக்கும்' என்று நினைத்த அப்புராணிபேத்தி, சுத்துபட்டி பத்துஊர் சொந்தச் சாதிசனத்துக்கெல்லாம் தாக்கல் அனுப்பினாள்.

தொட்ட சொந்தம், விட்ட சொந்தம் எல்லாம் வந்து வந்து கிழவியைப் பார்த்துவிட்டு, ஆக்கி அவித்து தின்று தீர்த்துவிட்டுப் போனதுதான்மிச்சம்.

எல்லார் முகங்களையும் உற்றுப்பார்த்து விட்டும் கிழவி உதட்டில் அதே புலம்பல். ஆத்மாவின் குருட்டுப் புலம்பல் மாதிரி அதே வாக்கியம்தான். "சாகக்கெடக்குற இந்தப் பாதகத்தியை ஒரு பாவியும் வந்து பாக்கலியே..."

தேனி, மதுரை, செங்கல்பட்டு என்று தூரந்தொலைவு பந்துக்களெல்லாம் வந்து பார்த்து விட்டுப் போய் விட்டனர். கட்டிலை நெருங்கிக் குனிந்து பார்க்கிற ஒவ்வொரு முகத்தையும் கிழவியும் ஆவலாய்ப் பார்ப்பாள். கண்ணில் உயிர் வந்து நிற்கும். சட்டென்று ஓர் ஏமாற்ற நிழல் வந்து கவிந்து கொள்ளும்.

மீண்டும் அதே புலம்பல்தான்.

ஆக... கிழவி சாகிற மாதிரி தெரியவில்லை. பேத்தி ரொம்ப அசந்து போனாள். புருஷன்காரன் நச்சரிப்பு வேறு.

"கெழடு சாகப்போவுதா... இல்லியா?" – சண்டைக்காரன் மாதிரி கேட்பான்.

"நா என்ன செய்ய? சாக வேண்டாம்னு தடுத்துக்கிட்டா இருக்கேன்?"

"வீட்லே மனுசன் குடியிருக்க வேண்டாமா?"

"அதுக்கு நா என்ன பண்ண? நீங்க வேணும்னா... கெழடி கழுத்தை நெரிச்சுக் கொன்னு போடுங்க."

"என்ன பாவம் செஞ்சேனோ... இந்த நாத்தத்துலே கெடந்து சோறு திங்கேன். இன்னும் இந்தப் பாவத்தையும் செய்ஞ்சா... என்னென்ன நரகம் வந்து சேருமோ?"

இப்படிப் புருஷன் பொஞ்சாதிக்குள் அனுதினமும் சண்டைச் சத்தம். வார்த்தைக் கீறல்கள். மனக்காயங்கள். வீடே நரகமாகி மூச்சுத் திணற... கிழவி மட்டும் கவலை யற்றுப் போய் கொரட், கொரட்டென்று கிடந்தது.

பதினாறு வயசுச் சிறுமி செல்லம்மா சடங்காகி விட்டாள். பதினாறு நாள் மூலையில் உட்கார்ந்து, மஞ்சள்ப்பழமாய் வெளி வந்த மூன்றாவது மாசமே கல் யாணம். தாய்மாமன்தான் மாப்பிள்ளை. கடமை முடிந்த மனநிம்மதியில் ஆத்தா கண்ணை மூட, தாய்மாமன் ஊருக்கு வண்டியேறினாள், செல்லம்மா.

தாய்மாமன் ஊரில்– வீட்டில்– பயந்து கிடந்தாள், சிறுமி செல்லம்மா. நாதியற்ற தனிமை. பிடிபட்ட குருவிக் குஞ்சாய் நடுங்கி நடுங்கி முழித்தாள்.

சின்னப்பூவின் மெல்லிய உள்மன உணர்வுகளை – அதன் பூந்துடிப்பைப் பற்றி– அக்கறைப்படாத முழுத்த ஆம்பளையாக தாய்மாமப் புருஷன். தாயின் அரவணைப்புக்கு– அதன் கதகதப்புக்கு– ஏங்குகிற சிறுமியை– தாலி கட்டிய மனைவியாக மட்டும் கருதி காமமூர்க்கத்தோடு ஆக்ரமித்துத் திங்கிற புருஷன்.

அரண்டு போய் ஒடுங்கிய செல்லம்மாவின் பட படப்பை, நாணமெனக் கருதிக்கொண்டு ஆவேசமாய் அள்ளிக் கிழித்த கிராமத்து ஆண் மூர்த்தண்யம்.

பாவாடைப் பருவத்தில் 'புல்லரிப்பூட்டக்கூடிய தேவ லோகப் பரவசம்' என்று செல்லம்மா கனாக்கண்டிருந்த ஒரு

விஷயம், அசுரப் பயங்கர நனவாகி அவளை கருக்கியே விட்டது.

ஆத்மா கருகிப் போனாலும், கர்ப்பப்பை கருகவில்லை.

மூன்றாவது மாசமே காறிக்காறித்துப்பினாள். கஞ்சி தண்ணீர் ஒவ்வாமல், ஈரத்துணியாய் துவண்டு சரிந்தாள்.

ஆண்பிள்ளையைப் பெற்றெடுக்கிறபோது, விதவைச் சிறுமியாய்... செல்லம்மா. கிணறு வெட்டப்போன தாய் மாமப்புருஷன், வெடி விபத்தில் கருங்கல்லாய் சிதறி சதைப் பிண்டங்களாகி...

பாலைத் தனிமையில் நாதியற்ற அனாதையாய்... சபிக்கப்பட்ட அரும்பாய்... செல்லம்மா சிறுமி. அவளது பிஞ்சுக் காலில் சமூகப் பழமையின் இரும்புக் குண்டும், மரபுச் சங்கிலிகளும்...

அறுத்துக் கட்டிக்கொள்கிற சாதியுமில்லை. வாழா வெட்டியா, விதவையா? அவ்வளவுதான். கரும்புள்ளிதான். காலம் முழுக்க வெறுமையில் வெந்து சாக வேண் டியதுதான். மறுமணச் சிந்தனையே பயங்கரச் சிந்தனையாய் நினைக்கிற சூழல்.

காடுகரையை கவனித்துக்கொண்டு, மழலையையும் வளர்த்துக் கொண்டு, நாலைந்து வருஷங்கள் கண்ணீராய் வழிந்து கழிய...

உணர்வு ரீதியாக முழுமை பெற்ற பெண்ணாக மலர்ந்து உலகைப் பார்க்கிற போது– சுற்றிலும் பற்றிப் பரவிக்கிடந்த சூன்ய வெக்கை.

அப்போது செல்லம்மா மகனுக்கு ஒன்பது வயசு. 'நாலாப்பு' படித்தான். அன்றாட வாழ்க்கையின் சூறாவளிச் சுழற்சியில் காய்ந்த சருகாய் இயங்கப் பழகி விட்டாள்.

ஏறுபொழுது, இளமதியத்திற்கும் மேலாகிவிட்டது. புஞ்சைப் பொழியில் மாட்டுக்குப் புல்லறுத்துக்கொண்

டிருந்தாள். 'சரக், சரக்'கென்று அறுகம்புல் அறுபடுகிற சத்தம். கழுத்தடியில் வியர்வைக் கசிவு. வெயில், முதுகில் சுள்ளென்று அறைகிறது. குனிந்து அறுக்க அறுக்க... குறுக்கெல்லாம் வலி.

பெருமூச்சோடு நிமிர்ந்தாள். பருத்திச் செடிக்குள் செம்மறியாடுகள். கள்ளப் பாய்ச்சலில் வேக வேகமாய் செடிகளை மேய்கிற ஆடுகள். அவளுக்குக் குலை கொதித்தது. நெஞ்சுக்குள்ளிருந்து தீச்சொற்கள் சீறிப் பாய்ந்தன. கத்தினாள்.

"எந்தப் பாவிடா... ஆடு மேய்க்கிற பய? வெள்ளாமை யிலே ஆட்டை விட்டுட்டு... அங்க என்னடா செய்கிறீக?"

அதோடு ஆத்திரச் சொற்களாய் சில வசவுகள். ஓடி வந்து ஆட்டை மடக்கிய ஆட்டுக்காரன், இவளது வசவுக்கு எதிர்வசவுகளாய் சீறினான்.

'முண்டை தண்டை' என்று அவன் பேச, இவள் அடி பட்ட பாம்பாய் அரிவாளோடு வசவோடு முன்னேற– ஆட்டுக் கம்போடு, சீறல் சொற்களுமாய் அவனும் முன்னேற–

அவள் திகைத்துப் போனாள். அநீதிக்காளான ஆத்திரம், அவளுள். போக்கிடமற்ற கோபம். கையாலாகத்தனமான வெறி. தனிமைப்பட்ட பலவீனம்...

அப்போது–

"எவண்டா அது? ஆடு மேச்சதுமில்லாம... வசவு வேறயா? ராஸ்கல்... பல்லை கில்லை ஒடைச்சுப் போடுவேன், படுவா."

மம்மட்டியோடு திகுதிகுவென்று வந்தான் முத்து, பீமன் மாதிரி. கறுத்த இளவட்டம். வைரம் பாய்ந்த திரேகம். மம்மட்டியை ஓங்கிக் கொண்டு முத்து வர,

ஆட்டுக்காரன் வாலை மடக்கிய நாயாக முணங்கிக் கொண்டே ஓடைக்குள் இறங்கினான்.

செல்லம்மாவுக்கு அப்பத்தான் உயிர் வந்த மாதிரியி ருந்தது. மனிதத்தோழமை எனும் சுனையின் அருமையை மனசால் தொட்டுணர்ந்த முதல் புரிதலில், குளிர்ச்சி யோடு முத்துவைப் பார்த்தாள்.

இவளை விட நாலு வயசு குறைவு. இவன் புஞ்சையை கவனித்துக்கொள்கிற சம்பளக்காரன். தண்ணீர் பாய்ச்ச, உழவுக்கு ஆள் கூப்பிட, பாத்திகட்ட என்று காடுகரை வேலைகளைச் செய்கிற வாடிக்கைக் கூலிக்காரன்.

''பாத்தீயா... முத்து, அந்தச் சின்னப்பய பேசுன பேச்சை? இப்ப நீ இல்லேன்னா... எம்பாடு ரொம்பக் கேவலமாய்ப் போயிருக்கும்.''

''வரட்டும், தடிப்பய. நாதியில்லேன்னு நெனைச்சிட் டாங்க போலிருக்கு.''

திண்மை மிக்க அவனது குரல். அதிலிருந்த கவசபலம். இவளுக்குள் ஈர நெகிழ்வு. சம்பளக்காரனாக மட்டும் இருந்து வந்த முத்து, புதிய பரிமாணமாய் புதுவகைப் பிம்பமாய்– அவளுக்குள் வேர்களின் புதிய நகர்வு.

பௌர்ணமிக்கு முதல் நாள். மதியக் கரண்டு. பொழு தடைகிற வரைக்கும் த்ரீபேஸ் கரண்டு. பம்பு ஷெட் ஓடிக் கொண்டிருந்தது. பருத்திக்கு தூரத்தில் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தான், முத்து.

வீட்டு வேலைகளை முடித்துவிட்டு, துணிமணிகளை அள்ளிக்கொண்டு வந்தாள், செல்லம்மா. வெள்ளிக் கற்றையாய் பாய்கிற மோட்டார்த்தண்ணீர். துணிகளை அலசிப் பிழிந்து மஞ்சணத்தி மரத்துக் கொம்பில் பொட்ட லமாய் தூக்கி வைத்து விட்டு... நீர்க் கற்றையில் தலையைக் கொடுத்தாள். அழுக்கும் எண்ணெயும் நுரை நுரையாய்

தொட்டிக்குள் பொங்கிக் கரைய... அவளுக்குள் பரவசம். மோட்டார்த் தண்ணீரின் கற்றை வேகம் தடதடவென்று அறைந்தது. உடம்பும் மனசும் பாரம் விலகி... லேசாகி... குளிப்புச் சுகத்தில் சொக்கி நிற்க—

டடக்!

கரண்டு நின்று போயிற்று. மாற்றுத் துணிமணியை எடுத்துக் கொண்டு பம்பு ஷெட் ரூமிற்குள் போனாள், செல்லம்மா.

இவள் வந்ததையோ— குளித்ததையோ— கவனிக்காத முத்து, வழக்கம் போல் தன்னியல்பாய் மம்மட்டியோடு ரூமிற்குள் நுழைய, அங்கே, ஜாக்கட் ஊக்கை மாட்டிக் கொண்டு செல்லம்மா.

பாம்பை மிதித்தவனைப் போலத் துள்ளிப் பதறி வெளியேறினான்.

"முத்து போயிராதே, வெளியிலே சித்தே இரு." செல்லம் மாவின் கல்மிஷமற்ற குரல். முழுசாக சேலையை உடுத்திக் கொண்டு, ஈரக் கூந்தலை, 'சட், சட்'டென்று அடித்து உதறிய நிலையில் வெளியில் வந்தாள். அந்தி வெளிச்சத்தில் ஈரக் குளுமையாய் தேவதை போலத் தோன்றினாள்.

தூக்குச் சட்டியை எடுத்துத் தந்தாள்.

"என்னது?"

"பொங்கச் சோறு."

"யாருக்கு?"

"ஒனக்குத்தான்."

"எதுக்கு? பய ஆசைப்பட்டான். கிண்டினேன்... ஒனக்கும் கொண்டு வந்தேன், சாப்பிடு."

"இதெல்லாம் எதுக்கு?"

“முத்து, நீ எங்க வீட்டுலே ஒரு ஆள்போல. அந்நியமா நினைக்காதே. சம்பளக்காரன்னு மட்டும் என்னாலே நினைக்க முடியலே.”

புரியாமல் தவித்தான். அவனது புரியாமையையும் அள்ளி விழுங்குகிற மாதிரி ஒரு முறுவல், அவள் உதடு களில். கனவைக் குழைத்துப் பூசிய மாதிரி ஒரு வினோத ஒளி. ஆயிரமாயிரம் உணர்வுகளை உணர்த்தும் மவுனமின்னல். அவனுள் ஒரு மயக்கம். குழைவு, நெஞ்சு துடிக்க, நா வறண்டது.

உடம்போடு கலந்த மனசின் வாழ்க்கையாக ஆறு வருடம். அவளது உணர்வுலகத்தில் முதற் காதல் பரிச்சயமும், மனம் ததும்பும் தாம்பத்தியமும் இதுதான். சமூக மரபுகள் கடுகடுத்து, மொறுமொறுத்து முறைக்க– இயற்கைக்கு இயைந்த– வாழ்க்கை.

ஊர்முகம் பார்த்து குற்ற உணர்வு கொள்கிற அறிவைக் கடந்து, மனசு விரும்பி ஏற்றுக்கொண்ட மையல் வாழ்க்கை.

ஆத்ம சிதைவுகளின் கண்ணீரைத் துடைத்து – இதயமாய்– பரிவாய்– வருடிக் குளிரவைத்த இனிமை நிறைவு. மனப்பின்னங்களெல்லாம் ஒட்டிக்கொள்ள, அவளை முழுமைபடுத்திய நிறைகுட வாழ்க்கை.

அவனைப் பொறுத்தவரை இந்த உறவின் அர்த்தமே வேறு. வெறும் வாலிப காலச்சலுகை. கல்யாணம் வரைக்கும் இளைப்பாற இடம் கிடைத்த கள்ள நிழல். அவ்வளவு தான்.

முத்துவுக்குக் கல்யாண ஏற்பாடு என்று கேள்விப்பட்ட போது, செல்லம்மா துடித்துப் போனாள். கட்டிய புருஷன் துரோகம் செய்தால் வருகிற அதே துடிப்பு. மனக்கொதிப்பு. கல்யாண ஏற்பாட்டைத் தடுத்து நிறுத்திவிட உயிரின் ஆழத்திலிருந்து பிரயத்தனம் செய்தாள்.

இந்தக் கல்யாணத்தைத் தடுப்பதற்கு தனக்கு உரிமையில்லை என்று அறிவும், உலக ஞானமும் உணர்த்தினாலும், அவள் ஆத்மா கேட்கவில்லை. இந்த இழப்பை– முதற் காதலை இழந்த வெறுமையை– சந்திக்க முடியாமல் நடுங்கினாள்.

அன்றைக்கு–

நடுஜாமம், கதவைத் திறந்து கொண்டு முத்து உள்ளே வந்தான். பழகிய இருட்டு. ஆறு வருடப்பரிச்சயம். தடுமாறாமல் பூனை போல வந்து, படுத்திருந்த செல்லம்மா பக்கத்தில் உட்கார்ந்தான்.

சுவாசலயத்தில் முத்து என்று உணர்ந்து கொண்ட செல்லம்மா, விருட்டென்று எழுந்த வேகத்தில் அவனது நெஞ்சுப் பனியனைக் கொத்தாகப் பற்றி உலுக்கினாள். வெறி பிடித்தவளைப்போலக் கேட்டாள்.

''சொல்லு, கல்யாணம் பண்ணப் போறீயா?''

''ஏன்? பண்ணக் கூடாதா?''

''அடப்பாவி! ஏன் இந்தப் பாவத்தைச் செய்றே?''

''இதா பாவம்? எனக்குன்னு ஒரு வாழ்க்கை வேண்டாமா?''

''அப்படீன்னா... இப்ப நாம வாழ்ற வாழ்க்கை?''

''இது எப்படிப் பொருந்தும்? ஊர் ஒத்துக்கிடுமா? ஒறவு முறை ஒத்துக்கிடுமா?''

''இருந்து இருந்து... ஆம்பளைப் புத்தியை காட்டிட்டே, இல்லே? ஒடம்புக்கு ஒரு ஒறவு, ஊர் மொறைக்கு ஒரு கல்யாணம். இதுக்குப் பலியாகுறது ரெண்டு பொம்பளைக, இல்லே?''

அவள் கேள்வியின் வீச்சை– உணர்வின் தர்ம வெக்கையை– தாங்கமுடியாமல் தவித்தான். பிடிபட்ட

கள்ளனாய் தவித்தான். நழுவ முயன்றவனை இறுகப்பற்றினாள். குலுக்கினாள்.

"இப்பச் சொல்லுறேன், கேட்டுக்க. கொதிச்ச மனசோட சொல்லுறேன். நீ கல்யாணம் பண்ணிக்கிட்டா... அந்த நேரத்துலேயே நாண்டுக்கிட்டுச் செத்துபோவேன்... அந்தப் பாவம் ஒன்னைச் சும்மாவிடாது."

ஆத்திரத்தின் விளிம்பு அழுகை தானா? உடைந்து அழுது அவள் குலுங்க... பனியன் அந்த அதிர்வில் கிழிந்துதொங்க.... அவன் நழுவிப் போய் விட்டான். அவள் ஊமைக் கரைசலாய் அழுது தேம்பினாள்.

கூரை முகட்டில் வாளிக்கயிறைப் போட்டு ஸ்டூலில் ஏறிவிடவும் செய்து விட்டாள். எதிர்காலமாய் வந்து கதவைத் தட்டிய மகனின் சத்தம். "யம்மா... யம்மா... கதவைத் திற!"

அதற்குப் பிறகு முத்து கண்ணிலேயே தட்டுப்பட வில்லை. எங்கே போனான், என்ன ஆனான் என்று ஒரு இழவும் தெரியவில்லை. அதைப்பற்றி அவள் கவலைப்படவுமில்லை. முத்துவும், அந்த உறவும், அதன் நிறைவும் அவள் ஆத்மாவில் நிஜமாய்– நிரந்தரமாய்– உயிர்கொண்டு இயங்கியது.

வாழ்வின் அசுரச் சுழற்சி வாரியள்ளிப் போட்டுக் கொண்டு முன்னேற... செல்லம்மா மகனை வளர்த்து ஆளாக்கி, திருமணம் செய்து, பிறந்த பேத்தியை கொஞ்சி மகிழ, பத்து வயசுப் பேத்தியை மடியில் போட்டு விட்டு மாயமாய் சாவில் மறைத்தனர் மகனும், மருமகளும்.

பேத்திக்கான வாழ்க்கை, சமூக மல்லுக்கட்டு. இப்படி மவுனமான காயங்களோடு நாட்கள் நகர்ந்தன. சோகம் சுமந்த பாலை வாழ்வாய்க் கழிந்த மொத்த ஆயுள்.

சாவை எதிர்பார்த்து சலித்தே போய் விட்டாள், பேத்தி. செல்லம்மாகிழவிக்கு தொண்டைக்குள் ஜீவனாய் இழுத்துக் கொண்டு கிடந்தது. கண்ணில் மட்டும் உயிரொளி.

வீட்டுவாசலில் தள்ளாட்டமும் நடுக்கமுமாய் ஒரு பெரியவர் திகைத்துத் தயங்கி நின்றார். வயசு எண்பது இருக்கும். தளர்ந்து போன கறுத்த உடம்பு. வாழ்வின் கடமைகளைச் சுமந்து கடந்த அடையாளமாய் வளைந்த முதுகு. ஒரு ரோமம் கூட கறுப்பு இல்லை.

“ஐயா... யாரு நீங்க?” பேத்திதான் வாசலில் நின்றாள்.

“செல்லம்மா பேத்தியா... நீ?”

“ஆமய்யா... நீங்க?”

“நா ரொம்பப் பழைய ஆளு. யாருன்னு சொன்னா... ஒனக்குப் புரியாது. இப்ப... எப்படி இருக்கு?”—

என்று உள்ளே கையை நீட்டினார். அவளுக்கு ஏகச் சலிப்பு. விரக்தி. “இருக்கு. ஆறு மாசமா அப்படியேதா இருக்கு.”

“ஹூம்... பொம்பளைகளே அதிர்ஷ்டங்கெட்ட ஜென்மங்கதான். அதிலேயும் செல்லம்மா... ரொம்ப யோகங்கெட் டவ... வாழ்ற காலத்துலேதான் நொம்பலப் பட்டாள்னா... சாவுலேயாச்சும் நொம்பலமில்லாம, பொசுக்குன்னு போகக் கூடாதா? கொடுப்பினை இல்லே. யாரை நொந்துக் கிட?”

மனசின் உள்ளிருந்து பீறிட்ட ஈரப் பெருமூச்சோடு மெல்ல வீட்டுக்குள் நுழைந்தார். அவருள் ஒரு நெகிழ்வு. தேக நடுக்கம்.

கட்டிலில் துவண்டு கிடந்த கிழவி. நனைந்து கிழிந்த காகித ஓவியமாய், மங்கலாய்க் குழம்பிக் கிடந்தாள். கொரட் கொரட்டென்று ஒரே இழுவை. குனிந்து பார்த்தார். அவர் உடம்பில் ஒரு புதிய நடுக்கம்.

பேத்தி கிழவி காதுக்குள் குனிந்து கத்தினாள்.

“ஒன்னைப் பாக்க யாரோ வந்திருக்கா?”

கிழவியின் நரைத்த இமைகள் மெல்லப் பிரிந்தன... பஞ்சடைத்த இடுங்கிய கண்களில் நடுக்கமான சலனம்.

பக்கமாய் அந்த முகம், கறுத்த முகம். தளர்ந்து போய்– அடையாளம் தெரியாத– சுருக்கங்கள் படிந்த முகம்.

கிழவியின் நெஞ்சு துடித்தது.

முகம்... அதே முகம்... ஆத்மாவிற்குள் அச்சு குலையாமல் பதிவாகிப் போயிருக்கிற முகம். இருட்டுக்குள் கூட– கண்கள் மூடிய கணங்களில் கூட– உணர முடிந்த அதே முகம். உயிரில் தடம் பதித்த முகம்.

கிழவியின் கண்கள் ஆடாமல் அலுங்காமல் நின்று பார்த்தன. உயிரே வந்து கண்ணில் வந்து நிற்கிற மாதிரியான பார்வை உக்கிரம். ஆவல் பரபரப்பு. ஆத்ம துடிப்பு. கண்ணின் ஓரங்களில் ஈரக்கசிவு.

பேத்திக்கு ஒன்றும் புரியவில்லை.

''சாகக்கிடக்குற இந்தப் பாதகத்தியை ஒரு பாவியும் வந்து எட்டி பாக்கலியே...'' என்று கிழவி புலம்புவாளே... அந்தப் பாவி, இந்தப் பெரியவர்தானா?

அதற்குப் பிறகு, செல்லம்மா கிழவி கண்ணைத் திறக்க வேயில்லை. சாந்தமாகிப் போன அமைதியோடு மண்டையைப் போட்டு விட்டாள், வாழ்வின் முழுமையை தரிசித்த திருப்தியில்.

டங்காமேளம் ஊரைக் கூட்ட, பெரும் ஜனக்கூட்டம் பின் தொடர, அலங்கரிக்கப்பட்ட தேரில் செல்லம்மாக் கிழவி 'ஜே, ஜே' என்று பயணமானாள், மயானக்கரைக்கு.

கல்யாண ஊர்வலம் போல கலகலப்பாயிருந்தது, அந்த இறுதி ஊர்வலம்.

இதயம் பேசுகிறது – நவம்பர் 1993

3.அக்கதை

அந்த வார இதழ் அலுவலகம் இருந்த தெருவை நெருங்கிய போது, ராமச்சந்திரன் ராமச்சந்திரனாக இருக்க முடியவில்லை. விரட்டி விரட்டிக் கல்லெறியப்பட்ட நாயாக அவன் சலிப்பும் எரிச்சலுமாய் பொருமிப் போயிருந்தான். 'யார் மீது பாயலாம், யாரைக் கடித்துக் குதறலாம்' என்று அலைபாய்ந்து திரிகிற உள் தீவிரம். உலர்ந்து, காய்ந்து கனன்று கிடந்தான்.

அலுவலகத்தில் நுழைந்தான். வாட்ச்மேன் அடித்த சல்யூட்டை வாங்கிக்கொண்டான். பதிலாகத் தலை யசைப்பும் புன்சிரிப்பும் உதிர்த்துவிட்டு உள்நகர்ந்தான். அதுவும் வழக்கமான செயல்பாடாய்.

நேராக நிர்வாகப் பிரிவுக்குள் நுழைந்தான். பழகி மரத்துப் போன நுழைவு. இடையில் எதிர்ப்பட்ட 'ஹலோ'க்கள், 'ஹவ் ஆர் யூ'க்கள். 'ஃபைன்'கள். எல்லாமே யந்திரச் சப்தங்களாய்...

வருகைப் பதிவேட்டில் கையெழுத்திட்ட சூட்டோடு கேண்டீனுக்குள் நுழைந்து வடைக்கும் டீக்கும் டோக்கன் வாங்கினான். சப்ளையிலிருந்த புண்ணியகோடி இவனைக் கண்டதும் புன்சிரித்தார்.

''ஹைய் ராம்ஸ், சௌக்யமா?''

''ஒகே புண்ஸ்.''

''என்னது?''

''வடையும் டீயும்தான் புண்ஸ்.''

இது இப்போதைய புது மோஸ்தர். மச்சி, பங்காளி, தலைவா என்று நண்பர்கள் பரஸ்பரமாய் அழைத்துக் கொள்கிற கேலி கிண்டல் காலாவதியாகி, இது அறிமுகம். பெயரைச் சுருக்கி 'ஸ்' சேர்த்துக்கொள்வது.

ராமச்சந்திரன் என்றால் 'ராம்ஸ்.' புண்ணியகோடி 'புண்ஸ்.' காமராஜ் 'காம்ஸ்.' வெங்கடாசலம் 'வெங்க்ஸ்.' பொன்னு மணி 'பொன்ஸ்.'

இந்த வினோதச் சுருக்கத்தில் என்ன அர்த்தம்? நட்பின் அர்த்தம் அடையாளமாகிறது. நெருக்கத்தின் முகம். அந்யோந்யத்தின் வெளிப்பாடு. மன அண்மையில் எடுத்துக் கொள்கிற உரிமை.

புண்ஸின் ஜாலியான குசல விசாரிப்பு கூட இவனுள் ஒரு விளைவும் செய்துவிடவில்லை. வறண்ட தொனியில் மரக்கட்டையாய் பதில் சொல்லி விட்டு நகர்ந்தான்.

கேண்டீனுக்குள் காலைநேரச் சுறுசுறுப்பு. பரபரப் பான ஊழியர் நடமாட்டம். சுற்றிலும் சளசளப்பு. அர்த்த மற்ற மனிதக் கூப்பாடு. கொசுவின் ரீங்காரமாய் முகத்தில் மோதி மொய்க்கிற சப்த அதிர்வுகள்.

ரெண்டு மடக்கு டீ, கனத்த திரவமாய் உள்ளிறங்க, மெல்ல உயிர் அரும்புவதை உணர முடிந்தது. டீயின் அடர்த்தியான ருசி மனசுக்குப் பிடித்திருந்தது. ரசனை யோடு மூன்றாவது மடக்கை விழுங்கும்போது, முகத்தில் கற்றையாய் வந்து மோதுகிற சிகரெட் புகை. குடலைப் பிடுங்குகிற குமட்டல் நாற்றம். வெகுண்டுபோய்த் திரும்பினால்... புகையை ஊதிய ஜிப்பாக்காரன் எங்கோ பார்த்த நிலையில்.

ராமச்சந்திரனுக்குள் ஒரு கொந்தளிப்பு. கத்தவேண்டும் என்கிற மனத்தினவு. நாக்கு வரை பீறிட்டு வந்து விட்ட நாராசச் சொற்கள். நாகரிகம் நாக்கை மடக்க, வார்த்தைகளை நிறுத்தி எடை போட்டு வெளிவிட்டான்.

"சார், சிகரெட் புகையைக் கொஞ்சம் தள்ளி ஊதுங்க."

ஜிப்பாக்காரன் பார்த்த பார்வையில் அலட்சியம்.

"ஏன், நீங்க தள்ளிப் போய் டீ சாப்பிடலாமே?"

நூறு சத எகத்தாளம். மனிதனைப் பொருட்டாக நினைக்காத திமிர்த்தனம். நடப்புச் சமூகத்தின் குறியீடு. சாக்கடையில் புரண்டெழுந்த சந்தோஷ மதர்ப்பில் உரசிச் செல்கிற பன்றித்தனம்.

அவனுள் குப்பென்று ஒரு தீக்கற்றை. அந்த உணர்வை அணைக்கிற நீர்த்த தெளிப்பாய் ஒரு பிரக்ஞை.

'ராம்ஸ், பொறுடா. நிதானம் காட்டு. சீண்டலுக்குப் பலியாகாதே. சண்டை விவேகமல்ல. வீரமல்ல. தரக் குறைவு. லகானைச் சுண்டு. நிறுத்து, உன்மத்தத்தை அடக்கு.'

இறுகிப் போய் மௌனமாய் நிமிர்ந்தான், ராமச்சந்திரன். பார்வையில் தெறிக்கிற வெப்பம். கற்றைக்கோபம்.

"டீசண்டா இருக்குறீங்க. பேச்சிலேயும் அதைக் காட்டலாமே."

"மத்தவர் உரிமையிலே குறுக்கே வுழுறதுதான், உங்க டீசண்டா?"

"எது உரிமை? சிகரெட் குடிச்சு புகையை விடுறதா?"

"புகையை விடாம எதை விடுறது?"

அவ்வளவுதான். ராம்ஸ் வெடித்து விட்டான். தாறு மாறான வெடிப்பும், சிதறலும். ஜிப்பாக்காரனும்தான். 'வாடா, போடா' என்று பலத்த வாய்ச் சப்தம் வெக்கை வார்த்தைகள். சூழலே தகிப்பாகி விட்டது.

அதிர்ந்து திகைத்துப் போன கேண்டீன். பதைத்துப்போய் மேனேஜரும், சிப்பந்திகளும் தலையிட்டு,

சப்தம் போட்டு, இருவரையும் சமாதானப்படுத்தி, வெளியேற்றிக் கழித்தனர்.

அவமானப்பட்ட மனச்சீற்றத்தில் ராமச்சந்திரன். காயங்களில் அடிபட்ட வலி. கொதிபானையாய்த் தள தளக்கிற நெஞ்சோடு மாடியேறினான்.

தன்னை மறந்த நிலையில் வெந்த மனசின் சிடுசிடுப்பாய்த் தெறித்த முணுமுணுப்பு.

"ச்சே! மனுசனை மனுசனா மதிக்கிற பய... நாட்லே ஒருத்தனுமில்லே. எவன் கிட்டேயும் மனுசத்தன்மையே யில்லே. கால்லே ஒட்டுன எச்சிலா நெனைச்சு, மனுசனைத் தேய்ச்சுத் தள்ளிட்டுப் போறாங்களே..."

வீட்டில், டிபனுக்கு நேரமாகி விட்டதே என்று பதைத்துப் போய்ப் பரபரத்த போது, மனைவியின் அலட்சிய மான சீறல். எடுத்தெறிந்து பேசிய அவளது சாடல். இழிந்த ஜந்துவாய்த் தன்னை உணரவைத்த அந்த அவமதிப்பு.

பஸ்ஸில் வந்தால்... கண்டக்டரின் அத்துமீறலான அதட்டல். செல்லாத நோட்டை பார்க்கிற தோரணையில் பார்வை. மன ஆழத்தில் பூரான் ஊர்கிற நடுக்கமான கூச்சம்.

சாக்குமூட்டையை இடிக்கிற மாதிரி வந்து ஒட்டி உரசுகிற சக பயணிகள். காது மடலில் சூடாய் மோதுகிற சுவாச அருவருப்பு. எரிச்சலும் எதிர்ப்புணர்வுமாய்த் திரும்பிப் பார்த்த இவனைப் புறங்கால்களால் எற்றுகிற அலட்சியம். கத்தியாய் நெஞ்சில் சொருகி ரத்தம் பெருக்குகிற புறக்கணிப்பு.

ஊமைக் குமைச்சலாய் பொருமிய இவனைக் கண்டன மாய்ப் பார்த்த சகபயணிகள்.

"அடுத்தவன் கைபடாம, அலுங்காம போகணும்னா, ஆட்டோவுல டாக்ஸியிலே போக வேண்டியதுதானே? பஸ்ஸுலே வந்தா... கூட்டத்துலே கால் கை படத்தானே செய்யும்?"

காயத்தில் உப்பையள்ளிப் போட்ட அவர்களது முணு முணுப்புகள். நசுக்கப்பட்ட புழுவின் அவஸ்தையில் ராமச்சந்திரன்.

இங்கு வந்தால்... சிகரெட்காரன்!

சப்—எடிட்டர் பிரிவுக்கான அறையின் கதவைத் தள்ளிக் கொண்டு உள் நுழைந்தான்.

"ஹலோ... ராம்ஸ், என்ன லேட்?"

சக சப்—எடிட்டர்களின் உற்சாகச் சப்தங்கள்.

விசாரிப்பா, விசாரணையா என்று தொனியைக் கண்டு பிடிக்க முடியாத ஒரு தோரணையான 'குட்மார்னிங்' அது. முள்ளாய்க் குத்திய வரவேற்பு எரிச்சல்.

வெறுமனே 'ஹலோ' மட்டும் சொல்லி விட்டு, அவர்களை மட்டம் தட்டிய திருப்தியில் டேபிளில் பேக்கை வைத்தான். சீட்டில் உட்கார்ந்தான். வாட்டர் பேக்கை டேபிளில் வைத்து விட்டு, சுவரை நிமிர்ந்து பார்த்தான். மணி, பத்து நாற்பது.

துணுக்கு எழுதுகிற சப்—எடிட்டர் ஆங்கிலப் புத்தகங் களைப் புரட்டிக் கொண்டிருந்தார். அவரவர் அவரவர் பணிகளில்.

இவன் முகத்தில் இன்னும் உட்கார்ந்திருக்கிற சிடு சிடுப்பு... மென்மையோ குழைவோ இல்லாத மன விறைப்பு. யார் யாரோ முறுக்கேற்றி விட்ட விறைப்பு.

ப்யூன் கொண்டு வந்த தபால்கள். கனத்த கனத்த கவர்கள். இன்லெண்ட் காகிதங்கள், கார்டுகள் — தபால் முத்திரைக் காயங்களால் கசங்கலாயிருந்தன.

இதுதான் இவன் பணி. மலைப்பும், சலிப்புமான பணி.

எல்லாவற்றையும் பிரிக்கணும், வகை பிரிக்கணும். வாசகர் கடிதங்களை– மறுப்புக் கடிதங்களை– கவிதை களையெல்லாம் ரக வாரியாய் ஒழுங்குபடுத்தி அதனதன் டிபார்ட்மெண்டுக்கு அனுப்பணும். சிறுகதைகளைப் படிக்கணும். பிரபல எழுத்தாளர்கள் கதை என்றால் எடிட்டர் ரூமிற்கு அனுப்ப வேண்டும்.

எல்லாவற்றையும் ஒன்று விடாமல் படிக்கணும். பென் சில்களால் கோடுகள் போடணும். குப்பை குப்பையா யிருந்தாலும் வாசித்து சரிபார்த்து, திருத்தங்கள் செய்து 'நோட்' எழுதி வைத்து எடிட்டர் பார்வைக்கு அனுப்பி வைக்கணும்.

ஆரம்பத்தில் ருசியாக இருந்து உற்சாகமூட்டிய பணி இது. எத்தனையோ எழுத்தாளர்களின் விதம்விதமான எழுத்தை வாசிக்கிற வினோத அனுபவங்கள்.

சீக்கிரத்திலேயே அலுப்பூட்டிவிட்டது. பணி ஒரு சுமையாய் அழுத்திற்று. இவனது தனித்துவத்தை உள் ஒடுங்க வைத்து விட்டது.

தனித்துவத்துக்கான அங்கீகார வறுமை, திறமையை – சுயமுனைப்பை ஊமையாக்கி விட்டது.

வந்திருக்கிற மேட்டர்களைத் திருத்தி, நகாசு வேலை செய்து, படைப்பாற்றலைக் காட்டி கதையைத் தேற்றிப் பிரசுரம் செய்து, எத்தனையோ புது எழுத்தாளர்களை ஆர்வமாய் உருவாக்கியிருக்கிறான். அந்த உழைப்பு, அந்த எழுத்தாளர்களால் கூட அங்கீகரிக்கப்பட்டதில்லை. நன்றியும் பாராட்டும் ஆசிரியருக்கும், இதழுக்கும் தான். இவனுக் கில்லை.

பத்திரிகைகளில் சப்–எடிட்டர்களும், சினிமாக்களில் அஸிஸ்டெண்ட் டைரக்டர்களும் ஒரே ரகம். மாடாய்

வேலைகள், நாயாய்ப் பாடுகள், பலனும், புகழும் மட்டும் வேறு யார்யாருக்கோ.

அஸிஸ்டெண்ட்டைரக்டர்களுக்காவதுகூட்டத்தோடு கூட்டமாய் டைட்டில் கார்டு வரும். உறவினர்களிடம் காட்டி மகிழலாம். சப்–எடிட்டர்களுக்கு அதுவுமில்லை. இதழின் மொத்தப் புகழில் அடையாளம் தெரியாமல் புதைந்து, நாசமாய்ப் போக வேண்டியதுதான்.

இந்த ஏமாற்ற அனுபவங்களின் அடர்த்தியே பணியின் வெறுப்பாகவும் சலிப்பாகவும் ஆகி விட்டது. மன ஈடுபாட்டை கத்தரித்து, வயிற்றுப் பாட்டுக்கான மாரடிப் பாக்கி விட்டது. முகம் தொலைத்த வறட்டுப் பிழைப்பு. சுயமிழந்த கடுப்பு. ஒரு பகாசுர யந்திரச் சுழற்சியில் கண் காணாமல் போகிற ஒரு திருகாணியைப் போல சிறுமைப்பட்டிருக்கிற நிரந்தர வேதனை.

இந்த நுண்ணுணர்வுகளைப் புரிந்துகொள்ள ஒரு நாதியில்லை. பலனடைந்த எந்தப் பாவியும் இவனை ஒரு பொருட்டாக நினைத்ததில்லை. இவனையும் இவன் தொழிலையும் மனசால் தொட்டுணர்ந்து கௌரவிக்கிற மனிதநேயம் எவனிடமுமில்லை; எந்த எழுத்தாளனிடமும் இருந்ததில்லை. ச்சே!

"மனுசத்தன்மையேயில்லாத இவங்க எழுத்துலே என்ன ஈரம் இருக்கு? எப்படியிருக்கும் உயிர்ப்பு? சவக்கதைகள்!"

உள்மன முணுமுணுப்பாய் நீண்ட நினைவுகளோடும், பெருமூச்சோடும் கற்றையைப் பிரித்தான். எடுத்த எடுப்பில் ஒரு கடிதம். வாசகர் கடிதம். நடப்பு வார 'இஷ்யூ' வைப் பாரட்டிய கடிதம். அட்டை டு அட்டையாகப் பாராட்டு. சகலத்திற்கும் பாராட்டு.

பாராட்டில் போலித்தனம் பல்லையிளித்தது. அந்தக் கடிதமே ஒரு பிச்சைப் பாத்திரத்தின் 'ஐயா, தர்மவானே' என்ற குரலாக இவனுக்குத் தோன்றியது.

'இப்படி வாசகர் கடிதம் எழுதியிருக்கிறவன், பிரசுர மேட்டர் எதுனாச்சும் அனுப்பியிருப்பானே...'

அனுபவம் யூகமாய் உறுத்த, அவசர அவசரமாய் கனத்த கவர்களைப் புரட்டினான், ராமச்சந்திரன். அதில் ஒன்று, இதே ஃப்ரம் அட்ரஸோடு.

அந்தக் கர்ப்ப கவரை உடைத்தால்... இவன் நினைத்த மாதிரியே பிரசுரத்துக்குக் கெஞ்சுகிற கடிதத்துடன் கூடிய ஒரு மேட்டர். முழுவதையும் படித்துத் துழாவினாலும், ஒரு துணுக்குக் கூட தேறாது. வெறும் குப்பை.

இப்படி காக்காய் குணத்தோடு உதயமாகிற எழுத்தாள னிடம் மருந்துக்குக் கூட முதுகெலும்பு இருக்குமா? நூறு சதப் போலியாயிருக்கிற இவனெல்லாம் என்னத்துக்குப் பேனா பிடிக்கணும்? தன்னையே மனுசனா மதிக்காத – சுயமரியாதை யற்ற ஜந்து, ச்சே!

கை எந்திரமாய்ச் செயல்பட்டது. வாசகர் கடிதங் களைப் பொறுக்கி, இன்னொரு சப்–எடிட்டரிடம் தந்து கவனிக்கச் சொன்னான், ராமச்சந்திரன். மறுப்பும், விளக்கமுமாய் வந்த இன்லெண்ட் லட்டர்களை வாசித்து, நீக்கவேண்டிய பகுதிகளில் சிவப்புப் பென்சில் கோடுகள் போட்டு பியூன் மூலம் எடிட்டர் ரூமிற்கு அனுப்பினான்.

வந்திருக்கும் சிறுகதைகளைப் பிரித்து, நம்பர் போட்டு, ரெஜிஸ்டரில் பதிவு செய்து விட்டு, கதைகளோடு கவரையும் பின் அடித்து, விரித்த நிலையில் ஃபைல் பண்ணி னான்.

கடைசியாக அந்தக் கவரைக் கிழிப்பதற்கு முன்பு ஃப்ரம் அட்ரஸைப் பார்த்தான். அதே எழுத்தாளர். கிராமத்து எழுத்தாளர். அடிக்கடி கதை எழுதி அனுப்புவார். கதையோடு இணைத்து நிச்சயமாய் ஒரு கடிதம் வரும். அதில் 'கதையில் கை வைக்கவேண்டாம்' என்கிற உறுதியான வேண்டுகோள். அதற்கான நியாயங்கள்.

எரிச்சலூட்டுகிற வேண்டுகோள். அத்து மீறலான வேண்டுகோள். முகம் பார்க்காத அந்த எழுத்தாளர் மீது இவனுக்கு எப்போதுமே வெறுப்பும், கோபமும் தான்.

சக சப் எடிட்டர்கள் மூன்று பேருமே அந்த எழுத்தாளர் கட்சி. "தன்னம்பிக்கையுள்ள எழுத்தாளர். சுய மதிப்புமிக்க எழுத்தாளர்களில் ஒருவர்" என்பது அவர்கள் வாதம்.

அடிக்கடி இது பற்றி சர்ச்சை நடக்கும்.

இவன் வாதமே தனி. கேள்விகளை மாறி மாறி அடுக்கு வான், மிக உக்கிரமாய்.

"கதையை பப்ளிஷ் பண்ற பொறுப்புள்ள எடிட்டருக்கு அதைத் திருத்துற ரைட்ஸ் உண்டு. அந்த ரைட்ஸை இவர் எப்படிப் பிடுங்கலாம்?"

"இந்தப் பத்திரிகையிலே கதை பப்ளிஷாகணும், பப்ளி சிட்டி பெறணும்னு ஆசைப்படுற இந்த ஆளு, கண்டிஷ னுக்கு மட்டும் உட்பட மாட்டேன்னு சொல்றது என்ன நியாயம்? கொள்ளுன்னா வாயைத் திறக்குறதும் லகான்னா மூடிக்கிறதும் பம்மாத்து இல்லியா? போலித் தனமில்லியா?"

"ஒரு கதையைக் காயப்படுத்தாம திருத்துற இலக்கிய அறிவு கூட இல்லாமலா, எடிட்டோரியல் போர்டு இருக் கும்? அதை அலட்சியமா எடுத்தெறியுறது அத்துமீறல் இல்லியா?"

"தனக்கு மட்டும் கூடுதலா– விசேஷச் சலுகை கேட் குறது பிரபுத்துவக் குணமில்லியா? மனித நேயம், சமத் துவம்னு வாய் கிழியப் பேசுற எழுத்தாளன் கிட்டே இந்தக் குணம் இருக்கலாமா?"

இதெல்லாம் இவன் உக்ரமாய்க் கேட்கிற கேள்விகள். அசலான மனக்கொதிப்போடு வெறுப்பாய்த் துப்புகிற வாதங்கள்! ஆனால், கேட்காமல் உள்ளுக்குள் நிரந்தரமாய்

உறுத்துகிற கேள்வி ஒன்று உண்டு. உண்மையில் அதுதான், மற்ற கேள்விகளுக்கெல்லாம் மூலப் பிறப்பிடம்.

'கதையில் கை வைக்கவேண்டாம்' என்கிற இந்த வேண்டுகோள், சப்–எடிட்டர் தொழிலையே துச்சமாக நினைக்கிறது. மிச்ச மீதியாயுள்ள சொற்ப அதிகாரத்தையும் பிடுங்கிக் கொள்கிறது.

கதையை வாசித்து, திருத்த வேண்டிய பகுதிகளில் பென்சில் கோடுகளும், நீக்க வேண்டிய இடங்களில் சிவப்பு கோடுகளும் போட்டு 'நோட்' எழுதி அனுப்பி வைக்கிற சப்–எடிட்டர் அதிகாரத்தையே காலில் போட்டு நசுக்கி விடுகிறது.

"என் கதையை வாசித்து அபிப்பிராயம் சொல்கிற தகுதி கூட உனக்குக் கிடையாது" என்று இவனைப் பார்த்து எகத்தாளம் பண்ணுகிற வேண்டுகோள்.

இவனை மட்டுமல்ல – இவனது பணியையும் சேர்த்து சிறுமைப்படுத்துகிற திமிர்த்தனம். சக மனிதர்களில் ஒரு வனான சப்–எடிட்டரை நம்பாமல்– மதிக்காமல் அலட் சியம் செய்கிற குரூரம்.

நினைக்க நினைக்க அவனுள் நெருப்பின் ஜ்வாலைகள். காலையிலிருந்தே தளதளத்துக்கொண்டிருந்த தகிப்பு. யாரையாவது கடித்துக் குதற வேண்டுமென்று துடியாய்த் துடித்த வெறி. வடிகாலற்ற உள் குமைச்சலின் அடர்த்தி யான சீற்றம்.

கவரைப் பார்த்தான். பிரித்து நம்பர் போடாமலேயே குப்பையில் ஒழித்துக் கட்டிவிட்டால் என்ன? பிறரை மதிக்காத இவன் கதையை மட்டும் நான் ஏன் பொருட் படுத்தணும்? சப்–எடிட்டரைத் தூக்கியெறிகிற இந்த எழுத் தாளனை– நாம் தூக்கியெறிந்து விட வேண்டியது தான்...

எதிர்வினையாற்ற துடித்த மனத்துடிப்பு கையில் இறங்க– இதைக் காணாமலாக்குவதன் மூலமே தனது அதிகாரத்தை தனது இருப்பை– இருப்பின் அர்த்தத்தை தானே உணர முடியும் என்ற நினைப்போடு டேபிளுக்கடியில் உள்ள கூடையில் போடப் போனவனுக்குள், ஒரு சிறு தயக்கம். ஒரு சின்ன நெருடலான நப்பாசை.

பிரித்துப் பார்த்து விட்டு... கிழித்துப் போட்டால் என்ன... மேலோட்டமாய் ஒரு பார்வை மேய்ந்துவிட்டு, காணாமல் ஆக்கிவிட வேண்டியதுதான்.

பிரித்தான். நாலாய் மடித்த மடிப்புகள் விரிய மறுத்து அடம்பிடிக்கின்றன. கதையின் இணைப்பாய் ஒரு கடிதம். அதே வேண்டுகோள். 'கதையில் கை வைக்க வேண்டாம்' என்கிற பணிவான வேண்டுதல். 'பிரசுரிக்க இயலாவிட் டால் திரும்பி அனுப்பிவிடுங்கள்' என்கிற திமிர்த்தனம்.

'ச்சே' என்கிற வெறுப்போடு கடிதத்தைப் புரட்டி விட்டுப் பார்த்தால்... கதையின் தலைப்பு: 'அர்த்தம்.'

கதையின் முதல் வாக்கியமே அவன் ஆத்மாவுக்குள் அதிர்வோடு இறங்கிற்று. அவனைச் சுண்டியிழுத்து வசீகரித்து உள் இழுத்தது.

"சங்கடத்தில் மாட்டிக் கொண்ட சப்–எடிட்டர் சங்கர நாராயணன் மீள வழி தெரியாமல் தவித்துக்கொண் டிருந்தார்."

படிக்கப் படிக்க இவனுள் அலை மோதுகிற பரவசம். அள்ளி இழுத்துக் கொண்டு பாய்கிற மகிழ்ச்சிப் பிரவாகம்.

இவனது மனசையே– உணர்வையே– ஒத்தியெடுத்த மாதிரியான கதை. திரைக்குப் பின்னால், முகம் மறைத்துக் கொண்டு புதிய புதிய எழுத்தாளர்களைப் பிரபலப் படுத்துகிற நல்ல பண்பு. பிரதிபலன் கருதாத கர்ம சிந்தனை. வார்த்தைச் சிக்கனமில்லாத கதைகளை 'எடிட்' பண்ணுகிற

கலையின் மூலம், சீவிச் சிங்காரித்து நேர்த்தியாக்கி விடுகிற சிருஷ்டியற்புதம்...

ராமச்சந்திரனுக்குள் உணர்வுப் பரபரப்பு. முகம் தெரியாத அந்த எழுத்தாளனின் கையை முத்தமிடணும் போல ஓர் உள் தீவிரம்.

இவனை மட்டுமல்ல– இவனது தொழிலை மட்டுமல்ல– அதன் ஆத்மாவையே, அதன் சகல அழகுகளோடு வார்த்தைப்படுத்தி மகிமைப்படுத்தியிருக்கிற கச்சிதம். அதையும் செயற்கையாகச் செய்யாமல், இயல்பு குன்றாத யதார்த்தமாய்...

அவனது விறைப்பு, சிடுசிடுப்பு, எல்லாம் இருந்த இடம் தெரியாமல், மாயமாய் மறைய... மனிதனை மனிதனாக மதிக்கிற மகத்துவத்தைத் தரிசித்த பரவசத்தில் அவன் திக்குமுக்காட....

எடிட்டர் ரூமிற்கு அக்கணமே அக்கதையை அனுப்ப விரும்பினான். பியூனுக்காகக் காத்திருக்கிற பொறுமை யில்லாமல் அவனே எழுந்தபோது –

அவன் அவனாகியிருந்தான்.

கல்கி, ஆகஸ்ட், 1993

இலக்கியச் சிந்தனை பரிசுபெற்ற சிறுகதை.

4.ரௌத்ரம்

கனா கண்டு முழித்தமாதிரி இருந்தது, சின்னாண்டிக்கு... தலைகால் புரியாத சந்தோஷம். சாதிக்கப் போகிற சாதனை. அவனுக்கு அவனே ஆச்சரியமாய்...

ராத்திரி வரைக்கும் கூட அந்த விவகாரம் கழுத்தாம் பிடியாயிருந்தது.

மலைப் பிரம்மாண்டமாய் போட்டு அழுத்திய அந்த விவகாரம், இப்படியும் சட்டென்று தீர ஒரு பாதை கிடைக்குமென்று சின்னாண்டி நினைக்கவேயில்லை. ஜோஸ்யக்காரர் முத்துச்சாமி வேளாளர் மண்டையைப் போட்டது,சின்னாண்டிக்குரொம்பத்தோதாய்அமைந்து விட்டது. இவனுக்குள் ஏகக் கொண்டாட்டம். கும்மாளம்.

வேளாளர் மேலுக்கு சுகமில்லாமல் ரொம்ப நாளாய் சட்டடியாய்ப் படுத்து கிடந்தார். 'இன்றைக்கு, நாளைக்கு' என்று இழுத்துக் கொண்டு கிடந்த உயிர், விடியற்காலம் நாலு மணிக்கு, கரிச்சான் கீச்சிடுகிற நேரத்தில் போய்ச் சேர்ந்தது.

கிராமத்தில் இழவு என்றால், யாரும் வேலைக்குப் போகக் கூடாது. போயிருந்தாலும் வந்துவிட வேண்டும். ஊர்க்கட்டு. நாய்க்கர் புஞ்சைக்குப் பதிவாய் வேலைக்குப் போகிற சின்னாண்டி, இன்றைக்குப் போக வேண்டிய தில்லை. உற்றவர்கள்– உரியவர்களுக்கு இழவு சொல்லிப் போக வேண்டிய கடமை, ஊர்ப்பகடைகளுக்கு. சின்னாண்டியும் போயாகணும்.

இதோ... இழவு சொல்ல ஆமர் நாட்டுக்கு நடையாய் நடக்கிறான் சின்னாண்டி. விடிந்த வெளிச்சம், காலடியில். இன்னும் பொழுது புறப்படவில்லை. தோல்செருப்பு, வண்டிப்பாதையில் 'டடப் டடப்' என்கிறது. வேலிமர அடர்த்திக்குள் செம்போத்துப் பறவையின் தாகமான நீளக் கூவல். சிறகு விரிய வட்டமடிக்கிற பருந்தின் கூடவே பறந்து விளையாடுகிற கரிச்சான். ஆவாரங் கொழைகளின் கூந்தல்களில் கொத்துக் கொத்தாய்ப் பூத்துச் சிரிக்கிற பூக்களின் மஞ்சள் ஜொலிப்பு. தைமாசம் பின்பனி, எலும்புக் குருத்துகளைக் குத்துகிறது.

முந்தா நாள், இப்படித்தான், ரெண்டு கிளாஸ் சாரா யத்தை ஊற்றிக்கொண்டு வீடு வந்தான். உண்டது தெரி யாமல் படுத்துறங்கிப் போன சின்னாண்டி, பின்பனியின் ஊசிக்குத்தலில் முழித்துக்கொண்டான். கூதலடித்தது., இழுத்து மூட இடுப்பு வேட்டி தவிர, வேறொன்றுமில்லை.

எழுந்து உட்கார்ந்தான். குடிசைக்குள் இருட்டு. வெளியே பன்றிகளின் உறுமலும் சீறல்களும். கண்ணுக்குப் பழகிப்போன இருட்டுக்குள், நிழல் வடிவமாய் ஒரு குருட்டு வெளிச்சம். கொஞ்சம் தள்ளி பிள்ளைகள் இரண்டும் படுத்திருந்தன. பக்கத்தில் முத்தக்கா.

பூனையாய் ஊர்ந்து கிட்டத்தில் போய் உட்கார்ந்தான். அவள் விடுகிற மூச்சு சப்தம். மெல்ல அவள் கையைத் தடவினான். வேர்வைப் பிசுபிசுப்பில்லை. அழுக்கின் பிசுக் கும் தெரியவில்லை. குளித்திருக்கிறாள். குளிப்பின் மிருது வும், மென்மையும், மணமும் கையைக் கொஞ்சுகிறது. மனசுக்குள் ஒரு உன்மத்தம்; உள் தீவிரம்; முறுக்கேறுகிற நரம்புகள்.

ரெண்டுபிள்ளைகள் பெற்றவள் மாதிரியாயிருக்கிறாள் முத்தக்கா. போனமாசம் சடங்கான குமரி மாதிரி, செவலக் காட்டு சீனிக்கிழங்கு மாதிரி கிண்ணென்று, திண்ணக்க மாய்...

அவனுள் 'திகு, திகு'வென்று பற்றியெரிகிற தீ. கருகக் கருக சுகமாய் இருக்கிற தீ. எரிய எரிய வெறிகொள்கிற தீ. தீண்டத் தீண்ட உள்ளுக்குள் இன்பமாய் மூண்டெழுகிற தீ.

கையில் ஒரு நடுக்கம். இருப்புக் கொள்ள முடியாமல் தவிக்கிற உணர்வு. சத்தமில்லாமல் அவளை எழுப்பணும். அவளது குளிர்ச்சியான அடிவயிற்றில் உள்ளங்கையால் தடவி... அழுத்தி...

முத்தக்கா பதறிப் போய், 'தடாபுடா'வென்று விழுந் தடித்துக் கொண்டு எழுந்தாள். பதைத்துப் போய்க் கேட்டாள்.

"என்ன... விடிஞ்சிருச்சா?"

"இல்லை."

"பெறகெதுக்கு உசுப்புனே?"

"சும்மாதா."

"சும்மா... வா?"

அவளுக்கு இச்சிலாத்தியாக இருந்தது. பொழுது பூராவும் காட்டில் வேர்வை பிழிந்த உடம்பு. வீட்டிலும் வந்து வேலை... வேலை.... வேலைகள் தான். 'உஸ்ஸ்' ஸென்று உட்காரப் பொழுதில்லை. உறக்கத்துக்கும், ஓய்வுக்கும் ஏங்கித் தவிக்கிற உடம்பு.

மருகிப் போய் உட்கார்ந்திருக்கிற புருஷனைப் பார்த்த தும் புரிந்து கொண்டாள், 'இது சும்மா' இல்லை என்று. அவளுக்கு எரிச்சலாகயிருந்தது. கொதித்த மனசில் வெடித்த வசவு, நாக்குவரை வந்து மாண்டு மடிந்தது.

பாவம்... மனுசன். தவித்துக் கிடக்கிற ஆள். தகித்துக் கிடக்கிற ஆம்பளை. நாம் பார்த்து அடித்து விரட்டினால்... எங்க போவான், பாவம்!

அவிழ்ந்து கிடந்த கூந்தலை ஒற்றைக்கையால் அள்ளிச் சொருகிக் கொண்டு சகிப்புக்குரிய பெருமூச்சோடு இவன் பக்கமாய்த் திரும்பிப் படுத்தாள்.

"... ஒன்னோட.... பெரிய தொல்லையாப் போச்சு."

"என்ன தொல்லை? கட்ன புருசனா, தொல்லை?"

"ஆமா... பெரீய்ய புருசன்! சம்பாத்தியக்காரப் புருசன்."

"ஏன்? நாயக்கர் புஞ்சையிலே நா பாடுபடலியா?"

"நல்லா... பட்டே! பாடுபட்டு என்ன செய்ய? சாரா யத்தை வாங்கி வாயிலே ஊத்திட்டு, சோத்துக்கு வந்து நிப்பே. நாங்க உடுத்ததுக்கு மாத்துத் துணியில்லாம சீரழியுதோம்."

"எனக்கு மட்டும் என்னவாம்? ஒத்தை வேட்டிதானே இருக்கு?"

"நீ ஆம்பளைய்யா. கோமணத்தைக் கூட கட்டிக்கிட்டு தெருக்காட்டிலே திரியலாம். பொட்டச்சி நா... அப்படித் திரிய முடியுமா?"

அவள் பேச்சு, நச்சரிப்பாக உறுத்துகிறது. நேரம் கெட்ட நேரத்தில் புலம்புகிற புலப்பமாய்....த் தோன்ற, பொறுமை சிதைந்த மனநிலையில் சின்னாண்டி.

"இப்ப... என்ன செய்யணும்ங்கிறே?"

குரலின் சிடுகிடுப்பில் அவன் மனசை வாசித்துக் கொண்ட முத்தக்கா, தன் குரலை மிருதுவாக்கிக் கொண் டாள்.

"சரிய்யா.... நீ ஒண்ணுஞ் செய்யவேண்டாம். போதுமா, ராசா?"

'ராசா'வைச் சொன்ன தோரணையில் கிண்டலும், சரசமும் பின்னிக்கிடக்க, 'ராசா' சிரித்து விட்டான்.

"நீ... பெரிய கெட்டிக்காரி!"

"சரி சரி.... அள்ளிவிடாதே!"

அவளது ஜாக்கெட் ஊக்கைக் கழற்ற கையால் துழாவினான். ஜாக்கெட்டேயில்லை. துணுக்குற்றுப் போனான்.

"என்ன... இது?"

"எண்ணெய்ப் பிசுக்கும், அழுக்குமா இருந்துச்சு. தொவைச்சுக் காயப் போட்டிருக்கேன்."

"வேற சட்டை?"

"ரெண்டு சட்டை கிழிஞ்சு போச்சு. தைக்கவும் வழி யில்லே. ரொம்ப நைஞ்சி போச்சு. இது ஒண்ணுதா உருப் படியாயிருக்கு."

ஜாக்கெட் இல்லாத வெறுமை, அவனுள் அவலத்தீயாய் சுரீரென்று சுட்டது. "பொட்டச்சி நா... அப்படித் திரிய முடியுமா?" நச்சரிப்பாய்த் தோன்றிய அவள் பேச்சு, இப்போது முள்ளாய் வந்து குத்துகிறது. அது சுமந்து நின்ற சோகம், அதற்குரிய வேகக் கூர்மையோடு முழு வீச்சாய்ப் பாய்கிறது. குத்திக் குடைகிறது.

"சீலையும் அழுக்குத்தான் வீசுது. இதையும் தொவைச்சு போட்டுட்டா.... முண்டமா படுக்க முடியாதே."

சின்னாண்டிக்குள் அழுத்தமாய் ஒரு கனம். மூச்சுத் திணறுகிற வாழ்க்கை கனம். தாட்சண்யமின்றி முகத்தில் அறைகிற இல்லாமை கனம். உள்ளுக்குள் ஒரு பிசைவு; நெஞ்சுக் கூட்டுக்குள் நெறிபடுகிற அவஸ்தை.

அவள் மீது குறுக்காகப் போட்டிருந்த வலது காலை எடுத்துக் கொண்டான். அவன் மனசுக்குள் இப்போது வேறொரு தீ. இயலாமைத் தீ. பொண்டாட்டி மானத்தை

மறைக்கக் கூட முடியாத ஆம்பளை, என்ன ஆம்பளை என்கிற ரோஷத் தீ.

அவன் மவுனமாய் ஒதுங்கிய விதமும், விட்ட பெரு மூச்சின் உள் அடர்த்தியும் அவள் மனசுக்குள் உணர்வு பாஷையாய் உள்ளிறங்கியது.

"என்னய்யா..." என்று கனிந்து போன ஒரு குழைவோடு கேட்டாள் முத்தக்கா.

"சீலையும், சட்டையும் எடுக்கணும்னா... நூறு ருவாய் ஆவுமா?"

"ம்."

"நாளைக்கு நாயக்கர் சாமிகிட்டே கேட்டு பாப்பமா?"

"கேக்க முடியாதேய்யா. போன வாரம் அவருகிட்டே நூறு ரூபா வாங்குனோம்லே? அது, ஒஞ்சம்பளத்துலே தான் கழிஞ்சு வருது."

"இன்னும் ஒரு நூறு ரூவா கேப்போம். தர மாட்டாரா?"

"தர மாட்டாரு. கட்டாயமா தரவே மாட்டாரு."

வேறு வழி? உள்ளூர் ஜவுளிக்கடைக்காரர் நம்பி கடன் தர மாட்டார். குடிகாரப் பயல் என்று நினைப்பார். சைக் கிளில் பொட்டலம் கட்டி வருகிற ஜவுளிச் செட்டியாரிடம் கேட்டுப் பார்க்கலாமா? வாரம் பத்து ரூபாய் என்று தவணையில் கட்டி விடுவதாகச் சொல்லிப் பார்க்கலாமா? கொடுப்பாரா? கொடுத்தால்... கடனை அடைத்து விட முடியுமா? வாரா வாரம் பத்து பத்து தர முடியுமா? முடியும். முடியணும். நெதம் வாங்கி ஊற்றுகிற சாராயத்தை நிறுத்திக் கொண்டாவது...

அவனுள் ஒரு தீவிரம். வைராக்கியம். வாழ்க்கையோடு மல்லுக்கட்டி ஒரு கை பார்த்து விடவேண்டும் என்கிற போர்க் குணம்.

ஆசையும், தாபமுமாய் உசுப்பிய புருஷன், மவுனமாய் ஒதுங்கிக் கிடக்கிறான். உடம்புகளின் இடைவெளி அவளைச் சுட்டது; உள் மனசில் அன்பாய்ச் சுட்டது.

"என்னய்யா.... 'கம்'முன்னு கெடக்கே?"

"ஒண்ணுமில்லே. சீலையும் சட்டையும் எடுத்துக் குடுக்காம... இனி ஒன்னைத் தொடமாட்டேன்."

அப்படியே நெக்குருகிப் போனாள். மனசின் மூலை முடுக்கெல்லாம் பரவிப் படர்கிற பரவசம். அவள் தேக மெல்லாம்... ஓடிச் சிலிர்க்கிற புல்லரிப்பு.

மானத்துக்குத் துணியாய் புருசன். இதைவிட ஒரு பெண்ணுக்கு என்ன பெருமை வேண்டும்?

அவன் சொன்ன வேகத்திலிருந்த அக்கறை, அதற்குள் உறைந்து கிடந்த புருசப் பொறுப்புணர்வு, பரிவுணர்ச்சி...

இதெல்லாம்... இந்த ஆளிடமா? ரெண்டு கிளாஸ் சாராயத்துக்காக 'லோ லோ' என்று நிதம் அலைகிற இந்த ஆளிடமா? குடிபோதையில் வந்து சண்டை போட்டு, அடித்து மிதித்து வீட்டையே ரணகளப்படுத்துகிற இந்த ஆளிடமா.... இந்த ஈரமும், பொறுப்பும்?

அவளுள் ஏதேதோ... நினைவுகள், உணர்வுகள். சொல்ல முடியாத மனப்பரபரப்பு. புருசனின் உள் முகம் உணர்ந்த ஆனந்த பரவசம்...

அவளால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளவே முடியவில்லை.

அப்படியே புருசன் மேல் பாய்ந்து, ஆவி சேர்ந்து, இறுக்கி அவன் முகமெல்லாம் எச்சிலாக்கி... அவன் முகத்தை அள்ளி மார்புக்குள் புதைத்து... ஆவேசக் கூத்தாடி...

மறுநாள், ஜவுளிச்செட்டியாரிடம் தலையைச் சொறிந் தான். அவரை 'தாஜா' பண்ணி பவ்யமாய்ப் பேசினான். ஒன்றும் கதையாகவில்லை. பொட்டலம் ரொம்ப மெலிந் திருந்தது. செட்டியார் அதைக் காட்டினார்.

"பாத்தீயா, பொட்டணத்தை? உள்ளதைப் பூரா ஊருக் குள்ளே கடனா வெதைச்சுட்டேன். அஞ்சு பைசா கூட வசூலாகலே. சரக்கு எடுக்கப் போக முடியாம நானே கிடந்து முழிக்கேன்... நீ வேறே கடனும் ஒடனும் கேட்டுக்கிட்டு; போப்பா."

—என்று வேதனையும் சீற்றமுமாய்ச் சொல்லிவிட்டு சைக்கிளை உருட்டினார். இவனுக்கு காலடித்தரையே நழுவுகிற மாதிரியிருந்தது. போர்க்குணம், கலகலத்தது.

சாயங்காலம் நாயக்கர் புஞ்சையில் வேலை முடித்து விட்டு வந்தான். நப்பாசையோடு நாயக்கரிடம் கெஞ்சிக் கூத்தாடிப் பார்த்தான்.

"அடேய், கூறு கெட்ட பயலே. பருத்திக்கு மருந்தடிக் கணும். ரெண்டு லிட்டர் மருந்து வாங்கணும். ரூவா கண்ணுலே தட்டலே. ஊர்லே இருக்குற ஒண்ணுக்குமத்த பயகிட்டேயெல்லாம் கேட்டுப் பாத்துட்டேன். ஒண்ணும் ஆகலே. நீ வேறே உசுரைப் பிடுங்கிக்கிட்டு. போடா."

சின்னாண்டிக்கு நாடியே விழுந்துவிட்டது. எல்லா வழிகளும் அடைபட்டுப் போன மாதிரி இருந்தது. ரெண்டு கிளாஸ் சாராயம் குடிக்கிற வழக்கத்தைக் கூட மறந்து போனான். அவன் மனசுக்குள் திணறல். கழுத்தாம் பிடியா யிருந்தது. தப்பித்து மீள வழியே புலப்படவில்லை.

ராத்திரி படுத்தால், உறக்கமே வரவில்லை. முத்தக்காவுக்கு மானத்தை மறைக்கத் துணியில்லை. மாத்துச் சேலையில்லை.

முத்தக்கா எப்பேர்ப்பட்டவள்! குடித்துவிட்டு வந்து எத்தனை தடவை போட்டு அடித்திருக்கிறான். மானங் கெட்ட பேச்சு பேசியிருக்கிறான். பூமி மாதா மாதிரி பொறுமைக்காரி.

சீமான் மாளிகையில் குத்துவிளக்காய் இருக்க வேண்டிய குணவதி. சக்கிலிச்சியாய்ப் பிறந்ததால்... இவனிடம் வந்து, இடுப்புத் துணியில்லாமல் சீரழிகிறாள்...

நேரத்துக்கு ஒரு சேலையும், விதத்திற்கு ஒன்றுமாய் உடுத் திக் கொண்டு அலைகிறதுகள் சிலது. இந்த மகராசிக்கு இந்த நிலை. அடப் பாதரவே!

இவனும் பாடுபடுகிறான். அவளும் உட்காரப் பொழுதில்லாமல் பாடுபடுகிறாள். அப்பவும், உடுத்துகிற துணிக்கும் வழியில்லை என்கிற வாழ்க்கை நிஜம். அதன் கசப்பு, காரணம் விளங்காத இருட்டுத் திகைப்பு. போர்க் குணம் காணாமல் போய், சோர்வும் அயர்ச்சியுமாய்...

உறக்கம் கண்ணில் ஒட்டவேயில்லை. நினைக்க நினைக்க மனசை உலுக்கியெடுத்தது.

அப்பத்தான்... அந்தத் தாக்கல் வந்து சேர்ந்தது.

"மூச்சாமி வேளாளரு மண்டையைப் போட்டுட்டாரு. எளவு சொல்ல, பகடைகளெல்லாம் போகணுமாம். ஊர் நாட்டாமைச்சாமி சொல்லியிருக்காக...." என்று ஒருவன் சத்தம் போட்டுக்கொண்டே ஓடினான். பன்றிகளின் உறுமல்களையும், எருமையின் கதறலையும் மீறி... அது தெளிவாகக் கேட்டது.

சின்னாண்டிக்கு மூளை சுறுசுறுவென்று வேலை செய்தது. தெனம் ரெண்டு கிளாஸ் சாராயத்துக்காக யார்

யாரையோ 'தாஜா' பண்ணுகிறவன், 'ஐயா, சாமி' என்று கெஞ்சிக் கூத்தாடி, ஆயிரம் பொய் சொல்லிக் கூழைக் கும்பிடு போட்டு தந்திரம் பண்ணுகிறவன்.

அதே புத்தி, இப்பவும் வேலை செய்தது. ஒரு யோசனை பிடிபட்டது. அந்த யோசனை, அவனுக்கே பிரமிப்பான பொருத்தமாகத் தோன்றியது. அவனே அவனுக்கு ஓர் ஆச்சர்யமாய்...

தலைகால் புரியாத சந்தோஷம்.

சக பகடைகளோடு சின்னாண்டியும் இழவு வீட்டு முன்னால் போய் நின்றான். தோள் துண்டைக் கையில் போட்டு பவ்யமாய் நின்றான். ஒவ்வொரு பகடையையும் ஒவ்வொரு ஊருக்கு நியமித்தார், ஊர் நாட்டாண்மை.

"ஆமர் நாட்லே ஆறு வீடுகள்லே சொல்லணும். யார் போறீக? ஏண்டா – ஆண்டி, நீ போறீயா?"

"ஆட்டுஞ் சாமி. ஆனா..."

"என்னடா, ஆனா, ஆவன்னா?"

"இல்லே சாமி... ஆறு வீடுங்கிறீக. துட்டி* சொல்லப் போனா... வீட்டுக்கு ஒரு ரூவாய் குடுப்பாக. வருமானம் ரொம்பக் கம்மியாயிருக்கும். டீத் தண்ணிக்குக்கூட துட்டு பத்தாது..."

நாட்டாண்மை சிரித்தார்.

"ஒனக்குச் சாராயத்துக்கு துட்டு வேணுமோ? எப்பா, இந்த ஆண்டி கையிலே அஞ்சு ரூபாயைப் போடு. சரியா ஆண்டி?"

"போதுஞ்சாமி. ஆறு வீடுக மட்டுந்தானா?"

★ துட்டி - இழவு அல்லது கெட்டது. துஷ்டம், துஷ்டியாகி துட்டியாகியிருக்கிறது.

"ஆமா. துட்டு வருமானத்துக்காக நீ பாட்டுக்கு ஊரெல்லாம் சொல்லிராதே. கேவலமாப் போயிரும். ஆறு வீடுக மட்டுந்தான்."

"ஆகட்டுஞ்சாமி..."

குறுஞ்சிரிப்பாய் சிரித்துக் கொண்டான். அவன் யோசனையே அதுதான். மண்டையைப் போட்டிருக்கிற முத்துச்சாமி வேளாளர், கோவில் பூசாரி. பெரிய ஜோஸ்யர். வட்டாரத்தில் அவரைத் தெரியாத ஆளே கிடையாது. அத்தனை பிரபல்யம்.

ஆமர் நாட்டில் போய்... நாடாக்கமார், நாய்க்கமார், தேவமார் எல்லா ஜாதிசனத்திடமும் வீடு தப்பாமல் இழவு சொல்லிவிட வேண்டியதுதான். வீட்டுக்கு ஒரு ரூபாய் கொடுப்பார்கள். விருப்பமில்லாதவர்களும் கூட... தள்ள மாட்டாமல், அரை ரூபாயாச்சும் கொடுத்து விடுவார்கள்.

நடக்கப் போகிற கூத்தை நினைக்க நினைக்க... அவனுள் சிரிப்பாணி பொத்துக் கொண்டு வருகிறது.

மேல்த்துண்டை முழங்கையில் போட்டுக் கொண்டு ஒரு வீட்டின் முன்னால் போய் பவ்யமாய் நிற்பான்.

"யாரப்பா... நீ?"

"துட்டி சொல்லி வந்துருக்கேன்... சாமி."

"துட்டியா? எங்கயிருந்து?"

"நம்ம ஜோஸ்யரு முச்சாமி வேளாரு மண்டையைப் போட்டுட்டாரு, சாமி. ஒங்ககிட்டே சொல்லச் சொன்னாக."

"எங்கிட்டேயா? எனக்கும் அவருக்கும் தொடர்பில்லையே..." என்று... பாவம் அவர் 'விலு விலு' வென்று முழிப்பார். அசட்டுத்தனமாய் மூளையைப் போட்டுக் கசக்குவார்.

“அதென்னமோ சாமி... உங்ககிட்டே சொல்லச் சொன்னாக...”

“நெசம்மாவா?”

“ஆமா சாமி...”

“இது என்ன புது வம்பாயிருக்கு. சரி இந்தா ஒரு ரூவா, போய்த் தொலை.”

இவன் கூழை தந்திரத்தில் ஊரே ஏமாறும். இவனுக்கு வசூலாகிப்போகும்... நினைத்தால், சிரிப்பாணி வெடித்துக் கொண்டு வருகிறது.

ஊரெல்லாம் சொல்லி முடித்து, காப்பிக் கடையில் நாலு இட்லியைப் பிய்த்து வாயில் போட்டுவிட்டு... ஊரைக் கடந்து வந்து விட்டான், சின்னாண்டி. இளமதியமாகி விட்டது.

மடியில் சில்லறையும் நோட்டுமாய்... மனசைப் போல சந்தோஷமாய் சலசலத்தது. மஞ்சணத்தி மரத்து நிழலில் உட்கார்ந்து எண்ணிப் பார்த்தான். நூத்தி முப்பதுக்கு கொஞ்சம் கூடியிருந்தது.

அவனுக்குத் தலைகால் புரியாத சந்தோஷம். சொந்த சாமர்த்தியத்தில் வந்த சம்பாத்தியம். முத்தக்காவுக்கு சேலையும், சட்டையும் எடுத்து விடலாம். பிள்ளை களுக்கும் கூட குறைந்த விலையில் ரெண்டுதுணி எடுத்து விடலாம்...

இந்தப் பணத்தை... முத்தக்காவிடம் இப்பவே காட்ட ணும். அவன் சாமர்த்தியத்தை நினைத்து எம்புட்டு சந்தோ ஷப்படுவாள். அவள் முகமெல்லாம் ஆவாரம் பூவாய் பூத்து ஜொலிக்கும். மின்னலாய் வெட்டி மின்னுகிற அவளது கண்கள்....

இந்தப் பணத்தை... முத்தக்காவிடம் இப்பவே காட்டணும். மலர்ந்து சிரிக்கும் அவள் குளிர் முகத்தைப் பார்க்கணும். இப்பவே, இப்பவே... இந்தக் கணமே...

அவனுள் துடிப்பு... புதுச்சட்டை மாட்டிய ஏழைச் சிறுவனின் ஆர்வப் பரபரப்பு.

எள் களத்தில் இருந்தாள் முத்தக்கா. உதறிக் காயப் போட்ட எள்ளுச் செண்டு, களம் பூராவும் முதப்பாய் விரிந்து கிடந்தது. கறுப்பு மலையாய்க் குவிந்துகிடந்த எள்ளில் விளக்குமாறாமல் பரசிப் பரசி... தூசி துப்பட்டைகளை நீக்கிக் கொண்டிருந்தாள் முத்தக்கா. அவள் உடம்பெல்லாம் கருந்தூசி. தலை, கை, சேலையெல்லாம் படிந்து கிடந்த கருந்தூசி.

நேராய் அவளிடம் வந்திருந்தான். வெற்றிபெற்ற பெருமிதத் ததும்பலாய்.... வந்து நின்றான், சின்னாண்டி.

"என்னய்யா... துட்டி சொல்லிவிட்டு வந்துட்டீயா?"

"ம்."

"சாப்ட்டுட்டீயா?"

"ம்... காப்பிக் கடையிலே."

"என்ன ஆளு ஒரு தினுசாயிருக்கே...? மூஞ்சியைப் பாத்தா... ஒரே ஆதாளியாய்த் தெரியுது?"

"சீலை துணிமணியெல்லாம் எடுத்துரலாம். அதுக்கு ரூவா கெடைச்சிருச்சு."

"ஏது?"

ஊர் பூராவையும் ஏமாற்றிய சாமர்த்தியத்தை... வீடு தவறாமல் கையேந்தி காசு வாங்கிய கெட்டிக்காரத் தனத்தை —எல்லாம் மகிழ்ச்சிப் பரபரப்பாய் விவரித்தான்.

அவள் முகத்தைப் பார்க்கப் பார்க்க இவனுள் எறும்பு ஊர்கிற மாதிரியோர் உணர்வு நெருடல். மனப்பூரிப்பு இருந்த இடத்தில், எறும்பு கடித்த வேதனை, வலி.

கருந்தூசி படிந்த முத்தக்காவின் முகம் மேலும் கறுத்து... வெறுப்பில் கோணலாகி... அடிபட்ட சோகமும், அருவருப்பும் கண்ணில் தெரிய...

சாக்கடையில் புரண்ட பன்றி, காலில் வந்து உரசி விட்ட மாதிரி, அவள் முகத்தில் ஒருவித அசூயை.

இவனுக்கு ஏமாற்றமும் பயமுமாய் இருந்தது.

"என்ன முத்தக்கா...?"

"போய்யா நீயும், ஓம் பிச்சைக்காரப் புத்தியும், இப்படியுமா, ஒரு ஆம்பளை ஈனத்தனமா பிச்சையெடுக்குறது? அதுலேயும் களவாணிப் பிச்சை. த்தூ! குடிகாரப் புத்தியை காட்டிட்டீயே..."

"இதென்ன முத்து... இப்படிச் சொல்றே?"

"பாடுபட்டுக் கஞ்சி குடிக்கிற நம்ம கிட்டே.... ரோஷத்தைத் தவிர வேறு என்னய்யா இருக்கு? அதையும் உதுத்திட்டு என்னத்துக்கு உசுரு வைச்சு இருக்கணும்?"

"முத்து... சீலை சட்டை எடுக்கணும்னுதா... நா..."

"யோவ், ரோஷ மானத்துக்குத்தானய்யா சீலையும் துணியும்? ஆம்பளையாயிருந்தா... வேர்வை சிந்திப் பாடு பட்டு என்னோட மானத்துக்கு துணியாயிருக்கணும். அதுதா... மதிப்பு; பெருமை. இப்படி... களவாண்ட பிச்சையிலே எடுத்து உடுத்துறதும் ஒண்ணுதான், முண்டமாத் திரியறதும் ஒண்ணுதான். இந்த ஈனத்துட்டுலே எனக்குத் துணி எடுக்காதே. ஆமா, சொல்லிட்டேன். எடுத்தே... தெருவுலே வீசியெறிஞ்சுருவேன்... ஆமா...!" —அவளது

ரௌத்திரத்திலிருந்த ரோஷம்; பத்ரகாளித் தோற்றம்; ஆளே வேறு ஆளாகியிருந்தாள்.

அவனுக்குள் செருப்படி விழுந்த மாதிரி இருந்தது. முத்தக்காவை நிமிர்ந்து பார்க்கவே வெட்கமாயிருந்தது.

அவளது சீற்றத்தில்தான், இவனது சிறுமை இவனுக்கே புரிந்தது. புரியப் புரிய... தானே தனக்கொரு அசிங்கமாய் ஓடைக்காட்டில் மலந்தின்று திரியும் பன்றியாய்—

இப்போது – மடியில் இருக்கிற சில்லறையும், பணமும் பேய்க்கனமாய்க் கனத்தது. இழிவுச் சுமையாய்... ஈனப் பணமாய்...

சாராயம் குடிக்க வேண்டியதுதான். வந்தவன் போனவனுக்கெல்லாம் வாங்கி ஊத்தி துட்டை தொலைத்துத் தலைமுழுக வேண்டியதுதான்.

ஈனக்காசு... ஈனக் காரியத்திலேயே கரையட்டும்.

முத்தக்காவின் எள் தூசி படிந்த ஒற்றைச் சேலையைப் பார்த்தான். அவனுள் – ஆழத்தில் தாளமுடியாத ஓர் இழப்புணர்வு.

அடிபட்ட சிறுபிள்ளை மாதிரி... கண்ணீர் உறுத்திக் கொண்டு வந்தது, சின்னாண்டிக்கு.

புதிய பார்வை – ஜூலை, 1993

5.வேலி முள்

கூரை வீட்டு நடையில் அயற்சியும் குழப்பமுமாய் உட்கார்ந்திருந்த மாரிக்காளை, பன்றிக்குட்டி மாதிரி வீங்கிப்போயிருந்த வலது கால் பாதத்தையே பார்த்தான். அந்தக் கால் ஊன்றிய நிலையில் கூட நடுங்குகிறது. கண்ணில் நீரின் உறுத்தல்.

வேலிமுள் தைத்தது... ஜலம் வைத்து வீக்கம் கண்டது. வீக்கம் விஸ்தீரணமாகி, பாதத்தின் மேல்ப் பகுதிக்கும் பரவி... புடைத்து விட்டது.

வலி என்றால் வலி... அப்படி வலி. உயிரே சுண்டியதிர்கிற மாதிரியான வலி. காலை எடுத்து ஓர் எட்டுக் கூட வைக்க முடியவில்லை.

வேலிமுள் இப்படி ஆளை முடக்கிப் போடும் என்று கனாக் கூட கண்டதில்லை, மாரிக்காளை.

இவனது அன்றாட வேலையே வேலி மரங்களை வெட்டி விறகாக்கி, டீக்கடைகளுக்கும், சத்துணவுக் கூடத்திற்கும் விலைக்குப் போடுவதுதான்.

சீமைவேலி மரமே இவனைக் கண்டால் நடுங்கிச் சாகும். நூறு நூறு நீளக் கைகளைத் தாழ்த்தி பணிவு காட்டும்.

எந்த வறட்சிக்கும் அசராதது வேலி. காற்றிலிருக்கும் ஈரப்பதத்தைக் கூட உறிஞ்சி உயிர் வளர்க்கும் புத்திசாலி மரம். மளமளவென வளரும். சடங்கான பெண் பிள்ளை போல பார்த்திருக்க வித்தியாசம் காட்டி செழிக்கும்.

வெட்ட ஆள் வந்து விட்டால்... முட்கிளைகளை ஆட்டி லேசுமாசாய் எதிர்ப்புக் காட்டும். துரட்டியால் முட்கிளை களைச் செதுக்கி ஒதுக்கி விட்டு, அரிவாள் முன்னேறி விட்டால், பணிந்துவிடும். மற்ற மரங்கள் அரிவாளை ஓங்கிப் போட்டாலும் 'ணங்க்'கென்று எகிறும். லேசில் பணியாது. வேலி மரம் அப்படியல்ல. அரிவாளை ஓங்கி ஒருச்சாயலாய் இறக்கினால், வெண்ணெயில் வெட்டு விழுந்த மாதிரி... சதக்கென்று பாயும். வெட்ட வெட்ட ஆசையாக இருக்கும். மளமளவென்று விறகு சாயும்.

மாரிக்காளை எட்டு மணிக்கெல்லாம் கிளம்பிவிடுவான். அரைக்கால் டவுசர், கலர் போன கலர் பனியன், காலா வதியான பழைய பூட்ஸ், வட்டக் கட்டாகக் கட்டிய தலைப்பாகை. இதுதான் அவன் கோலம். துரட்டியும், குத்துக் கம்பியும் (கடப்பாரை தான். கூர், சற்று அகல மாயிருக்கும்), வெட்டரிவாளும், மண்வெட்டியும் சாதனங்கள். தூக்குச் சட்டியில் இவனுக்கான பெட்ரோல். கஞ்சி.

மதியத்திற்குள், மேல்விறகை வெட்டிக் குவித்து விடுவான். முண்டும் முடிச்சுமாக இருக்கிற தூர்களையும் பெயர்த்து விடுவான்.

வேலிமரத்தை நம்பினார் கைவிடப்படுவதில்லை. எத்தனை காலம் வெட்டினாலும் சரி, வேலி மரம் வற்றவே வற்றாது. சமுத்திரம் மாதிரி. தூரைத் தோண்டி எடுத்து விட்டாலும்கூட, மண்ணுக்குள் ஆழத்தில் ஓடிக் கிடக்கிற சல்லி வேர்களிலிருந்து தளிர்த்து, வெளியே வந்து முகம் காட்டி விடும். மஞ்சணத்தி மாதிரித்தான் வேலி மரமும். சாகடிக்கவே முடியாது. வெட்டுப்பட்டு விழுந்தாலும், சிதறிய ரத்தத்துளியின் எண்ணிக்கையில் மறுபடி மறுபடி தோன்றி விடுகிற ராட்சஸன் மாதிரித்தான், வேலி மரம்.

மாரிக்காளை பதினெட்டு வயசில் வெட்டரிவாளை தூக்கியது; இன்று வரைக்கும் வேலி மரம் அவனுக்கு வேலை தந்து கொண்டேயிருக்கிறது.

மதியத்திற்குள் விறகை வெட்டிச் சாய்த்து விடுவான். நெஞ்சுக்குழி ரோமங்களில் படிந்திருக்கிற ஈரப் புழுதி, வரி வரியாய் வியர்வைப் பெருக்கு. தேகமெல்லாம் ஒட்டி யிருக்கிற பொடிப் பொடி இலைகள்.

வேலிமுள் அவன் உடம்பில் கீச்சாத இடமில்லை. முட்கள் பதிந்து பதிந்து மரத்துப்போன உள்ளங்கையே அம்மி குத்தின மாதிரி இருக்கும்.

அப்போதெல்லாம் ஒன்றும் செய்ததில்லை, முள்.

''மாரிக்காளைக்கு முள்ளுங்கிற பயமே இருக்காது. முள்ளுன்னா... அவனுக்கு மயில்ரெக்கை மாதிரி'' என்று ஊரில் பேச்சு.

இப்போது,

உள்ளங்காலில் தைத்த முள்... ஆளையே மடக்கி ஒடித்து மூலையில் போட்டு விட்டது. ஜென்மப் பகையைத் தீர்த்துக் கொண்டது, விஷ முள்.

பார்வதி கோபித்துக் கொண்டு போன மூன்றாவது நாள். சோறு ஆக்கத் தெரியாமல் ஆக்கி, கெட்டுப் போன சோற்றைச் சாப்பிட்டு, வயிறே கோளாறாகி விட்டது.

வயிற்றுக்குள் மழைக்கால மேக முழக்கம். 'கடாபுடா' வென்கிற இரைச்சல். உடம்பு கட்டுப்பாடு இழந்து விட்டது.

ரெண்டு மூன்று தடவை ஓடைக்குப் போய்விட்டு வந் தான். தண்ணீராய் பீச்சியடித்தது. உயிரே வற்றிப் போன மாதிரி கைகாலெல்லாம் சோர்ந்து வந்தது. ஒரே அசதி. எங்கடா விழுந்து சாகலாம் என்றிருந்தது.

வீட்டிற்கும் போக மனமில்லை. பார்வதியில்லா சூன்யம் நெஞ்சில் வந்து அறையும்.

டீக்கடையில் வந்து துவண்டு விழுந்தான், ஈரத் துணியாக.

"ஒரு டீத் தண்ணி குடப்பா."

டீக்கடையில் தூள் பறக்கிற விவாதம். வங்கிகளையே வாயில் போட்டுக் கொண்ட ஹர்ஷத் மேத்தா, நடிப்பிற்கு அதிகத் தொகை வாங்குவதில் ரஜினிக்கு அடுத்து யார் என்கிற ரகரகமான சர்ச்சை.

எதையும் காதில் வாங்குகிற மனநிலையிலில்லை. மாரிக்காளை 'பொத் பொத்'தென்கிற வயிறு, கீறிப்போன மண்பானை மாதிரி இடுப்பிலிருந்து துவங்குற 'மொடு மொடு' என்கிற இரைச்சல், குறுக்காக ஓடி, முன் வயிற்றில் முட்டலோடு முடிவடைகிற பயங்கரம்.

சூடான பால் டீ போய் வயிற்றில் விழுந்தவுடன், அடி வயிற்றில் முட்டல் மோதல். ஒரு திணறல். பயங்கரமான உந்துதல்.

பதறியடித்துக் கொண்டு ஓட்டமாய் ஓடினான். ஓடைக்கு போகிற வரைக்கும் தாங்காது போல ஒரு நிலவரம். மனசில் கலவரம். 'ஐயய்யோ... வேட்டியிலே கழிந்து கொண்டு கிடந்தால், சிரிப்பாணிக் கூத்தாகி விடுமே' என்கிற பதற்றம்.

நல்லது பொல்லதுக்கு கூடுகிற இடத்திலெல்லாம் ஜனங்க இதைச் சொல்லிச் சொல்லி கேலி பண்ணுவார் களே... அதிலும் மாமா மச்சினன்மார் ஜென்மத்துக்கும் இந்தக் கூத்தைச் சொல்லி நையாண்டிச் சிரிப்பு சிரிப்பார்களே...

அடி வயிற்றுக்குள் புரட்டிக்கொண்டு வந்து முட்டுகிற அவஸ்தை.

காய்ந்த முள்ளும் முடலுமாய் கிடக்கிற ஓடைக்குள் கண் மூக்கு தெரியாத வெறி வேகத்தில் ஓட்டமாய் ஓடிய போது—

நறுக்—

உள்ளங்கால் சதைவரை ஏறிவிட்டது, வேலிமுள். செமித்துப் போன கறுத்த முள். கட்டை மாதிரி. ஒற்றைக் காலில் நின்று முள்ளைப் பிடுங்கப் பார்த்தான். முடிய வில்லை. ஆழமாய்ப் போய்ச் சொருகிக் கொண்டது.

வேறு வழியேயில்லை.

உட்கார்ந்துதான் பிடுங்கவேண்டும். குனிந்து உட்கார்ந் தான். அவ்வளவுதான் பீச்சியடித்துவிட்டது. வேட்டியெல் லாம் ஆய்ய்ய்... மனிதக் கழிசல்.

தலைக்கு மேல் வெள்ளம். சாண் போனால் என்ன முழம் போனால் என்ன, இனி. கழிசல் அருவெருப்போடு உட்கார்ந்து முள்ளைப் பிடுங்கினான். பெரிய மல்லுக் கட்டு. ஒரு சொட்டு ரத்தம் கூட வெளி வரவில்லை.

வேலி முள் தைத்து, ஜலம் வைத்து, வீங்கிப் போய், அந்த ரணத்திலேயே செத்து மடிந்த ஆட்களின் பெயர்களை மனதில் நினைத்துக் கொண்டான். பயச்சிலிர்ப்பு.

வலி, கடுகடுத்தது.

கிணற்றுக்குள் போய் குதித்து, குளித்து முடித்து, துணி மணியை அலசிக் கொண்டு வீட்டுக்குப் போனால்—

முகத்தில் சப்பென்று அறைகிற சூன்யம். பார்வதி யில்லாத வெறுமையின் வேதனை. வீட்டின் சகல இணுக்கு களிலும் பார்வதியில்லாத வெறுமையின் அமங்கலம். குப்பையும் கூளமுமாய் கிடக்கும் வீடு. பச்சைத் தண்ணீர் தெளிக்காமல் புழுதி பறந்து கிடக்கிற முற்றம். கறுத்துப்

போய் நீர்க் கறைகளோடு சட்டி பானைகள். கோழிகள் கிண்டி மேய்ந்த குப்பையாக, அடுப்பங்கரை.

"அந்தப் பாதகத்தி இருந்திருந்தா... வீடு இப்படியா கிடக்கும்? மினுக்கி வைச்ச குத்துவிளக்காயிருக்குமே..."

கட்டறுந்து பாய்கிற ஏக்க உணர்வு. அவனுள் பாய்ந்து பரவி அவனை வேதனையில் அலைக்கழிக்கிற ஏக்கம். பெருமூச்சுடன் ஈரத்துணியை கொடியில் காயப்போட்டான். காய்ந்து வெடவெடத்துக் கிடந்த கைலியை உருவி உடுத்திக் கொண்டான். குளித்த உடம்பு. எண்ணெய் தேய்த்தால், நல்லது.

எண்ணெய்ப் பாட்டிலை எடுத்தான், சூன்யம். எண்ணெயில்லாத பாட்டிலில் மொய்க்கிற சிற்றெறும்பு.

"அடச்சே! பொண்டாட்டியில்லாத வீடும், ஒரு வீடா? பரதேசி மடந்தான்."

எண்ணெய் இல்லாத ஏமாற்றம், பார்வதியை பிரம்மாண்டமாக்கியது.

கால் கடுத்தது. முள் தைத்த இடத்தில் சுருக்கிடுகிற வலி. இயல்பாய் பாதம் பதித்து நடக்க முடியவில்லை. கெந்திக் கெந்தி நடக்க வேண்டிய சிரமம். முன் விரல்கள் ஊன்றி, அதன் பலத்திலேயே உடல் பாரம் முழுவதும் விரல்களிலும் நச்சரிக்கிற வேதனை,

ஏன் என்று கேட்பாரில்லை. வலியைப் பற்றி அனுதாபமாய் விசாரிக்க ஒரு நாதியில்லை. பார்வதி இருந்திருந்தால்... இப்படியா நாதியற்றுக் கிடப்பான்? அதையே நினைத்து நினைத்து மாய்கிற மனம்...

...ஆளை நுட்பமாய் கவனிப்பாள், பார்வதி. மனநிலையில் சிறு உளைச்சல் என்றால் கூட கண்டுபிடித்து விடுவாள்.

''என்ன... ஒரு மாதிரியாயிருக்கீக?'' என்று கேட்டுக் குடைந்து விடுவாள். இம்புட்டுக் கெந்திக் கெந்தி நடந்தால்... அம்புட்டுத்தான். என்னவோ ஏதோவென்று பதைத்துப் போவாள். பதறித் துடித்து அவள் உலுக்குகிற உலுக்கலில் முரட்டுத்தனமாய் கொப்பளிக்கிற அன்பு...

''முள்ளு மேலே போய் எதுக்கு ஏறுநீக? கண்ணு இல்லே? பாத்து போவக் கூடாது? என் உசுரை புடுங்கு துக்கா?'' என்று ஆத்திரமும், ஆங்காரமுமாய் சிடுசிடுக்கிற வசவில் வெளிப்படுகிற மனநெருக்கம். பாசத்துடிப்பு. அந்யோந்யம்.

எதிர்ப்படுகிற பெண்களிடமெல்லாம் அடைக் கோழியாய் அங்கலாய்ப்பாள். ''இப்படி ஒரு கூறு கெட்ட ஆம்பளையா எனக்கு வந்து வாய்க்கணும்? ஓடைக்குப் போனாத்தான் என்ன? எல்லாரும் போகலே? வரலே? இப்படியா? முள்ளுமேலே காலை வைச்சு, என்னை ரணப் படுத்தணும்? நா வாங்கி வந்த கொடுமை'' என்று வாய்க்கும் கைக்கும் புலம்பிப் புலம்பியே வாயாறுவாள். புலப்பம் புலப்பமாயிருந்தாலும்... பதற்றமும் பாசமுமாய் வேலை செய்து கொண்டிருப்பாள்.

ஆதாளஞ்செடியை பிடுங்கிக் கொண்டு வந்து, இணுக்கு இணுக்காக ஒடித்து, அதன் பாலை 'தைவாயி'ல் ஒத்தி ஒத்தி வைப்பாள். இரும்புக் கரண்டியை அடுப்பில் காய வைத்து, 'பொறுக்க பொறுக்க' ஒத்தடம் கொடுப்பாள். மஞ்சள்த் துண்டை அரைத்துப் பொடியாக்கி, வெள்ளைத் துணியில் வைத்து முள் தைத்த இடத்தில் கட்டி விடுவாள்.

அந்தக் கைப்பக்குவம் செய்கிற வேகம், பரபரப்பு, அதில் முகம் காட்டுகிற பரிவு. பொங்கி வழிகிற பாசத்ததும்பல்.

உள் மனத்தின் மூலை முடுக்கெல்லாம் பரவிப் பாய்ந்து பரவசப்படுத்துகிற அந்த அன்பின் சுகம். பரிவின் ருசி. அடி மனம் வரைக்கும் தித்திக்குமே...

...அதெல்லாம் இப்ப இல்லை. உணர்ச்சித் துடிப்பு இல்லை. தனக்காக தவிக்கிற ஒரு ஜீவ இதயம் இல்லை. ஏன் என்று கேட்பாரில்லை. செத்துக் கிடந்தாலும், புரட்டிப் பார்ப்பாரில்லை.

அடப் பாதரவே... இது எத்தனை கொடிய 'இல்லை?' மனசின் ஆழம் வரைக்கும் முள்ளாய்க் குத்தி புண்ணாக்குகிற 'இல்லை.' வாழ்ந்த வாழ்க்கையின் அர்த்தத்தையே பரிகசிக்கிற 'இல்லை.'

வீடு முழுக்க கால் நீட்டிப் படுத்திருக்கும் சூன்யம். அசையக் கூட முடியாமல் மாரிக்காளை. பன்றிக்குட்டி மாதிரி வீங்கியிருக்கிற பாதத்தில் 'விண்விண்'ணென்கிற வலி. ராவும் பகலும் கண்ணை மூட விடாமல் கொத்திப் பிடுங்குகிற வலி.

தண்ணீர் மோந்து கொடுக்கக் கூட ஒரு நாதியில்லை. சாப்பிட்டாயா என்று கேட்க ஆளில்லை. கூரை முகட்டையே வெறுமையாய் பார்த்துக் கொண்டிருந்த அவனுள், 'குபு குபு'வென்று எண்ணங்கள். அதை முந்திக்கொண்டு வந்த அழுகை. கதறியழுது விட்டான்.

பார்வதி... பார்வதி... பார்வதி கூரையின் ஒவ்வொரு கம்பந்தட்டையிலும் அவள் முகங்கள்... பாசமும் அன்பும் குழைந்து கனிகிற முகங்கள்.

பாசக்காரி மட்டுமல்ல பார்வதி, ஆசைக்காரியும் கூட.

பார்வதி அளவு கடந்த லட்சணக்காரி. தென்னந்தூர் மாதிரி திரேகம். உடுக்கு மாதிரி இடுப்பு. மேலும் கீழும் நல்ல விரிவு. லட்சணம் பொருந்திய உருண்டை முகம். அகலக்கண்கள். கண்ணை உருட்டி ஓரத்தில் நிறுத்தி குறும்பும், கிறக்கமுமாய் பார்த்தாளென்றால்... உயிரே கிடந்து அதிரும். கனிந்த உதடுகள்.

மாரிக்காளைக்கு பார்வதி ரதி. சக்திக்கு மிஞ்சிய உயிர்ப் பொக்கிஷம். விரலுக்கு மிஞ்சிய மோதிரம். அவள் மீது அவனுக்கு ஒரு மயக்கம். பிரமை. தீராத பயம்.

ராத்திரி தொட்டால் போதும். அப்படிக் குழைவாள். ஆவேசமாய் இழைவாள். பரவசமாகி மோதி அள்ளிக் கொள்வாள். இவன்தான் திணறிப் போவான். மூச்சு முட்டிப் போய்... சுகத்தில் திளைப்பான். தேனில் சிக்கிய எறும்பாக இவனுக்குப் பதறி வரும்.

ஆள் நடந்து வந்தால், தரையே 'திங்திங்'கென்றுஅதிரும். வஞ்சகமில்லாமல் பாடுபடுவாள். இன்ன வேலை என்கிற கணக்கு இல்லை. ஆண், பெண் சகலரோடும் எல்லா கூலி வேலைகளுக்கும் போவாள். முரட்டு வேலைகளுக் கும் தைர்யமாய் தோள் தருவாள்.

அவள் இருக்கிற இடத்தையே கலகலப்பாக்கி விடுவாள். இழவு வீட்டில் கூட ஒரு சுறுசுறுப்பை உயிர்ப்பித்து விடுவாள். கல்மிஷமில்லாத கேலி கிண்டல். யாரையும் வம்புக்கு இழுக்கிற– உள் நோக்கமற்ற நையாண்டி. வேலைச் சுமை தோன்றவிடாத சிரிப்பும் கும்மாளமும். வேலைத் தளமே உயிரோடு முறுக்காயிருக்கும்.

அவள் வேலை பார்க்கிற இடம் என்றாலே... கேலி கிண்டல் சிரிப்புச் சத்தம்தான். கபடமற்ற வடிகால்.

...அன்றைக்கு அப்படித்தான்.

ஆடிமாசம், மழையில்லாத காற்று பேய்க்கூத்து போடுகிறது. காடுகளில் ஒரு பயிர் பச்சை கிடையாது. ஜனத்துக்கு ஒரு வேலை ஜோலி கிடையாது. கூலிக்கார ஜனங்கள் கூரை நிழல்களில் பேன் பார்த்துக் கொண்டு புரணி பேசி பொழுதைக் கழித்தனர். தீப்பெட்டியா பீஸுக்குப் போகிற பெண்களிடம் தான்... துட்டு நடமாட்டம்.

இவளையும் தீப்பெட்டியாபீஸுக்குக் கூப்பிட்டார்கள்.

"அந்த இடுப்பொடிஞ்ச வேலைக்கு நா வரலை. பொழுதுக்கும் உக்கார்ந்தே வேலை செய்ய நம்மாலே முடியாதைய்யா" என்று மறுத்து விட்டாள்.

பள்ளிக்கூடத்திற்கான கட்டிட வேலை நடக்கிறது. அதில் சித்தாளாய் பார்வதி. இருபது ரூபாய்ச் சம்பளம்.

அன்றைக்கு...

வேலி விறகை வெட்டி, டீக்கடைக்கு விலை பேசிப் போட்டுவிட்டு, குளித்து ஈரத்துணிகளோடும், வெட்டுச் சாதனங்களோடும் வந்து கொண்டிருந்தான், மாரிக்காளை.

சாயங்கால வெயில். ஆடிக்காற்று மண்ணை வாரித் தூற்றுகிறது. அதோ கட்டிடக் கட்டுமானம்.

தலை உயரத்திற்குச் சுவர். சாரத்தில் கொத்தனார். ஓடி ஓடித் தண்ணியெடுத்து டிரம்மில் ஊற்றுகிற பார்வதி. ரெண்டு பேர் உதடுகளிலும் சிரிப்பு. கேலி பேசிய முக மலர்ச்சி.

கொத்தனார் கண்களில் விஷமம். உள் பொதிவுள்ள குறும்பு. காற்றுவாக்கில் பேச்சுச்சத்தம். வெறுங்குடத்துடன் நின்று பேசுகிற அவளின் குரலில் செல்லக் கோபச் சீற்றம்.

"யோவ்... ஒமக்கு ரொம்ப மப்பு."

"ஆமாத்தா மப்புதான். யார் மேலே எறக்குறது? யார் விடுவா...?"

"வீட்லே போய் எறக்க வேண்டியது தானே, ஒம்ம மப்பை?"

"அவ கெடக்கா, ஜீவன் செத்துப்போய், எலும்புக்குச்சி. அதை வைச்சுக்கிட்டு மாரடிக்க வேண்டியது தான்."

"ஆம்பளைக எல்லாம் கொழுப்பேறிப் போய் திரியுதீக. முறையில்லாம நீளூற நாக்கை இழுத்துப் பிடிச்சு நறுக்கணும். அப்பத்தான்... திமிறு ஒடுங்கும்."

அவன் சொல்லிக் கொண்டே சிரித்து நகர, கையி லிருக்கும் சிமிண்டுச் சாந்தை உருட்டி குறி பார்த்து கொத்தனார் ஏறிய, அது அவள் பருத்த மார்பில் 'சொத்' தென்று விழ...

"த்தூ, த்தூ" என்று துப்பிக் கொண்டே வேடிக்கைச் சிரிப்பாய் ஓடுகிற பார்வதி...

மாரிக்காளைக்குள் திகுதிகுவென்று எரிந்தது. உள்ளுக்குள் பற்றிக் கொள்கிற சந்தேக நெருப்பு.

உழைப்புக் களத்தில் இயல்பாக நிகழ்கிற கிண்டல் விளையாட்டடுத்தானா, இது? சகஜமான கேலிப்பேச்சு மட்டும்தானா?

...தொட்டால் குழைகிற பார்வதி. ஆவேசமாய் மோதி அள்ளிக் கொள்கிற பரவசம். அவன் அடங்கிய பின்னும் கூட வெள்ளமாய் பாய்ந்து ஆவிச் சேர்கிற பார்வதி...

மாறி மாறி நிழலாடுகிற உள் நினைவுகள். நினைவு நிழல். இருட்டான நிழல். சகலத்தையும் தப்புத்தப்பாய் காட்டுகிற இருட்டு நிழல்.

அவள் வீடு வந்து சேர பொழுதடைந்துவிட்டது.

மனக்கொதிப்போடு இவன். கண்டகண்ட நினைவு களின் தாறுமாறான பாய்ச்சல். அவனுள் ஓர் இறுக்கம். இறுக்க அடர்த்தி. அவளை வெறித்து வெறித்து பார்க்கிற பார்வை. கண்ணில் ஒரு வெறுப்பு. அசூயை.

அவளும் புருசனைப் பார்த்தாள். வழக்கமான புருசனாகத் தெரியவில்லை. அவளுள் குழப்பம். திகைப்

பாட்டம். 'இந்த ஆளுக்கு என்னாச்சு இன்னைக்கு' என்கிற யோசனை. 'என்னவோ ஏதோ'வென்கிற பதற்றம் வேறு.

"என்ன... ஒரு மாதிரியிருக்கீக?"

"ஒன்னுமில்லே"

"மண்டையடிக்கா?"

"இல்லே."

"வெறகைப் போட்டாச்சா?"

"ம்."

"எங்க?"

"டீக்கடைக்கு."

என்னாச்சு மனுசருக்கு? பேச பணம் கேட்கிறது. என்ன இருக்கு மனசுலே? எங்காச்சும் சண்டை சத்தமா? மூஞ்சி இம்புட்டுச் சினசினப்பா இருக்கே? நாழி காணத்தைப் போட்டு வறுத்து விடலாம் போல...

"யார் கூடயாச்சும் வாய்ச்சத்தமா?"

"இல்லே."

"சாப்டுரிகளா? சோறு வைக்கட்டா?"

"ம்."

மதிய இடைவேளையில் ஆக்கி வைத்த சோறு. வைத்தாள். வட்டிலின் முன் உட்கார்ந்தான். கை, சோற்றில் அளைந்து கொண்டிருந்தது. அவனுள் யோசனை. அனுமான் வாலாய் நீள்கிற கற்பனை. விதம் விதமான ஆபாசக் கற்பனை.

...குழைகிற பார்வதி. இழைகிற பார்வதி. ஆவிச்சேர்ந்து ஆவேசமாய்த் தழுவி மூச்சுமுட்டச் செய்கிற பார்வதி...

அவனுள் கொதிப்பு... உலைபானைச் சோறாய் நினைவுச் சளசளப்பு.

"என்ன யோசனை? சாப்டலியா?"

"ம்."

அவனிடமிருந்து பெருமூச்சு. ஆழ்ந்த உஷ்ணப் பெரு மூச்சு. உளைச்சல்களில் ஊறி நனைந்த அடர்த்தியான பெருமூச்சு.

நிமிர்ந்தான். மனசின் இறுக்கம் உதடுகளில். பறவை யாடிய கண்கள் அவளிடம் திகைப்போடு வந்து நின்றது.

"தீப்பெட்டியாபீஸுக்குப் போற பொம்பளைகளோட.... நீயும் போனா என்ன?"

"எதுக்கு? விடியுறதுக்கும் முந்திப் போய் இருட்டின பெறகு வரணும். யாரு இங்க கஞ்சி காய்ச்சுறது?"

"போற பொம்பளைக எல்லாம்?"

"அவுகளுக்குப் பிடிச்சிருக்கும். காலை நீட்டிக்கிட்டு பொழுதுக்கும் நம்மாலே உக்காந்துருக்க முடியாது. சம்பளமும் பத்து ரூவாய்க்குள்ளே தான் வரும். சித்தாள் வேலைன்னா இருவது ரூவாய் சம்பளம். வீட்டு வேலையும் பாத்துக்கலாம்."

"அப்ப..., நீ பொம்பளைகளோடு ஆபீஸ் வேலைக்குப் போவ மாட்டே?"

"எதுக்காக போவணும்?"

"சித்தாளு வேலைக்குத்தான் போவே?"

"போனா... என்ன? போவக் கூடாதா?"

"வேண்டாம்."

"எதுக்கு இப்படி கூறுகெட்டுப் பேசுதீக? சம்பளம் இருவது ரூவா. கைச் செலவுக்கு ஆகும். வீட்லே முழங்காலைக் கட்டிக்கிட்டு மூதேவி கணக்கா உக்காந்துருக் கவா?"

"அப்ப... சித்தாளு வேலைக்குப் போகத்தான் செய்வே?"

"ஆமா, போனா... என்ன?"

"இருவது ரூபாய்க்காகவா... போற?"

"பெறவு?"

"புருசம்மார்க கூட வெளையாட..."

திகைப்புக்கு மத்தியில் இயல்பாகவே பேசிக்கொண் டிருந்த பார்வதி கடைசி சொல்லில் சட்டென்று மாறிப் போனாள். ஆணி வேரில், இடிவிழுந்த மாதிரி ஆடிப் போனாள். உயிர்வற்றிப் போன மாதிரி... முகத்தில் ஒரு வெறுமை. வெளுப்பு.

ஒரு சொல், வேலி முள் மாதிரி. ரெண்டு பிள்ளை பெற்றுச் சாகக் கொடுத்த ஏழு வருசத் தாம்பத்யத்தையே பொய்யாக்கிவிட்ட ரணச்சொல்.

அடித்து வைத்த சிலையாய் இறுகிப் போன முகம். பறவையாடாத அவள் கண்கள். சீண்டப்பட்ட நல்ல பாம்பின் சீற்றம். வெளிப்பட விரும்பாமல், உள்ளுறைந்து போன சீற்றம்.

நிலை குலைந்து போன பார்வதி, செத்துப் போன பிரேதக் கட்டையாய் சுவரில் சாய்ந்த பார்வதி.

ஒரே பார்வையாய் அவனைப் பார்த்தாள். நேருக்கு நேராய் பார்த்தாள். சாக்கடையில் புரண்டு விட்டு கிட்ட வந்த பன்றியைப் பார்க்கிற பார்வை.

அவ்வளவுதான். பேச்சில்லை, மூச்சில்லை. வெடித்துக் கதறிய அழுகையில்லை. கொதித்த உணர்வுகளெல்லாம்

உறைந்து இறுகிக்கொள்ள, ஒரு சொட்டுக் கண்ணீர்கூட சிந்தவில்லை. அப்படியே... சரிந்து படுத்துவிட்டாள்.

அழுக... புலம்ப... பேச... இனி என்ன இருக்கு?

விடிந்து பார்த்தால்... ஆளைக் காணோம்.

வீங்கிப் போயிருந்த பாதத்தின் மேல் சொட்டென்று சொட்டடித்து தெறிக்கிற கண்ணீர்த்துளி.

உடைந்து நைந்து போன மாரிக்காளையின் மனசு, நனைந்த காகிதமாய். கசந்து போன நினைவுகளில் தானே தன்னை அறிய– வீசிய வார்த்தையின் விஷ வீர்யம் உணர– பார்வதியின் அருமை பிரம்மாண்டமாக–

"பாசக்காரி... வஞ்சகமில்லாத மனசுக்காரி... பாவம், அவளை ஒரே கொத்தாய் கொத்தி கொன்னே போட்டுட்டேன். அவளைப் போய் எப்படிக் கூப்பிட? எந்த மூஞ்சியோடு வந்து சேருன்னு வாய் தொறந்து சொல்ல?"

தனது சிறுமையை உணர்ந்த வெட்க நினைவோடு முணுமுணுத்துக் கொண்ட மாரிக்காளை.

பதினைஞ்சு நாளாச்சு, அவள் போய். சரியாய்ச் சாப்பிட்டு பத்து நாளாச்சு. பன்னிக்குட்டி மாதிரி கால். நகரக் கூட முடியவில்லை. வலி உயிரைப் பிடுங்குகிறது. எப்படி மீள?

வேறு வழியில்லை. காலில் விழுந்தாவது அவளைக் கூட்டிக் கொண்டு வரணும். காலில் விழலாம். தப்பில்லை. நியாயம்தான்.

சரி, எப்படிப் போறது? ரெண்டு முப்பது பைசா டிக்கட். ஆலமர ஸ்டாப்பில் இறங்கி, வெம்பரப்பாகக் கிடக்கிற கரிசல்க் காட்டில் ஒன்றரை மைல் நடந்து போகணும்.

போனால்தான்.... பார்வதியின் அம்மா ஊர்.

எப்படிப் போக? அசையக் கூட முடியாத நிலையில், இந்தத் தூரம்... பெரீய்ய மலை.

ஒரு பையனைக் கூப்பிட்டு சோலைச்சாமி நாடாரை வரச் சொன்னான். அவர்தான், நானாச்சு என்று பார்வ தியை இவனுக்கு 'மூய்த்து' வைத்தவர். அவரைத்தான் கெஞ்சிக் கூத்தாடி... போய்க் கூட்டிக் கொண்டு வரச் செய்யணும்.

பையன் அரை மனசாய்ப் போனான்.

வீடு, வீடாக இல்லை. வெறும் மயானம். மனுசத் தோழ மையில்லாத வனாந்திரம். நெஞ்சின் ஆழம் வரைக்கும் ஊசியாய்ப் பாய்ந்து கொல்கிற தனிமை உணர்ச்சி.

சோலைச்சாமி நாடார் வந்து சேர்ந்தார். அழுது கசிந்தான். நடந்தது பூராவையும் கொட்டிக் கதறினான்.

"சரியப்பா... ஒன்னைப் பாக்கப் பாவமாத்தான் இருக்கு. நா என்ன செய்யட்டும்? எனக்கு தலைக்கு மேலை வேலைக. நகர்ந்து போக வழியில்லியே... சரி, ரெண்டு நா பொறுத்துக்க... நா போய்ட்டு வாரேன்."

போய் விட்டார். இவனுக்கு அவமானமாக இருந்தது.

ரெண்டு நாள்.

சாகக்கிடக்கிறவனுக்கு தண்ணீர் கேட்டால், மேகத்துக்கு ஆள் அனுப்புகிறார். பற்றியெரிகிற கூரைக்கும் வெட்டப் போற கிணற்றுக்கும் கிட்டத்திலேயா இருக்கு?

அவரது அலட்சியம். சலிப்பான பதில்.

இவனுக்குள் முள் முள்ளாய் உறுத்தல். நாதியற்றுப் போய்— சகலராலும் கைவிடப்பட்ட அனாதையான வனாய் அவமானமாய் உணர்ந்தான்.

ஒருத்தரும் உதவ மாட்டேன் என்கிறார்களே... ஒரு உப்புக் கல்லுக்குக் கூட பெறாதவனாகி விட்டோமே என்கிற உணர்ச்சி. உணர்வின் அவஸ்தை. மனப்பிசைவு. நெஞ்சுக்குள் ஏதோ புரண்டு, கண்ணுக்குள் நீரின் உறுத்தல். முள்ளான உறுத்தல்.

ஓவென்று வெடித்து அழ வேண்டும் போலிருந்தது. விம்மி விம்மித் தணிகிற நெஞ்சுக்கூடு. அப்போது—

வீட்டு முற்றத்தில் கால் அரவம். உள் மனதுக்குள் பாஷை பேசுகிற— பரிச்சயமான— அரவம். 'திங், திங்'கென்று தரையே அதிர்கிற அரவம்.

தவிப்பின் விளிம்பில் நின்ற மனம், 'பார்வதியா' என்று கூவத் துடித்தது. பார்வதியே தான்.

நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அவள் முகம், உணர்ச்சியற்ற முகம். பிரம்மாண்டமாய்— பெண்மையின் விசுவரூபமாய்— தெரிகிற பார்வதி.

வெடித்துக் கதறி விட்டான். வெட்க வேதனையும் கசப்புமான உணர்ச்சியெல்லாம் கசிந்து வெளிப்பட... குமுறிக் குமுறி அழுதான், முழங்காலுக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டு.

பார்வதி, அவனது பாதத்தையே பார்த்தாள். புடைத்து வீங்கியிருந்தது. அடை அடையாய் தோல் உரிந்து... அதில் தெறித்த அவனது கண்ணீர்த் துளிகள்... அவனது மனக்கசிவு.

"நீரு செத்தாலுஞ் சரி, இந்த வாசப்படியை மிதிக்கவே கூடாதுன்னுதா நெனைச்சேன். கால்லே முள்ளு குத்தி, நகர மாட்டாமே, கொலை பட்டினியா கெடக்குறது கேள் விப்பட்ட பெறகு... மனசு கேக்கலே. வந்து தொலைச்சேன்."

“நீ எத்தனை தடவை வெளக்கு மாத்தாலேயே என்னை அடிச்சாலும் தகும். நாஞ் சொன்ன சொல்லு அப்படி.”

“நீரு எம்மேலே சந்தேகப்பட்டதுலே... இப்ப எனக்கு கோவமேயில்லே.”

“நெசம்மாவா?”

“சத்தியமா!”

“அப்படியா?”

“ஆமா நா எதுக்கு கோவப்படணும்? ஒமக்கே ஒம்ம மேலே வந்த சந்தேகந்தான், நீரு என்னைப் பேசுன பேச்சு. ஒம்ம மூஞ்சியிலே நீரே எச்சிலைத் துப்பிக்கிட்டீரு... ஒமக்குத்தான் அசிங்கம்.”

அவன் விருட்டென்று நிமிர்ந்தான். அவளது ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு முள்ளாய் உள்ளே சொருகிக் கொள்ள...

அவனுக்கும் ஏதோ புரிவது மாதிரியுமிருந்தது. புரியாத மாதிரியும் மாய்மாலம் காட்டியது. திகைப்பும் வியப்புமாய் அவளைப் பார்க்க...

அவள் வீட்டை, மினுக்கி வைத்த குத்துவிளக்காக்கிக் கொண்டிருந்தாள்.

வேலி தைத்து வீங்கிய பாதத்தை பயமில்லாமல் பார்த்தான். அது வலியில் நடுங்கியது.

தைத்த வேலிமுள்ளை வென்று, வேலி மரம் வெட்ட புறப்படும் பாதம், வாழ்க்கையைப் போல.

புதிய பார்வை, தீபாவளி சிறப்பிதழ் — நவம்பர், 1993

6.வளத்தையா

அந்தச் சாதி நாட்டாண்மை வரச்சொல்லி ஆள் அனுப்பியவுடன், இவனுக்குள் திக்கென்றது. சங்கரனுக்குள் சிலீரிட்டுப் பாய்ந்தோடுகிற பயம். அடிவயிற்றில் ஐஸ் கட்டியை சொருகின மாதிரியிருந்தது.

விதவிதமான யூகங்கள். கற்பனைக் காட்சிகள். 'கட்டி வைத்து அடிப்பார்களோ' 'ஆள் ஆளுக்கு அரட்டுவார் களோ...' 'எண்ணெய் ஊத்தி எரிச்சு, ஒன்னைச் சாம்ப லாக்கிருவம்டா, சாக்கிரதை' என்பார்களோ...

போகாமலும் இருக்க முடியாது. போகாவிட்டால்... ''பயந்தாரிப் பய, கூப்பிட்டு விட்டவுடனே குலைபதறிப் போய்ட்டான். இப்படிக் கோழைப் பயலுக்கெல்லாம் காதலாவது... கத்தரிக்காயாவது!'' என்று பேசி விடுவார்கள். கேலிக்கிடமாகிப் போகும்.

இவனுக்குள் நெருக்கடி. கழுத்தாம்பிடியாகி விட்ட சிக்கல். நினைக்க நினைக்க உள்ளுக்குள் நழுவிக் கொண்டோடுகிற தைர்யம். குன்றிக் குழைகிற வீராப்பு.

முந்தா நாள், ஆற்றங்கரையின் வேலிமர அடர்த்தி மறைவில் பேசிக்கொண்டிருந்தபோது முகம் வாடிக் போயிருந்த வீரம்மா. அவள் வலது கண்ணிலிருந்து மட்டும் திரண்டு வழிந்த கண்ணீர். அடி உதட்டை அழுந்தக் கடித்து, உள் உணர்ச்சித் தளதளப்பை உணர்த்திய விதம். அந்தச் சோகத்திலும் அவளிடம் வெளிப்பட்ட வைராக்யச் சொற்கள். மனசின் ரத்தமாய் வந்த வார்த்தைகள்...

"நீங்க மனசு வைச்சு தைர்யமாயிருந்தா... நாம சேர்ந்து வாழுவோம். இல்லேன்னா... நா இல்லை. அரளிக் கொட்டையை அரைச்சுக் குடிச்சிட்டு ஒரு நொடியிலே மாண்டுருவேன். அதுக்காக... இன்னொருத்தருக்குக் கழுத்தை நீட்டமாட்டேன். அதை மட்டும் மனசுலே குறிச்சு வைச்சுக்கங்க."

வழிந்த கண்ணீரைத் தொடர்ந்து அடி இமையில் திரண்டு நின்ற நீர்த்துளி. அந்தச் சிறு துளிக்குள் தெரிந்த இவனது கடுகு முகம். அதன் நடுக்கத்தில் நடுங்குகிற இவனும். அந்த நீர்த்துளியில், குழைந்த தைர்யம் இறுக்கம் பெற... 'என்ன ஆனாலும் சரி' என்கிற துணிச்சலுடன் புறப்பட்டான்.

இவன் பயந்தமாதிரி அதட்டல், அடாவடித்தனம் எதுவுமில்லை.

நாட்டாண்மைக்கு நாற்பத்தைந்து வயதிருக்கும். புது நிறம். கிருதா சற்று கூடுதலான அடர்த்தியாய் நீண்டிருந்தது. நரைத்திருந்தது. மைக்கோடு போன்ற மீசையில் ஒன்றிரண்டு நரை.

ரொம்ப மிருதுவாகப் பேசினார். சகல விளைவுகளையும் முன்னுணர்ந்த முதிர்ச்சியோடு– மனசுக்குள் மனசாய் பேசுகிற மாதிரி– பேசினார்.

"தம்பி... நம்ம பட்டிக்காட்டுலே எல்லாம் காதல் கீதல்ங்கிறது லாயக்கில்லே. நீங்க வேற சாதி. வீரம்மா வேற சாதி. அவள் சின்னப்பொண்ணு. என்ன தெரியும்? பொம்மைக்கு ஆசைப்படுற கொழந்தை மாதிரி. நீங்கதான் பக்குவமா வெலகிக்கிடணும். நாலாகாடு போய்வந்த வெவரமான ஆளு நீங்க..."

"இல்லேங்க... சின்னப் புள்ளையிலேயிருந்து கல்மிஷமில்லாம பழகிட்டோம்..."

"அந்தப் பழக்கம் வேற தம்பி, இப்ப வந்துருக்குற பிரச்னை வேற. பழக்கத்துக்கு – நட்புக்கு – சாதி பாக்க

வேண்டியதில்லே. கல்யாணம், வாழ்க்கைன்னு வர்றப்ப சாதி ரொம்ப முக்கியமாயிடுது.''

''சாதிங்கிறது நாமளா ஏற்படுத்திக்கிட்டது தானே?''

''இல்லே தம்பி. ராசா ஆண்ட காலத்துலேயும் சாதி இருந்துருக்கு. இப்பவும் இருக்கு. இன்னும் நூறு வருஷம் ஆனப் பெறகும் சாதியிருக்கும். சாதியில்லாம கல்யாணம் காடேத்து எதுவும் கெடையாது.''

''இல்லேங்க.''

''பொறு தம்பி... எங்க சொல்லை மீறி நீங்க ஏதாச்சும் செய்ஞ்சா... என்னாகும்? ரெண்டு சாதிசனமும் சண்டை போட்டு மண்டையை ஒடைச்சுக்கிடும்? தேவையா? இல்லேன்னா... 'குடும்ப மானம் போறதைவிட புள்ளை செத்தா பரவாலே'ன்னு பெத்தவுக அந்தப் பெண்ணை கொன்னு போடுவாக? ஒனக்கு அது சந்தோஷமா? யோசிச்சுப் புத்தியோடு நடந்துக்க. பேசாம... நாலைஞ்சு மாசத்துக்கு எங்கிட்டாச்சும் ஓடிப் போயிரு.''

இது மிருதுவான மிரட்டல். கனிவான அச்சுறுத்தல். பனிப்பாளத்தால் வயிற்றைக் கிழிக்கிற சாணக்கியம். அகிம்சையான இம்சை.

மறுநாள் நடக்கப் போகிற பயங்கரம் அறியாமல்... கொதிப்பான குழப்பத்தோடு வீடு வந்து விழுந்தான் சங்கரன்.

ராத்திரி உறக்கமே வரவில்லை. மனசுக்குள் ஏகப்பட்ட உளைச்சல். வகை வகையான பீதிக் காட்சிகள். வீரம்மா செத்து விறைத்துக் கிடக்கிற மாதிரியான குரூரத் தோற்றம்.

பாயில் புரண்டான். நள்ளிரவுக்கு மேல் பசியெடுத்தது. தண்ணீரைக் குடித்துவிட்டு மீண்டும் படுத்தான். உறக்கம் வரவிடாமல் மனசுக்குள் முள்முள்ளாய் நினைவுகள்.

அப்போதுதான்—

வளத்தய்யா ஞாபகம் வந்தது. அவர் செத்துப்போய் ரெண்டு மூணு வருசமாகி விட்டது. அந்த வளத்தய்யா இவனுக்கு உயிர். ரொம்பப் பாசம். எந்நேரமும் அவரோடுதான் வாசம்.

இத்தனைக்கும்... அவர் ஒன்றும் சொந்த வளத்தய்யா இல்லை. நெருக்கமான சொந்தம் கூட கிடையாது. ஒடிக் கிடக்கிற உறவு முறைக் கொடியை தூக்கிப் பார்த்தால்... எங்கோ தூரத்தில் ஓர் இணைப்பு தெரியும். அவ்வளவு தூரத்துச் சொந்தம்.

பொதுவாக... அம்மாவைப் பெற்ற அய்யாவைத்தான் வளத்தய்யா என்பார்கள். இவர் எல்லாச் சிறுவர்களுக்கும் வளத்தய்யாதான். அவர் பின்னால் எப்பவும் ஒரு சிறுவர் பட்டாளம், சர்க்கரையை மொய்க்கிற ஈக்கூட்டம் மாதிரி இருக்கும்.

“கதை போடுங்க வளத்தியா... வளத்தியா கதை” என்று எந்நேரமும் நச்சரிப்பார்கள். நச்சரிப்பில் அவர் எரிச்சலடைய மாட்டார். பெருமைப்படுவார்.

“பொறுங்க பொடுசுகளா... போடுதேன் கதை” ம்பார். கதை என்றால்... அப்படிக் கதை போடுவார். கேட்கக் கேட்க ஆசையாயிருக்கும். அவர் கதை போடுகிற நேர்த்தியில் ஏதோ மந்திர மாயம் இருக்கும். காட்சி காட்சியாக மனசுக்குள் விரியும்.

...ராஜகுமாரியை பிடித்து சிறை வைத்திருப்பார்கள். காவலுக்கு ஈனாப் பூச்சிகள். ரெண்டு பூச்சி சேர்ந்தால் ஓர் ஆளைக் கொன்று தின்று விடும். எலும்பு தவிர எல்லா வற்றையும் தின்று தீர்த்து விடும்.

அந்த ஈனாப் பூச்சிகள் பௌர்ணமி அன்றைக்கு மட்டும் காட்டு மேய்ச்சலுக்குப் போகும். ராஜகுமாரியை மீட்க தவியாய் தவித்து ராஜகுமாரன் காத்திருப்பான். பௌர்ணமி. பட்டு போல் நிலா வெளிச்சம். ஒரு நொண்டி

ஈனாப் பூச்சி மட்டும் காவல். மற்றதெல்லாம் மேய்ச்சலுக்கு. காதலன் வருவான். ராஜகுமாரியை மீட்டு குதிரையில் வைத்து தீயாய் பறப்பான்.

நொண்டி தாக்கல் சொல்லி... காட்டு மேய்ச்சலுக்குப் போன எல்லா ஈனாப் பூச்சிகளும் இவர்களைத் துரத்தும். குதிரை காற்றாய் பறக்கும். ஈனாப் பூச்சிகள் அதைவிட வேகம். கிட்டத்தில் நெருங்கி விடும். ராஜகுமாரன் பதறுவான்.

ராஜகுமாரி தன் கழுத்தில் கிடந்த நவரத்தின மாலையை அறுத்து, பின்பக்கமாய் வீசியெறிவாள். சிதறிக் தெறிக்கும் நவரத்தினங்கள், நிலா வெளிச்சத்தில் மண்ணின் நட்சத்திரங்களாய்...

எல்லா ஈனாப் பூச்சிகளும் நட்சத்திரங்களை மொய்க்க... காதலர்கள் தப்பி ஓடி விடுவார்கள்...

குழந்தைகளுக்கு அப்பத்தான் உயிரே வரும். "அப்பாடா... தப்பிச்சிட்டாகளா" என்று ஆவல் பரபரப் பாய் கேட்பார்கள். சங்கரனுக்குப் படுக்கப் போனால் கூட கண்ணுக்குள் ஈனாப் பூச்சி துரத்திக் கொண்டு வரும். ஆள் உயரத்துக்கு பருத்து வளர்ந்திருக்கிற ராட்சஸச் சிலந்திப் பூச்சி மாதிரி. பயத்தில் 'ஒன்றுக்கிருந்து' டவுசரை நனைத்துக் கொண்ட இரவுகள் நிறைய்ய.

கொள்ளைக்காரன் ஜம்புலிங்கம் கதையை மட்டும் விட்டுவிட்டு ஏழெட்டு நாளைக்குப் போடுவார். வெள்ளைக்காரன் போலீஸ், ஜம்புலிங்கத்தைப் பிடிக்க முடியாமல் ஏமாந்து போகிறபோது... பிள்ளைகளுக்கு ஏகக் கொண்டாட்டமாயிருக்கும்.

இப்படி அவர் போட்ட கதைகள் வண்டி வண்டியா யிருக்கும். சங்கரனுக்கும் அவர் கூட ரொம்ப ஒட்டுதல். இவனுக்கு நீச்சல் சொல்லிக் கொடுத்தவரே அவர்தான்.

கிணற்றுக்குள் படியில் நடுங்கிக் கொண்டு உட்கார்ந் திருப்பான். தண்ணீருக்குள் மீன் மாதிரி ஒரே இடத்தில் – நகராமல்– நீந்திக் கொண்டிருப்பார். "குதிடா..." என்பார். இவன் பயப்படுவான்.

"எதுக்கு தொடை நடுங்குறே? தண்ணிக்குள்ளே என்ன இருக்கும்னு இப்படிப் பயந்து சாகுறே?"

"தண்ணிப் பேய்."

அவர் கேலி பண்ணிச் சிரிப்பார்.

"போடா கிறுக்குப் பயலே... தண்ணிக்குள்ளே பேய் எப்படி இருக்கும்? அதுக்கு எப்படி மூச்சுத் தாங்கும்?"

இப்படிப் பேசித்தான் அவன் பயத்தைப் போக்கினார். நீச்சலும் சொல்லிக் கொடுத்தார்.

சங்கரனுக்கு அப்போது ரெண்டுங்கெட்டான் வயசு. பதினைந்து பதினாறு இருக்கும். அவன் வயசுப் பையன் களெல்லாம் சிறகு முளைத்து, வளத்தய்யாவை விட்டுப் பறந்து போய்விட்டனர், அவரவர் ஆகாயங்களில். இவனுக்கு எப்பவும் அவர்தான் ஆகாயம், கூடு, எல்லாம்...

சினிமா பார்த்து விட்டு.... வார இதழ் கதைகளைப் படித்துவிட்டு அதைப் பற்றியெல்லாம் வளத்தய்யாவிடம் பேசுவான். கேள்வி கேட்பான்...

...ஒரு சமயம்.

பைத்தியக்காரன் ஒருத்தன் ஒரு பெண்ணை கற்பழித்து விடுவான். அவள் கதறிக் கதறிழுவாள். அவனையே கணவ னாக ஏற்று... அவனைத் திருத்த படாதபாடுபடுவாள்.

அப்படி ஒரு சினிமா. அந்த வயசில் அதைப் பார்த்து விட்டு இவனால் ஜீரணிக்க முடியவில்லை.

பைத்தியக்காரன் செய்த ஒரு காரியத்தை ரொம்ப முக்கியமாக எடுத்துக்கொண்டு அந்தப் பெண் தன்னைச்

சீரழித்துக் கொள்வது அவனுக்கு நியாயமாகப் படவே யில்லை. எப்படி அநியாயம் என்று சொல்லவும் தெரிய வில்லை. வளத்தய்யாவிடம் வந்து கேட்டான்.

அவர் நரைத்த தாடையைச் சொரிந்து கொண்டே சிரித் தார். சிரிக்கிறபோது மிச்சமாயிருந்த மூன்று பல் மட்டும் கறையோடு தெரியும்.

"போடா போ... நீங்களும் உங்கள் எழவுச் சினிமாவும். இதை படிச்சிட்டு கதை எழுதுனா... இப்படித்தான் இருக்கும். ஊரு ஒலக நடப்பைப் பாத்துப் படிச்சு எழுதுனா... இப்படித் தப்பு வராது..."

"ஏன் வளத்தையா, கற்புங்கிறது தப்பா?"

"கற்புங்குறது ஒடல்லே இல்லேடா, ஒழுக்கத்துலே இருக்கு. கொணத்துலே இருக்கு..."

"அப்படியா..."

"ஆமா... அந்தக் கிறுக்குப் பயலை வசியம் பண்ணி, அவ ஒடல்ப் பசியை தீத்துக்கிட்டா... அதுதான் ஒழுக்கக்கேடு. அப்பத்தான் கற்பை இழந்தவ... அவா."

"நெசம்மாவா!"

"அடேய்... கற்புங்குறது பொம்பளைக்கு மட்டுமில்லே, எல்லாருக்கும் வேணும். மனுசன் மனுசத்தனமா நடக் கலேன்னா... 'நீயெல்லாம் ஒரு மனுசனா'ன்னு கேக்குறோம்லே? அப்பன் அப்பனுக்குரிய கொணத்தோட நடக்கலேன்னா.... 'நீயெல்லாம் ஒரு அப்பனா'ன்னு கேக்குறோம்லே? அப்படீன்னா... என்ன அர்த்தம்? அப்பன் அப்பனுக்குரிய கற்போட இல்லேன்னு அர்த்தம். அம்புட்டு தான்."

அம்புட்டுத்தான் என்று சொன்னாலும், இன்னும் நிறையப் பேசினார். அதற்கும் கதைகள் போட்டார்...

ஒரு தாசியின். வீட்டிற்கு தினம் நிறைய வந்து போகிற காமுகர்கள். தாசி இப்படிப் பாவம் செய் கிறோமே என்கிற மன உளைச்சல் கொள்கிறாள். மனசில் லாமல் காரியம் பண்ணுகிறாள். மனம் பூராவும் ஒழுக்க மான வாழ்க்கை வாழ்கிற கனவிலேயே இருந்திருக்கிறது.

அவள் வீட்டின் எதிர்ப்புறத்தில் ஒரு மடத் திண்ணை. அதில் ஒரு சன்னியாசி. ஆசை துறந்த ஞானி. இந்த வீட்டிற்குள் வந்து போகிற காமுகர்கள் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தாராம்... ஒன்னு, ரெண்டு என்று.

ரெண்டு பேரும் செத்தார்கள். தாசி சொர்க்கத் துக்கு அனுப்பப்பட்டாள். சன்னியாசியை நரகத்திற்கு அனுப்பினார்கள். சன்னியாசி கொதித்துப் போய் நியாயம் கேட்டார்.

"அனுதினமும் உடலால் பாவம் செய்த அவளுக்குச் சொர்க்கம். ஒரு பாவமும் செய்யாத எனக்கு நரகமா?"

அவருக்கு கிடைத்த பதில்: "அவள் மனசாலே பாவத்தை வெறுத்தவள். நீ அதையே மனசுலே நினைத்துக் கொண்டிருந்தவன்."

...இப்படிக் கதையெல்லாம் நிறையப் போடுவார். அவர் தான் இவனுக்கு ஞானத்தந்தை. அக உலகம். சுபாவகர்த்தா.

அந்த வளத்தையாவைப் பற்றி நினைத்துக் கொண்டே உறங்கிப் போய் விட்டான். விடிந்தால்... அந்தப் பயங்கரம்.

இவனை அழைத்ததைப் போலவே... நாட்டாண்மை வீரம்மாவையும் கூப்பிட்டு, வீட்டார் சம்மதத்தோடு தனிமையில் நிறையப் பேசியிருக்கிறார். கனிவாக மிரட்டி யிருக்கிறார். கதையாகவில்லை. அவள் ஒரே வைராக் கியமாயிருந்திருக்கிறாள்.

அவளை பலவந்தப்படுத்தி நாசக்காடு பண்ணி விட்டார்.

"இனிமே என்ன பண்ணுவே? கெட்டுப்போன இந்த ஒடம்போட சங்கரன்கூட நீ போயிருவீயா? இது வெளியே தெரிஞ்சா... அவன்தான் ஒன்னைக் கட்டிக்குவானா?" என்று எகத்தாளமாய்க் கேட்டிருக்கிறார்.

வீரம்மா மானஸ்தி. ஒருத்தரிடமும் மூச்சுக் காட்ட வில்லை. ஒன்றும் சொல்லவில்லை. ஆனால்... அவள் வந்த கோலத்திலிருந்து... பெண்கள் நுட்பமாய் புரிந்து கொண் டனர். விஷயம், தீயாய் பரவி விட்டது.

அவர்கள் சாதிக்குள்ளேயே கோபம். ஆத்திரம். பணியா ரத்தை பங்கிடப் போன பூனைகள் கதையாகி விட்டோமே என்கிற குமுறல். தெரு முழுக்க ஒரே சண்டை சத்தம்.

சங்கரனுக்குப் பக்கென்றது. ஒரே ஓட்டமாய் ஓடினான். அவனுக்குள் பதைப்பு. விஷயம் கை மீறிப் போய் விடுமோ என்கிற திகில்.

ஊருக்குத் தெற்கே சற்றுத்தள்ளி பூந்தோட்டம். அதன் கரையில்தான் வரிசையாய் அரளிச் செடிகள். மஞ்சள் மஞ்சளாய் பூ பூக்கிற அரளிச் செடிகள்.

அவன் பயந்த மாதிரியே நடந்தது. கிணற்றுக்கல்லில் அரளிக்காய்களை அவசர அவசரமாக தட்டிக் கொண் டிருந்தாள் வீரம்மா. அவள் முகத்தில் ஓர் இறுக்கம். கண்ணில் வெறி. சாவைத் தழுவப் போகிற ஆவேசம்.

ஓடிப் போய் அவள் கையைப் பிடிக்கப் போனான், சங்கரன்.

அவள் சரேலென விலகிக் கொண்டாள். அவள் கண்களில் பதற்றமும் அழுகையும்.

"என்னைத் தொடாதீக... என்னை தொடாதீக" என்று கதறினாள்.

"ஏன்... தொடக்கூடாதுங்குறே...!"

"என்னைச் சாகவுடுங்க..."

"அதான் கேக்கேன்... எதுக்கு?"

"நா எதுக்கு உசுர் வைச்சுருக்கணும்?"

"அறிவில்லாமப் பேசாதே... எதுக்குன்னு சொல்லு."

அவன் நெருங்க... அவள் மேலும் ஒரு அடி பின் வாங்கினாள். "என்னைத் தொடாதீக..."

"அதான் கேக்கேன், எதுக்குன்னு சொல்லு..."

"பாழாகிப் போன இந்த ஒடம்பை நீங்க தொடக் கூடாது."

சாமி அருள் இறங்குற மாதிரி, அவனுக்குள் வளத்தையா. அவன் குரலில் வளத்தையா பேசினார்.

"அடக் கிறுக்கச்சி... நீ நாட்டாமைக்குச் சம்மதிச்சியா?"

அவன் கேள்வியின் தொனியும் ஆழமும் புரியாமல் திகைத்தாள். அவன் முகத்தில் நிலையற்றுப் பாய்கிற அவளது கண்கள்.

"நாட்டாமை காரியத்துக்கு நீ இஷ்டப்பட்டியா...? ஒத்துக்கிட்டியா...?"

புரியாத குழப்பத்தோடு 'இல்லை' என்பது போல தலையாட்டினாள்.

"அப்ப நீ பாழாகலே..."

"அந்தப் பாவி என்னை நாசக்காடு பண்ணிட்டான்."

"இல்லேம்மா... அவன்தான் நாசமாயிருக்கான். நீ நாசமாகலே. பாழாகலே. நீ நீயாவேதான் இருக்கே... நீ ஒழுக்கமுள்ள மானஸ்தியாத்தான் இருக்கே..."

அவளுக்கு இன்னும் புரியவில்லை. ஆனா... தளர்ந் திருந்தாள். அவள் முடிவிலிருந்து உடைந்து சரிந்திருந்தாள்.

அவளை ஆதரவோடு பற்றிக்கொண்டான், சங்கரன். அவர்கள் ஆத்மாவிற்குள் ததும்பிய அன்புப் பிரவாகத்தின் வழியில் அவர்கள் மிதந்தனர்.

"உங்க சாதியாளுக நாட்டாமை கிட்டே வெவகாரம் பண்ணிக்கிட்டிருக்காக. இனிமே நம்மளை ஒன்னுஞ் செய்ய மாட்டாக. வா எங்கூட."

"எங்க?"

"என் வீட்டுக்கு."

"எதுக்கு?"

"வாழ்றதுக்கு."

"இனிமேயும் எனக்கொரு வாழ்வா?"

"இனிமேயும்னா... என்ன அர்த்தம்? இப்ப ஒன்னுமே நடக்கலே. நீ மனசாலே பத்தினி. மானஸ்தி. வா... பேசாம."

அவனோடு அவள்... அவனது ஆத்ம நிழலாய் அவள்.

சமூக மரபுகளை காலில் போட்டு மிதித்துவிட்டு, புதிய மரபில் நடைபோடுகிற புதிய மனிதனாகதான் இயங்கி யிருக்கிறோம் என்பது.... இன்று வரைக்கும் சங்கரனுக்குத் தெரியவே தெரியாது.

இப்போது—

அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவனுக்கு வளத்தய்யாவின் பெயர்.

புதிய பார்வை —டிசம்பர், 1993

7.புரிதல்

சின்னையா நாயக்கருக்கு இப்படியோர் சிக்கல் வந்திருக்கக் கூடாது. பாவம், ரொம்பக் கொதித்துப் போயிருக்கிறார். குருட்டு ஈ சுவரில், கதவில் மோதிக் கொண்டு இரையுமே... அதுமாதிரி, அவரும் கண் மூக்கு தெரியாத கோபத்தில்...• எல்லார் மீதும் 'சள், சள்' என்று விழுந்து கொண்டிருக்கிறார்.

சும்மாவே... சின்னையா நாயக்கருக்கு கரண்டுக்காரங்க என்றாலே, பிடிக்காது. பார்த்தாலே பற்றிக் கொண்டு வரும். அடிமனசிலிருந்து சீறிச்சினந்து திட்டித் தீர்ப்பார்.

''ஒன்னுக்குமத்த பயல்க. ஒழுங்கா கையெழுத்துப் போடத் தெரியாத பயக. காக்கிச்சட்டை போட்டவுடனே மூவாயிரரூவா சம்பளம். சம்சாரியை மதிப்பானா? அதான்... கிண்டி மேய்தான். வந்து பாருங்கான்...''

என்று ஆத்திரம் ஆத்திரமாய் பொறுமுவார். காலத்திலும் மழையில்லை. மார்கழி தையிலும் மழையில்லாமல் போயிற்று. காடுகரைகளில் பயிர் பச்சை பொசுங்குகிறது. கிணறுகளில் நீர் இழுபறியாகி, வரட்டிழுப்பாகி விட்டது.

இருக்கிற தண்ணீரை ஊற ஊற இறைக்கணும். அதுக்கு கரண்டு வேணும்.

இருக்கிற தண்ணீரை பங்காளிக்குள் பிரித்துப் பாய்ச்சு வதற்குள் பெரும் சண்டைக்காடு.

''நீ வந்து பாரு நா வந்து பாரு' என்று ஒரே மல்லுக் கட்டு. அடித்துப் பிடித்து இன்றைக்குத்தான் கரண்டு ரூம் சாவியை வாங்கினார்.

மதியக்கரண்டு.

காலையிலேயே வயர்மேன் வெள்ளையும் சொள்ளையு மாய் பளிச்சென்று வந்தார்.

''என்னப்பா... காக்கிச்சட்டை எங்கே?''

''இன்னிக்கு லீவ்!''

''லீவா?''

''ஆமா... ஒரு போராட்டத்துக்குப் போறேன்!'' இவருக் குள் திகுதிகுவென்று எரிந்தது. கொந்தளித்துக் குமுறி வந்த கெட்ட வார்த்தைகள்.

'சம்சாரிக சாகக்கிடக்கான். அவனைச் சீந்த நாதியில்லே. கொள்ளை கொள்ளையா சம்பளமும் போனஸூம் வாங்கி வாயில போடுதீக. இன்னும் என்ன மயித்துக்குப் போராட்டமும், கீராட்டமும்.'

மனசுக்குள் சீறிவந்த வார்த்தைகளைக் கட்டுப்படுத்திக் கொண்டார். வெறுப்போடு மேலும் கீழும் பார்த்தார்.

''இன்னிக்கு கரண்டு ஒழுங்கா வரும்லே?'' இறுகலான குரலில் கேட்டார்.

''ம். கரெக்டா வரும். லைன் எல்லாம் க்ளீனாயிருக்கு.''

இளமதியத்திற்கே புஞ்சைக்குப் போய் விட்டார். கரண்டு நின்றது. த்ரிபேஸ் கரண்டு வந்தவுடன் மோட் டாரை எடுத்து விட்டார்.

ரெண்டு உறுமு உறுமி விட்டு, மோட்டார் ஓடியது. அப்பாடா என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டார், சின்னையா நாயக்கர். பெருத்த ஆறுதல்.

வாய்க்காலில் தண்ணீர் கூடவே நடந்து வந்தார். அவர் காலுக்கு முன்னால் பழகிய பாம்பு மாதிரி தண்ணீர் விறுவிறுவென்று ஊர்ந்தது.

புஞ்சைக்குள் தலைவைத்து... காய்ந்த புல், இலைச் சருகுகளோடு சலசலவென்று சத்தமாய் பாத்திக்குள் நீர் பரவியபோது—

'டடக்' என்கிற சத்தம். இருதய நரம்பு அறுத்த மாதிரியிருந்தது. நிமிர்ந்து பார்த்தார். மோட்டார் பம்பு ஒரு குலுங்கலோடு மூளியாய் நின்றது.

பதறிப் போய் ஓடினார். கரண்டு இல்லை. சுற்று முற்றிலும் கண்ணை எறிந்தார். எல்லா பம்ப் ஷெட்களிலும் இவரைப் போலவே ஆள் தெரிந்தது.

இருக்கிற தண்ணீரை இறைக்க வழியில்லை, பீஸ் போடச் சொல்ல வயர்மேனும் இல்லை. கிணற்று நீரை எட்டிப் பார்த்தார். இருக்கிறதை எடுத்துச் சாப்பிட முடியாத பசித்த மனிதனின் ஏக்கமும் தவிப்பும்... அவருக்குள்.

எல்லாம் கோபமாகி வயர்மேன் மேல் திரும்பியது நினைக்க நினைக்க மனசு கிடந்து கொதித்தது.

"வரட்டும்... இன்னிக்கு என்ன ஆனாலும் சரி... ரெண்டுல ஒன்னு பாத்துர வேண்டியதுதான். அவன் ஆம்பளையா, நாம ஆம்பளையான்னு மோதிப் பாத்துர வேண்டியதுதான்."

சுட்டிக்கிடக்கிற ஜல்லிக்கட்டுக் காளையாக அவர் மனசு மூர்க்கமாய்த் திமிறியது. மம்பட்டியை எறிந்து விட்டு, பம்ப் ஷெட்டை 'டம்ம்'மென்று அறைந்து பூட்டி விட்டு... வேக வேகமாய் ஊருக்குள் வந்தார்.

ஊர் மடத்தில்... இவரைப் போலவே நிறைய சம்சாரிகள். எரிச்சலில் தகித்துக் கொண்டிந்தனர்.

வாயிலிருந்து நெருப்புத் துண்டுகளைத் துப்பிக்கொண் டிருந்தனர்.

வயர்மேனையும், கரண்டாபீஸையும் கந்து கந்தாகக் கிழித்துப் போட்டனர். முட்டி மோதி வழியறியாமல் அலைகிற கோபம், திசையற்றுப் பாய்ந்தது.

சின்னையா நாயக்கர் ரொம்பக் கோபமும் கொதிப்புமாய் சீறினார். "ஆமா...! இப்படி பொம்பளைக மாதிரி புலம்பிப் புலம்பி பேசிக்கிட்டேயிருக்கப் போய்த்தான்... வயர்மேன் நம்மளை கிள்ளுக்கீரைன்னு நெனைச்சுட்டான்..."

"இப்ப... என்ன செய்யணும்னு சொல்றீரு?"

"கட்டிவைச்சு ஒதைக்க வேண்டியதுதானே? அப்பத் தானே... நமக்குப் பயந்து வேலை ஜோலி பாப்பான்."

"கட்டி வைக்கிறது பெரிசில்லே... அதாலே வர்ற வினையை யார் தாங்குறது?"

"என்ன வினை வந்துரும்? தலையை சீவிருவாகளோ?"

"என்ன வினை வந்துருமா? நல்லாயிருக்கே ஒம்ம கதை" என்று பரிகாசமாய் கேட்ட அவன், சின்னையாநாயக்கரை ஒரு தினுசாய்ப் பார்த்தான். "பக்கத்து ஊரு கதை ஒமக்குத் தெரியாதா?"

"என்ன கதை?"

...உள்ளூர் தச்சாசாரியின் மகன்தான், வயர்மேன். தச்சாசாரி என்றால்.... ஒற்றை வீட்டுக்காரர். சம்சாரிகளை நம்பி, அவர்கள் நிழலை அண்டி வாழ்கிறவர். சம்சாரி மக்களிடம் வருஷக் கூலியாக தான்யம் வாங்கி ஜீவனம் பண்ணுகிறவர்.

அவர் மகன் என்பதால்... ஊருக்கே கட்டுப்பட்டவர் என்ற தொனியில் 'தாம், தூம்' என்று அதிகாரம் பண்ணி...

ஆசாரியை அதட்டுகிற மாதிரியே வயர்மேனையும் போய் அதட்ட... அது ஒரு முரண்பாடாகி... வாய்ச்சத்தமாகி...

"ஒத்தை வீட்டுக்காரப் பயலுக்கு இம்புட்டுத் திமிரா...?" என்ற ஆவேசத்தில் அடி அடியென்று அடித்து, வேப்ப மரத்தில் கட்டிப் போட்டு விட்டனர்.

சங்கம் தலையிட்டு ஜே.இ.யிடம் மோதி... காவல் துறையில் மோதி... முடுக்கிவிட....

போலீஸ் கிராமத்திற்குள் வர, ஜனங்கள் கந்தர்வ கோளமாய் பயந்தோட... போலீஸ் கேஸ் ஆயிற்று.

ஊரில் பதினெட்டுபேர் மேல் கேஸ். அத்தனை பேரும் 'வாய்தா, வாய்தா' என்று கோர்ட்டுக்கும் ஊருக்கும் மூணு வருஷமாய் இழுபட்டு நொந்து கிடக்கிறார்கள்...

"ஆமய்யா சின்னையா நாய்க்கரே, அந்த ஊர்க்காரங்க சீரழிஞ்ச மாதிரி... நாமளும் சீரழியவா? நாசமாய்ப் போயிருவோம்..."

"அதானே! வழியிலே போற சனியனைக் கூப்பிட்டு முதுகுலே ஏத்திக்கிட்டு... சாகவா?"

"சம்சாரிகளுக்கு உள்ள நொம்பலம் காணாதுன்னு... இது வேற நொம்பலமா? வயர்மேனை அடிக்கவும் வேணாம், நாம வயித்துலே பயத்தைக் கட்டிக்கிட்டு அலையவும் வேணாம்..."

சின்னையா நாயக்கரை அம்போவென்று விட்டு விட்டு, ஆள் ஆளுக்கு ஒன்றை முணங்கி விட்டு கலைந்தனர்.

ஒற்றையாளாய்... இவர் மட்டும். இவருக்குள் ஏகமாய் கடுப்பு, வெறி.

கண்டமேனிக்கு மனசுக்குள் திட்டித்தீர்த்தார். 'கோழைப்பயக, பயந்தாரிப்பயக' என்று சக சம்சாரிகளை வசவாய் வைது ஆத்திரத்தைத் தணித்துக்கொண்டார்.

அப்பவும்... அவருக்குக் கோபம் தணியவில்லை. வயர் மேனுடன் சண்டை போட்டுவிட வேண்டியதுதான் என்று ஒரே முடிவில் இருந்தார்.

பயிர் வாடிக்கிடக்கிறது. தண்ணீர் பாய்ச்ச முடிய வில்லை. அதைவிடப் பெரிய விஷயம் என்றால்... காலையில் கேட்டதற்கு என்ன அலட்சியமாகப் பதில் சொன்னான்...

'கரெக்டா கரண்டு வரும். லைன் க்ளீனாயிருக்கு'ன்னு சொன்னானே, நம்பளைக் கேணப்பயன்னு நெனச்சுட் டானே... வரட்டும்!

எழுந்து தெருவில் நடந்தார். டீக்கடைப் பக்கம் போனார். டீக்கடையில் ஆட்கள் நிறைய இருந்தனர்.

''ஒரு டீ போடப்பா'' என்றார். ஒரு பெஞ்சில் உட்காரப் போனார். பக்கத்தில் முத்துச்சாமி இருந்தான்.

முந்தியொரு சமயத்தில் வயர்மேனைச் சுற்றி வளைத்துக் கொண்டு, ஆள் ஆளுக்கு எகிறினார்கள்.

''சங்கம் வைச்சிருக்கிற தைர்யத்துலேதான்... நீங்க இந்த ஆட்டம் போடுதீக?'' என்றார் ஒரு சம்சாரி.

''நாங்க ஒன்னும் ஆட்டம் போடலை. நாங்க எங்க டூட்டியைத்தான் செய்றோம்...''

''டூட்டியைச் செஞ்சா... எதுக்கு கரண்டு இல்லாமப் போகுது?''

''மூணு பேரு பார்க்க வேண்டிய வேலையை ஒருத்தன் தலையிலே திணிச்சா... வேலை ஒழுங்கா நடக்குமா? அதான் குளறுபடி. நீங்க ஆபீஸர் மார்கிட்டே போய் மோத மாட்டீக... ஏங்கிட்டேயே மோதுதீக. நா என்ன செய்ய?''

''அப்போ... நாங்கதான் கூறுகெட்டுப் போய்த் திரியறோமா?''

"ஆமா... சர்க்காரு உங்களையும் என்னையும் மோத விட்டு வேடிக்கை பாக்குது. நீங்க சர்க்கார் செய்ற காரியங் களைப் பார்க்காம... எம்மேலேயே வந்து மோதுனா என்ன அர்த்தம்?"

"அர்த்தம் கெட்டுப் போய், அரை வேக்காடுகளாய் சம்சாரிக அறிவில்லாம அலையுறாக? அப்படித்தானே, சொல்றே? ஒனக்கு எம்புட்டுத் திமிர் இருந்தா... இப்படி பேசுவே? சங்கம் இருக்குங்கிற திமிர்தானே?"

"வார்த்தை ஒழுங்கா பேசணும்? திமிரு கிமிறுன்னு பேசக் கூடாது, ஆமா... சொல்லிட்டேன்..."

"ஏன்? பேசுனா... என்ன செய்வே?"

முறுக்கேறிப் போன உணர்ச்சி வெக்கை. வெப்ப வார்த்தைகள். பாம்புச் சீறல்கள். கலவர நிலவரம்.

அப்போதுதான்–

இந்த முத்துச்சாமி தலையிட்டான். வயர்மேனை நல்ல வார்த்தை சொல்லி அமர்த்திவிட்டு, சுற்றியிருந்த சம்சாரி களை 'தடாபுடா'வென்று சத்தம் போட்டான்.

"சங்கம் சங்கம்னு... சங்கம் வைச்சிருக்கிறதையே ஒரு குத்தமா ஏன் சொல்றீக? அவங்க சங்கம் வைச்சுப் போராடி.... சம்பளத்தை உசத்தி... அவங்க தொழிலுக்கு ஒரு கௌரவத்தை உண்டாக்கியிருக்காங்க. நீங்க சம்சாரிக. அவுககிட்டேயிருந்து பாடம் கத்துகிட வேண்டாம்? நீங்களும் சங்கம் வைச்சு... போராடி, சம்சாரித் தொழிலை கட்டுபடியாகிற தொழிலா மாத்த வேண்டாம்? அதைச் செய்யாம... சங்கம் வைக்குறதையே குத்தம் சொன்னா... நாம வெளங்குவமா? நாம உருப்படுவோமா?"–

என்று திகிடு முகிடாய் சத்தம் போட்ட பிறகுதான் கூட்டம் கலைந்தது.

அப்படி வயர்மேனுக்கு வக்காலத்துப் பேசியவன்தான்... இவன்.

இவனிடம் தான் வயர்மேனைப் பற்றிப் பேசனும்,

"முத்துச்சாமி இன்னிக்கு என்ன நடந்துச்சு, தெரியுமா?"

"தெரியாதே..."

நடந்ததையெல்லாம் சொல்லிமுடித்தார். கொதிப்பும் கொந்தளிப்புமாய் முடித்தார்.

"பார்த்தீயா... உங்க வயர்மேன் லட்சணத்தை. இன்னிக்கு சாங்காலம் வரட்டும். ரெண்டுலே ஒன்னு பாக்காம விடமாட்டேன்..."

முத்துச்சாமி சிரித்தான். நிதானம் குலையாத மென்மைச் சிரிப்பு. அவரது சீண்டலுக்குப் பலியாகாத பொறுமைச் சிரிப்பு. முறுவல்.

"என்ன சிரிக்கே?"

"ஒன்றுமில்லே... ரெண்டு மாசத்துக்கு முந்தி... கனகவேலு வீட்டுக்கு கல்யாணத்தன்னிக்கு நீங்களும் இருந்தீகல்லே? என்ன நடந்துச்சுங்கிறதை நெனைச்சுப் பாருங்க..."

...கனகவேலு மகள் கல்யாணம், ஊர்ப்பந்தி வைக்கிற நேரம். திடுதிப்பென்று கரண்டு கட். சட்டென்று வந்து அப்பிக் கொண்ட இருட்டு. கூட்டம் திணறியது.

கிராமத்தில் அரிக்கேன் லைட்டும் அருந்தலாகி விட்டது. பெட்ரோமாக்ஸ் லைட்டும் கிடையாது. என்ன செய்ய? எப்படி ஊர்ப்பந்தி வைக்க? ரொம்பச் சிரமம். நடக்கவே நடக்காது.

அதைவிட வேறொரு சிக்கல். ஊர்ப்பந்தி முடித்த பிறகு தான், நிச்சயதார்த்தம். கரண்டு இல்லாமல் போனால்... அபசகுனமாய் மாப்பிள்ளை வீட்டார் நினைப்பார்கள்.

கல்யாணமே நின்றுபோகிற நெருக்கடி. பக்கத்து ஊரில் தான் வயர்மேன் வீடு. ஒரு மைல் இருக்கும்.

முத்துச்சாமிதான் ஒரு பையனிடம் சைக்கிளை தந்து, விஷயத்தைச் சொல்லி அனுப்பி வைத்தான்.

அடுத்த அரை மணி நேரத்திற்குள் வயர்மேன் வந்து விட்டார். "சட்டப்படி... இப்ப நா டூட்டி பாக்க வேண்டியது மில்லே. பாக்கவும் கூடாது. இப்ப எனக்கு ஏதாச்சும் ஆனாக் கூட நட்ட ஈடு கிடைக்காது. ஆனாலும்... நா செய்றேன். ஏன் தெரியுமா?"

சுற்றிலும் மௌனம்.

"நானும் மனுசன்தான்."

அடுத்த பத்தாவது நிமிஷத்திற்குள்—

டிரான்ஸ்ஃபார்மரில் ஏறி, ப்யூஸ் போட்டு, கரண்டு வந்து விட்டது. ஊரெல்லாம் ஒளிமயம். கனகவேலு மகள் வாழ்விலும் தான்...

...இப்போது முத்துச்சாமி கேட்டான்.

"அந்த வயர்மேன் கூட மல்லுக்கட்டப் போறீகளா...?"

சின்னையா நாயக்கர் தர்ம சங்கடமாய் நெளிந்தார். எதுவும் சொல்ல முடியாமல் வெறுமனே விழித்தார்.

"இப்பவும்... எங்கேயாச்சும் ஏதாச்சும் கோளாராகி கரண்டு போயிருக்கும். இதுக்கும் லீவு போட்டுருக்குற அவர்தான் பொறுப்பா?"

"அப்படியில்லே... சம்சாரிகளுக்கு தண்ணிபாய்ச்ச முடியாமப் போச்சுல்லே? எதுக்கு லீவைப் போட்டுட்டுப் போகணும்?"

"எங்க போயிருக்கார், தெரியுமா?"

"போராட்டத்துக்கு."

''யாரு போராட்டத்துக்கு, அது தெரியுமா?''

''அவுக போராட்டமாய்த்தான் இருக்கும்.''

''இல்லே''

''பெறகு?''

''சம்சாரிகளோட பம்ப் ஷெட்டுக்கு இலவசமின்சாரம் கிடைச்சிக்கிட்டிருக்கே... அது ரத்தாகப் போகுது. மத்திய அரசு உத்தரவு போட்டுருச்சு...''

''ம்... அப்புடியா...!''

''ஆமா. அப்படி ரத்து பண்ணக் கூடாது. விவசாயி களுக்கு இலவச மின்சாரம் தொடர்ந்து கெடைக் கணும்ங்கிற கோரிக்கைக்காகத்தான்... இன்னிக்கு மின்சார ஊழி யர்கள் ஆர்ப்பாட்டம் நடத்துறாங்க.''

''நமக்காக... அவுக எதுக்குப் போராடணும்?''

''நாம புரிஞ்சிக்கிடாம இருக்கோம்லே, அதுக்காகத் தான். நமக்குப் போராடுற தைர்யம் குடுக்கத்தான். அவுக பின்னாடி நம்ம சம்சாரிக ஒண்ணு கூடிப் போனா... நம்ம தொழிலும் உருப்படும். நம்ம பொழப்பும் உருப்படும். இல்லேன்னா... சீந்த நாதியில்லாத அகதிகளா சம்சாரிக அலைய வேண்டியது தான்...''

மறுநாள்—

டீக்கடைக்குள்ளிருந்து வெறியேறிய வயர்மேனை சினேகிதமாய் பார்த்துச் சிரித்தார், சின்னையா நாயக்கர்.

''ஒரு டீ சாப்பிடுறீயா? சொல்லட்டா?''

வயர்மேன் மெல்லிய சிரிப்போடு மறுத்தான்.

''நீங்க இப்படிக் கேட்டதே போதும். வயிறு நெறைஞ்சு போச்சு.''

தமிழ்நாடு மின் ஊழியர்கள் சங்க 8—வது மாநாட்டு மலர், 1993

8.பொய்விலை

நேற்று சாயங்காலத்திலிருந்தே அருணாசலத்துக்கு ரொம்பத் திகில். மனசின் ஆழத்தில் சம்மணம் போட்டு உட்கார்ந்து கொண்ட கவலை. ஆத்ம பங்காளியான பெஞ்சாதியிடம் கூட பகிர்ந்து கொள்ள முடியாத முள்ச் சுமை.

ஆஸ்பத்திரியிலிருந்து நாலு வயது மகளை நெஞ்சோடு சேர்த்து முழங்கையில் சுமந்து கொண்டு, வலது கையில் டானிக், மாத்திரைகளோடு வீடு திரும்பிய அருணா சலத்தை பதற்றமும் தவிப்புமாய் வாசலிலேயே எதிர் கொண்டாள் கனியம்மா.

முற்றத்துக்கே ஓடி வந்து விட்டாள். மகளை ஆவலோடு வாங்கிக்கொண்டாள். ஆவி சேரத் தழுவிக்கொண்டு வார்த்தைகளை முந்துகிற உணர்ச்சி தவிப்போடு கேட்டாள்:

"டாக்டர் என்ன சொன்னாரு? ஊசி போட்டாரா? சரியாய்ப் போகும்னாரா? வேற என்னமும் சொன்னாரா? வாய்க்குள்ளே என்னத்தை வைச்சிருக்கீக? சொல்லித் தொலையுங்களேன்."

சோகத்தின் கொதிப்பில் சீறுகிற கனியம்மாவை சலன மில்லாமல் பார்த்தான். நிஜத்தைச் சொல்லி விடலாமா என்று ஒரு கணம் யோசித்தான். கனியம்மா தாங்கிக்கிட மாட்டா. ஒன்னுகிடக்க ஒன்னா புரிஞ்சுக் கிட்டு, வீணா

அழுது புலம்பிக் கரைஞ்சிருவா. அழுது கரைஞ்சா நோய் கொறைஞ்சிருமா என்ன?

"ஒண்ணுமில்லே. தடுமச் சளிதான். ரெண்டு ஊசி போட்டா சரியாப் போகும்னாரு."

"வேற ஒன்னுமில்லையே?"

"இல்லே."

"அப்பாடா... இப்பத்தான் மனசுக்கு ஆறுதலாயிருக்கு."

"ரொம்பப் பயந்துட்டியா?"

"ஆமா. ராத்திரி பூராவும் புள்ளைக்கு மூச்சுத் திணறுற தையும், இளைப்பும், இருமலுமாய் இருக்குறதையும் பாத்துட்டு என்னமோ ஏதோன்னு பதறிப்போய்க் கிடந் தேன். நல்லவேளை, ஆத்தா புண்ணியத்துலே புள்ளைக்குச் சீராய்ப் போய்ட்டா போதும்."

கனியம்மா பிள்ளையோடும் மனநிம்மதியோடும் வீட்டுக்குள் நுழைய, வாசலில் தேங்கிநின்ற அருணா சலத்திடமிருந்து கனத்த பெருமூச்சு.

டாக்டர் சொன்னது ஞாபகத்தில் உரசியது.

"செக்கப் பண்ணிட்டேன். சாதாரணச் சளியா தெரியலே. நாளைக்கு எக்ஸ்ரேயும், ப்ளட் டெஸ்ட்டும் பண்ணிடனும், அப்பத்தான். கிளியரா தெரியும்."

"சார்... ரொம்பச் செலவாகுமா?"

"ஆமா, கொஞ்சம் செலவாகும்."

"புள்ளைக்கு என்னவாயிருக்கும்னு இப்ப யூகிக்க முடியுதா, டாக்டர்?"

"பயப்படுற மாதிரி ஒன்னுமில்லே. மார்புக் கூட்டுக்கு வெளிப்புறத்துலே பிசின் மாதிரி சளி அப்பியிருக்கும்னு

நெனைக்கேன். அப்படியிருந்தா... நாப்பது ஊசி வரைக்கும் போட வேண்டியிருக்கும். தொடர்ந்து டானிக், மாத்திரை களோட... முட்டை, கீரைன்னு சத்தான உணவும் குடுக்க வேண்டியிருக்கும்.''

''சரியாயிடுமா... சார்?''

''நிச்சயமா சரி பண்ணிறமுடியும். சந்தேகமேயில்லை. ஆனா நீங்க தொடர்ந்து ட்ரீட்மெண்ட் எடுக்குறதுலே கவனமாயிருக்கணும்.''

''அப்படியா, சார்?''

''ஆமா. துட்டுச்சிக்கலை காரணம் சொல்லிட்டு வீட்டு வைத்தியம் பண்ணுனா... உரிய பலன் கிடைக்காது. கண்டின்யூசா பண்ணணும்ங்கிறதுதான் இதுலே ரொம்ப முக்கியம்.''

அருணாசலத்துக்கு நெஞ்சு கிடந்து அடித்துக் கொண்டது. ரெண்டு பெற்று சாவுக்கு கொடுத்துவிட்ட அனுபவங்கள். மூன்றாவதாகப் பிறந்து மழலைச் சுகம் வழங்கிய ராஜிக்கும் வந்திருக்கிற ஆபத்து.

ராவ்விலும் பகலிலும் அந்த அரும்பு படுகிறபாடு, இளைக்கிற இளைப்பும், வறட்டு இருமலும், மூச்சுத் திணறலும்... பார்க்கப் பார்க்க மனசு கிடந்து படபடக்கிறது. குலை கொதிக்கிறது.

வைத்தியச் செலவுக்கு என்ன வழி? ப்ளட்டெஸ்ட்டும், எக்ஸ்ரேயும் எடுக்கணும் என்றால் எப்படியும் நூறு ரூபாய் வேணுமே. ஏவாரத்துக்கு போய் விட்டு வந்தாலும், அன்றாடம் கணக்கு முடித்தாகணும். தப்பிக்க முடியாது. மிஞ்சுகிற லாபம் அம்புட்டுத்தேறாதே...

அருணாசலத்துக்கு இருட்டுக்குள் சிக்கிக்கொண்ட உணர்வு.

காலையில் எழுந்ததும் வியாபாரத்திற்குப் புறப்படும் முன்பு, கட்டிலில் கிடந்த மகளைப் பார்த்தான். மண்டி போட்டு உட்கார்ந்து, ராஜியின் தலையையும் முகத்தையும் வருடினான். மகளின் பார்வையைச் சந்தித்த தகப்பனின் மனத் தவிப்பு. குழையும் வார்த்தைகள்.

''கண்ணு, அம்மா குடுக்குற மாத்திரையும், டானிக்கையும் அடம் பிடிக்காம சாப்பிடு. என்னம்மா? அப்பா சாயங்காலம் வாரேன்...''

''ஆகட்டும்'' என்பது போல தலையசைத்தாள், ராஜி.

ஜவுளிக்கடைக்கு வந்தான். முப்பது கைலி, பத்து வேட்டி, ஆறு பெட்டி பனியன் எடுத்து பொட்டலம் கட்டிக் கொண்டு பஸ் ஏறி விட்டான்.

ஆலங்குளம் போய் இறங்கினால்... அங்கே இவனது சைக்கிள் கிடக்கும். கேரியரில் கட்டிக்கொண்டு உட்கிரா மங்களில் ஊர் ஊராகச் சுற்றியலைந்து வியாபாரம் செய் வான்.

தெருக்களில் சைக்கிளை உருட்டியவாறே அடித் தொண்டையை இறுக்கிக் கொண்டு வேற்றுக்குரலில் ராகம் போடுவான்.

'கய்ய்ய்லீ... வேஷ்டி.... டிக் கலர்ப்... பனியன்...'

வழக்கம் போல இன்றைக்கு சுதாரிப்பாக ராகம் போட இயலவில்லை. ஜீவனற்ற யந்திரமாய் இருண்டுபோய்ச் சுற்றினான். அவஸ்தைப்படுகிற மகள், உயிர் முழுக்க கவ்வியிருந்தாள்.

அருணாசலத்துக்கு ரொம்பக் களைப்பாக இருந்தது. தொடையெல்லாம் பிய்த்துப் பிடுங்குகிற வலி. இடுப்பைச் சுற்றிச் கடுகடுக்கிற வேதனை.

டீக்கடை முன்னால்– கண் பார்வையில் வண்டியை நிறுத்தி விட்டு கல்லில் உட்கார்ந்தான். டீக்கடையில் டீ போடுகிற சின்னப் பையன்.

"தம்பி ஒரு டீ போடுப்பா..."

முகத்திலும், கழுத்தடியிலும் அப்பிப் போய் நெறு நெறுத்த புழுதியை துண்டால் அழுந்தத் துடைத்துக் கொண்டான்.

...ஒரு வருஷமாய்த்தான் அருணாசலத்துக்கு இந்த வியாபாரம். இந்த வியாபாரத்திற்கே இவன் ரொம்பப் புதுசு.

வாலிப வயசிலிருந்து பவர்லூமில்தான் வேலை. விசைத் தறித் தொழிலாளி. அதற்கென்றே பிறந்தவன் போல... அத்தனை திறமையாய்– நுட்பமாய்– வேலை செய்வான். 'டடக் டடக்'கென்கிற அந்த ஒரு சீரான கடூர இரைச்சல், அவன் உயிருக்குள் சங்கீதமாய் இறங்கி லயிப்பூட்டும். கொசுக் கூட்டமாய்ப் பறந்து வந்து தேக மெல்லாம் அப்புகிற பஞ்சுத் துகளின் வாசனை, அவனுக்கு ரொம்பப் பிடிக்கும்.

அவனது தொழிற்சங்க ஈடுபாட்டை குற்றமாய் கருதி, வேறு ஏதோ காரணம் காட்டி வேலை நீக்கம் செய்யப் பட்ட அருணாசலம், லேபர் கோர்ட்டில் நடக்கிற வழக்கு முடிகிற வரைக்கும் வயிற்றுப் பாட்டுக்கு ஏதாச்சும் வழி பண்ணியாகணுமே என்கிற நிர்பந்ததத்தில்... இந்த வியா பாரத்திற்கு வந்து சேர்ந்தான்.

ஜவுளி கடைக்காரர் சொந்தக்காரர். ஆனாலும் நிபந்தனை போட்டார். 'அன்றாடம் கணக்கு முடிக்க ஒப்புக் கொண்டால் தான் சரக்கு தருவேன்.'

சரியென்று சம்மதிப்பதைத் தவிர வேறு வழியில்லை, அருணாசலத்துக்கு. குடும்பத்தின் வயிறு நனைத்தாக வேண்டுமே.

வந்த புதுசில் வியாபாரம் பிடிபடவேயில்லை. அன்றாடம் ஏமாந்த பிழைப்புத்தான். அலைந்து மாய்ந்தது தான் மிச்சம்.

சம்பளம் வாங்கி வஞ்சகமில்லாமல் வாழ்ந்து பழகிய தொழிலாளி, சிக்கலும் சிரமமும் நிறைந்த சில்லறை வியாபாரியாக நிறம் மாறுவதில் ஏகப்பட்ட இடைஞ்சல்கள்.

வியாபாரிக்குரிய பொய் குழைவான பேச்சும், போலிக் குளிர்ச் சிரிப்பும் அவனிடம் ஒட்டவே மறுத்தன. நேர்மையோடு நிஜத்தை பட்பட்டென்று பேசிவிடுவான். நிஜ விலையை முதலில் சொல்லி விடுவதால் பேரத்திற்கு இடம் தரமாட்டான். மீறி யாராச்சும் பேரம் பேசிக் கசறினால் சள்ளென்று விழுந்து விடுவான்.

வியாபாரம் விற்காது. 'என்ன இது, இந்த ஆளு ஏவாரம் பண்ண வந்த மாதிரி தெரியலியே...' என்று எரிச்சலில் கிராமத்து ஜனங்கள் விலகிப்போய்விடுவார்கள். கொண்டு வந்த சரக்கை மேனி குறையாமல் சுமந்து போன நாட்கள் நிறைய்ய. அப்படியே... விற்றாலும் லாபம் இருக்காது.

போன வருஷத் தீபாவளிச் சமயம். நாலைந்து ஊர் சுற்றிவிட்டு... அந்த ஊருக்கு வந்து களைத்துப் போய் மடத்தில் உட்கார்ந்தான். பக்கத்தில் பள்ளிக்கூடம். வகுப்புகள் நடக்கிற சிறுவர் இரைச்சல். குழப்ப கூச்சல்.

மடத்தில் உட்கார்ந்திருந்த ஆட்களிடம் பேச்சுக் கொடுத்து களைப்பாறிக் கொண்டிருந்தான்.

அப்போது—

வெள்ளையும் சொள்ளையுமாய் ஒரு மனிதர் பக்கத்தில் வந்து உட்கார்ந்தார். ஒன்றும் பேசவில்லை. பேசுகிற இவனையே ரொம்ப நேரம் கவனித்துக் கொண்டிருந்தார்.

கொஞ்ச நேரம் கடந்தது.

அயலூர்க்காரன் என்கிற வேற்றுமை தொனிக்காமல், நட்பார்ந்த அக்கறையோடு கேட்டார்:

"தம்பி, நீங்க எந்த ஊரு?"

அவன் தனது ஊரான அந்தச் சின்ன நகரத்தின் பெயரைச் சொன்னான்.

"சரக்கெல்லாம் எங்கே எடுக்கீக? ஈரோடா மதுரையா?"

"ஈரோட்டுச் சரக்கு."

"நீங்களே நேரடியாகப் போய் பர்சைஸ் பண்றீங்களா?"

"இல்லே. எங்க ஊர்லே ஒரு ஜவுளிக் கடைக்காரரு. சொந்தக்காரரு. அவருதான் எடுத்துட்டு வருவாரு..."

"அவரு... உங்களுக்கு கைலி ஒன்னுக்கு முப்பது ரூபா ரேட் போடுவாரா?"

"இல்லே இருபத்தாறு."

"நீங்க என்ன விலைக்கு விப்பீக?"

"முப்பதைஞ்சு சொல்லுவேன். முப்பதுக்கு வந்தாலும் தள்ளிவிட்டுருவேன்."

"அதான் சரி. 'வைச்சுப் பாக்குறதைவிட வித்துப் பாக்குறது தான் ஏவாரத்துக்கு அழகு'ன்னு பெரியாளுக சொலவடை சொல்லுவாக."

இப்படி ரொம்ப மனநெருக்கமாய் உறவினர் மாதிரி பேசிக் கொண்டிருந்தார். அந்யோந்யமாய் அவர் பேசப்

பேச... இவனும் சாங்கோபாங்கமாய் சகலத்தையும் ஒளிவு மறைவில்லாமல் கக்கிவிட்டான்.

சட்டென்று காணாமல் போய்விட்ட அந்த மனிதர், சற்று நேரத்திற்கெல்லாம் மீண்டும் அங்கே தரிசனமானார்.

''தம்பி, எங்க டீச்சர்ஸ் எல்லோரும் கைலி வேணும்ங் கிறாக. பதிமூணு கைலிகுடுங்க.''

என்றவர், அவராகவே கலர் பார்த்து, கட்டம் பார்த்து,

உருவ ஆரம்பித்து விட்டார்.

அருணாசலத்துக்கு கன்னத்தில் தேள் கொட்டின மாதிரியிருந்தது.

நட்பாய் பேசிக் கொண்டிருந்த மனிதர், இப்படி திடுதிப் பென்று வியாபாரம் பண்ண ஆரம்பித்து விட்டாரே... வஞ்சகமில்லாமல் எல்லா உண்மையையும் சொன்னவனி டமே... வஞ்சகமாய் வலையை விரித்து விட்டாரே...

மாறிப் பேச வழி தெரியாமல்— செய்வதறியாமல்— ஊமையாய் தவித்தான்.

முந்நூற்றி முப்பத்தெட்டு ரூபாயை எண்ணிக்கொடுத்த அவர் முகத்தில் ஒருவகையான மர்மச் சிரிப்பு. சிரிப்பில் கபட நிழல்.

''என்ன'' என்றான் ஒன்றும் புரியாமல்.

''தம்பி, கணக்கு பாத்துக்கங்க.''

''இருப்பத்தாறு ரூபா ரேட்டா?''

''நீங்க சொன்ன ரேட் தானே?''

''இது அசல் விலைதானே? ஊர் சுத்தி சைக்கிள் மிதிக்கிற எனக்கு லாபம் வேண்டாமா?''

"லாபமா? அதை மத்த ஆளுக்கிட்டே பாத்துக்கோங்க. இதுலேயே விற்பனைக் கமிஷன் கிடைக்கும்லே? அது போதும்."

அவர், கைலிகளை அள்ளிக் கொண்டு போக, வடையை பறிகொடுத்த காகமாய் விழித்தான், இவன்.

இவன் கக்கிய வார்த்தைகளாலேயே வலைபின்னி, இவனையே அடுக்கிக் கொண்டு போகிற அவரது சாமர்த் தியம்.

இந்தத் தோல்வியை ஓர் அவமானமாய் உணர்ந்தான், அருணாசலம்.

நேர்மையோடு பேசிய உண்மைக்கு இதுதான் மரியா தையா? வெள்ளந்தியாய் நடந்து கொண்டதற்கு இதுதான் பலனா?

வியாபாரம் விற்றும், வெறும் கையோடு போய்ச் சேர்ந்த அருணாசலம், ரொம்ப நொந்து போனான். நினைக்க நினைக்க அவமான அவஸ்தை.

இப்படிப் 'பட்ட' அனுபவங்கள் ஜாஸ்தி, உள் காயங் களால் ரணப்பட்ட சம்பவங்கள் நிறைய்ய. அதெல்லாம் அவனுக்குப் பட்டறையாயிற்று. அவனை வேறொன்றாக வார்க்கிற பட்டறை.

இப்போதெல்லாம்—

அருணாசலம் ரொம்பத் தேறி விட்டான். கைவந்து விட்ட வியாபார நெளிவு களிவுகள். உணர்ச்சிகளுக்கு உறைபோட்டு குளிர்ப் பேச்சு பேசக் கற்றுக்கொண்டான்.

போலிச் சிரிப்பு உதட்டில் சுவிட்ச் போட்ட மாதிரி பளிச்சென்று ஒளிரும். கலகலப்பான பேச்சு. எதிரியை அசர வைத்து வசீகரிக்கிற பொய்க் குழைவான பேச்சு.

'வேற ஆளுக்கு வேற ரேட்டு, உங்களுக்காகத்தான் இந்த ரேட்டு' என்ற அந்நியனிடம் கூட பந்தமாய் – பாந்தமாய் –அள்ளி விடுவான்.

பெற்ற தாய் வந்து விலை கேட்டால் கூட, நிஜ விலையைச் சொல்வதேயில்லை. நல்ல உறக்கத்தில் தட்டி எழுப்பி விசாரித்தாலும், 'இருபத்தாறு' என்று உளற மாட்டான். 'முப்பத்தொன்னு' என்று சத்தியத்தைப் போலத் தெளிவாய் அடிப்பான்.

ஒரு வரியில் சொன்னால்... தொழிலாளிக் குணத்தையெல்லாம் தலைமுழுகித் தொலைத்துவிட்டு, சுத்தமான சில்லறை வியாபாரியாகி விட்டான்.

''இந்தாங்க அண்ணாச்சி... டீ.'' டீயை வாங்கி குடித்தான்.

கசங்கிக் கிடந்த பேப்பர்களை மேய்ந்தான். டீயின் அடர்த்தியான ருசி, நாக்கில் படிந்து நின்றது. ஒரு பீடியை பற்ற வைத்துக் கொண்டான்.

அவன் மனசுக்குள் மகள் ராஜி வந்தாள்.

திக்திக்கென்று திணறித் திணறி விம்முகிற மகளின் மார்புக்கூடு. சீராக மூச்சுப் போகாமல் முட்டி மோதித் தவிக்கிற உயிரவஸ்தை. வாட்டியெடுக்கிற வறட்டு இருமல். நோயின் உக்கிரம் தாளாமல் திண்டாடித் திணறுகிற அந்தப் பிஞ்சு.

டாக்டரின் அச்சுறுத்தல். தொடர் வைத்தியத்தேவை. இன்றைக்கு மட்டும் நூறு ரூபாய் வேண்டும். என்ன செய்ய? ரத்தப் பரிசோதனைக்கும், எக்ஸ்ரேக்கும் என்ன வழி?

விற்ற பணம் சொந்தப்பணம் இல்லையே... கணக்கு முடிக்காமல் தப்பிக்க முடியாதே... லாபமாக மிஞ்சினால்... முப்பது ரூபாய் தேறுவதே பெரும்பாடு.

யாரிடம் பணம் கேட்க? கடன் கிடைக்குமா? எதை ஈடு வைத்து கடன் கேட்க? கதி கெட்ட ஏழையிடம் ஈடு வைக்க என்ன இருக்கு?

பீடிக் கட்டையை தரையில் தேய்த்து எறிந்தான்.

"வாங்க அருணாசலம், எப்ப வந்தீக?" என்ற கனிவும் அன்புமாய் விசாரிப்பு.

நிமிர்ந்தான். அவனுக்குள் ஆச்சர்யம். குப்பென்று உடைப்பெடுத்துப் பாய்கிற பரவசம்.

முத்துக்கிருஷ்ணன் நின்றார். வயசு ஐம்பது இருக்கும். சொந்த விவசாயம். பொது வாழ்க்கையில் பாடுபடுகிற சுத்தமான மனிதர். விவசாயிகள் சங்கத் தலைவர். பிறருக்கு உதவி செய்வதில் நிஜமான மகிழ்ச்சியடைகிற தங்கமான மனிதர்.

பிரதிநிதியாக இவன் கலந்து கொண்ட ஒரு தொழிற் சங்க மாநாட்டிற்கு வாழ்த்துரை வழங்க இவர் வந்திருந்த போது, அறிமுகம். பந்தா, பகட்டு இல்லாமல் மனத் தோழ மையோடு பழகுகிற இனிமையான பண்பு.

அவரைப் பார்த்தவுடன்–

சட்டென்று எழுந்தான். மகிழ்ச்சியில் திணறினான். சகலத்தையும் மறந்துவிட்ட ஒரு மனப் பரவசம். புதிதாய் பிறப்பெடுத்த மாதிரி மனசுக்குள் ஒரு மலர்ச்சி.

"வாங்க... வாங்க... உக்காருங்க" என்று பவ்யமாய் ஒதுங்கி நின்றான்.

"நீங்களும் உக்காருங்க அருணாசலம்."

"பரவால்லே..." என்று அவன் கொஞ்சம் தள்ளி உட்கார்ந்தான். அவர் முகத்தை குழந்தைக்குரிய குதூகல வியப்போடு பார்த்தான்.

"உங்க கேஸ் எப்படியிருக்கு?"

"போய்க்கிட்டிருக்கு. போன வாரம் தா வாய்தாவுக்குப் போய்ட்டு வந்தேன்."

முத்துக்கிருஷ்ணன் தொழிற்சங்கம், நகர நிலவரம் பற்றி அக்கறையோடு விசாரித்தார். குடும்பம், வீட்டு வாடகை, வருமானம் பற்றியெல்லாம் இங்கிதமாய்க் கேட்க, இவனும் குழைவாய்ப் பதில் சொன்னான்.

வியாபார நிலவரம், வாங்குகிற இடம், விற்கிற விலை கட்டுபடியாகிறதா என்றெல்லாம் மென்மையாக விசாரித்தார்.

அந்தப் பரவசத்திலும் கூட, அவன் நா வியாபாரி வாயாகவே பேசியது. "வாங்குற வெலை முப்பத்தொன்னு விக்குற வெலை முப்பத்தஞ்சு" என்றே சொன்னான்.

சுவரில் மோதுகிற குருட்டு ஈ போல, அங்கு தொட்டு இங்கு தொட்டு மகள் ராஜியின் நோயில் வந்து உட்கார்ந்தது பேச்சு.

சொந்தச் சோகத்தை பகிரங்கப்படுத்த இயலாத தயக்கத்துடன் மெல்லச் சொன்னான்:

"புள்ளைக்கு ரொம்ப முடியலே. எக்ஸ்ரே, ப்ளட் டெஸ்ட் எடுக்கணும்னு டாக்டரு சொல்றாரு. ரொம்பச் செலவாகும் போலிருக்கு. கையிலே சுத்தமா காசு இல்லே."

"ஏன் ரொம்பச் சிரமப்படணும்? கவர்மெண்ட் ஆஸ்பத்திரிக்குப் போகலாம்லே?"

"நம்பிக்கையில்லே. போய் என்ன செய்றது? ஒன்னும் ஆகப் போறதுல்லே."

“ஏன்... பெஸ்மிஸ்டிக்கா இருக்கணும்? நம்பிக்கையோடு அப்ரோச் பண்ணிப் பாக்கலாமே...?” என்ற முத்துக்கிருஷ்ணன், “இருங்க வாரேன்” என்று வீட்டுக்குப் போனார்.

பக்கத்தில்தான் வீடு.

அருணாசலம் கிளர்ச்சியுற்ற மனநிலையில் ததும்பிப் போயிருந்தான். டீக்கடையில் உட்கார்ந்திருந்த ஆட்களிடம் முத்துகிருஷ்ணனின் பெருமைகளைப் பற்றி உற்சாகமாய்ப் பேசினான்.

அவர்கள் உதடுகளில் ஒரு பரிகாசச் சிரிப்பு.

“எங்க ஊர்க்காரரைப் பத்தி, எங்ககிட்டேயே பேசு நீயா?” என்று கேட்காமல் கேட்கிற சிரிப்பு. அதை அவன் மனசால் உணர்ந்தாலும், அவரைப் பற்றிப் பேசுகிற ஆசையை அவனால் கட்டுப்படுத்திக் கொள்ள முடிய வில்லை.

முத்துகிருஷ்ணன் வந்தார். அவர் கையில் நாலாய் மடிக்கப்பட்ட ஒரு கடிதம்.

“உங்க ஊரு ஜி.எச்.லே. எங்க பெரியப்பா மகன்தா டாக்டரா இருக்காரு. கடிதத்தை கொண்டு போய்க் கொடுங்க, அங்கேயே ப்ளட் டெஸ்ட், எக்ஸ்ரே எல்லாம் எடுத்துக்கலாம். ட்ரீட்மெண்டும் கெடைக்கும்.”

கடிதத்தை வாங்கிக்கொண்டான். கழுத்தாம்பிடியாய் இருந்த ஒரு பிரச்சனை, இத்தனை சுலபமாய் விலகும் என்று அவன் கனாக்கூட கண்டதில்லை. ரொம்ப நிம்மதி யாயிருந்தது, மனசுக்குள். நன்றியோடு அவரைப் பார்த் தான்.

“அருணாசலம், நம்ம வீட்டுக்கு பத்துகைலி வேணும். வாங்குறதுக்கு ராஜபாளையம் போகணும்னு நெனைச்சுக் கிட்டிருந்தேன். உங்களைப் பார்த்தது நல்லதாய்ப் போச்சு. அலைச்சல் மிச்சம். நீங்களே குடுத்துட்டுப் போயிருங்க.”

முந்நூற்றைம்பது ரூபாய் தந்தார், முத்துகிருஷ்ணன்.

''சரி'' என்று சொல்லிவிட்டு வாங்கியபோது கையில் நடுக்கம். மனசுக்குள் 'நறுக்'கென்கிற உணர்வின் குத்தல். குற்ற உணர்ச்சியின் முள் முள்ளான உறுத்தல்கள்.

'வாங்குன வெலை முப்பத்தொன்னு' என்று வியாபாரியின் மொழியில் இவரிடமும் சொன்னது, நினைவில் ஊசிக் குத்தலாக நெருடியது.

அன்பும் தோழமையுமாய் ததும்பும் இந்த மனிதரிடமுமா... ஒரு வியாபாரியாய் நடந்து கொள்வது? வாங்கிய விலை முப்பத்தொன்று என்று சொன்ன வாயால், இருபத்தாறு என்கிற உண்மையை எப்படி ஒப்புக்கொள்ள? 'உங்களிடம் நான் பொய்யாய்ப் பேசினேன்' என்று சொல்லவா? அது, மானக் கேடல்லவா? மானக் கேட்டுக்குப் பயந்து மவுனமாயிருந்தால்... மனச்சாட்சி அக்குற்றத்தைத் தாங்குமா? மன்னிக்குமா?

ராஜி உயிர் பிழைக்க, கேட்காமலேயே வழிகாட்டி உதவி செய்த இந்த உன்னத மனிதரிடம்... அசல் விலை என்று சொல்லியே ஐம்பது ரூபாய் லாபம் பார்ப்பதா? அது மோசடியில்லையா? மனுசத் தன்மையற்ற ஈனத் தனமில்லையா?

இருநூற்றியறுபது ரூபாய் போக மீதியை அவரிடம் மவுனமாக நீட்டினான், அருணாசலம்.

''என்ன இது?'' குழப்பமாய் கேட்டார் முத்துக் கிருஷ்ணன்.

''இது போதும்.''

''போதும்னா? அசல் விலைப்படி பார்த்தாலே முந்நூத்திப் பத்தாகுதே?''

அவருடைய கேள்வி, அவனுடைய உள் மனசில் காறித்துப்புவதைப் போல உணர்ந்தான். சங்கடத்தில் நெளிந்தான். உயிரற்ற குரலில் மீண்டும் சொன்னான்:

''இல்லே... இது போதும்.''

''அது சரியில்லே. லாபமில்லாட்டாலும் அசலாச்சும் தேற வேண்டாமா? நீங்க நட்டப்படுறதுக்கு நா காரண மாயிருக்கிறது... ஞாயமேயில்லை.''

ஐம்பதுரூபாயை எடுத்து மடித்து அருணாசலத்தின் மேல்ச்சட்டைப் பைக்குள் திணித்தார் முத்துகிருஷ்ணன்.

'நா சொன்ன அசல் விலையே... அசல் இல்லே.. பொய்விலை' என்று ஓங்கிக் கத்திக் கதற வேண்டும் போல அவனுள் ஓர் உத்வேகம், வெறி.

சொல்லமுடியவில்லை. சொன்னால் மானக்கேடு. சொல்லாவிட்டால்... மனுசக்கேடு. எதுவும் செய்ய கதியற்றுப் போய், மவுனத்தில் அவன் புதைய...

அவனைவார்த்தபட்டறையின்ஊனமே,இப்போதைய அவனாய்– பரிகாசத்துக்குரிய குற்றவாளியாய்– வடிவம் கொண்டு காட்சியளிப்பதாய்... அவனுள் ஒரு பிரமை.

அவனையே பரிவோடு பார்த்த முத்துகிருஷ்ணன் கனிந்த சிரிப்பாய் மலர்ந்தார்.

''மனசை ரொம்ப அலட்டிக்காதீக அருணாசலம். பரவால்லே.. போய்ட்டு வாங்க.''

கைலிகளோடு அவர் போய் விட்டார்.

பைக்குள் அவர் திணித்த ஐம்பது ரூபாயும், கடிதமும் அவன் நெஞ்சை ஊசிமுள்ளாய் உரசி உரசிக் கீறிக் கொண்டேயிருந்தன.

செம்மலர் – டிசம்பர், 1993

9.விலக்கு

விழுங்கவும் முடியவில்லை, துப்பித் தொலைக்கவும் முடியவில்லை. அப்படியோர் உள்வேதனை சின்னாண்டிக்கு. நினைக்க நினைக்க முள்குத்தலாக வலி.

நாயக்கர் புஞ்சையில் ஒரு மனசாய் வேலைசெய்ய முடியவில்லை. சின்ன நாயக்கர் ஏதேதோ சொன்னார். காதில் வாங்குகிற நிம்மதியில்லை. மன உளைச்சல். குசும்புக் கிழவன் சொன்ன அந்தத் தகவல்...

தகவலா அது? அக்கினி. கனல் துண்டுகள். நெஞ்சின் சகல மூலைகளையும் சுட்டுத் துடிக்க வைக்கிற கனல் துண்டுகள். தாம்பத்தியத்தின் ஆணிவேரையே சுட்டுக் கருக்குகிற கனல் துண்டுகள்.

கல்யாணமாகிப் பதினெட்டு வருஷம் ஆகிவிட்டது. இத்தனை வருடத்தில் இப்படியொரு சிக்கல் தலை காட்டியதேயில்லை. முத்தக்கா நடந்த தடத்தில் வந்த பெண்ணுக்குக் கூட மானக்குறைவான காரியம் செய்ய மனசு வராது. அப்பேர்ப்பட்ட சாதி மான் கன்றாகத் தான் இருந்து வந்திருக்கிறாள்.

இத்தனைக்கும் முத்தக்காவுக்கு இவன் போட்டிருப்பது. மறுதாலிதான்.

ஏற்கெனவே சீவலப்பேரிக்காரனுக்கு வாழ்க்கைப் பட்டிருந்தாள். ஆறு மாதத்துக்கு மேலே குடித்தனம் நடத்திக் குப்பையும் கொட்டினாள். அப்புறம் என்ன

இழவோ... ஒரே சண்டைச் சத்தம். தள்ளுமுள்ளு. தீராத மல்லுக்கட்டு.

"விடு சனியனே" என்று சலிப்போடு கோபித்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்து விட்டாள்.

சீவலப்பேரிக்காரன் வீடு தேடி வந்து கூப்பிட்டுப் பார்த்தான். "வா... வா. முத்து," என்று கெஞ்சிக் கூத்தாடினான்.

"ஒன் திசையிலே கூடத் தலைவெச்சுப் படுக்க மாட் டேன்" என்று ஒரே பிடிசாதனையாகத் தலையைக் குலுக்கி விட்டாள்.

பிறகென்ன செய்ய? தெரு கூடி, பஞ்சாயத்துப் பேசியது. நூத்தியோரு ரூபாய் பரிசப் பணத்துக்கு மாற்றாக இருநூத்தி ரெண்டு ரூபாய் 'தீர்வை'யாக முத்தக்கா அப்பன் கட்டி, அந்தக் கல்யாணத்தைத் 'தீர்த்து'க்கிட்டார்கள்.

அப்போது...

பெரிய நாயக்கர் பண்ணையில் குடிபடையாக வேலை பார்த்து வந்து சின்னாண்டி அப்பன் மண்டையைப் போட, முழுத்த இளவட்டமாய் சின்னாண்டி நாதியற்றவனாய் ஒற்றைமரமாய் தனித்து நின்றான். நாயக்கர் புஞ்சையிலும் தொழுவத்திலும் வேலை. தொழுவத்திலேயே கஞ்சி என்று நாளும் பொழுதும் பசையற்று நகர...

நாயக்கர் மனசில் ஒரு பொறி தட்டியது.

சின்னாண்டி நல்ல பயல். நல்ல பாட்டாளி. சாராயத்தைத் தவிர வேறு கெட்ட பழக்கமில்லாத பயல். முத்தக்காவும் நல்ல மானஸ்தி. பொறுமைக்காரி. பட்டுத்தேர்ந்தவள். ரெண்டு மாட்டையும் நுகக்காலில் சேர்த்துப் பூட்டிவிட்டால்... ஒரு வண்டி அதுபாட்டுக்கு ஓட ஆரம்பிச்சிருமே...

பெரிய நாயக்கருக்கு எப்பவும் ஒரு பழக்கம். எதையும் ஆறப் போடமாட்டார். உடனுக்குடன் நினைப்பு காரியமாகி விடவேண்டும்.

“ஏலேய்... ஆண்டி...”

“என்ன சாமி...?”

தொழுவில் மாடுகளுக்குள்ளிருந்து சத்தம் வந்தது.

“இங்க வாலே...”

“கூப்பிட்டீகளா சாமி?”

“ஆமடா... ஒனக்கொரு காரியம் பண்ணுவமடா...?”

“என்னது சாமி?”

“உங்க அப்பன் போய்ச் சேர்த்துட்டான். நீயும் ஒத்தைக் கட்டையா எம்புட்டு நாளைக்கு இருப்பே? ஒரு குடும்பமா ஆகணுமில்லே?”

“அதுக்கு இப்ப என்ன வந்துச்சு சாமி?”

“என்ன வந்துச்சா? கல்யாணத்தை முடிச்சிருவமடா?”

“யாரை?”

“மாட்டையா முடிப்பாக? பொம்பளையைத்தான்...”

நாயக்கர் மீசைக்குள் குறுஞ்சிரிப்பு வெடித்து மின்னியது. இவன் கூச்சத்தில் குழைந்து வளைந்தான்.

“முத்தக்காவை முடிச்சிருவமா? என்னலே சொல்லுதே?”

இவனுக்குள் தேள் கொட்டின மாதிரி இருந்தது. ‘சாமியவுக’ முகத்தை எச்சரிக்கையாக நோட்டமிட்டான். கண்ணுக்குள் ஏதாச்சும் நிழலாடுகிறதா என்று கூர்மை யானான். உள்ளுக்குள் பயப் படபடப்பு...

...இந்த ஒரு மாதமாய் யாருக்கும் தெரியாமல் முத்தக் காவைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறான். சாணி

சகதியை அள்ளிப் போட்டவுடன் சாயங்காலக் குளிப்பு. கைலி, கலர் பனியன். வெள்ளி, செவ்வாய் பிள்ளையார் மாதிரி 'குளுகுளு'வென்று எண்ணெய்த் தேய்ப்பு. 'ஜில்' லென்று தெருவுக்கு வந்து விடுவான்.

முத்தக்கா 'வில், வில்'லென்று கடைக்குப் போய் வருவாள். விறகு எடுக்க வெளியே வருவாள். சட்டிப் பானை கழுவ முற்றத்துக்கு வருவாள். விரட்டி விரட்டி 'விடாமல்' பார்ப்பான், நிலைத்த பார்வையாக.

முத்தக்காவும் வஞ்சமில்லாத தேகக்காரி. செய்து வைத்த செப்புச் சிலை மாதிரி 'கிண்'ணென்று இருப்பாள். அவள் கண்களைப் பார்க்கிற போதெல்லாம் இவனுக்குள் அடிவயிற்றில் என்னவோ பண்ணும். அவன் கண்ணைக் கட்டி இழுப்பதே அவளது எடுப்பான மார்புதான். திண்ணக்கமான மதர்ப்பு.

மீனை விரட்டுகிற கொக்கைப் போல 'தொடுத்து'ப் பார்ப்பான். பார்க்கப் பார்க்க உள்ளுக்குள் றெக்கை முளைக்கும். படபடக்கும். தவிக்கும். நாக்கு உலர்ந்து, நெஞ்சமெல்லாம் காய்ந்து போகும். உன்மத்தம் கொள்ளும்.

'அப்பவும் ஒரு பொட்டச்சி இம்புட்டு லட்சணமாவா இருக்குறது' என்று நினைக்க நினைக்க நஞ்சடித்த கெண்டை மீனாகக் கிறுகிறுத்துப் போவான்.

இவன் பார்வையை எதிர்கொள்ளுகிற கணத்தி லெல்லாம், அவள் முகம் குப்பென்று கோபத்தில் விறைக்கும். வெறுப்பும் சாபமுமாய் வறுசட்டியாய்ச் சினசினக்கும்.

"கண்ணுலே புத்துப் பெறப்பட... பாம்பு கொத்திப் புடுங்க" என்று சபிக்கிற மாதிரி உதடுகள் துடிக்கும்.

அந்தக் கோப ரோஷமும், எதிர்ப்பும் தான் இவனை ஒரேயடியாக மயங்கடிக்கும். அடிமை பண்ணும். காலடி தஞ்சமாக உயிரைக் கிடத்தும்...

...இந்தக் ‘குட்டுநட்டு’ சாமியவுக காதுக்கு எட்டி விட்டதோ...? அதனால்தான் இப்படிக் கொக்கி போடு கிறாரோ? சோதித்துப் பார்க்கிறாரோ? மானக்கேடாய்ப் பேசி வையப் போகிறாரோ?

சின்னாண்டிக்குள் வியர்த்தது. பிடிபட்ட பறவை றெக்கையாகப் படபடத்தது.

“என்னலே சொல்லுதே?” நாயக்கரின் அதட்டலில் உள் உலகத்திலிருந்து வெளிப்பட்டான். திருதிருவென முழித்தான். தடுமாறி உளறினான்.

“நெசமா... வா சாமி?”

“என்னது நெசமா... வா?”

“இதுக்கு முத்தக்கா சம்மதிப்பாளா?”

“அது எம்பாடு. நீ என்ன சொல்லுதே? அதைச்சொல்லு, மொதல்லே...”

“நீங்க பாத்து... இடிகெணத்துலே தள்ளினாலும் சரிதான் சாமி...”

“இடிகெணறா?” என்று எதிரொலித்த பெரிய நாயக்கர், ஏதோ அர்த்தம் கண்டவராகத் தொந்தி குலுங்கச் சிரித்தார். அவர் நெஞ்சுக்குழியிலுள்ள நரைத்த ரோமமெல்லாம் சேர்ந்து சிரிப்பது போலிருந்தது.

சந்தோஷமாக ஆசீர்வதித்துத்தான் முத்தக்காவைச் சின்னாண்டிக்கு ‘முடித்து’ வைத்தார். பெரிய நாயக்கரும் போய்ச் சேர்ந்து விட்டார். அவர் வாக்கும் பொய்யாக வில்லை இதுவரைக்கும்.

இத்தனை வருஷ அந்நியோன்யத்தில் அவர்களுக்குள் எத்தனையோ சண்டை சத்தம் வந்ததுண்டு. ராசியாகிப் போனதும் உண்டு. ஆனால்....

அவள் ஒழுக்கம் குறித்த ஒரு பேச்சோ... நினைப்போ கூட இதுவரை வந்ததேயில்லை. நிஜமாகவே மானஸ்தி. துப்புரவானவள். ரோஷக்காரி.

இவனாவது சாராயம் குடிக்கிற ஆசையில் ரோஷம் கெட்டுப்போய் எவனிடமாச்சும் பல்லை இளிப்பான். அவள் அப்படியில்லை.

அந்தப் புண்ணியவதி மேல்தான் இப்போது ஒரு செய்தி. தீக்கோல் மாதிரியான தகவல். நம்பவும் முடியவில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. நம்புவதற்கு தோதான பல சாட்சிகள். சம்பவங்கள்.

அவன் தவித்து மறுகினான். மெல்லவும் முடிய வில்லை. துப்பவும் முடியவில்லை. நெஞ்சுக்குள் செருகிக்கொண்ட முள்ளாக உறுத்துகிற நினைவுகள்... முள்ளைச் சுற்றி வழிகிற ரத்தம்.

மதியமாகி விட்டால், தெருவில் ஒரு சுடுகுஞ்சுகூட இருக்காது. எல்லாரும் காடுகரைகளில் மாய்ந்து கொண் டிருப்பார்கள். சின்னஞ்சிறிசுகள் கூட சத்துணவுப் பள்ளிக் கூடம் போய்விடும். பன்றிகளும், பன்றிக்குட்டிகளும், கோழிக் குஞ்சுகளும்தான் தெருவில் திரியும். கயிற்றில் காய்கிற மாட்டு ஜவ்வுகளைக் காக்கை கொத்தினால், துரத்துவதற்குக் கூட ஆள் இருக்காது. கால், கை விளங் காமல் முடக்கமாகி போன குசும்புக் கிழவன் மட்டும்தான் கூரை நிழலில் அசையும் பிரேதமாய்க் கிடப்பான்.

அவன்தான் இன்று காலையில் சின்னாண்டி காதில் அந்தத் தீக்கோலைச் சொருகினான்...

"முந்தா நா மதியம். ஜவுளிச்செட்டியாரு ஒன் வீட்டுக் குள்ளே நொழைஞ்சாரு. கொஞ்சநேரங் கழிச்சுத்தான் வெளியேறிப் போனாரு...."

அவனுக்குள் திகுதிகுவென்று தகித்தது.

"ஏய் கெழவா... நீ சொல்றது பொய்யா இருந்துச்சுன்னா, ஒரே மிதிதான். ஒன்னைக் கொன்னே போடுவேன்... ஆமா..."

—ஆத்திரத்தில் இறுகலாய்க் கத்தினான்.

"நா எதுக்குப் பொய் சொல்லப் போறேன்? சொல்லி எனக்கு என்ன ஆகப்போவுது?" என்று பரிதாபமாய்ப் புலம்பினான், கிழவன்.

கிழவன் சொல்வதை ஒரேயடியாய்த் தள்ளிவிடவும் முடியவில்லை. யூகங்களுக்குப் பொருத்தமாகச் சில சம்பவங்கள்...

...முந்தாநாள், மதிய கரண்டு. பத்து மணிக்குப்பிறகு புஞ்சைக்குப் போனால் போதும். வீட்டுத் திண்ணையில் தான் சின்னாண்டி உட்கார்ந்திருக்கான். வழக்கமாய்க் கூலி வேலைக்குப் போகிற முத்தக்காவும் அன்றைக்குப் போகவில்லை. 'ஏன் போகலை?' என்றால், 'போக மனசில்லே' என்று சொல்லி விட்டாள். ஒன்பது மணிக்கே துணிமணிகளை அள்ளிக் கொண்டு போய், கிணற்றுக்குள் இறங்கித் துவைத்து குளித்துவிட்டு வந்தாள். குளித்த உடம்பில் பூவின் மலர்ச்சி. மஞ்சள் பூசிக் கழுவிய முகத்தில் ஒரு மங்களகரமான ஜ்வலிப்பு. ஈரச்சேலையோடு ஈரக் கூந்தலை அடித்து உலர்த்திக் கொண்டு நின்றாள். ஒரு தேவதை போல...

அவளுக்கு ஒரு சேலைதான். மாற்றுச் சேலை இல்லை. ஒரு சேலை எடுத்துவிட வேண்டுமென்று ஆன மட்டும் முயற்சி பண்ணிப் பார்த்தான். போன இடமெல்லாம் ஒரே முட்டலும் மோதலுமாயிருந்தது. வறுமை, அவனை செல்லாக் காசாக்கி மூலை சேர்த்துவிட்டது.

'ஒரு சீலைத் துணி எடுத்துக் குடுக்கக்கூட வக்கத்துப் போயிட்டமே...' என்று மனசுக்குள் நொந்து போகிற நினைவுகளோடு அவளையே பார்த்தான்.

வேலை முடிந்து புஞ்சையிலிருந்து சாயங்காலம் வந்தான். பொழுதடைந்து விட்டது. இருட்டு இன்னும் வரவில்லை. மேகத்து வெளிச்சம் மிச்சமாக இருந்தது.

வீட்டுக்கு வந்தால், முத்தக்கா முகமெல்லாம் சிரிப்பாய் பூத்துக் கிடந்தாள். நெஞ்சின் குதூகலம், குழந்தைத் தனமாகக் கண்ணில் மின்னியது. கன்னக் கதுப்புகளின் மகிழ்ச்சி மின்னல். ஈர உதடுகளில் பரவசச் சிதறல்கள்...

"என்ன முத்தக்கா, ஒரே ஆதாளியாயிருக்கே, என்னமும் விசேஷமா?"

"ஆமாய்யா..."

"சொல்லு..."

"ஒரு சீலை எடுத்திருக்கேன்யா. நல்ல சீலை. எம்பது ரூபா..."

"யாருகிட்டே?"

"ஜவுளிச்செட்டியாரு கிட்டேதான். சைக்கிள்லே பொட்டலம் கட்டிக்கிட்டு வித்துக்கிட்டு வருவாருல்லே?"

"இங்கே வந்துருந்தாரா?"

"இல்லேய்யா. காபிக்கடை முன்னாடி பொட்டலத்தை அவுத்து வெச்சிருந்தாரு. அங்க வெச்சுத்தான் விலைபேசி எடுத்துட்டு வந்தேன்யா..."

"ரூபா ஏது?"

"பத்து ரூபா மட்டும் குடுத்தேன் வாரத்துக்குப் பத்து ரூபாயா தாரேன்னேன். சரின்னாரு..."

"அவருகிட்டே நாங்கூட கடன் கேட்டேன். தர மாட்டேன்னு மூஞ்சியிலே அடிச்ச மாதிரி சொல்லிட்டாரே...!"

"நீ எப்படிக் கேட்டியோ..."

''அதுவும் சரிதான். குடிகாரன் பேச்சுக்கு என்ன மதிப்பு கொடுப்பாரு...?''

''அதாச்சும்... தெரிஞ்சு வெச்சிருக்கீயே... கடவுள் புண்ணியத்துலே...''

ஒரு சிறுமியைப் போல ஒரு குதி குதித்துக் கொண்டு வீட்டுக்குள் ஓடினாள். அந்தப் புதுச் சேலையைக் கொண்டு வந்து காட்டினாள். அவள் முகமெல்லாம் மனப் பூரிப்பின் ததும்பல்.

''நல்லாயிருக்காய்யா...?''

''உனக்குப் பிடிச்சிருக்கில்லே... அது போதும்...''

''நல்லாயிருக்குய்யா...''

''சரி ஒத்தைச் சீலையோட இருந்தியே... ஏன் இந்தப் புதுச் சீலையைக் கட்டலையா?''

''ரெண்டு நா கழிச்சுத்தான் கட்டணும்...''

''ஏன்?''

''சும்மாதான்...''

''சரி, ஒன் இஷ்டம்...''

மனசிலிருந்த பெரிய பாரம் இறங்கிய நிம்மதி. அவள் சேலைப் பிரச்னை முடிந்த ஆசுவாசம்.

...அதுவே இப்போது நெஞ்சுக்குள் கட்டையாக நின்று அழுத்துகிறது. முள்முள்ளாய் உறுத்துகிறது. குசும்புக் கிழவன் சொன்ன தகவல்...

வீட்டுக்குச் செட்டியார் வந்துபோன நிஜத்தை ஏன் மறைக்கிறாள்? காபிக் கடையில் வைத்துச் சேலை எடுத்ததாக ஏன் பொய் சொல்கிறாள்? காலையிலேயே மஞ்சள் பூசிக் குளித்தது, அந்தத் திட்டத்தில்தானா? எல்லாம் இதற்குத்தானா? கள்ளச்சுகம் காணுகிற தந்திரம் தானா?

உடுமாற்றுச் சேலைக்காகவா இந்த அசிங்கம்? மானத்தை மறைக்கிற சேலைக்காக மானத்தை இழப்பாளா முத்தக்கா? பட்டப்பகலிலா... ச்சேய்!

அவனுள் மாறி மாறி வந்து கொத்திப் பிடுங்குகிற காட்சிகள். செட்டியாரும் முத்தக்காவும் சாரைப் பாம்பாய்ப் பின்னிப் பிணைத்து முனங்கும் காட்சி. உள் மனசின் நரம்பு வரை சுட்டுப் பொசுக்குகிற காட்சி.

காட்சி... காட்சி... காட்சிகள்...

நினைக்க நினைக்க வெறி கொள்ள வைக்கிறது. திகுதிகு வென்று தீயாய் எரிகிறது. குத்திக்குடைகிற நமைச்சல். உள்ளுக்குள் பேயாடும் உன்மத்தம்.

அரிவாளை எடுத்து அவளை அப்படியே வகிர்ந்து சதை சதையாய் நறுக்கலாமா என்கிற ரௌத்ரம். கொதிபானைச் சோறாய்க் கொந்தளிக்கிற நெஞ்சில் குளிர்நீராய்த் தெறிக்கிற சில நினைவுகள்.

முத்தக்கா அப்படிப்பட்டவளா? இத்தனை காலமாய் இல்லாத அசிங்கத்தை இப்போது செய்திருப்பாளா? கேவலம், சேலைக்காகவா? மானத்தைப் பெரிதாய் மதிப்ப வளாயிற்றே! ஒரஞ்சாரத்தில் 'அப்படியும் இப்படியுமாய்' அலைகிற பெண்களைக்கூட 'பன்னிப்பிறவிக' என்று காறித் துப்புவாளே....

சேலைக்காகக் கடன் கேட்டு அலைந்து அலைந்து அலுத்துப் போன நிலைமையில், வேளார் செத்த அன்றைக்கு இழவு சொல்லிப் போனதில் ஊழல் செய்து, நூத்திமுப்பது ரூபாயை ஆசை ஆசையாய்க் கொண்டு போய் நீட்டியபோது, என்ன சொன்னாள்?

"மானத்தை மறைக்கத்தானய்யா சீலை? மானத்தை உதுத்துட்டுச் சம்பாதிச்ச துட்டுலே சீலை எதுக்கய்யா? போய்யா, நீயும் ஒந்துட்டும்..." என்று ஆக்ரோஷமாக வீசி

யெறிந்தாளே... அந்த மானஸ்தியா இந்த ஈனக்காரியத்தைச் செய்திருப்பாள்?

இதையெல்லாம் தாண்டிக் கொண்டு குசும்புக் கிழவன் சொன்ன தகவல்... காலைக் குளிப்பு... செட்டியார் வீடு வந்த நிஜத்தை மறைப்பது... சாயங்காலம் சேலைச் சிரிப்பு.

அவன் மனசுக்குள் உலவுகிற பன்றிகள். சாக்கடையில் புரளுகிற பன்றிகள். பன்றித்தனமான நினைவுகள். செட்டி யாரும் முத்தக்காவும் வெற்றுடம்புகளோடு வியர்வைக் கலப்பு. ஆயாசப் பெருமூச்சின் சத்த அதிர்வு.

அவனுள் கொதிப்பு... தகிப்பு...

அவளிடம் எப்படிக் கேட்க? எப்படிச் சீற? என்ன சொல்லிச் சண்டை போட? மூளைக்குள், காயவைத்த கம்பியால் குடைவது போலிருந்தது. சினைப் பன்றியாய் உள்வேதனையில் திணறினான்.

ராத்திரி சாப்பிடச் சொன்னாள். சாப்பிட மனசில்லை. ஆனால் சோற்று முன்னால் உட்கார்ந்தான். உள் உறுத்தும் முட்களோடு முத்தக்காவையே பார்த்தான். வேரற்று அலைபாய்கிற பார்வை.

உயிர்க்களையற்ற அவன் முகம். குழம்பிக் குழம்பிப் பறவையாடுகிற கண்கள். அடிபட்ட மனசோடு ஆதரவு தேடி அலைகிற அந்தப் பரிதாபமான பார்வை. அண்ணாந்து அண்ணாந்து முகத்தைப் பார்க்கிற புருஷன்.

அவளுக்குள் சுரக்கிற கருணை உணர்வு. பரிவோடு கேட்டாள்:

''என்னய்யா?''

''ம்...''

''ஏன், ஒரு மாதிரியாயிருக்கே? சாராயம் குடிக்க இன்னிக்கு ஒண்ணும் கெடைக்கலையா?''

“குடிக்கத் தோணலை...”

“ஏன், உடம்புக்கு என்னமும் செய்யுதா?”

பதில் இல்லாமல் சூன்யமாய் அலைகிற புருஷனின் பார்வை. உள் ரணத்தைச் சுமந்து தவிக்கிற பார்வை.

மிருதுவான உணர்வுகளோடு நெருங்கி உட்கார்ந்தாள். அவனது காய்ந்த தலைக்குள் விரல்களால் கோதிவிட்டாள். அன்பு பிரவகிக்கிற அவள் கனிந்த முகம். தாய்மைப் பொலிவோடு கண்களில் வந்து நின்ற பாச இதயம்.

அவனுக்குள் சிலிப்பிக் கொண்டு உதறலோடு எழுகிற பன்றிகள், வாலைச் சுழற்றிக் கொண்டு சாக்கடைத் துளிகள் சிதற மூர்க்கமாய்த் திமிறுகிற பன்றிகள்....

தலைமுடியைக் கோதுகிற கையை அப்படியே இறுகப் பற்றி, ஒரு முறுக்கு முறுக்கி, ‘ஏண்டி பன்னீ, ஒரு சீலைத் துணிக்காகச் செட்டியார்கிட்டே படுத்தியா?’ என்று வெறியைத் துப்பிவிடலாமா என்று உள்ளுக்குள் பீரிடுகிற உன்மத்தம்... ரௌத்ரம்.

பல்லைக் கடித்துக்கொண்டான். சகித்துக்கொண்டான். மூர்க்கப் பன்றிகளைப் பட்டிக்குள் விட்டு அடைத்தான்.

அவனுக்குள் ஏகப்பட்ட குழப்பம். இறுக்கம். மனத் தவிப்பு. உதடு வரைக்கும் வந்துவிட்ட வெறியை உள்ளடக்கிக் கொண்ட பின்னும் நெஞ்சுக்குள் ஒரு தத்தளிப்பு. மூச்சு முட்டல். உள்ளத் திணறல்.

அரண்டு போய்க் கருத்துக் கிடக்கிற புருஷ முகம். சாப்பிடக் கூடத் தோன்றாமல் எதையோ பறிகொடுத்து விட்டுத் தவிக்கிற ஊமைப் பிள்ளை மாதிரி தேம்பி நிற்கிற அவனது பார்வை.

‘இந்த ஆளுக்கு என்ன கேடு வந்துச்சு?’ என்று அவளுக்குள் ஏதேதோ குழப்பம்... சலனம்... நெருடல்... இருப்பினும்...

இப்போதைக்கு இந்த ஆளு மனசைத் திசை திருப்பணும். இறுக்கத்தை உடைக்கணும். அதுதான் இப்ப முக்கியம்... அவசரம்... அவசியம்.

"ஆ...ங்..." என்று ஏதோ திடுமென்று நினைவுக்கு வந்தது போல, குழந்தைக்கு உரிய குதூகலமாய் அலறினாள்.

"முந்தா நா... ஒரு கூத்து நடந்துச்சே... அதை ஓங்கிட்டே சொல்ல அயத்துட்டேன்லே?"

சுரத்தில்லாமல் 'ம்' கொட்டினாலும் 'முந்தா நா' என்ற சொல் அவனுக்குள் ஒரு சிறு அதிர்வை ஏற்படுத்தியது.

ஏதோ விளையாட்டான விஷயத்தைப் பகிர்கிற மகிழ்ச்சியான சகஜத்தோடு அவள் தொடர்ந்தாள்.

"காபிக்கடை முன்னாடி வெச்சு எம்பதுரூபா விலை சொன்னாரு, செட்டியாரு... கசறிப்பேசி, சண்டை போட்டு எழுவது ரூபான்னு வெலை தெகைச்சு, சீலையை வீட்டுக்குக் கொண்ணாந்துட்டேன். பின்னாடியே செட்டியாரு பதறிப் போய் ஓட்டமாய் ஓடியாந்துட்டாரு நம்ம வீட்டுக்கு..."

"நம்ம வீட்டுக்கா...?!"

"ஆமாங்கே..."

"எதுக்கு?"

"இந்தச் சீலை தொண்ணூறு ரூபாயாம்... தெரியாம எம்பது ரூபான்னு சொல்லிட்டாராம்..."

"ம்..."

"அவரு ஒரே புலம்பலா பொலம்பித் தவிச்சாரு. அழுகப் போற மாதிரி கண் கலங்கிட்டாரு. பாக்க பாவமா யிருந்துச்சு. பெறகென்ன செய்ய? அவரு சொன்னதை

ஏத்துக் கிட்டு எம்பது ரூபான்னு வெலை தெகைச்சு, பத்துரூபா வாங்கிட்டுப் போனாரு...''

''அப்படியா?''

''ஆங்... பத்து ரூபா துட்டுக்கு அம்புட்டுப் பெரிய ஏவாரி பதறித் தவிச்சதை பாக்கணுமே, நீயும் இருக்கியே... பத்து ரூபாயைப் பத்து பைசா மாதிரி வீசியெறிஞ்சுட்டு, சாராயத்தை வாங்கி வாயிலே ஊத்திக்கிட்டு வர்றே... பெரிய சீமான்கணக்கா...''

சிரிப்பும் பாவனைகளுமாய் அவள் சொல்லிக் கொண்டு வர வர... இவனுள்ளிருந்து வெருண்டோடுகிற பன்றிகள். நெஞ்சுக்குள் கட்டையாய் நின்று அழுத்திய முள் ஒரு பொய்யாய்... மாயமாய்....

வீட்டுக்குச் செட்டியார் வந்து போன நிஜத்தை இவள் ரகசியமாய் மறைக்கவில்லை. தந்திரமாய் ஒளிக்கவில்லை. கள்ளச்சுகம் காண்கிற கள்ளப்புத்தியில் மாய்மாலம் செய்யவில்லை. மறந்து போயிருக்கிறாள். அவ்வளவுதான்...

இதோ.... கள்ளங்கபடமில்லாமல் கக்கிவிட்டாள்.

இறுகி முறுக்கேறிப் போய்க் கிடந்த அவனுக்குள், ஒரு விசாலம். சகல கதவுகளும் அகலத்திறந்து கொண்ட மாதிரி, காற்றும் வெளிச்சமும் மூலை மூடுக்கெல்லாம் பரவிப் படர... அந்த வெளிச்சம் தாங்காமல் அலறியடித்துக் கொண்டு ஓடி ஒளிகிற சிறுமைப் பன்றிகள்...

அவன் உதட்டின் விளிம்பில் குற்ற உணர்வின் குறுகுறுப் போடு கூடிய ஒரு நெளிவு. அவள் முகத்தில் ஒரு நெகிழ்வு. கண்ணில் ஒரு புதிய தொனி.

''முந்தாநாளே புதுச் சீலையைக் கட்டலையான்னு ஆசை ஆசையா கேட்டே... இல்லே?''

''ஆமா...''

"ஏன் உடுத்தலை தெரியுமாய்யா?"

"ம்..."

"வீட்டுக்கு விலக்காகியிருக்கிறப்ப புதுத் துணி உடுத்தக் கூடாதுன்னுதா அன்னிக்கு உடுத்தலே. நாளைக்கு உடுத்திக்கிடுதேன்... என்னய்யா?"

கெஞ்சலும் குழைவுமாய்ச் சொல்லித் தலைகுனிகிற முத்தக்கா... ஒரு லஜ்ஜையோடு தலை தாழ்ந்த அவளை நிமிர்ந்து முழுசாகப் பார்த்தான் சின்னாண்டி.

'அட, அதுவா சங்கதி... அதனால்தான், அன்றைக்குக் காலையிலேயே குளித்துவிட்டு வந்தாயா?'

அவனுக்குள் குற்ற உணர்வின் உறுத்தல்கள்.

இப்படிப்பட்ட பத்தரை மாற்றுத் தங்கத்தையா அசிங்க அசிங்கமாய் நினைத்தேன்? ச்சே! நான் ஒரு கேணப்பயல்.

நல்லவேளை, பதற்றத்தில் அவளிடம் கேட்காமலிருந்தது நல்லதாய்ப் போயிற்று. கேட்டிருந்தால்... தாங்கவே மாட்டாள். மானஸ்தி. ஒன்று கிடக்க ஒன்றைக் கட்டாயம் செய்திருப்பாள். கல்லெறிபட்ட தேன்கூடாய் குடும்பம் சிதறிப் போயிருக்கும்...

பெரிய கண்டத்திலிருந்து தப்பித்துவிட்ட உணர்வு.

ஆனாலும்...

உள்ளுக்குள் உலவிய சாக்கடைப் பன்றிகளை நினைத்து நிஜமாகவே வெட்கப்பட்டான். வெட்க உணர்வை மறைக்க, சாப்பாட்டில் குனிகிறபோது...

பரிகாசச் சிரிப்புடன் பெரியநாயக்கர் முகம் மனசுக்குள் வந்தது.

ஆனந்தவிகடன் – செப்டம்பர், 1993

10. அந்நியமாய்...

மழையில்லாத காலத்தில் ஊருக்குள் இப்படி ஓர் இடி வந்து விழும், விழுந்த இடி ஊரையே ஒரு தூக்கு தூக்கி டம்மென்று கீழே போட்டு நொறுக்கியெடுக்கும் என்று யாரும் நினைக்கவேயில்லை. அதிலும் முனியசாமி துளிக்கூட நினைக்கவில்லை.

நாற்பத்தியாறாவது சுதந்திர தினத்துக்குக் கொடியேற்றி, அவன் பிள்ளைகள் மிட்டாய் வாங்கித் திங்க பள்ளிக் கூடம் போயிருந்தன. யூனிஃபார்ம் டிரஸ்களை நன்றாகத் துவைத்து, பளிச்சென்று போட்டுக்கொண்டு ஒளிமய மாய்ப் போயிருந்தனர், நீலமும், வெள்ளையுமாய்...

அந்தப் பிள்ளைகள் பத்தரை மணிக்கெல்லாம் வந்து விடுவார்கள். மூன்றும் ஆண் பிள்ளைகள். மதியத்திற்கு பஸ் ஏறி, ராசபாளையம் போய், அங்கிருந்து குற்றாலம் போய், நாலைந்து தடவை அருவிக் குளிப்பு குளித்துவிட்டு வரவேண்டும் என்கிற உல்லாசத் திட்டம். குற்றாலம் போவதில் பிள்ளைகளைவிட முனியசாமிக்குத்தான் ஏகப்பட்ட கனா. மகிழ்ச்சி. குதூகலக் குளிர்ச்சி.

முனியசாமி மனமெல்லாம் அதன் மலர்ச் சிரிப்பு. வாசமும், ஒளியுமான மலர்ச் சிரிப்பு. அவனது துறுதுறுப் பான ஒவ்வொரு அசைவிலும் வந்து முகம் காட்டுகிற மனப் பிரவாகம்.

அப்போது தான்—

அந்தச் செய்தி, தீப்பிடித்த மாதிரி ஊர் முழுக்க உஷ்ண மாய்ப் பரவியது.

"ராமையாத்தேவரு மகன் செத்துப்போய்ட்டானாம்."

"ஐயய்யோ...! என்ன செய்ஞ்சதோ?"

"வாயாலே வயித்தாலே போச்சாம். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் குளுக்கோஸ் ஏத்தியிருக்காக. பிரயோசன மில்லாமப் போச்சாம்."

"அடக் கொடுமையே...! மூணு வயசுதானே இருக்கும்? துறுதுறுன்னு திரிவானே... லட்சணமான பயல்..."

"ஆமாமா... நல்ல பயதான். குடுத்து வைக்கலியே. கூத்துவன் தூக்கிட்டுப் போய்ட்டானே..."

"அடப் பாதரவே..."

"முருகையா நாடாரு மகனுக்கும் வாயாலே வயித்தாலே போகுதாம்."

"ஐய்யய்யோ.... பெறகு?"

"சைக்கிள்லே வைச்சு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயி ருக்காக. புள்ளை கீரைத்தண்டா வாடித் தொவண்டுருச்சு."

"அப்ப இதென்ன காலராவா?"

"அப்படித்தானிருக்கும் போலிருக்கு. நடுத்தெருவுலே சின்னப் பெருமாள் நாயக்கருக்கும் வாயாலே வயித்தாலே போகுதாம்."

"அப்படியா? அப்ப... காலராவே தான்!"

ஊர் முழுக்க பதற்றநிலை. ஆண், பெண் எல்லார் முகங்களிலும் அச்சத்தின் நிழல். 'என்ன ஆகுமோ ஏது ஆகுமோ' என்கிற பீதி இருட்டு. வேலை வெட்டி இல்லாமல் துட்டு துக்காணியில்லாமல் தவிக்கிற கோடை.

இந்தத் துன்பம் போதாதென்று, காலரா நோயும் ஒரு பங்காளியாய் வந்து மல்லுக்கு நிற்கிறதே...

ஊரெல்லாம் சுற்றிச் சுற்றி ஊளையிடுகிற நாய்கள் வேறு, உள் மனத்தில் மரண பயத்தைத் தூவுகின்றன.

ஆட்கள் கூடிக் கூடிப் பேசினர். பேசிப் பேசி பீதியைப் பகிர்ந்து கொண்டனர். நிமிஷத்திற்கு நிமிஷமாய்ப் புதுத் தகவல். 'அன்னாருக்கு' 'இன்னாருக்கு' என்று எல்லாமே வாந்தி பேதிதான்...

குற்றலாம் போகிற மகிழ்ச்சியில் திளைத்த முனிய சாமிக்குத் திக்கென்றது. திகில் பற்றிக்கொண்டது. குடித்துக் கொண்டிருந்த காப்பியில் பல்லி விழுந்து விட்ட மாதிரி... அவனுள் ஒரு பகீர் உணர்வு.

உள்ளூர்த் தலையாரி பதற்றத்தோடு சைக்கிளில் புறப் பட்டார். வி.ஏ.ஓ.விடமும், ஆர்.ஐ.யிடமும் தகவல் சொல்லி, ரிப்போர்ட் தயாரித்து எட்டு மைல் தள்ளியிருக்கிற அரசு மருத்துவமனை தலைமை டாக்டரிடம் நேரில் ஒப்படைத் தார்.

அவர் ஊசியில்லையே... மருந்தில்லியே என்று கை விரித்துப் புலம்பினார்.

தலையாரி ஊர் திரும்புவதற்குள் சமூக அக்கறையுள்ள சில வாலிபர்கள் கலெக்டருக்கும், சப்–கலெக்டருக்கும், பி.டி.ஓ.வுக்கும் தந்திகள் அடித்தனர்.

"ஒரு மரணம். காலரா தாக்குதல். முப்பதுபேர் சீரியஸ். டாக்டர் குழு வரவேண்டும். உடன் நடவடிக்கை."

தந்தி அடிக்கவே நாலு மைல் தள்ளியிருக்கிற சிறு டவுனுக்குத்தான் போகணும். அங்கேதான், தனியார் மருத்துவமனையில் வாந்தி பேதி நோயாளிகள் வந்து அட்மிட் ஆகியிருக்கின்றனர்.

டக்கர்களில் வைக்கோல் பரப்பி அதன் மேல் நோயாளி களைக் கிடத்தி, மாறி மாறிக் கொண்டுவந்த வண்ண மாயிருக்கிறது.

மருத்துவமனையில் போய்ப் பார்த்தால்–

கால் வைக்க இடமில்லை. இருக்கிற பத்து அறைகளிலும் நாற்பது பேர். அது போக, வழிநடைகளில் குறுக்கும் நெடுக்கமாய் நோயாளிகள். வராண்டாவிலும் தான். எல்லார் முகங்களிலும் அகதிகளைப் போன்றதோர் அவல உணர்ச்சி. மரண பீதி. குளுக்கோஸ் ஏறிக் கொண்டி ருக்கிறது. ஸ்டாண்ட் இல்லாக் கொடுமையால் நோயாளி களின் உறவினர்களே ஸ்டாண்டாக நின்று, குளுக்கோஸ் பாட்டிலை ஏந்திக் கொண்டிருந்தனர்.

டாக்டரும், டாக்டர் மனைவி டாக்டரும் தங்கமான வர்கள். அசிங்கம் பாராமல் – உறக்கம் பாராமல்– உயிர்களைக் காப்பாற்றுகிற போராட்டத்தில் சளைக்காமல் ஓடி ஓடிப் பரபரத்தனர்.

வாந்தி பேதியாகிறவர்கள் பய உணர்ச்சியில் அரண்டு கிடந்தனர். உரித்துப் போட்ட வாழைப்பழத் தொலிகளாகக் கிடந்த அவர்களைப் பார்க்கவே பரிதாபமாக இருக்கிறது.

உள்ளே போய் விட்டு வந்தால்... ஒருவித நாற்றமும் கிலியும் குடலைப் புரட்டுகிறது.

காலரா, சூறாவளியாய் ஊரைப் பிடித்து ஒரு ஆட்டு ஆட்டி, உலுக்கியெடுக்க, மேற்கொண்டு ரெண்டு பேர் சாவின் மடியில் முகம் புதைத்தனர். வழக்கமான சாஸ்திரம் எதுவும் கடைப்பிடிக்காமல், ‘அரக்க பறக்க’ தூக்கிக் கொண்டு போய் மயானக்கரை சேர்த்தாயிற்று.

நூற்றுக்கும் மேலாகிவிட்ட எண்ணிக்கையில் தனியார் மருத்துவமனைகளில். சுற்றுப்பட்டி பூராவும் இந்த ஊரைப் பற்றித்தான் பேச்சு.

ஏழு தடவை வந்து போகிற டவுன் பஸ்ஸில் ஜமுக் காளமும், தூக்கு வாளியுமாய்க் கைத்தாங்கலாய் ஏற்றப்படுகிற நோயாளிகள். டக்கர்களில் வேறு.

சூறாவளியின் சுழற்சியில் காய்ந்த சருகுகளாய் ஜனங்கள். நாதியற்றுப் போய்...

கிராம சேவக் வந்தார். ஊசி மருந்தில்லாமல் சும்மா விசிட்டுக்கு வந்த டாக்டர், ஜனங்கள் கொதிப்பில் ஓடியே போய் விட்டார். மூன்றாவது நாள்தான் தடுப்பு ஊசி மருந்து கொண்டு நர்ஸ்கள் வந்தனர்.

காலங் கடந்த காரியம். பத்து நாளைக்கு முன்செய்ய வேண்டிய காரியம். காலரா வந்த பிறகு, ஆட்கள் சாய்ந்த பிறகு தடுப்பு ஊசி போட்டு என்ன செய்ய?

கட்டுத் தரையை விட்டு மேய்ச்சல் தரையில் மூக்க ணாங்கயிறு மாட்ட முயல்கிற சர்க்காரின் புத்திசாலித் தனம்!

காலராவை ஒழிக்க வேண்டிய கடமையுள்ள சர்க்கார், கும்பகர்ணன் தூக்கத்தில். தந்திகள் அடித்த பின்னும், குறட்டைச் சப்தம் தான். சர்க்கார் யந்திரம் அசைவதாகத் தெரியவில்லை. மூச்சுவிடாமல் கம்மென்று கிடந்தது.

கிராமத்து ஜனங்கள் செய்வதறியாமல் அலைபாய்ந்து வந்தனர். சூறாவளியின் உக்கிரமும், வேகமும் அடிவயிற்றைக் கலக்குகின்றன. பத்து மாசமாய் ஒற்றைத் தூறல் கூட மண்ணில் பொட்டென்று விழவேயில்லை. அருங்கோடை, கூலி ஜனம் கையில் காலணா துட்டுக்கும் வழியில்லை.

மருத்துவமனையில் கிடத்தப்பட்ட நோயாளிகளை மீட்கக் காசில்லை. கண்விழி பிதுங்க கதியற்றுப் புலம்புகிற அவலம்.

முனியசாமி ஊர் மடத்தில் உட்கார்ந்து பேசிய மனக் கொதிப்போடு வீட்டுக்குப் போனான். வீட்டில் ஒரே கந்தர்கோளம்.

ஆவுடை தலையில் அடித்துக் கொண்டு கதறிக் கொண் டிருந்தாள். "ஐய்யோ... எந்தங்கப் பெட்டி... தலைக்குப் புறக் கெடக்கே... மலடியாயிருந்த சிறுக்கியைத் தாயாக்கின என் ரத்தினம், கண் இருண்டு கெடக்கே..."

முனியசாமி கதிகலங்கிப் போனான். சூறாவளிக்காற்று நம் வீட்டிற்குள்ளும் நுழைந்து விடுமோ என்று நிமிஷத்திற்கு நிமிஷம் பயந்து செத்துக்கொண்டிருந்தான். நுழைந்தே விட்டது.

மூத்த பயல் ரெண்டு தடவை வாந்தியெடுத்திருக்கிறான். நாலைந்து தடவை தண்ணியாய் பீச்சியடித்திருக்கிறது. அறுபட்ட வாழை இலையாய் வாடிச் சுருங்கிப்போய்க் கிடந்தான்.

அவன் முகத்தில் விடாமல் மொய்க்கிற ஈக்கள். மரண நிழல்கள்.

முனியசாமிக்குள் குலைநடுக்கம். நெஞ்சு பதறிப் பதைத் தது.

"அடக் கிரகச் சாரமே, இப்ப நா என்ன செய்ய?" என்று கையறு நிலையில் தவித்தான். ரெண்டும் கெட்ட நேரம். பஸ்ஸெல்லாம் போய் விட்டது.

வேறு வழி?

சைக்கிளில் தூக்கி கேரியரில் உட்கார வைத்துக்கொண்டு புறப்பட்டான், முனியசாமி.

முனியசாமிக்குக் கல்யாணமாகி நாலைந்து வருஷம் ஓடிய பிறகும் ஆவுடைவயிற்றில் ஒரு சலனமில்லை. புதுசு

மங்காமலிருந்தாள். புழுவோ பூச்சியோ ஒன்றும் தட்டுப் படவில்லை.

ரெண்டு தடவை நடை நடையாய் நடந்து போய், திருச் செந்தூர் முருகனைத் தரிசித்தான். குடும்பத்துக்குப் பாத் தியப்பட்ட குலதெய்வம் முனீஸ்வரன்சாமி நடுக்காட்டில் தன்னந்தனியாய் வெயிலில் காய்ந்து கறுக்குத் கிடந்தது. அதற்கும் மூன்று தடவை நேர்த்திக் கடன் போட்டு, கடாய் வெட்டி பொங்கலிட்டு, மொட்டையடித்தான்.

பாச்சா ஒன்றும் பலிக்கவில்லை.

'இதேதுடா... பெரிய வம்பாய்ப் போச்சு. வம்சப்பேரு சொல்ல ஒரு புள்ளையில்லாம, பூண்டத்துப் போயிரு வோமா' என்று மனம் கிடந்து பேதலிக்க...

இவன் மலடா, அவள் மலடா என்று ஆராய்ச்சியே யில்லாமல், மறு கல்யாணம் பற்றி யோசிக்கவும் துவங்கிய தருணத்தில்... ஆவுடை வாந்தியெடுத்தாள் – கர்ப்பவாந்தி.

அப்படித் தவமாய் தவமிருந்து, ஏங்கித் தவித்தபிறகு பிறந்தவன்தான், ரத்தினமுனி. முனிசாமியின் அய்யா அச்சு. கண்விழி, மூக்கு நுனிக்கூர்மை, உதட்டுச் சுழிப்பு, நொடிக்கொரு தடவை மூக்கு நுனியைத் திருகிக் கொள்கிற பழக்கம்... எல்லாமே அய்யாதான்.

அஞ்சாங்கிளாஸ் படிக்கிற ரத்தினமுனிதான், இப்போது காலராச் சூறாவளியில், சருகாக...

ஆடி மாத இருட்டு அப்பிக் கிடந்தது. சைக்கிள் தன் போக்கில் கிடங்குகளில் விழுந்து ஏறுகிறது. கேரியரில் துவண்டு போய் உட்கார்ந்திருக்கிற பயல், மயங்கிக் கீழே விழுந்து விடுவானோ...?

முனியசாமிக்குள் அந்தப் பதற்றம் வேறு... அடிக்கடி சத்தம் காட்டி கூப்பிட்டுக் கொண்டே போனான்.

"ஏலேய்... ரத்துனம்."

"ம்."

"ஒறங்கிராதேடா."

"ம்."

"கிறுகிறுப்பா வருதா?"

"இல்லே...."

"கண்ணை இருட்டிக்கிட்டு வந்தா... சொல்லிரு."

"ம்."

முனியசாமிக்குள் குழப்பமான எண்ணங்கள்.

இதுவரை தாசில்தாரோ, டாக்டர் குழுவோ கிராமத்திற்கு எட்டிப் பார்க்காமலிருப்பதை அவனால் புரிந்துகொள்ளவே இயலவில்லை. எத்தனை தந்திகள்? எத்தனை வழியில் தகவல்கள். எல்லாம் போயும்... ஆபீசர்மார்கள் ஆட்டுரலாய் அசையாமல் இருக்கிறார்களே... பாவிகள்!

இவங்களாலேதான் ஆட்சிக்குக் கெட்ட பெயர். ஆளுங் கட்சிக்கும் ஏகப்பட்ட வசவுகள். ம்னக்கொதிப்பில் தெறிக்கிற சாபக் கங்குகள்.

...நேற்று மடத்தில் போய் உட்கார்ந்திருந்தான். நிறைய ஊர்ஜனம். ராத்திரி ஏழு மணி பஸ்ஸுக்குக் கைத்தாங் கலாய் அழைத்துச் செல்லப்படுகிற மூன்று கேஸ்கள்.

அதைப் பார்த்தவுடன் கோபத்தில் ஆட்சியைத் திட்டித் தீர்த்தனர். ஆள் ஆளுக்கு கொதிப்போடு வைதனர். வசவு என்றால் வசவு... அப்படி நாற வசவு. உரித்து எடுத்து விட்டனர்.

"ஜனங்க செத்து மடியுது. சர்க்காரு குத்துக்கல்லாய் உக்காந்துருக்கு."

"அடிச்ச தந்திகளை வாங்கிப் குப்பைக் கூடையிலே போட்டுட்டு, ஆபீஸர்மாருங்க ஜீப்புலே 'டர்ர், புர்ர்'ருன்னு வெறுஞ்சுத்தா சுத்துவாக."

"அவுக ஆத்தா அப்பன்மாருக்கு வாந்தி வயித்தாலே போனா தெரியும்."

"ஓட்டு வாங்கி ஜெயிச்சிட்டுப் போன எம்.எல்.ஏ.க் கும்லே, எட்டிப் பார்க்க நேரமில்லே?"

"முதலமைச்சர் கால்லே விழுந்த எம்.எல்.ஏ. இன்னும் எந்திக்கவேயில்லியாம்."

"ஊர் ஜனம் காலராவுல உருண்டுக்கிட்டுக் கெடக்குதுக. எம்.எல்.ஏ. எட்டிப் பாக்காம இருக்காரு. இவங்கள்லாம் மனுசங்கதானா?"

"வரட்டும்... அடுத்த தடவை ஓட்டுக்கேட்டு வரணும்லெ? அப்ப பேசிக்குவம்."

"ஆமா... அந்தக் கட்சிக்காரங்க வரட்டும். வாயாலே பேசக் கூடாது. எடுத்துக்கிட்டு போடுற போட்டுலே, எல்லாம் கந்துகந்தாய்ப் பிய்ச்சுக்கிட்டு ஓடணும்."

முனியசாமி இறுகிப்போய்க் கேட்டுக் கொண்டிருந் தான். சகிக்க முடியவில்லை. பல்லைக் கடித்துக் கொண் டான். அவனுக்குள் திகுதிகுவென்று எரிகிற ஆத்திரம். தன் கட்சியை இப்படிக் கூசாமல் திட்டுகிறார்களே என்கிற கோபம். தன்னை வைத்துக்கொண்டே இத்தனை வசவு என்றால்... அது தன்னையே செருப்பால் அடிப்பது போல் தானே?

ஆயினும், ஒன்றும் சொல்ல முடியவில்லை. என்னத்தைச் சொல்ல? எந்த நியாயத்தை வைத்துக் கொண்டு வாதாட? வாய் திறந்து பேசுவதற்கு என்ன ரைட் இருக்கு?

கொதித்துப் போயிருக்கிற ஜனங்களிடம் ஏடாகூடமாய் வாயைக் கொடுத்தால்... 'வாங்கிக் கட்டி'க்கொள்ள வேண்டியதுதான். பட்டதுதான் மிச்சம்.

...தேர்தலுக்குப் பத்துநாள் இருக்கும்போது இந்த எம்.எல்.ஏ. வேட்பாளராய் வந்தார். ஊரில் முனியசாமி தான் முன்னணி ஆளாய் இருந்து வேர்வை சிந்திக் கொண் டிருந்தான். ராவ்வும் பகலும் உறக்கமில்லாமல், பச்சைத் தண்ணீர் பல்லில் ஊற்றிக் கொள்ளாமல் ஒரே மூச்சாய்ப் பாடுபட்டான்.

பெரிய பெரிய தட்டி போர்டுகளையெல்லாம் வேப்ப மர உச்சியில் கொண்டு போய்க் கட்டி, சீரியல் லைட் மாட்டினான். தெருவை மறித்து வரிசை வரிசையாய் ஓட்டுக் கேட்கிற பேனர்கள். சூரிய வெளிச்சம் தரையில் விழ விடாமல், அடர்த்தியாய்ச் சின்னம் பொறித்த கட்சித் தோரணங்கள்.

ஊரே சுயமிழந்து, புலிவேஷம் கட்டிக்கொண்ட மாதிரியிருந்தது.

வந்த வேட்பாளர் இவனைப் பார்க்கவில்லை. வேறொரு பிரமுகரிடம் பணத்தைக் கொடுத்து விட்டுப் போய் விட்டார்.

இவன் அதைப் பொருட்படுத்திக் கொள்ளவில்லை. வேட்பாளர் ஜெயித்தால்... தான் ஜெயித்த மாதிரி. அப்படி ஒரு வைராக்கியத்தில் வெறி பிடித்தவனாய்... சுழன்றான்.

புலனாய்வு வாரப் பத்திரிகைகள் ஆய்வு நடத்தி, கட்டுரை எழுதி இவன் வயிற்றில் புளியைக் கரைத்தன. 'இந்தக் கட்சி ஜெயிக்க முடியாது. ஜெயித்தாலும் ஆட்சியில் உட்கார்கிற மெஜாரிட்டி கிடைக்காது' என்று ஆய்வு முடிவுகள் அலற... இவன் பதறியடித்துப் போய் பம்பர மாய்ச் சுழன்றான். முனியசாமிக்குள் திக்திக்கென்று அடித்துக்கொண்டது.

கூட்டணிக்கட்சித் தலைவர் வெடிகுண்டு வெடித்துக் கொலை செய்யப்பட... நாடே அதிர்ந்துபோய் வெல வெலக்க... மொத்த நிலவரமும் தலைகீழாய் மாறி, கலவர மாக...

இவன் கட்சி 'ஜே, ஜே' என்று ஜெயித்து வந்து விட்டது.

மூன்று மாதம் கழித்து எம்.எல்.ஏ. ஆற அமர நன்றி சொல்ல வந்தார். பொத்தம் பொதுவாய் நன்றி சொல்லி விட்டு அன்றைக்குப் போனவர்தான், இன்று வரைக்கும் இந்தப் பக்கம் தலையைவைத்துக் கூட படுக்கவேயில்லை...

மற்ற நேரம் தான் வரவில்லை. போய்த் தொலையுது. ஊர்லே இப்படி ஒரு இடி விழுந்து, ஊரே இழவு வீடாகிக் கிடக்கையிலாச்சும் எட்டிப் பார்க்க வேண்டாமா? ஓட்டுப் போட்ட ஜனத்துக்கு ஆறுதலா நாலு வார்த்தை சொல்ல வேண்டாமா? அசையாமல் இறுகிக் கிடக்கிற அதிகாரிகளை அதட்டி விரட்ட வேண்டாமா? டாக்டர் குழுவை ஊருக்குள் கொண்டு வந்து, உடனுக்குடன் உள்ளூரிலேயே வைத்தியம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டாமா?

இதெல்லாம் செய்யாம... எம்.எல்.ஏ. பொறுப்பத்துப் போய் எங்கேயோ கிடந்தா... என்ன அர்த்தம்? ஊர் ஜனங்க மனக்கொதிப்புலே வையத்தானே செய்வாக? பாத்துக்கிட்டு நாம சும்மாத்தானே கிடக்கணும்? வாயைப் பொத்திக்கிட்டு பம்மிப் போய்த்தானே இருக்கணும்?

முனியசாமி சைக்கிள் அந்தச் சிறு டவுனுக்குள் போய் நின்றது. தனியார் மருத்துவமனையில் ரத்தினமுனியையும் சேர்த்தான். அவனுக்கு அவசரமாய் ரெண்டு ஊசி போட்டு, குளூக்கோஸ் ஏற்றுவதற்கான ஏற்பாடு செய்தார், டாக்டர். ஸ்டாண்டு இல்லாததால், இவனே குளூக்கோஸ் பாட்டிலை ஏந்திப் பிடித்துக் கொண்டு மரமாய் நின்றான், விடிய விடிய...

மறுநாள்–

மிச்சமிருந்த ஊர்க்காரர்கள் ஆண்களும் பெண்களுமாய் நாலு டக்கர்களில் ஏறி... சாலை மறியலுக்குப் போனார்களாம். அங்கே... ஒரே சச்சரவாம். எஸ்.ஐ. வயர் லெஸ்ஸில் அதிகாரிகளுக்குச் செய்தி சொல்ல... மறியலுக்கு வந்த ஜனம் பூராவும் ஒரே கூப்பாடுதானாம்.

அதற்குப் பிறகுதான் தாசில்தார் ஊருக்கு வந்தாராம்... பி.டி.ஓ., டி.டி.ஓ. எல்லாருக்கும் ஊர்ப்பாதை தெரிந்ததாம். டாக்டர் குழுவும் மூன்று வேன்களில் ஊசி மருந்துகளோடு வந்து விட்டதாம். கலெக்டர் கூட ஊர் வரப் போவதாகத் தகவல்.

ஜீப்களும் வேன்களும் சர்ர் புர்ர்ரென்று ஓடிப் பாய்ந்து... ஊரையே கலங்கடிக்கிறதாம்.

முனியசாமிக்கு எல்லாமே தகவல்தான். இவன்தான் ரத்தினமுனிக்குப் பராமரிப்பாய் இங்கே கிடையாய்க் கிடக்கிறானே...

இத்தனை பரபரப்பிலும் எம்.எல்.ஏ. வராதது, இவனுக்கு ரொம்ப வருத்தம், மனச்சங்கடம். 'ச்சே' என்று வெறுப்பாக இருந்தது.

அப்போதுதான்—

வேர்க்க விறுவிறுக்க சைக்கிளில் வந்து இறங்கினான் ராமசாமி.

"நம்ம ஊருக்கு எம்.எல்.ஏ. வந்துருக்காரு."

அத்தனை துன்பத்திலும் முனியசாமிக்குள் ஒரு சிலிர்ப்பு. செத்துப் போகாத நம்பிக்கையின் உயிர்ப்பு. உயிரின் வெளிச்சம் அவனுக்குள் சட்டென்று பரவிப் பாய்கிற பெருமித உணர்ச்சி.

அவன் முகமெல்லாம் ஒரு மலர்ச்சி. தூக்கமில்லாமல் கனத்துக் கிடந்த கண்களில் மிருதுவான பிரகாசம். உண்

ணாமல் காய்ந்து கிடந்த தேகத்தில் ஒரு தெளிவு. நெஞ்சு நிமிர்வு.

“நெசம்மாவா?” என்று ஆனந்தக் கொந்தளிப்போடு கேட்டான், முனியசாமி.

“நெசந்தா. சிமிண்டுக் கலர் மாருதி வேன்ல வந்திருக்காரு.”

“இங்கிலீஷ்லே தண்ணிபட்ட பாடாய்ப் பேசுவாரே... அடடா... அதைப் பாக்க நா அங்கே இருக்க முடியலியே...”

“இங்கயும் வரப் போறாரு. இங்க அட்மிட்டாயிருக்கிற நம்மூரு ஆளுகளைப் பாக்க வரப் போறாரு.”

“அப்படியா? வரட்டும், எம்.எல்.ஏ.ஐ கொறை பேசுறதுன்னா... நம்ம ஊர்லே உப்பு போடாம பேசுவாக. இப்பவாச்சும் அவரோட அருமையைத் தெரிஞ்சிக்கிடுவா கல்லே?”

அவனுக்குள் சொல்லிமாளாத மகிழ்ச்சி. ஆட்சியின் கௌரவம் காப்பாற்றப்பட்டால் இவன் மானம் காப் பாற்றப்பட்டது மாதிரி. இவன் தலைக்குக் கிரீடம் கிடைத்த மாதிரி.

மருத்துவமனையின் வாசலில் நின்று, ரோட்டின் நுனியில் பார்வையை நங்கூரமிட்டான். கண்களில் வந்து நின்ற மன ஆவல்.

ஸ்கூட்டர் வருகிறது. டி.வி.எஸ். 50 வருகிறது. மஞ்சள் வேன்கள், லாரிகள், கட்டபொம்மன் பஸ், சைக்கிள்கள் எல்லாம் வருகின்றன. சிமெண்ட் கலர் மாருதி வேன் மட்டும் வரவில்லை.

அவனுள்ளே றெக்கையடிக்கிற இதயம். வெளியே வந்து விடப் போவதைப் போல விம்முகிற நெஞ்சு. நிமிஷம்

யுகமாகத் தோன்ற பொறுமையின்றித் தவித்தான். மனப் பரபரப்பில் கூடுதலாய் ரெண்டு பீடி பற்ற வைத்தான்.

'ஒரு வேளை... இங்க வர்றதைக் கேன்ஸல் பண்ணிட் டாரோ...?'

ரத்தினமுனிக்கு வயிற்றோட்டம் நின்றுவிட்டது. குளுக்கோஸையும் நிறுத்தியாகிவிட்டது. சாயங்காலம் வரைக்கும் இருந்து பார்த்து விட்டுப் போகச்சொல்லி யிருக்கிறார், டாக்டர்.

''இனிமே... அவ்வளவுதான். எம்.எல்.ஏ. இங்க வர மாட்டாரு'' என்று ஏமாற்றம் நெஞ்சில் சோகமாய்த்திரள முணுமுணுப்போடு பெருமூச்சோடு திரும்பிய போது—

அதோ... சிமிண்டு கலர் மாருதி வேன். நேராய் வந்து மருத்துவமனையில் நிற்கிறவேன். பரிவாரங்களோடு இறங்குகிற எம்.எல்.ஏ.

முந்திக்கு இப்போது சற்று ஊதியிருக்கிறார். கூடுதலான சிவப்பு. உதட்டில் நல்ல கனிந்த சிவப்பு. கொசு வந்து உட் கார்ந்தால்கூட துல்லியமாய்த் தெரியும். அப்படியொரு பளீர் வெள்ளையில் வேட்டியும், ஷர்ட்டும். வழுவழுப் பான பளிச். கனத்த கழுத்தில் முறுக்கு வடத் தங்கச்செயின். வலது கையிலும், இடது கை வாட்ச்சிலும் தங்கச் செயின்கள்.

மகிழ்ச்சியும் பரவசமுமான உணர்ச்சித் ததும்பலோடு ஓடிப் போய் வணக்கம் சொன்ன முனியசாமி. சிநேகித மற்ற உதட்டசைவோடு (புன்னகை) அவனைக் கடக்கிற எம்.எல்.ஏ.

இவனது வியர்வை மழையில் – தூக்க விழிப்புகளில் வீடு வீடாய் அலைந்து ஒட்டிய டோர்சிலிப்புகளில் – ஜெயித்து எம்.எல்.ஏ. ஆனவர். கண்டு கொள்ளாமல் நகர்ந்து போகிறார்.

அவனுக்குள் சுள்ளெறும்பு கடித்த மாதிரியானதோர் வலி. உள்ளோடுகிற அவமதிப்பு அவஸ்தை. சமாளித்துக் கொண்டான்.

'தினம் தினம் ஆயிரக்கணக்கான ஆட்களோடு புழங்குகிற தலைவர், எம்.எல்.ஏ., ஒரு கிராமத்துத் தொண்டனை ஞாபகத்துலே வைச்சிருக்க முடியாமப் போனது... பெரிய தப்பு இல்லை...'

மருத்துவமனைக்குள் நுழைகிற எம்.எல்.ஏ. கால் வைக்க இடமில்லாமல் படுத்துக் கிடக்கிற ஆட்கள். உயிர்க் களையற்று வெளுத்துப் போன முகங்கள்.

எம்.எல்.ஏ. முகத்தில் வந்து சப்பென்று மோதுகிற நாற்றம். மலமும், வாந்தியும், மருத்தும் கலந்து குமட்டலான நாற்றம். அவர் முகத்தில் விழுகிற சுருக்கங்கள்.

சில சில வினாடிகள், ஒரு சிலரிடம் தங்கி நின்று விட்டு யந்திரமாய் நகர்கிற எம்.எல்.ஏ. பின்னால் ஆர்வப் பரபரப் பாய்ப் பின்னோடுகிற முனியசாமி.

"பானெட்டுப் பேரு டிஸ்சார்ஜ் ஆகிப் போய்ட்டாக, இப்ப நாப்பத்தொம்பது பேரு நம்மூரு ஆளுக இங்க இருக்காக. நம்மூருக்கு வடக்கே ஒம்பதாவது மைல்லே கவர்மெண்ட் ஆசுபத்திரி. அங்க இருபத்திநாலு பேரு இருக்காக. மேக்கொண்டு ராசபாளையம், சிவகாசின்னு பெரிய ஊர்கள்லே போய்ச் சேர்ந்தவுக வேற..."

பாதிக்கப்பட்டோர் பற்றிய தகவலைச் சொல்லிக் கொண்டே பின்வந்தான், முனியசாமி. கேட்காமலேயே தலையசைத்துக் கொண்டு போன எம்.எல்.ஏ., டாக்டர் ரூமிற்குள் நுழைந்தார். அவருடன் வந்த பரிவாரம், வேடிக்கை பார்க்கக்கூடிய கூட்டம் எல்லாம் அடர்த்தியாகி விட... பிதுக்கப்பட்ட மொச்சைப் பயிராக வெளியே நின்றான், முனியசாமி.

டாக்டரிடம் இங்கிலீஷிலேயே பேசுகிற எம்.எல்.ஏ., ஆங் கிலத்திலும், தமிழிலுமாகப் பேசுகிற டாக்டர். டாக்டரிடம் துல்லியமாக வெளிப்படுகிற வெறுப்பு... வற்புறுத்தலுக்குப் பணிய மறுக்கிற திமிறல்.

ஆங்கிலத்திலேயே படபடக்கிற எம்.எல்.ஏ.

கோபத்தைச் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டு பலவந்தச் சிரிப்போடு பேசுகிற டாக்டர்.

"ஏங்கிட்டே அறுபத்தி ஏழு பேரு அட்மிஷன். நா விடிய விடிய ட்ரீட் பண்ணியிருக்கேன். எதுக்காக இருபத்தி யொன்னுன்னு நா லிஸ்ட் குடுக்கணும்? நோ!"

மீண்டும் வற்புறுத்துகிற எம்.எல்.ஏ. மறுத்துப்பார்த்த டாக்டர், வேறு வழியின்றிப் பணிகிற காட்சி.

இவனுக்கு விஷயம் புரிந்துவிட்டது. புரிந்த விஷயம், உள்ளுக்குள் விஷமாக இறங்குகிறது.

மக்கள் மறியல் போராட்டம் நடத்தி... டாக்டர்கள், அதிகாரிகள் எல்லாம் வந்து சேர்ந்த பிறகு... கடைசி ஆளாய் வந்து சேர்ந்த எம்.எல்.ஏ., இப்போதும் துன்பத்தைத் துடைக்க வரவில்லை. துயரங்களில் பங்கெடுக்க வரவில்லை. பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வாங்கித் தர வரவில்லை. இனியும் காலரா நிரந்தரமாகப் பாதிக்காம லிருக்க, புதிய குடிநீர்க் கிணறு தோண்டுவதற்கான முயற்சிக்காக வரவில்லை.

நோயில் தாக்குண்டோரின் எண்ணிக்கையைக் குறைத் துக் காட்டுகிற பட்டியல் தயாரிக்கத்தான் வந்திருக்கிறார். 67 என்ற உண்மையை 21 என்று பொய்யாக்கத் தான் வந்திருக்கிறார். பொய் ரிக்கார்டு உருவாக்க மட்டுமே...

முனியசாமிக்குள் பிரளயம். முகத்துக்கு நேராகப் பாய்ந்து வருகிற செருப்புகள். சீறிச் சினந்து வருகிற

செருப்புகள். உற்றுப் பார்த்தால்... எல்லாச் செருப்புகளுமே இவனது செருப்புகள்தான். நீலமும் வெள்ளையுமான செருப்பு.

‘தானே தன்னை முட்டாளாக்கிக் கொள்ள முடியுமா? முடிந்திருக்கிறதே...! இதோ நா முட்டாளாகி நிற்கிறேனே...’

இந்தப் புதிய நிஜத்தை தரிசிக்கத் தெம்பில்லாமல் முனியசாமி தவித்தான். உள்திணறல். பேச்சற்று, திகைத்துப் போய் உறைந்து விட்டான்.

திரும்பி வந்த எம்.எல்.ஏ. இவனிடம் வந்தார். இவன் கண்களில் இவனை வாசித்துக் கொண்டார். நெருங்கி நின்று தோளில் கை போட்டார். மனசோடு பேசுகிற அந்யோந்யத்துடன் சன்னைக் குரலில் நிறைய பேசினார்.

‘நம்ம ஆட்சி,’ ‘நம்ம கட்சி,’ ‘பேப்பர்காரங்க,’ ‘விஷமம்,’ ‘களங்கம்,’ ‘எதிர்க்கட்சி,’ ‘சட்டசபை’ என்றெல்லாம் ரெண்டு நிமிஷம் பேசினார்.

இவனுக்குள் எதுவுமே இறங்கவில்லை. கண்களின் முன் கலர் கலராய் ரேகைகள் மிதந்தன.

“சரி, போங்க...” என்று மட்டும் கடைசியாய்ச் சொன்னான், முனியசாமி.

பரிவாரங்களுடன் எம்.எல்.ஏ.யும் ஏறிக்கொள்ளசிமிண்டு கலர் மாருதிவேன் புறப்பட்டது. இவன் அங்கேயே நிற்க, வேன் மட்டும் போய்க்கொண்டேயிருக்கிறது. தூரம் தூரமாய்... அந்நியமாய்...

கல்கி தீபாவளி மலர் – நவம்பர், 1993

11.யார் நான்?

சுப்ரமணியசாமி என்ற தன் பெயரையும், முழு முகவரி யையும் லெட்ஜரில் எழுதி கையெழுத்திட்டுவிட்டு, லாட்ஜ் பையன் திறந்துவிட்ட அறைக்குள் நுழைந்த போது—

அவனுள் ஓர் இறுக்கம், மனதில் பதற்றம். ஒரு குற்ற உணர்ச்சி.

ஷர்ட்டைக் கழற்றி ஹாங்கரில் மாட்டி, கைலியை எடுத்துக் உடுத்திக்கொண்டு, பேண்ட்டை உருவினான். கட்டிலில் சாய்ந்தான். மின்விசிறி காற்றின் இரைச்சல். 'யாராவது பார்த்திருப்பார்களோ.' உள்நடுக்கம்.

இந்த லாட்ஜ், அப்படிப்பட்ட 'ஒரு மாதிரி.' இவனும் அதே 'ஒரு மாதிரி.' சபலத்தில், வங்கியில் வேலை முடிந்த கையோடு ப்ரீஃப்கேஸோடு இங்கு வந்துவிட்டான். வீட்டுக்குப் போகவில்லை. அவள் இரண்டாவது பிரசவத் திற்காக வயிற்றைக் தூக்கிக்கொண்டு போயிருக்கிறாள்.

அவள் இல்லாத வெறுமை, வீட்டுக்குள் வந்து மோதுகிறது. தனிமை உணர்வின் பாலையை சகிக்க முடிய வில்லை. சுவரின் சிறு பூச்சிகளின் மெல்லிய முணு முணுப்புகள்கூட இவனுள் பெரும் சலசலப்பை ஏற்படுத்து கிறது. சமூக முகத்துக்குப் பயந்து உள் பதுங்கிக் கிடந்த ஆதி மனிதன் ஆரவாரம் செய்து எழுந்து விடுகிறான்.

ஆதி! ஆதிகால மனிதன்! ஆடையில்லா— தடைகளில்லா வன உலகம். ஆணும் பெண்ணும் ஒருடலும் ஒருயிருமாய்—

யாருடனும் யாருமாய்– பின்னிப் பிணைந்து மனம் லயிக்க எந்த வரம்புமில்லை. ஒழுக்கம் என்ற சுவர் இல்லை. நாகரீகம் என்ற பாவலா இல்லை. சமூக மரபு என்கிற இடைஞ்சல் இல்லை. முடிவில்லா வனத்தில்– எல்லை யில்லா சுதந்திரத்துடன், எல்லாப் பெண்களும் எல்லா ஆண்களும், பூக்களும் ஈக்களுமாய்...

ஆ! அது எத்தனை அற்புதம். அந்த வனச்சுதந்திரம். பறவைகளின் ஆகாயச் சுதந்திரம்.

'காஃப்கா'வின் 'விசாரணை' நாவல் மனசுக்குள் வருகிறது. வழக்கு விஷயமாக அலைகிற அதன் கதா நாயகன், எதிர்ப்படுகிற எல்லாப் பெண்களிடமும் இளிக் கிறான். முத்தமிடுகிறான். உறவுகொள்கிறான். அதுகளும் 'சட் சட்'டென்று இசைந்து விடுகின்றன, துளிக்கூட மறுப்பில்லாமல்.

காஃப்காவின் மன உலகமும் சுலபமான உலகம். காட்டு மிராண்டிக்குரிய சுதந்திரம(ா)ன உலகம்.

சுழலும் விசிறியின் சிறகுகளையே பார்த்துக்கொண்டு யோசித்துக் கொண்டிருந்தவன், கதவு தட்டப்படும் சத்தத்தில் திடுக்கிட்டுப் போனான். பதற்றத்தில் மனம் படபடத்தது.

"சார் காபி வேணுமா?"

"ஹப்பா! நீதானா?"

"ம்... கொண்டா."

வயிற்றைத் தூக்கிக்கொண்டு மனைவியே வந்து கதவின் மறைவில் நிற்பதாய்... ஒரு பிரமை.

"வெட்கமில்லாமல் தரங்கெட்டுப்போய் இப்படி அலையுறியே... நீயெல்லாம் படிச்சவன்தானா?"

நெரியும் புருவங்களோடு அவனது மாமனார் அதட்டலாய் திட்டுகிற மாதிரியோர் உணர்வு. சமையலறையில் மாமியார் வெறுப்போடு காறித்துப்புகிற சத்தம். ஏளனமாய் பார்வையில் எற்றி விளையாடுகிற சக ஊழியர்கள். ச்சே!

ஒழுக்கம்... மரபு... பண்பாடு... மனைவி, குடும்பம், சமூக உறவு, மனிதநாகரீகம், மதிப்பீடு எல்லாமே போலிகள். வாழ்கிற வாழ்க்கையை அபத்தமாக்குகிற மனிதப் போலிகள். சுதந்திரத்தைத் தின்று வளர்ந்த ராட்சஸப் போலிகள். மனிதனை மடக்கி உருட்டி கட்டப்பட்ட கயிற்றுப் பின்னல்கள்.

ஸ்ட்ரக்ச்சுரலிஸம் சொல்வதுதான் சரி.

இறுகிப்போன நிறுவனங்களைத் தகர். குடும்பம் என்ற பந்தச் சுமைகளை உதறு. ஒழுக்கம் சார்ந்த சகல கட்டுப் பாடுகளையும் அறுத்தெறி. புனிதம் என்று கும்பிடப்படும் சமூகத்தின் எல்லா அமைப்புகளையும் சர்வநாசம்செய். சுதந்திரமாகு. உள்ளும்புறமுமாய் தன்னந்தனியனாகு. மண்ணின் சுகம் முழுவதையும் காட்டுமிராண்டியின் மூர்த்தன்யத்துடன் ஆக்ரமி...

காபி குடித்தவுடன் சிகரெட் வேண்டும். நல்லவேளை, பையில் இருந்தது.

சேலை உடுத்திய 'அது' வர நேரமாகும்.

அதுவரை?

ப்ரீஃப்கேஸிலிருந்து மூன்று புத்தகங்களை எடுத்தான். ஒன்று, ஆல்பர்ட் காம்யூ எழுதிய 'அந்நியன்,' மற்றது இரண்டும் இவன் எழுதியது. சுப்ரணிஸா என்ற புனைப் பெயரில்.

'என் தொலைந்து போனவர்கள்' கவிதைப்புத்தகம். 'இஸங்களின் நெரிசலும், 32 இஞ்ச் ப்ராவும்' என்ற நாவல்

ஒன்று. இந்த இரண்டையும் புத்தகமாக்குவதற்குள் இரண்டு மாதச்சம்பளம் அம்பேல். புத்தகம் வந்தவுடன் 'ப்ரிய நண்பர்கள்' நிறையபேர்கள் வந்து ஓசியாக வாங்கிப்போய் விட்டார்கள், டிஃபனுடன்.

சம்பள இழப்பில் கசந்து போயிருந்தான். சமாளிக்க முடியாமல் திணறினான்.

சிற்றிதழில் விமரிசனம் வந்தது. வேறு சில சிறுசிறு பத்திரிகைகளிலும் திறனாய்வுகள்.

குழம்பிக் கிடந்த சுப்ரணிஸாவை எங்கோ உயரத்திற்குக் கொண்டு போயிற்று. சுப்ரணிஸாவின் வினோதமிக்க மன உலகம் பற்றிய பெரிய பெரிய கண்டுபிடிப்புகள் வந்திருந்தன. இவனுக்கே தெரியாத தத்துவ வெளிப் பாடுகள், திறனாய்வாளர்களுக்கு தரிசனமாகியிருந்தது. இவனுக்குப் பிடிபடாத பல உன்னதங்களும், மன உணர்வின் அனுபவ ஆழங்களும் அவர்களுக்குப் பிடிபட்டிருந்தது.

இவனுக்கு ரொம்பசந்தோஷம். இவனுக்கு இவனே புதிதாகத் தோன்றினான். பிரமிப்பாகத் தோன்றினான். இந்தத் 'தோன்றலில்' ரெண்டுமாதச் சம்பள இழப்புகூட மறந்து போயிற்று.

விமரிசகர்கள் வேடிக்கையாளர்கள்தான். அதிலும் சில சிற்றிதழ் ரக விமரிசகர்கள் ரொம்ப விசேஷம்!

சருகுளைக்கூட பெரிய மேதையாக்கி விடுகிறார்கள். இவனை மேதை என்று புகழ்வதன் மூலம், தங்களது மேத மையை தக்கவைத்துக் கொள்கிறார்கள்.

இவனுள் மெல்லிய பரிகாசச் சிரிப்பு.

என் படைப்பு நிஜமா? இவர்களின் திறனாய்வு நிஜமா? சுப்ரமணியசாமி நிஜமா? சுப்ரணிஸா நிஜமா? எது நிஜம்? இந்த வாழ்க்கையில் எதுதான் நிஜம்? நிஜமென்று நினைப்ப

தெல்லாம் நிஜமா? நிஜமாய்த் தோன்றுகிற ஆகா யம் நிஜமா? அதன் நிறம் நிஜமா? 'நீ படிச்சவன் தானா?' என்று புருவம் நெரிக்கிற மாமனார் நிஜமா? அவரது தாம்பத்யம் நிஜமா? அவரது ஒழுக்கம் நிஜமா? அவரது ஆத்மாவுக்கு அவர் நிஜமா?

என் மனைவி நிஜமா? மோகத்தில் – அவள் தேகத்தில் புரண்டது நிஜமா? வயிற்றைக் துருத்திக்கொண்டிருக்கிற இன்றைய அவளை வெறுக்கிற உணர்வு நிஜமா? இங்கு வாழ்க்கை என்று சொல்லப்படுகிற அபத்தம் நிஜமா? கட்டிக்கொண்டு மாரடிக்கிற சமூக தர்மம் நிஜமா?

எதுதான் நிஜம்?

உலகம் நிஜமா? உறவுகள் நிஜமா? என்னுள் சுரக்கிற ஹார்மோன் நிஜமா? தினவு நிஜமா? வரப்போகிற வாடகைப் பெண் நிஜமா? வங்கிச்சம்பளமும், அந்தஸ்தும் பொய்யா? வயிறும், பசியும், கௌரவமும் பொய்யா?

எது மாயை? எது நிஜம்? எல்லாமே மாயைகள் தானா? உருவமற்ற அரூப சாயைகள் தானா? இந்த மாயைகளைத் தான் நிஜம் என்று நம்பி நம்பி... மோகித்தும், பயந்தும் மனிதன் அலைகிறானா? இந்தக் கானல் அலைச்சலைத் தான் வாழ்க்கை என்று வர்ணமிட்டுப் பேசுகிறோமா?

இதை வைத்தே ஒரு நாவல் எழுதலாமே. எழுதணும். ராசியான நம்பர் 13. 13 அத்தியாயங்கள் எழுதணும். தலைகீழாக வரிசைப்படுத்தணும்.

முன்னுரை முடிந்தவுடன் 13–வது அத்தியாயம். அப்புறம் 12–வது அத்தியாயம். பிறகு 11–வது அத்தியாயம். கடைசியாய் முதல் அத்தியாயம்.

புரியுமா? வாசிக்கிறவனுக்குள் குழப்பமும் இருட்டும் தானே மிஞ்சும்? போகட்டும். புரிய வேண்டும் என்பது முக்கியமா? புரிதலுக்கு அப்பாற்பட்டதுதானே இலக்கியம்?

அது ஓர் ஆத்ம வெளிப்பாடு. அனுபவதரிசனம். உணர்வுகளின் மவுனஅலறல். ஆழ்மன அலையின் தெறிப்பு.

புரிவதும் புரியாததுமா முக்கியம்? ஒவ்வொரு படைப் பிலும் புரிகிற மாதிரி ஒரு செய்தி இருந்தாகவேண்டும் என்பது கட்டாயமா? இது என்ன அஞ்சாங் கிளாஸ் பாடப்புத்தகமா?

எடை மிஷினில் ஏறி காசு போட்டவுடன் ஒரு அட்டை வந்து விழுகிற மாதிரி... ஒவ்வொரு கவிதை வாசித்து முடிந்தவுடன் ஒரு செய்தி அட்டை வந்து விழ வேண்டுமா?

ஒவ்வொரு சிறுகதையின் முடிவிலும் ஒரு சோற்றுப் பொட்டலம் நீளும் என்று எதிர்பார்ப்பதா? இது என்ன இலக்கிய பாமரத்தனம்?

மனிதன், மனிதநேயம், சமூக மாற்றம் என்று வறட்டுத் தனமாய் பொய்களைக் கட்டிக்கொண்டு மாரடித்து மாரடித்துப்போன முற்போக்காளர்கள்தான்... புரிதல்பற்றி கூச்சலிடுவார்கள். மந்தைக்கூச்சல்.

இதுகளை விட்டுத்தள்ளு!

தலைகீழ் வரிசையில் அமைக்கப்பட்ட அத்தியாயங் களோடு வரப்போகிற நாவலுக்கு என்ன தலைப்பு வைக்கலாம்?

''மரண மகிழ்வில் தலைகீழ் உலகம்.''

ஆ! அற்புதமான படிமம். புரிபடாத புதிர்த்தலைப்பு. இந்த நாவல் வெளிவந்தால்... விமரிசன மேதைகள் அசந்து போவார்கள். 'கிறுக்குத்தனம்' என்று விமரிசித்தால், பாமரத்தனமாகி விடுமே என்ற நடுக்கத்திலேயே 'இலக்கிய உன்னதம்' என்பார்கள். 'நவீன உத்தி' என்று சிலாகிப் பார்கள். ''உத்திகளின் மூலமே உலக வாழ்வின் முகங்

களைக் காட்டிவிடுகிற அதி நவீன முயற்சி'' என்று தூக்குவார்கள்.

சுப்ரணிஸா பிரபல்யமாகிவிடுவான். சகலராலும் எதிரும் புதிருமாய் பேசப்படுவான். நவீன இலக்கியத்தின் முன்னணி முகமாகி விடுவான். மௌனி, லா.ச.ரா., எல்லாம் பின்னுக்குத் தள்ளி, இவன் பெயர் மேலே வந்து விடும்.

இலக்கிய விமரிசகர் பெரிதாக எழுதித் தள்ளுகிற சர்வதேச நவீன நாவலாசிரியர்களெல்லாம்... சுப்ரணிஸா முன் வெறும் தூசியாகி விடுவார்கள்...

... கதவு தட்டப்படுகிற சத்தம். சன்னமாய் விலகிய கதவின் அருகில் லாட்ஜ் பையனின் தலை முறைத்தது.

''என்ன?''

''சார், உருப்படிக வந்துருச்சு. நீங்க வந்து செலெக்ட் பண்ணிக்கிடணுமாம்.''

''யார் சொன்னது?''

''மேனேஜர்!''

''ம்.''

இவனுள் ஜிவ்வென்று ஓர் உணர்வு. நவீன உத்திகள் யாவும் மாயையாகி மறைய... அவனுள் வெறுமையான பெண் தேகம். நரம்புகளில் ஓர் விறைப்பு. மனசுக்குள் பதற்றம். படபடப்பான ஒரு சூன்யம்.

அவன் கண் விழித்தபோது, மணி ஐந்தரை. இன்னும் சரியாக விடியவில்லை. எழ மனமில்லை. உடம்பு முழுக்க அயற்சி. அடிபட்ட மாதிரியோர் அலுப்பு.

முரண்பாடாய் மனசுக்குள் ஒரு நமைச்சல். கசப்பை விழுங்கி விட்ட அழற்சி.

ராத்திரி வந்திருந்த அவள், பேசிய தொகையைவிட கூடுதலாய் கொஞ்சம் கேட்டாள். சம்மதித்தான்.

மன இசைவோடு ஒத்துழைத்தாள். குழைந்திருந்தாள். மிருதுவாகியிருந்தாள். அவள் உதடுகள்... அதன் கனிவு, தேகத்தின் ஒவ்வொரு இணுக்குகள், அதன் நெளிவுகள், வெயில் முகம் பாராத பிரகாசம்...

அந்த நினைவின் லயிப்பில் கரையவிடாமல் வெட்டிய அவளது கூரிய பார்வை. அவள் உதடுகளில் ஊசியாய் நெளிந்த ஏளனப் புன்னகை.

எல்லாம் முடிந்து... பணத்துக்கு பர்ஸைத் துழாவிக் கொண்டிருக்கையில், அவள் கையில் இவனது 'என் தொலைந்து போனவர்கள்.'

ஒன்றிரண்டு கவிதைகளை மேய்ந்தாள். ஊன்றிப் படித்தாள். அவள் முகத்தில் ஒரு தீவிரம். தொழிலுக்குச் சம்பந்தமில்லாத அறிவுக்களை. கண்களில் விமரிசன ஒளிச் சுழிப்பு.

இவன் திகைத்தான்.

"படிச்சிருக்கியா?"

"பி.ஏ. இங்கிலீஷ் லிட்டரேச்சர்!"

உள்ளுக்குள் குலுங்கிப்போனான். ஊசி ஊசியாய் அவனுள் குற்ற உணர்வின் குத்தல்கள். தன்னை அசிங்கமாய் உணர்ந்தான். பாயாசத்தில் வாய் வைத்த பன்றியாய்...

"என்ன நெனைக்குறே இப்ப?"

"உங்களைப் பத்தியா?"

"ம்."

"உங்க கவிதைகளைப் போலத்தான் நீங்களும். வேஷம் போடுகிற ஆபாச இருட்டு."

"கவிதைகளைப் பத்தி?"

"என் தொழிலைப் போல. வி.டி. பரப்புற நோய்க் கிருமிகள்."

அவள் போய் விட்டாள், தேங்க்ஸ் சொல்லிவிட்டு.

அவளின் சாட்டையடிகள் இப்போதும் அவனுள் சுரீரென்கிறது. மனசின் ஜவ்வுகளைக் கிழிக்கிறது.

தனக்குள் தானே அசிங்கமாய் உணர்ந்தான். அவனுக்கு அவனே வேஷமாய்– இருட்டாய்– ஆபாசமாய்– நோய்க் கிருமியாய்...

எல்லாம் சில கணங்கள்தான். சுதாரித்துக்கொண்டான். தலையை உலுக்கிக் கொண்டான். அந்தக் கசடுகளை உதறியெறிந்து விட்டான்.

இவளது விமரிசன அறிவு நிஜமா? தொழில் நிஜமா? ரெண்டுமில்லாமல் இவள் பேசிய விதம் நிஜமா? எல்லாமே பொய். பொய்கள். ஒன்றில் ஒன்றாகக் கலந்து போகிற போலிகள்.

பெருமூச்சுடன் எழுந்தான். வாஷ்பேஸினில் தண்ணீரைத் திறந்தான். வாயைக் கொப்பளிக்கணும். முகம் கழுவணும்.

கன்னம் முழுக்க அவளது காய்ந்த எச்சில். உலர்ந்து மொறு மொறுக்கிய உணர்வு. முகத்தைக் கழுவிய நிலையில் கண்ணாடியில் பார்த்தான். நீர்முத்துக்கள்.

சின்ன வயது சுப்பிரமணிய சாமியை அதட்டிய அப்பாவின் குரல்.

"ஒறங்கி முழிச்சவுடனே வாயைக் கொப்பளிச்சு, மொகத்தைக் கழுவித் துடைடா"

அப்பாவுக்கும் அவ்வாறே அறிவுறுத்தப்பட்டிருக்கும்.. தாத்தாவுக்கும். அவனுள் கவிதைக்குரிய பரவசம். தரிசனப் பரவசம்.

''முகம் கழுவு
வாயைக் கழுவு
யார் சொன்னது?
அப்பா.
அப்பாவின் அப்பா
அப்பாவின் தாத்தா
தாத்தாவின் அப்பா
கழுவிக் கழுவி
கரைந்து
காணாமல் போச்சு
முகங்கள்.''

எதுவும் நேர்ப் பொருளல்ல. முழுக்க படிமங்கள். ஆ! அற்புதம்!

அவசர அவசரமாய் டைரியில் குறித்துக்கொண்டான். குறிக்கும்போது ஒரு சின்ன இடறல்.

'போச்சு' என்பது சரிதானா? அது மட்டும் பேச்சு வழக்கில் இருக்கலாமா? இருந்து விட்டுப் போகட்டும்!

யார் கண்டது? விமரிசகர்கள், அந்த பேச்சு வழக்கு வார்த்தைக்குக் கூட ஏதேனும் புது அர்த்தம் கற்பித்து, 'ஆகா, ஓகோ' என்று புகழ்ந்தாலும் புகழக்கூடும்...

இவனுக்கு டீ சாப்பிடணும் போலிருந்தது. கூப்பிட்டால் பையன் வருவான். வேண்டாம். வெளியே காலாற போய் வரலாம். காலை நேர உலகின் குளிர்ச்சி மனசுக்கு ரம்மியம்.

சட்டை போடணுமா? போட்டிருந்தால் தான் டீயா? காசுக்குத்தானே டீ? அப்புறம் எதற்குச் சட்டை? சட்டை

தான் சுப்ரணிஸாவா? இல்லாவிட்டால் இல்லையா? சட்டையை தாண்டி, சுப்ரணிஸாவுக்கென்று சுய அடையாளம் இல்லையா?

சட்டை, போலி நாகரீகத்தில் திளைத்து திளைத்து மரத்துப் போன மனசுகளின் குறியீடு.

சட்டையை அணிந்து கொண்டான். செருப்பை மாட்டி, கடிகாரத்தையும்...

கதவைச் சாத்தினான். அந்தப் பால்கனியின் மூலையில் கும்பலாய் உட்கார்ந்திருந்த நாலைந்து துப்புரவு தொழிலாளிகளின் காக்கி உடுப்புகள். அத்துடன் நீலவண்ண லாட்ஜ் பையன்கள். இவனை ஜாடை காட்டி ஏதோ பேசுகிற மாதிரி... ஒரு தோற்றம்.

கதவைப் பூட்டுகிற சாக்கில் தேங்கினான்.

"இதென்ன பொறம்போக்கா?"

"சும்மாயிரு. பெரீய்ய ஆளு. பேங்க்லே ஆபீஸர்."

"அப்புறம்... இங்க வந்து, இப்படி?"

"தினவெடுத்துப் போய் இங்க வருது?"

"சே! இம்புட்டு கௌரவமான ஆளு. இங்கயெல்லாம் வரலாமா? அசிங்கம்!"

"கௌரவமாவது, மண்ணாங்கட்டியாவது! தெரு நாய், செக்குன்னு கண்டதா... சிவலிங்கம்னு கண்டதா?"

இவனுக்குள் ஜில்லிடுகிற பயம். கிலி. இவனை 'தெரு நாய்' என்று வாயால் எற்றி விளையாடுகிறார்கள். சீற முடியாது. சீறினால்... 'உன்னைப் பேசலே' என்று எகிறி விடுவார்கள். கேவலப்பட்டது தான் மிச்சம்.

மனுச ஜென்மங்களையே வெறுத்தான். மிரட்சியோடு அந்த மூலையைப் பார்த்து விட்டு நடந்தான்.

யோசனைகளைத் தொடர முடியாத இடறல். மனசுக்குள் செருப்படிப்பட்ட அவமான அவஸ்தை.

பவுடர் அப்பிய முகத்தை இடது கையால் துடைத்துக் கொண்டு வெளியே வந்தான். காலைப்பொழுதின் வீதி. சத்தங்களின் மழலைச் சன்னம். பரபரப்பு இல்லாத, மெது வான உயிர்ச்சலனம்.

லாட்ஜைத் தாண்டி சற்று தூரத்தில் டீக்கடை. போய் நிற்பதற்குள்– இவன் கேட்பதற்கு முன்பே–

"சாருக்கு ஒரு டீ போடு."

இதுதான் சட்டை. சட்டை வாங்கித்தருகிற மரியாதை. அவனுள் காலை நேர ஜிலிர்ப்பு. ரம்மியம். இதம்.

எதிர் வீட்டு முற்றத்தில் – நீர் தெளித்த ஈரத்தில் அரை குறையாக உட்கார்ந்து – கோலம் போடுகிற இளம்பெண். மஞ்சள் கிழங்கு மாதிரி இளமையாயிருந்தாள். மஞ்சள் பூசிக் குளித்திருந்தாள். தலையில் சுற்றியிருந்த துணியை மீறிக் கொண்டு ஒரு ரோமக்கற்றை. அதன் அடி நுனியில் தொங்குகிற நீர்த்துளி.

காலில் கொலுசு. கால் விரலில் மஞ்சளில் துல்லியமாய்த் தெரிகிற மிஞ்சி, கல்யாணமாகியிருந்த அடையாளம். வைகறைக்குளியல்... அப்படீன்னா...

ராத்திரியில் ஜாக்கட் ஊக்குகளைக் கழற்றியிருக்கிறாள். ஒழுக்கம், நாணம், அச்சம் எல்லாவற்றையும் கழற்றிய மனுஷியாய்– மனைவியாய்– ஆடை நெகிழ்ந்த வெளிச்ச தேகமாய்...

இவனுள் இன்னும் நீள்கிற கற்பனை. அவள் விடுகிற பெருமூச்சின் இரைச்சல். குலுங்குகிற தங்கக் குழைவுகள்.

அவள் மீது படர்கிறவனாய்... இவன்.

"இந்தாங்க சார் டீ."

டீக்கிளாஸ். அதிர்வோடு திரும்பி வாங்கிய இவனை அளக்கிற மாதிரி, கடுப்போடு பார்க்கிற டீக்கடைக்காரர். அதைக் கவனிக்காமல் இவன் சுய உலகில்...

"உறக்கச் சட்டையை
உரித்துப் போட்ட
காலை மனசு
கட்டறுந்து மேய...
அலைந்த மனசு
திரும்பி வந்தது
அழுக்குச் சாக்கடையாய்..."

இவனுள் மீண்டும் ஆழ்மன வெளிப்பாடு. உள்மனத் தரிசனம். கவிதை உணர்வுப் பெருக்கு. அவசரமாய் இதைக் குறிக்கணும். பரபரப்பாய் ஓடிய அவனை எட்டிப் பிடிக்கிற குரல்.

"சார்... டீக்குக் காசு..." அவர் குரலில் இப்போது வெளிப்படையான அலட்சியம். வெறுப்பு.

குழப்பமடைந்து போன அவன், எதையோ உளறி விட்டு ரூபாயை நீட்டினான். மீதிச் சில்லறையை தருகிற போது— டீக்கடைக்காரர் பார்வை சீறியது: "நீயெல்லாம் ஒரு மனுசந்தானா?"

இவன் உள்ளுக்குள் ஒடுங்கிப்போனான். இழிவு படுத்தப் பட்ட மனநிலையில் திரும்பினான். அவன் முதுகைத் துரத்துகிற டீக்கடைக்காரரின் மெல்லிய முணுமுணுப்பு.

"விடியுறத்துக்குள்ளே இம்புட்டுப் பவுடரை அப்புற பய எப்படியிருப்பான்? இப்படித்தான். மலந்திங்கிற பன்னி மாதிரி... அலையுறான், ராஸ்கல்!"

ஒடிந்து நொறுங்கிய குச்சியாக அறைக்குள் வந்து விழுந் தான். மனசுக்குள் அவமான அவஸ்தை. பயப் படபடப்பு.

டீக்கடையில் முகம் காட்டிய கவிதையை ஞாபகத்திற்கு கொண்டு வர முயன்றான். வார்த்தைகள் நழுவி... நழுவி... அரூபமாகி... கண்ணாமூச்சி காட்டி...

ஆயாசத்தில் அப்படியே படுத்து விட்டான்.

ராத்திரி வந்தவள் பார்வையில் இவன் 'தெருநாய்.'

சிறு பத்திரிகை விமரிசகர்கள் பார்வையில் இவன்... 'உத்தியின் மூலம் உலக மாயையை உணர்த்துகிற உன்னத நவீனன்.'

இதில் எது நிஜம்? எது பொய்? எல்லாமே நிஜமா? எல்லாமே பொய்களா?

இவன் பார்வையில் இவன் யார்? யோக்கியனா, புழுவா? மனுசனா, தெருநாயா?

யார் இவன்? சுப்ரமணிஸா என்றால் யார்? உண்மையில் அவனுக்கு அவன் யார்?

கேள்விகளையே அடுக்கி அடுக்கிப் பார்த்தவன், அந்த அடுக்கு வரிசையிலேயே ஏதோ ஒன்று அவனுள் தரிசனமாக...

டைரியைத் தேடினான், குறிக்க.

சுபமங்களா — டிசம்பர், 1992

12.மரணத்தின் விலை

''**தொ**ண்ணூறுகளில் எழுதிய என் கதைகளைப் படித்திருப்பீர்கள். 1972–ல் எனது முதல் சிறுகதை செம்மலரில் பிரசுரமாயிற்று. 1980க்கு முந்தைய வருடங்களில் எனது மொழி நடையும், கருத்தோர்வும் எவ்வாறு இருந்திருக்கும் என்று அறிய ஆராய விரும்புகிறவர்களுக்காக... இச்சிறுகதை.

1978-ல் எழுதப்பட்ட கதை. எமர்ஜென்ஸிக்குப் பிந்தைய தேர்தல் நாளின் அனுபவம். ஓர் எழுத்தை கூட மாற்றாமல் அப்படியே...''

__அ__வன் ஒரு பிரச்சனையைத் தீர்த்த நிம்மதியுடன் வீதிக்கு வந்தான்.

இறுக்கத்துக்குள் புழுங்கியே கிடந்த இதயத்தில் ஒரு நெகிழ்வு நிகழ்ந்தது. இளந்தென்றலான நினைவுகள் சுகமாக தழுவின. 'அப்பாடா, ஒரு வழி கெடைச்சுப் போச்சு...'

சட்டையின் காலரை மேலே இழுத்துவிட்டுக்கொண்டு வீதியில் நின்று நிமிர்ந்து பார்த்தான். உலகத்தையே அலட்சியப்படுத்திவிட்டாற் போன்ற ஒரு வெற்றிப் பெருமிதம் கண்களில் சுடராக ஒளிர்ந்து மின்னியது. எப்போதும் சற்றுக் கூனியே நடக்கின்ற அவன், வழக்கத்திற்கு முற்றிலும் மாறுதலாக நெஞ்சை முன்பாக நிமிர்த் தினான். ஆம்! எல்லாமே மாறித்தான் போச்சு.

வருங்கால துக்கத்தையெல்லாம் குத்தகை எடுக்கப் போறவன் போல, கறுப்பு அங்கி, கறுப்புத் தொப்பி அணிந்து கொண்டவாறு... பி.ஏ. முடித்ததற்கான பட்டம் வாங்கிய அன்றுகூட இவ்வளவு சந்தோஷம் பொங்கி வழியவில்லை... ஆனால் இன்று...?

'நாளை இன்னேரம் நா எப்படியிருப்பேன்...?' என்று நினைக்கும் போது மனம் நிம்மதியின் பனியில் குளிர்ந்தது. அதே நேரத்தில்... ஒரு பயங்கரமான பீதியும் அருவருப்பும் இதயத்தை ஜில்லிட வைத்து 'ஆம்... நாளை... ஏதோ ஒரு தெருவின் ஓரத்தில் பிணமாகக் கிடப்பேன்...!'

தமது சொந்தக்கிராமத்தில்... தனி மரங்களாகிப் போன பிள்ளைகளால் கைவிடப்பட்டு... பட்டினி கிடந்த ஒரு கிழவன், பூச்சிக் கொல்லி மருந்தை குடித்துவிட்டுச் செத்துக் கிடந்த காட்சி அவனது கற்பனைக்கு ஊற்றுக் கண்ணாக அமைந்தது.

தெருவில்... கண்கள் செத்து விழித்து நிற்க, கோணிப் போன வாயில் நுரை பொங்கி உறைந்து கிடக்க... முகத்தில் ஈக்கள் மொய்க்க தெருவில் போவோர் வருவோர் அருவருப்போடு முகத்தைச் சுளிக்குமளவுக்கு அலங்கோல மாக, பரிதாபமான அனாதைப் பிணமாக தன்னையே நினைத்துப் பார்த்தபோது...

அவன் உடல் குலுங்கியது; முகத்தில் குப்பென்று வேர்த்தது; மனம் திக்கென்று ஸ்தம்பித்து அதிர்ந்து போயிற்று. அப்படியே சில்லிட்டுப் போய்விட்டான். அழுக்காகிப்போன 'கர்சீப்' பால் முகத்தைத் துடைத்துக் கொண்டவாறே சிரித்தான். 'இதென்ன அசட்டுத்தனமான பயம்...? ஹூம்... எதுக்காக நேற்று பூராவும் அலைஞ் சேனோ... அது இப்ப சமீபிக்கிறப்போ... திடும்னு பயந்தா எப்படி? நோ... நோ... நா... பயப்படக்கூடாது. கூடவே கூடாது... பயந்து, அதனாலே ஆகப்போறது? நத்திங்.'

எதேச்சையாக முகத்தைத் தடவினான். ஒன்றரை மாதமாக கண்டிக்காமல் விடப்பட்ட ரோமம், சுதந்திரமாக வளர்ந்து, சரசரத்தது. வீதியின் ஓரத்திலிருந்த கடை வரிசையை கவனித்தான். எதையோ– தேடினான். பார்பர் ஷாப்!

கால்கள் இயங்கின. ஸ்லிப்பர் தேய்ந்தது, 'அறுந்து விடுவேன்' என்று மிரட்டியது. அவன் அலட்சியமாக சிரித்துக் கொண்டான். 'நான்தான் 'லைப்'பையே அறுக்கப் போகிறேனே' என்று வேதனை கலந்த பரிகாசத்துடன் நினைத்துக் கொண்டான். சாகிறது சாக போறோம்... கொஞ்சம் நல்லா சாவோமே!

பார்பர் ஷாப்பிற்குள் நுழைந்தான். சேர் காலியாக வில்லை. வெயிட் பண்ண வேண்டும். பரவாயில்லை. என்ன அவசரம்...?

பலகையில் உட்கார்ந்தான். சுற்றிலும் கலர்கலராக படங்கள்! அங்கே பெண்கள் லட்சுமி சரஸ்வதி என்று புனிதப்படுத்தப்பட்டு பத்தியை சுவாசித்தனர். அதே நேரத் தில் கிளர்ச்சியூட்டும் காம உணர்ச்சி களிப்புகளுடன் நிர்வாணப்படுத்தப்பட்டும் தொங்கினர்!

"என்ன சார் ஷேவிங்கா, கட்டிங்கா?"

"ஷேவிங் மட்டுந்தான்..."

"கொஞ்சம் வெயிட் பண்ணுங்க. இதோ முடிச்சிடுறேன்."

"பரவாலே..."

மேஜையின் விளிம்பில் கிடந்த பத்திரிகையை எடுத்து விரித்தான். பற்றற்ற தன்மையுடன் மேய்ந்தான். 'ஹெட்டிங்' கறுப்பெழுத்துக்களாக கொறித்தான்.

திடும்மென்று அவனுள் ஒரு பரபரப்பு; அந்தச் செய்தி, அவனது பற்றற்ற தன்மையை சிதறடித்து ஆர்வத்தை ஈர்த்தது. பரபரப்பான ஆவலுடன் வாசித்தான்.

"வேலைவாய்ப்பை பெருக்குவதற்காக கடந்த ஆண்டில் பல பத்துக்கோடி ரூபாய் அரசால் செலவிடப்பட்டுள்ளது. வேலையின்மைச் சவாலை முறியடித்து உள்ளோம்" என தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் மத்திய மந்திரி முழங்கியிருக்கிறார்.

அவனது கண்கலில் பாஸ்பரஸ் தீப்பிடித்துக்கொண்டது போன்று திடீரென ஆவேசாக்கினி பளிச்சிட்டது. மனதில் பொங்கிய ஆக்ரோஷத்தில் கைகள் நடுங்கின. உள்ளங்கை வியர்த்தது.

'அயோக்கிய ராஸ்கல்ஸ்! வேலை வாய்ப்புக்காக கோடி கோடியா கொட்டுனாங்களாம்... படித்த பட்டதாரிகளின் வாழ்க்கையில் ஒளியேத்த தீயை வைச்சாங்களாம்!' வெறுப்பு முட்டியது.

பிரளமாய் பொங்கிக் குமுறிய உணர்ச்சியில் பத்திரி கையை கிழிக்கப் போனவன் திடுக்கிட்டு பிரக்ஞையுற்று நிறுத்திக் கொண்டான். ஆனாலும் அவன் உதடுகள் துடித்தன.

'இவங்களுக்கு ஓட்டா போடணும், திருட்டு ராஸ் கல்ஸ்... வேற 'எதாச்சும்' தான் போடணும்' என்று உரக்கவே முணுமுணுத்தான்.

உணர்ச்சி மயமாகி நின்ற அவனை பார்பர் ஏளனம் கலந்த அமைதியுடன் பார்த்தான்.

பத்திரிகையை கையாலாகாத்தனமான எரிச்சலுடன் வீசி எறிந்தான். கண்ணாடியில் தன்னைப் பார்த்தான். கோபாவேச உணர்ச்சியில் முகம் கறுத்து விகாரமாக தோன்றியது. கைக்குட்டையால் முகத்தை துடைத்துக்

கொண்டான். சிரமப்பட்டு உணர்ச்சிகளை சமனப்படுத்திக் கொண்டான்.

பல நாட்களாக எண்ணெய் மறந்துபோய் காய்ந்து சாம்பல் நிறமாகிப்போன தலைமயிரைத் தடவிக் கோதினான். கல்லூரி நாட்களில் ஒழுங்காக கத்தரித்து, அழகுபடுத்தப்பட்டு, கருமையின் மினுமினுப்புடன் திகழ்ந்த தனது பழைய தலைமயிரை... பழைய கனவைப் போல நினைத்துக் கொண்டான். மனதுள் ஒரு சோகமான சூன்யம் கவ்வியது.

தலைமயிர் மட்டுமா...? வாழ்க்கையே நிலைமாறிப் போச்சு... நிலைகுலைஞ்சு போச்சே! நிலையையே அழிக்கப்போகுதே!

மறுபடியும் கண்ணாடியில் பார்த்தான். நிறம்மாறி, அவனது வாழ்க்கையைப்போல் கிழியத் தயாராகிப்போன ஷர்ட் அழுக்கடைந்துபோன நாலுமுழ வேட்டி; கறுத்துச் சுருங்கிப்போன முகம்; பலநாள் பட்டினியில் வாடிக் களை செத்துக் கிடந்தது; கண்களின் அடியில் ஒரு நிழல் படிந் திருந்தது; கிழட்டு மனிதனுக்குப் போல கன்னச் சதை ஒடுங்கி, எலும்பு தெரிந்தது.

கல்லூரி நாட்களில் பொழுதுக்கு நூறு தடவை பவுடர் போட்டு அழகு பார்த்தது இதே முகத்தைத்தானே! கிரா மத்தில் கூலிவேலை பார்த்து கஞ்சி ஊத்திய அம்மா, இதே முகத்தில் சற்று வாட்டம் தெரிந்தாலும் கவலையில் ஆடிப் போவாளே!

இதே முகத்தின் வசீகரத்தில் மயங்கி... சுற்றிச் சுற்றி வந்து கேலி செய்து வம்புக்கிழுத்து விளையாடுவாளே... அந்த சுப்புலட்சுமி ஓ... அது எத்தனை பசுமையான நாட்கள்...! எளிமை வாய்ந்ததாக இருந்தாலும், இனிமை ததும்பி வாழ்ந்த அமைதியான செழுமையான நாட்களல்லவா...!

ஆ... எல்லாம் ஒரு கனவைப் போல மாயமாய் மறைந்து விட்டதே! வாழ்வின் அருமைகள் யாவும் தொலைதூரக் காட்சியாக ஒதுங்கி ஓட, சூன்யமும் சோகமும் சூழ்ந்து கொண்டதே!

இதெல்லாம் எப்படி நிகழ்ந்தன...? அட இழவே... எனக்கு ஒரு வேலை மட்டும் கிடைத்திருந்தால்...?

பிரச்னைகள் சூழ்ந்த ஒரு கடின வாழ்க்கையையாவது பற்றிக் கொண்டிருக்கலாமே! ஆனால் இப்படி... சாவே ஒரு பிரச்னையாகி, வாழ்க்கை ஒரு கனவாகிப் போயிருக் காதே...!

''சார்... சார்... சார்... சார்...''

சுரீரென்று சுடப்பட்டவனாக பிரக்ஞையுற்றான்.

''வாங்க சார்.''

''ஓ... இதோ.''

சேரில் சாய்ந்தான் 'குஷன்' மெத்தென்று குளிர்ந்தது. பல நாளாக அலைந்த அலுப்பில் வலித்த குறுக்கெலும்பு, 'சொடக்கு' எடுத்துவிட்டாற் போல சுகத்தை அனுபவித்தது.

கன்னத்தில் சோப்பு நுரை மென்மையாகத் தடவப் பட்டது. அதன் குளுமையும் மணமும் மனதை மயக்கியது. அந்த சோப்பு நுரை, மயிலிறகால் தடவியது போன்ற ஒரு மெத்தென்ற சுகம். நாளைக்குச் சாவை ஆவலுடன் தழுவப் போகிறவன்... உலக வாழ்க்கையிலிருந்து ஒரு விமோசன மாக மரணத்தின் காலடியில் வீழப்போகிறவன். இந்த சுகத்தில் மெய் மறக்கிறான். என்ன விந்தை!

அவனும் அந்த சுகானுபவத்தை பரிகாசமாக நினைத்துக் கொண்டான். 'ஓ... வாழ்க்கை என்பது எத்தனை வலிமையானது, வனப்பானது' என்று ஏக்கத்துடன் நினைத்துக் கொண்டான்.

பார்பர், கத்தியை ஒளியேற்றிக் கொண்டார். உள்ளங் கையில் ஒரு துண்டுக் காகிதத்தை வைத்துக் கொண்டு சோப்பு நுரையை வழிக்க ஆரம்பித்தார்.

அந்தச்சுகத்தில் அவன் மயங்கினான். நினைவுகள் ஆர்ப்பரித்தன. துயரமும் அவமானமும் கொந்தளிக்கும் அந்தக் கொடிய நினைவுகள்! கடந்த கால வாழ்க்கையின் காட்சிகள்!

பி.ஏ. படிப்பதற்குள்ளாகவே நிலம் நீச்சு எல்லா வற்றையும் விற்ற கையோடு உயிரையும் விட்ட தந்தை; காலம் பூராவையும் உழைப்பிலும், வறுமையிலும் வாழ்வைக் கரைத்த அம்மாவின் வைராக்கியத்தில் படிப்பை முடித்தது;

ஓயாத அப்ளிகேஷன் பாணங்கள்; அடிக்கடி 'இண் டர்வ்யூ' யாத்திரைகள்; அபத்தமான (பெரிய) மனிதர்களை யெல்லாம் மதித்து கெஞ்சித் திரிந்தது; வேலை ஒன்று கிடைக்காதா என்ற நம்பிக்கையில் காலத்தைக் கரைத்தது; வயோதிக அம்மாவின் உழைப்பில் உயிர் வாழ்கிறோமே என்ற ஓயாத உள் மனவதைப்புக்கு ஆளாகி தவித்தது;

'பட்டணத்துலே வேலை கிடைச்சிடும், அப்புறம் மூணு முடிச்சு... பட்டணத்துலே சினிமா... டிராமா... பீச்...'

நாலாந்தர இலக்கிய ஏடுகளைப் படித்துவிட்டு குழந்தைத்தனமான கனவுகளுடன் தம்மைச் சுற்றிச் சுற்றி வந்த சுப்புலட்சுமியின் பேதமை! நிஜவாழ்க்கையின் தரிசனத்தை சந்தித்து அவள் திணறிப் போனது....

முன் பின் பாராத ஒரு அந்நியனுக்கு அவளை நிச்சயித்து வீட்டில் நிர்ப்பந்தித்தது... இவனிடம் வந்து அழுது புலம்பி கண்ணீரைப் பெருக்கியபோது கையறு நிலையில் வெறும் பொம்மையாய் நின்றது...

ஒருநாள் கல்யாண முழக்கம் கேட்டது... அன்று அவ மதிப்பாலும், நிர்மூலமாகிப்போன காதலாலும்... மூளிப் பட்டுப் போன மூளையுடன் பித்துப்பிடித்தவனாக திரிந்தது...

அந்தக் கொடிய நிலையில் காய்ச்சல் என்று படுத்து, மருந்துக்கும் வழியின்றி உணவுக்கும் கதியற்று, கால மெல்லாம் ஆசையுடன் உழைத்த அம்மா, அவலமாய், செத்த கொடுமை...

மிஞ்சி நின்ற வீட்டையும் கடன் விழுங்கி ஏப்பமிட்டு, அவனை, கிராமத்திலிருந்த சகல உறவையும் அறுத்து விரட்டிய கொடூரம்...

நகரத்தில் வேலைக்காக ஒரு வாய் உணவுக்காய் அலைந்து திரிந்தது... ஒரு சர்வர் வேலையாவது கிடைக் காதா என்று சகாரா ஒட்டகமாக வாழ்க்கைத் தாகத்துடன் ஏறி இறங்கிய எண்ணற்ற படிகள்...

ஏமாற்றமே மூச்சாகி... பசியே உணவாகி வெறுமையே வீடாகி தாகமே நீராகி தவித்த சமீபத்து நடைபிணத்து வாழ்வு நாட்கள்... அப்பப்பா!

உச்சகட்ட சோதனையாக... அன்று பஸ் ஸ்டாண்டில் படுத்திருந்தவனை 'சந்தேகக் கேஸ்' என்று இருபது முப்பது பேருடன் இவனையும் இழுத்துச் சென்றது... ஸ்டேஷனில் இங்கிலீஸில் கேள்வி கேட்டதற்காக பூட்ஸ் கால்களால் உதைப்பட்டு, வெறிகொண்ட பிராணிகளால் கடித்துக் குதறப்பட்ட கொடிய அவமானம்! இனியும் எதுக்காக வாழணும் என்ற கேள்வி வழிமறித்து நின்றது. மிதமிஞ்சிப் போன கசப்பில்– சூன்யமாகிப் போன எதிர்கால இருட் டில்– விரக்தியின் எல்லையையும் கடந்து தற்கொலை செய்ய முடிவு செய்தது. அதற்கும் வழியின்றி தவித்த சிகரக் கொடுமை!

கடலில் விழுந்து சாக முடியாது. நீச்சல் தெரியும்! தூக்குப் போட சாகசமும் இடமும் வேண்டும்... வலுவான கயிறும் வேண்டும்... விஷம் வாங்க காசும் வேண்டும்... எங்கு செல்வது, காசுக்கு எங்கே போவது?

விஷம் வாங்கக்கூட வழியற்று இரண்டு நாட்கள் வெறுமையாகிக் கரைந்தது... இறுதியில் ஒரு யோசனை முளைத்தது... எத்தனை அற்புதமான யோசனை...!

மிச்சமிருந்த ரத்தத்தை 'தானம்' செய்து, காசு வாங்கிய வாறு வெளியே தெருவில் நின்று இதோ பார்பர் ஷாப்பில்...

அடப் பாவமே... எல்லாம்தான் விலையுயர்ந்து விட்டது என்றாலும், மரணம் கூடவா, இந்த விலை?

''சார்... முடிச்சாச்சு.''

நினைவுச் சேற்றிலிருந்து மெல்ல எழுந்தான்...

''எவ்வளவுங்க?''

''முக்கா ரூவா சார்!''

''இந்தாங்க...'' ஒரு ரூபாய் தாளை நீட்டினான். வெளியேற ஆரம்பித்தான்.

''சார்... '' வித்தியாசமான கனிவுடன் பார்பர் கூப்பிட் டார். அவன் நின்றான்.

''என்னங்க...'' என்று திரும்பினான் அவன்.

''நானும் அப்பவே பிடிச்சு உங்க முகத்தைப் பார்த்து கிட்டுத் தானிருக்கிறேன்... என்னவோ மாதிரியிருக்கீ களே...''

இன்னும் மனிதாபிமானம் உயிர் வாழ்கிறதா? பிரமிப் புடன் நிமிர்ந்தவன் கண்ணில் வாழ்க்கையின் மீதுள்ள தீராக் காதல் ஒளிர்ந்தது. ஆனால் மறுகணமே அடங்கிப் போயிற்று.

“ஒன்னுமில்லீங்க...”

“கேட்டா வருத்தப்படமாட்டீங்களே... எந்தஊரு, சாருக்கு?”

“வெளியூரு...”

“இங்கே ஏதாச்சும் ‘ஜாப்’லே இருங்கீங்களா?”

“இல்லே... வேலையிலே இல்லே...” என்றவன் சோர் வுடன் தலையை உலுக்கிக் கொண்டான். தன்னுடைய நிலைமையின் பரிதாபத்தை சுருக்கமாகக் கூறினான்— தற்கொலை முயற்சியைத் தவிர.

“ச்சூச்சூம்... அடே... அடப்பாவமே...!” என்று அடிக்கடி தம்முடைய அனுதாபத்தை பரிவுடன் வெளிப்படுத்திக் கொண்டார் பார்பர்.

“அப்போ பி.ஏ. முடிச்சுட்டீங்க...”

“ஆமா...”

“பார்த்தீங்களா சார் இந்த நாட்டை. இப்படி கோடிக் கணக்கான பேர்களை உயிரில்லாத சவங்களாக அலைய வுட்டுட்டு, ஆளுங்கட்சி அடிக்கிற தமுக்கைக் கேட்டீகளா? ம்ஹ்ம்... நல்வாழ்வை நோக்கி... முன்னேற்றத்தை நோக்கி... நாடு நிக்குது... மணல் கயிறாகுது, வானம் வில்லாகுதுன்னு முழங்கோ முழங்கோன்னு முச்சந்திக்கு முச்சந்தி நாறடிக்கிறாங்க...

ம்... என்ன செய்றது நல்லவனுக்கு காலமேது?” என்று தமது கசப்பான படிப்பினையை வெறுப்புடன் ஒப்புக்கொண்ட பார்பர்,

“சார்... ஒரு வேலை இருக்கு... பாக்குறீகளா?”

“என்னவேலை?” அவனது இதயத்தின் கதவுகள் விருட்டென்று திறந்து புயலே நுழைந்துவிட்டாற் போன்ற தோர் பரவசம்! கண்ணில் ஒரு பிரகாசம்! வழுகிச் சென்

றோடிய வாழ்க்கை அவனைத் தமது தலையில் தூக்கி வைத்துக் கொண்டதோ?

"வாங்க... பக்கத்துலேதான் அந்தக் கட்சி ஆபீஸ். அவங்க தான் உங்களை மாதிரி படிச்சவங்களாப் பார்த்து தேடிக் கிட்டிருக்கானுங்க! 'மேலே'ருந்து வேணுங்கிற மட்டும் பணம் வருது; வேலை செய்யத்தான் ஆளுகயில்லை. அதனாலேதான் 150 ரூபா சம்பளம், 'படி' தர்ரோம்னு படிச்சவங்களைப் பார்த்து வலை போடுறானுக..."

"என்ன வேலை?"

"பிரச்சார வேலை சார்..." என்ற பார்பர், ஒரு முடிவுக்கு வந்தவனாக பேசினார்; "எதுக்கும் எங்கூட வாங்க. உங்களை அறிமுகப்படுத்தி வைக்கிறேன்... அப்புறம் உங்கபாடு... அவங்க பாடு...! எனக்கும் இது பிடிக்கலை தான். இருந்தாலும் நீங்க சொல்ற கதையைப் பார்த்தா ரொம்பக் கொடுமையாயிருக்கு... வாங்கசார்..." என்று பார்பர் கடைப்பையனிடம் சொல்லிவிட்டு தெருவில் நடந்தார். இவன் தொடர்ந்தான்.

அவனது 'அண்டர்வேர்' பைக்குள் கிடந்த பொருள் கனத்தது. மூட்டைப்பூச்சி கொல்லி மருந்து! அவன் அதைத் தடவிக் கொண்டான். சற்று முன்வரை அவன் மனதில் நிலைத்திருந்த நிர்ச்சலனம் தகர ஆரம்பித்துவிட்டது. வாழ்க்கை அவனை ஊசலாடச் செய்தது. அவன் மனதுள் ஒரு பிரளயத்தின் ஆரவாரம்! சட்டென்று ஒதுக்கி விடக்கூடிய அளவுக்கு வாழ்க்கை என்பது அற்ப மல்லவே! அற்புதமல்லவா!!

பார்பர், அந்தக் கட்டடத்திற்குள் நுழைந்தார். மாடிக்குச் செல்லும் வழியில் ஏறினார். அங்கே ஒரு அறையில் மின்விசிறி சுழலும் சப்தம் மென்மையாக ஒலித்தது.

அந்த அறைக் கதவைத் தட்டினார். உள்ளிருந்து கதர் வேட்டி கதர் சட்டைக்குள் ஒளிந்திருந்த ஒரு ஐம்பது வயது மதிக்கத்தக்கவர் வெளியே வந்தார்.

''என்ன ரங்கசாமியா? என்ன இந்தப் பக்கம்...''

''ஒண்ணுமில்லே சார்... இவரு நம்ம ப்ரண்ட். வெளியூர்.''

'அப்படியா' அளவெடுக்கும் நோக்கில் அவனை ஏற இறங்கப் பார்த்தார் அந்தக் கதர்.

''இவர் பி.ஏ. முடிச்சிருக்கார். வேறே எந்தப்படிப்பும் இல்லே... வேலை தேடி திரியுறார், பாவம்... அதான் உங்களைத் தேடி வந்தேன்.''

''அதுக்கு நா என்ன செய்யணும்?''

''என்ன செய்வீகளோ, உங்கபாடு... நா கடைக்குப் போறேன்.''

பார்பர் போய்விட்டார். இவனுக்கு கண்களாலேயே நம்பிக்கையை வழங்கிவிட்டு!

கதரைப் பார்த்தான் அவன். 'வாங்க... உள்ளே வாங்க' என்றவர் உள்ளே போய் படுக்கையில் அமர்ந்தார். அவனுக்கு நாற்காலியைக் காட்டினார். அவனும் அமர்ந்தான். மனதுள் நினைவுப் பேரலைகளின் கூச்சல்! செத்துக் கிடந்த ஆசைகள் நம்பிக்கையுடன் உயிர் பெற்று பேயாடத் தொடங்கின...

சுவர்களில்... உயிர்விட்ட— உயிர் வாழும்— தலைவர் களின் படங்கள்! ஒரு சில மத்திய மந்திரிகளின் போட் டோக்கள்!

சம்பிரதாயமான கேள்விகள் முடிந்தன... அப்புறம் கதர், வேலையை விசாரிக்க ஆரம்பித்தார்...

"உங்களுக்கு நூத்தைம்பதுரூபா சம்பளம். எங்க போனாலும் செலவுக்கு படியும் உண்டு... தங்க வசதியும் பண்ணித்தர்ரோம்..."

"வேலை?"

'நம்ப பத்திரிகைகளிலே, ரேடியோவ்லே கெடைக்குற புள்ளி விபரங்களை சேகரிக்கணும். நாட்டு மக்களுக்காக நம்ம சர்க்கார் எவ்வளவோ செய்ஞ்சிருக்கு... எவ்வளவோ திட்டங்கள் போட்டிருக்கு. அதையெல்லாம் கிராமங்கள்லே நீங்க பிரச்சாரம் பண்ணனும்... எதிர்க்கட்சிக் காரங்க பண்ற அட்டூழியங்களை எல்லாம் காத்துலே பறக்கிற மாதிரி மேடைகள்லே பேசணும், கிராம ஜனங்களுக்கிட்டே நேரடியாகவும் போய் பிரச்சாரம் செய்யணும்..."

கதர் இன்னும் பேசிக் கொண்டுதானிருக்கிறார். கைகளை ஆட்டிக் கொண்டும், படங்களில் உள்ள தலைவர்களைக் காட்டியும், இல்லாத பொல்லாத பெருமைகளையும் அளந்து கொண்டிருந்தார். அவனுக்கோ கொதிப்பு ஏற்பட்டது.

பார்பர் ஷாப்பில் பத்திரிகை படிக்கும் போது மத்திய மந்திரியின் பொய் முழக்கத்தைப் படித்துவிட்டு உணர்ச்சி வசப்பட்டது நினைவுக்கு வந்தது. 'அதே பொய்யை அந்த மாதிரியான இன்னும் ஏராளமான பொய்களை ஊர் பூராவும் போய் சொல்லணும்... ஜனங்கள் நம்புற மாதிரி சொல்லணும். கொஞ்ச நேரத்துக்கு முந்தி நா எதைக் கண்டு சீறிச் சினந்து வெறி கொண்டேனோ... அதுக்கே நா சேவகனாக மாறணும்... இது எனக்கே நா செய்ற துரோகமில்லையா, மக்களுக்கு நான் செய்ற அநியாயமான துரோகமல்லவா?'

பேசிக் கொண்டிருந்த கதர் புரியாத குழப்பத்துடன் அவனது முகத்தைப் பார்த்தார். அவன் விருட்டென்று எழுந்தான்.

"போறேங்க... குட்பை..." என்று சலாம் போட்டுவிட்டு வெளியேறியவனை ஒரு புதிரைப் போல – கதர் பார்த்தார்.

அவனது நடையில் வேகமிருந்தது. மனதில் ஆரவாரக் கூச்சல் எல்லாம் அடங்கிப் போய்விட்டது. இதயத்தின் கதவுகள் இறுக்கமாக மூடிக் கொண்டன.

அவனது நெஞ்சுள் ஒரு இறுக்கமான வைராக்கியம் சூல் கொண்டு விட்டது. போர்க் குணத்தின் விழிப்பு அவனது சிந்தனையில் ஒளியைப் பாய்ச்சியது.

"எல்லாத்தையும் விட வாழ்க்கை உன்னதமானது தான். ஆனால் வாழ்றதுக்கு வேறெ வழிகள் எல்லாம் அடைபட்ட சூழ்நிலையிலே... இந்த மாதிரியான துரோகத்தை விட மரணம் சிறப்பானது தான்."

அண்டர்வேர் பையுள் கிடந்ததை ஆசையுடன் தொட்டுக் கொண்டான். கடற்கரையை நோக்கிநடந்தான்...

சிகரம் – ஆகஸ்ட், 1978

13.பிரம்புபதேசம்

பிரம்பு வாத்தியாருக்கு தலைகால் புரியாத சந்தோஷத் தத்தளிப்பு, இன்றைக்கு. பெருமிதமும், பூரிப்புமாய் மனம் காற்றடைத்த பலூனாய் மிதந்தது அந்தரத்தில். ஒரே கொந்தளிப்பு.

'இந்த உத்தியோகம் இத்தனை அருமையானதா? இவ் வளவு அற்புதமா? இதுக்கு இம்புட்டுப் பிரயோசனமா? இத்தனை மவுசு, மரியாதையா?'

வியப்பிலும் மகிழ்ச்சியிலும் அவருக்கு மூச்சுத் திணறியது. கறுத்த முகத்தில் ஒரு விசேஷ வெளிச்சம். உதட்டு வரிகள் அழிந்து போகிற அளவுக்கு பூ மலர்ச்சி.

'ஆசிரியர் உத்யோகம் உன்னதமானது' என்பதை பலபல விதங்களில் விளக்கி, பள்ளி ஆண்டு விழா மேடைகளில் பேசிய அனுபவம் நிறைய.

''அகரம் கற்றுக்கொடுத்து சிறுவர்களை சிகரம் ஏற்றுக்கிற ஆசிரியர்கள், பிள்ளைகளின் மூன்றாவது கண். ஞானக்கண். பிள்ளைகளின் பிறவிக் கண்களுக்கு முழு வெளிச்சமும், அர்த்தமும் வழங்குவதே, இந்த மூன்றாவது கண்தான். இந்த ஞானக்கண்தான், பிள்ளைகளுக்கு மொழிச்சாளரத்தை விரியத் திறந்து பிரபஞ்சத்தையே உணர வைக்கிறது.''

என்றெல்லாம் 'தாம் தூம்'மென்று விளாசித் தள்ளுவார். அதெல்லாம்... படித்தறிந்த ஒரு விஞ்ஞானத் தகவலை எடுத்து விடுகிற வாய் வித்தைதான். மனம் உணர்ந்த அனுபவ உணர்ச்சிகளை வார்த்தையாக்குகிற மன ஒட்டுதல் அதிலெல்லாம் இருந்ததில்லை.

ஆனால், இன்றைய அனுபவமே வேறு. தனி தினுசு. தன்னைத்தானே தரிசித்துவிட்ட பரவசம். தனது உத்யோக அருமையே வடிவம் கொண்டு முன் வந்து, வணங்கி சால்வை அணிவித்த பரவசத் தரிசனம்.

அடுப்பங்கரைப் பக்கம் திரும்பி, மனைவியை கர்வமாய்ப் பார்த்தார்.

“உப்புக்கல்லுக்குப் பெறாத மனுசரய்யா நீரு. ஒமக்கும் வாத்தியார் வேலை போட்டு ஒருத்தன் குடுத்துருக் கான்னா... அவனும் ஒரு துப்புக்கெட்ட கேணயனாத் தான் இருப்பான்...” என்று வாய்ப்பு கிடைக்கிற போதெல்லாம் வாயை அள்ளிவிடுகிற பெஞ்சாதியை பெருமிதமும், பூரிப்புமாய் நிமிர்ந்து பார்த்தார். அவரது விரிந்த உதடுகளில் அந்திநேரச் சின்ன வெயில்.

“என்னமோ... வாய் புளிச்சதோ மாங்காய் புளிச்ச தோன்னு ஏளனமா பேசு...யே... பாத்தீயா ஐயோவோட பெருமையை?” என்று எக்கா...மாய் கேட்கிற அவரது கண்கள்.

அவளும் இவருக்குச் சளைத்தவளா? பார்வையால் ஒரு வெட்டு வெட்டி, முகத்தை ஒரு நொடிப்பு நொடித்தாள். “ரொம்பவும் பீத்திக்கிடாதீக. உம்ம பவுசு எனக்குத்தானே தெரியும்? கந்தசாமி பாவம், கண்டானா என்ன? அவன் ஒரு அப்புராணிப்பய” என்று பாஷையில்லாமல் மடக்கிய அவளது கண்கள்.

பிரம்பு வாத்தியார் மடியில் மடித்துக் கிடந்த நீலக்கலர் உல்லன் சால்வையை ஒரு மழலையை வருடுகிற பாசத்தில் தடவிக் கொடுத்தார். சால்வையின் முள்முள்ளான இனிய ஸ்பரிசம், உள்ளங்கை வழியாக மன ஆழத்தில் சுகமாய் இறங்கிப் பரவியது.

பத்து வரைக்கும் படித்து முடித்துவிட்டு, வேலை வெட்டி எதுவும் கிடைக்க வழியில்லாமல், வேலை வாங்க

பணவசதியுமில்லாமல் ஊரைச் சுற்றித் திரிந்த கந்தசாமி, வறுமைப் பிடுங்கல் தாளாமல் அம்மா வயிற்றெரிச்சலில் திட்டித் தீர்க்க... வாலிபப்பிள்ளை கோபித்துக் கொண்டு எங்கோ ஓடிப்போய்விட்டான். 'அங்கே, இங்கே' என்று இலக்கில்லாமல் திரித்துவிட்டு, திரும்பிவரக் காசில்லாமல் தத்தளித்தபோது... அவன் இருந்த இடம் திருச்சி. பட்டாளத்துக்கு ஆள் எடுக்கிற இடத்தில் புகலில்லாமல் ஒதுங்கி வரிசையில் நிற்க, செலக்ட் ஆகிவிட்டான்.

ட்ரெயினிங் பீரியட் முடிந்த பிறகும் ஆறுமாசம் ஜம்முவில் இருந்துவிட்டு ரெண்டு மாச லீவில் நேற்றுத் தான் ஊர் வந்து சேர்ந்தான். கரும்பச்சை காக்கியில் ட்ரெஸ்ஸும், தொப்பியும் மாட்டி, வினோதமான பெட்டி படுக்கையோடு பஸ்ஸில் வந்து இறங்கிய அவனைக் கண்டு, அடையாளம் தெரியாமல் தவித்தது, கிராமம்.

இன்றைக்கு என்னடாவென்றால்... பிரம்பு வாத்தியார் வீட்டுக்குள் வந்து "வணக்கம் சார்" என்றான். வாத்தி யாருக்கு ஏகக் குழப்பம். யாரென்று நிதானம் பிடிபட வில்லை. கண்ணாடியை ஏற்றி விட்டுக்கொண்டு அண்ணாந்து பார்த்தார். பரிச்சயமான குரலாக முகமாக இருக்கிறதே என்கிற தவிப்பு வேறு...

"சார், என்னைத் தெரியலியா...? நாந்தான்."

அவர் முகத்தில் சட்டென்று ஒரு வெளிச்சப் பரவல். நிதானம் பிடிபட்டுவிட்ட மகிழ்ச்சி.

"அடடே... நம்ம பழைய ஸ்டூடண்ட் கந்தசாமி இல்லே? ராக்கம்மா மகன்தானே?"

"ஆமா... சார்!"

"மிலிட்டரியிலே இருக்கிறதாகச் சொன்னாகளே...?"

"நேத்துத்தான் சார்... வந்தேன்."

"லீவ்லேயா?"

“ஆமா சார். ரெண்டு மாச லீவ்.”

“ரொம்ப சந்தோஷம். உக்காரு இப்படி.”

“பரவாலே சார்.”

“அட உக்காரப்பா. நம்ம ஒல்டு ஸ்டூடண்ட் நல்ல பொசிஷன்லே இருக்கிறதைப் பாக்குறத்துக்கு எம்புட்டுச் சந்தோஷமாயிருக்கு?”

“சார்... இன்னிக்கு நா இப்படி ஒரு உருப்படியான நிலையிலே இருக்கிறதுக்கே... நீங்களும் உங்க பிரம்பும் தான் சார்... முழுக்காரணம்.”

“என்னப்பா சொல்றே, கந்தசாமி?”

“ஆமா சார். நாலாங்கிளாஸ்லே நா சேர்ந்த புதுசு. பள்ளிக்கோடமே போகமாட்டேன்னு எங்கம்மாகிட்டே ஒரே பிடிசாதனை பண்ணுனேன். அம்மாவும் எம்புட்டோ... என்னக் ‘கெஞ்சு, கெஞ்சு’ன்னு கெஞ்சிப்பாத்தா. நா முடியாதுன்னுட்டு ஆத்துக்காட்லே சுத்திக்கிட்டிருந்தேன்...”

“அப்படியா?”

“அப்பத்தான்... நீங்க ஒரு நா... சாயங்கால நேரத்துலே ஆத்துலே வைச்சு என்னைப் பாத்தீக ‘ஏண்டா ஸ்கூலுக்கு வரலே’ன்னு ஒரு அதட்டு அதட்டுனீக. உங்ககிட்டே பிரம்படி பட்ட அனுபவம் எனக்கு. அம்புட்டுத்தான். பதறிப்போய் டவுசரை நனைச்சிட்டேன்.”

வாத்தியாருக்கு சிரிப்பாணி அள்ளிக்கொண்டு வந்தது. வெகுளித்தனமாய் கந்தசாமி சொல்லச் சொல்ல, இவருள் விரிகிற காட்சிப்படலம். பிடிபட்ட குருவிக் குஞ்சாய் தவித்து விழிக்கிற ஒரு சிறுவன்... நடுக்கத்தில் ஒன்னுக்கிருந்து நனைந்து துவள்கிற டவுசர்...

அணி அணியாய் பொத்துக்கொண்டு வெடித்த சிரிப்பு. மனம் விட்டுச் சிரித்தார். கந்தசாமி லஜ்ஜை தாளாமல்

நெளிவதைக் கண்டு சிரிப்பை சிரமப்பட்டு அடக்கினார். அடக்க அடக்க... சிதறிச் சிதறி விழுந்த சில்லறைச் சப்தமாய் கரைந்து தணிந்தது.

கந்தசாமி தொடர்ந்தான்:

"அப்ப நீங்க சொன்னீங்க: 'ஏலேய், எம்பிரம்பைப் பத்தித் தெரியுமாடா, ஒனக்கு? நாளையிலேயிருந்து ஒழுங்கு மரியாதையாய் ஸ்கூலுக்கு வரணும். இல்லே... பிரம்பு பிஞ்சு போகும்'னு சொல்லிட்டுப் போயிட்டீக... மறுநாளே ஸ்கூலுக்கு வந்துட்டேன்."

"அடடே... அப்படியா சங்கதி?"

"ஆமா சார். அன்னிக்கு பிரம்பைக் காட்டி நீங்க அதட்டுப் போடலேன்னா... ஆத்துக்காட்லே சுத்தித்திரிஞ்சு, ஆட்டுக்குட்டி மேய்ச்சிக்கிட்டு, எதிர்காலத்தையே நாசம் பண்ணியிருப்பேன். படிச்சு முடிச்சு, உருண்டு புரண்டு நா இன்னிக்கு ஒரு உத்தியோகத்துக்கு வர முடிஞ்சதுன்னா... அதுக்கு நீங்கதான் சார் காரணம்!"

"ஆமாம்... நீ படிக்கிறப்ப, அந்த செட்லேயே நீதானே பஸ்ட்ரேங்கா இருந்தீயே?"

"ஆமா சார். உங்க பிரம்புக்கு பயந்துக்கிட்டு ஸ்கூலுக்கு வந்தேன். அந்தப் பயத்துலேயே நல்லா படிச்சுட்டேன்."

ஆள் பார்க்க வாட்டசாட்டமாய் லட்சணமாயிருந்தான். டிப்டாப்பாக டிரஸ் பண்ணியிருந்தான்.

ஜம்முவில் இவர் ஞாபகமாய் ஒரு உல்லன் சால்வையை வாங்கினானாம். மார்கழி, தைப்பனிக்குக் கதகதப்பா யிருக்கும் என்று நினைத்தானாம். நன்றி உணர்ச்சியுள்ள நல்ல பயல்.

சால்வையை வழங்குகிறபோது, முத்துமுத்தாய் ஒரு விஷயம் சொன்னான் "உங்க அருமையை நீங்க தெரிஞ் சிருக்கீகளோ... இல்லையோ சார்... உங்க அருமையாலே

முன்னுக்கு வந்த எங்களுக்குத்தான் சார், அதோட அற்புதமும், மகிமையும் தெரியும்.''

இது... நூற்றிலொரு வார்த்தை. சத்தியமான நிஜம். இந்த நிமிஷம் வரைக்கும் இந்த உத்தியோகத்திற்கு இப்படியோர் மவுசு உண்டு என்று மனசால் உணர்ந்ததேயில்லை அவர். கந்தசாமி சொல்லச் சொல்ல, இவருள் ஏதோ திரண்டு வந்து நெஞ்சுக்குள் அடைத்தது. ஒருவகையான மூச்சுத்திணறல். கண்ணோரங்களில் மன நெகிழ்வின் கசிவு. நரம்புகளின் ஊடே ஓடிப் பாய்ந்த பரவச உணர்ச்சி.

ஏதோ... ஒரு மாயக்கரம் நீண்டு வந்து கிரீடம் தூக்கி தலையில் வைத்த மாதிரியானதோர் மனப்பிரமை. சுகமான மயக்கமூட்டுகிற மாயப்பிரமை.

பட்டாளத்தான் கந்தசாமி போய் ரொம்ப நேரமாகி விட்டது. இன்னும் அந்த பிரம்மையிலிருந்து விலகமுடிய வில்லை. விலக மனமில்லை. தேனின் பிசுபிசுப்புக்குள் சிக்குண்ட எறும்பாக அவர்.

செவிக்குள் அவனது வார்த்தைகள். விசுவாசமும், நன்றி உணர்ச்சியுமான ஈர வார்த்தைகள். 'சம்பளத்துக்கு மாரடிக் கிற உத்யோகம் மட்டுமில்லை. அதற்கும் மேலான மேன் மைகள் உள்ள சிருஷ்டிப்புத் தொழில்... ஞானப் பிரம்மத் தொழில்...' என்று உணர்த்துகிற– இவருக்கே இவரை உணர்த்துகிற– வார்த்தைகள்.

அந்த லயிப்பிலேயே புரண்டு மயங்கி மனசுக்குள் முகம் காட்டுகிற ஓர் எண்ணம்.

'அவன் கிரீடம் சூட்டிப் பாராட்டுனது, என்னையா... என்னோட பிரம்பையா?'

அந்த எண்ணம் வந்தவுடன், தன்னுள் தானாய்க் குழைந்த மனநிலையில் பெருமை பொங்க முறுவலித்துக் கொண்டார்.

'நிஜம் தான். நா வேற, பிரம்பு வேறன்னு பிரிச்சுப் பார்க்க முடியுமா... என்ன?'

பரமசிவம் வாத்தியார் அந்தக்கால இ.எஸ்.எல்.சி. அதாவது, எட்டு. டீச்சர் ட்ரெயினிங்கில் (பணம் கட்டாமல்) இடமும், முடித்தவுடன் (லஞ்சம் கொடுக்காமல், உத்தியோகமும் அட்டியில்லாமல் கிடைத்த காலம் அது.

வாத்தியார் உத்தியோகத்தில் வஞ்சகமில்லாமல் பாடு பட்டார். நூறு ரூபாய், நூற்றைம்பது ரூபாய்ச் சம்பளத்தில் நொம்பலப்பட்ட காலம் நிறைய்ய. கிழிந்த பனியனை சட்டையைப் போட்டு மறைத்துக்கொள்கிற வாழ்க்கை. கிழிசலை மடிப்புக்குள் தள்ளி துண்டை தோளில் போட்டு சமாளித்த அனுபவம்.

'வக்கத்தவனுக்கு வாத்தியார் உத்தியோகம்' என்ற சொலவடை புழக்கத்திலிருந்த காலத்தில்... வறுமை அவலத்தின் சகல அவமானங்களையும் தாங்கிக் கொண்டே, வகுப்பில் நேர்மையும் ஆர்வமுமாய் உழைத்தவர், பரமசிவம் வாத்தியார்.

வறுமைப்பட்ட வாழ்க்கை பந்தாட, கடைகளில்– தெருக்களில்– சம்சாரிகளிடம் இவர் நடித்த நடிப்பு, போலிப் புன்னகை, கைமாத்துக்கு அலைகிற அவமானம், நேர்கிற மனக்காயம் எல்லாம் நிறம்மாறி அவர் கையிலி ருக்கும் பிரம்பில் வந்து நிற்கும்.

போக்கிடமற்ற உள் குமுறலும், புகலிடமற்ற ஊமைக் கோபங்களும் அவரை கடுகடுத்த முகமும், கண்டிப்பு மான ஆளாக ஆக்கிவிடும்.

'அடியாத மாடு பணியாது' என்று சொலவடையில் அவருக்கு ரொம்ப விசுவாசம், ஆழ்ந்த நம்பிக்கை. பிரம்பும், கையுமாய் வகுப்பில் உயிர் கரைந்து செயல்படுவார். பிரம்பு வேறு, அவர் வேறு என்று பிரித்துப் பார்க்க வழி யிருக்காது. அவருக்கு முளைத்த மூன்றாவது கைமாதிரி, பிரம்பு.

பிரம்பை தாராளமாகவே பிரயோகிப்பார். 'பிரம்புதான் பிள்ளைகளுக்குப் போதி மரம்' என்று நம்புவார். பிரம்பின் நுனியை ஒரு உதறு உதறிவிட்டு சுளீரென்று விளாசினால்... அந்தச் சத்தம் பாதி ஊருக்குக் கேட்கும். அடிபட்டவன் கதறுகிற கதறலில், அடுத்தவன் ஒன்னுக்கு இருந்து விடுவான். அடிபட்டவன் ஜென்மத்துக்கும் மறக்க மாட்டான், தீப்பட்டமாதிரி வலிக்கிற அந்த வேதனையை...

நாலாப்பைத் தாண்டிப்போன சகல பிள்ளைகளும் இந்தப் பிரம்படியிலிருந்து தப்பித்துப் போனதில்லை. அப்படி யாரேனும் போயிருந்தால்... அது உலகின் பத்தாவது அதிசயம்.

இவரது பிரம்படி ரொம்பப் பிரபல்யம். பள்ளியில் மட்டுமல்ல, ஊர்மடத்தில் இழவு வீடுகளில் குடிநீர் கிணற்ற டியில் இப்படி மனுச மக்கள் கூடுகிற இடமெல்லாம், இது பற்றிய பேச்சு நிச்சயம்.

பிரம்பால் வந்த வினை ஜாஸ்தி. வம்பு தும்புகளுக்குப் பஞ்சமேயில்லை. அடிபட்ட பிள்ளையை பெற்றவர்கள் மனம் கொதித்துப் போய் வந்து, சண்டை போட்டு நாற வசவு வைத கதைகள் அநேகம். அதற்கெல்லாம் அசறுகிறவர் கிடையாது, பரமசிவம் வாத்தியார்.

"வாத்தியார் அடிச்சவுடனே சண்டைக்குத் தாய் தகப்பன்மார் வரலாமா, சார்? அறிவிருந்தா... வருவாகளா? இந்தத் தாய், தகப்பன்மார் அவுக புள்ளைகளை அடிக்கவே மாட்டாகளா? பூப்போட்டு பாராட்டுவாகளோ? வாத்தியார் அடிச்சிட்டா மட்டும், புள்ளே கொறைஞ்சு போவானோ? போங்க சார்?" என்று அலட்சியமாகப் பேசுவார். அதோடு, தர்க்கரீதியாகவும் வாதாடுவார்.

"இப்படிப்பட்ட தாய் தகப்பன்மார்களாலேதான் புள்ளைக கெட்டழிஞ்சு யாருக்கும் பயன்படாம நாசமாயி டுதுக. புள்ளைக முன்னாலே வாத்தியாரை மானக்கேடா பேசுனா... அந்தப் பய வாத்தியாரை மதிப்பானா? படிப்பை

மதிப்பானா? படிக்காம புத்தி கெட்டுப்போய் ஆடுகாலித் தனமாய் அலையிறபய நாளைக்கு தாய்தகப்பனை மட்டும் மதிப்பானா? ஊர் உலகத்தை மதிப்பானா? தர்ம நாயத்தை மதிப்பானா?''

ஆக... சகலர் வாய்களிலும் விழுந்து புரண்டு, பரமசிவம் வாத்தியார்... நீரோடு உருண்டு வருகிற கூழாங்கல் மாதிரி, பரமுவாத்தியாராகத் தேய்ந்து... பிரம்பு பிரபல்யத்தினால் 'பிரம்பு வாத்தியார்' என்றாகிவிட்டார். சக ஆசிரியர்கள் கூட அவரைப் 'பிரம்பு சார்!' என்று தான் கூப்பிடுவார்கள்.

'அலோ பிரம்பு சார், ஆர்ப்பாட்டத்துக்குப் போனீகளா?''

''என்ன பிரம்பு சார், மறியலுக்கு உங்க பேரைக்குடுக்கப் போறீகளா, சார்?''

''பட்ஜெட்லே நமக்கு என்னமும் உண்டா, பிரம்பு சார்?''

இப்படித்தான்... ஒரு தடவை, பள்ளிக்கு இன்ஸ்பெக்ஷ னுக்காக ஏ.இ.ஓ. (உதவிக் கல்வி அலுவலர்) வந்திருந்தார். தங்கமான மனிதர். சுத்தமான நேர்மை. வேலைகளில் கறார். தனி உபச்சாரம் எதிர்பார்க்க மாட்டார். மென்மையானவரும் கூட. சக தோழர்களாக ஆசிரியர்களை மதித்துமிருதுவாக நடத்துவார்.

சுருங்கச் சொன்னால்... ஏ.இ.ஓ.க்களில் அவர் ஓர் அத்திப்பூ.

அவர் வந்திருந்த சமயத்தில், ஹெச்.எம். ஒவ்வொரு காரியத்துக்கும் ''பிரம்பு சார், பிரம்பு சார்'' என்று அடிக் கொரு தடவை கூப்பிட்டுக் கொண்டிருந்தார்.

அந்தப் பெயரின் வித்தியாசத் தொனி, ஆபீஸரை உறுத்த, அது பற்றிக் கேட்டார். ஹெச்.எம். தர்மசங்கடமாய் நெளிந் தார். அதை இதைச் சொல்லிச் சமாளித்துப் பார்த்தார்.

ஆபீஸர் விடுவதாக இல்லை. உள்ளதைச் சொல்லும் படியாகிவிட்டது.

முழுக் கதையையும் கேட்டுவிட்டு, மென்மையாய் முறுவலித்தார். பிரம்பு சாரை கனிவோடு பார்த்து மிருதுவான குரலில் கூறினார்:

"உங்க கொள்கைக்கு உங்க அளவுலே வலுவான அனுபவம் காரணமாயிருக்கலாம். ஆனா, என்னோட ஒப்பீனியன் என்னன்னா... நடத்துற பாடங்கள்லே நமக்கு நல்ல தெளிவும், நடத்துற முறையிலே தன்னம்பிக்கையும் இருந்தா... ஒரு நல்ல ஆசிரியருக்கு பிரம்போட உதவி எந்த நேரத்துலேயும் தேவைப்படாது. பிரம்பும், மிரட்டலும் சர்க்கஸ் மிருகங்களுக்குத்தான் அவசியம். புள்ளைகளுக்கு அவசியமேயில்லை."

ஏ.இ.ஒ. போன பிறகு பிரம்பு வாத்தியார் ரொம்ப ஆவேசமாய் மறுத்துப்பேசினார், ஹெச்.எம்.மிடம்.

"இவரு கிடக்காரு... இவருக்கு அனுபவம் பத்தாது, சார்... ஏட்டுச் சுரைக்காயை நம்மகிட்டே குழம்பு வைக்கக் குடுக் கிறாரு. நானுந்தான் டீச்சர் ட்ரெயினிங்க்லே படிச்சேன். அங்கேயும் சைக்கலாஜிக் பிரிவுலே இதே சுரைக்காயைத்தான் நமக்கு சொல்லிக்குடுத்தாக. ஆனா, நடப்புக்கு ஒத்துவரல்லியே..."

அவருக்குப் பிரம்பு மேலுள்ள காதல் குன்றவேயில்லை. 'அடியைப் போல அண்ணன் தம்பிகூட உதவ மாட்டான்' என்ற சொலவடையை உண்டாக்கிய மாமனிதரைத் தேடிக் கொண்டிருக்கிறார், வாயில் சீனி அள்ளிப்போட.

இதோ பட்டாளத்துக் கந்தசாமி, பிரம்புக்கு கிரீடம் சூட்டிவிட்டுப் போகிறான். அவன் பரிசாக வழங்கிவிட் டுப் போன உல்லன் சால்வை. கருநீல நிறத்தில் ஆகாயம் போல சால்வை. வெள்ளிமேகக் கோடாக ரெண்டு பார்டர்.

பத்தாவது தடவையாக விரித்துப் பார்க்கிறார். பிடிபடாத பெருமை. பொங்கிப் பொங்கிப் வழிகிற பூரிப்பு. தலைகால் புரியாத சந்தோஷத் தத்தளிப்பு.

இது, அவர் கொள்கைக்குக் கிடைத்த விருது. வாழ்ந்த வாழ்க்கைக்கான அர்த்தம். அவரையே அவருக்கு உணர்த்திய உன்னதம்.

வீட்டு வாசலில் வேற்றுப் பிள்ளைகளின் நிழல். ஒன்றிரண்டு இளவட்டங்கள். பெண்கள். மணியைப் பார்த்தார். பன்னிரண்டு நெருங்கியது. ஞாயிற்றுக்கிழமை. மதிய நாடகம், டி.வி.யில். அதை 'ஆன்' பண்ணினார். கஞ்சிக்கு வழியில்லாத ஏழைகளை பரிகாசம் பண்ணுகிற 'காம்ப்ளான் பாய்' பாணி விளம்பரங்கள்.

சால்வையை பெருமையாக போர்த்திக் கொண்டு வெளியேறினார். நாலு பேரிடம் காட்டணும். ஏது சால்வை என்று விசாரித்தால்... நிறையச் சொல்லணும்.

மனசுக்குள் ததும்பல். பூரிப்பில் மிதக்கிற அவருள் அலை அலையாக நினைவுகள். இவரிடம் பிரம்படி வாங் கிப் படித்து முன்னேறியவர்கள். டாக்டர், இஞ்ஜினீயர், வழக்கறிஞர், தொழிலதிபர், சென்னை வண்ணாரப் பேட்டையில் பலசரக்குக் கடை முதலாளிகள் என்று வரிசை வரிசையாய் முகங்கள்.

இவரால் உருவாக்கப்பட்டவர்கள். இவரது பிரம்புபதேசத்தில் ஞானம் பெற்று வசப்பட்டவர்கள். ஒழுங்கு நிலைக்கு வந்து உயர்ந்து போனவர்கள்.

கந்தசாமி புகழ்ந்த புகழ்ச்சியில்... அவருள் புதைந்து கிடந்த சாதனைகளெல்லாம் உயிர் பெற்று ஊர்வலம் வர,

ஊர் மடத்திற்கு வந்தார். அங்கு எப்பவும் ஒரு கூட்டம். சமுத்திரம் மாதிரி வற்றவே வற்றாது.

அந்தச் சூழலுக்கே உறுத்தலான அந்நியமாய் அந்தச் சால்வை ஒளி வீசி, கவனங்களை ஈர்த்தது.

"என்ன சார், மார்கழி மாசம்னு நெனைச்சீகளா? ஆடி மாசத்துலே உல்லன் சால்வையை மூடிக்கிட்டு வாரி களே?"

இது போதாதா? இவர் அள்ளிவிட ஆரம்பித்துவிட்டார். அவருள் ததும்புகிற பெருமிதம். முகமெல்லாம் பூரிப்பின் மின்னல். எல்லாம் வார்த்தைகளாகி...

காலைக்கரண்டு. மதிய வரைக்கும் த்ரீபேஸ் கரண்டு. கூலிக்குத் தண்ணீர் பாய்ச்சிவிட்டு, குளித்து முடித்து, ஈரக்கைலியும் துண்டுமாய் வந்தான், சின்னச்சாமி. தோளி லிருந்து மண்வெட்டியை கால்மாட்டில் வைத்து விட்டு, நின்ற நிலையில் வாத்தியார் பேச்சில் உன்னிப்பானான்.

அவன் பாதமெல்லாம் நீரில் ஊறி நனைந்து வரிவரியாக ஒடிக்கிடந்தது. கணுக்காலுக்குக் கீழே ரத்த ஓட்டமே அற்றுப்போன மாதிரி, வெளுத்துக்கிடந்தது.

பிரம்பின் அருமை. பட்டாளத்தான் கந்தசாமியிலிருந்து, டாக்டர், வக்கீல் என்று வண்ணாரப்பேட்டை கடை முதலாளி வரைக்கும் வந்துவிட்டார், வாத்தியார். மெய்மறந்து பேசிக்கொண்டிருந்தார்.

ஒரு பீடியை பற்றவைத்து குச்சியை எறிந்த சின்னச்சாமி, சமயம் பார்த்து பேச்சில் கலந்துகொண்டான்.

"எங்கய்யாவுக்கு நா ஒத்தைப்புள்ளை. என்ன பாடுபட் டாச்சும் என்னைப் பெரிய படிப்பு படிக்க வைக்கணும்னு அவருக்கு ரொம்ப ஆசை. வாய்க்கு வாய் அந்த ஆசையைச் சொல்லிக்கிட்டேயிருப்பாரு. நானும் நல்லாத்தான் படிச்சேன். நாலாப்புக்கு வந்து சேந்தேன். நாலாப்புலே சார்தான் வாத்தியாரு. பிரம்பை வைச்சு அடின்னா... அடி, அப்படி அடிப்பாரு. எடுத்ததுக்கெல்லாம் அடிதான். என்ன ஏதுன்னு விசாரிப்பே கிடையாது. ரெண்டு பயக சண்டை போட்டா... ரெண்டு பேருக்கும் அடிதான். சாணி பிதுங்கிப் போகும்..."

எல்லாருக்கும் கதை கேட்கிற ஆசை. வாத்தியாரும் சின்னச்சாமியையே பார்த்தார்.

“அப்படித்தான் ஒரு நா. பின் பெஞ்சுலே சம்பத்து உக்கார்ந்திருந்தான். முன்பெஞ்சுலே நா. என்னைக் கிள்ளிக் கிள்ளி வைச்சான். ‘சும்மாயிருடா’ன்னேன். பாடம் நடத்திக்கிட்டிருந்த சாரு, ‘என்ன சத்தம்’னு பிரம்பை எடுத்தாரு. அம்புட்டுத்தான். என் உடம்பு பூராவும் இடி மின்னல். சுரீர் சுரீர்னு பிரம்படி. துள்ளத் துடிக்க அலறிக்கிட்டு அன்னிக்கு ஓடிப்போய் மம்பட்டியை தூக்குனவன் தான்... இந்தா... கூலிக்காரனா இன்னிக்கு மம்பட்டிப் பொழப்புதான். என்னை மாதிரி ஓடிப்போன பயக எத்தினி பேரோ?”

விளையாட்டும் சிரிப்புமாய் வேடிக்கையாய்ப் பேசினான், சின்னச்சாமி. எல்லோரும் ‘சிரியோ, சிரி’யென்று சிரித்து உருண்டார்கள். மடம் முழுக்க சிரிப்பாணி.

வாத்தியாரும் சிரித்து வைத்தார், ஆளோடு ஆளாய். உயிரில்லாத சிரிப்பு. அசட்டுச் சிரிப்பு. உள்ளுக்குள் சின்னச்சாமியின் அனுபவம், ஊசியாகப் பாய்ந்து குத்தி யது. ஆசிரியமனம் குற்ற உணர்வில் கூசியது.

வேடிக்கையும் கூத்துமாய் பேசினாலும், விஷயம் இதுதானே?

‘படிப்புக்கனவை உதறிப் போட்டு கூலிக்காரனா நா மாறுனதுக்கு ஒரு பிரம்புதான் காரணம். இப்படிப் பல பேரு படிக்க முடியாம பதறி ஓடுனதுக்கும் ஒம்மோட பிரம்புதான் காரணம்.”

இதைத்தானே... சொல்லாமல் சொல்கிறான், சின்னச் சாமி?

அப்போ.... பட்டாளத்தான் கந்தசாமி சொல்றது?

எது நிஜம்? கந்தசாமியா, சின்னச்சாமியா? ரெண்டுமே நிஜம்தானா?

பிரம்புக்குப் பணிந்து உருப்பட்ட கந்தசாமிகள் ஒரு சிலராகவும், பயந்து வெருண்டோடிய சின்னச்சாமிகள் பலராகவும் இருக்குமோ...?

காற்றுப்போன பலூனாக சப்பென்று துவண்டு, மண்ணில் விழுந்தது, அவரது மனம். குற்ற உணர்வின் முள் உறுத்தல்.

“படிக்க விடாம பயமுறுத்தித் தொரத்தியடிச்ச பாவீ” என்று மவுனக் கதறலாக அலறுகிற சின்னச்சாமிகளின் குற்றச்சாட்டுகள்.

மனச்சாட்சி வேதனை தாளாமல் மவுனஅலறலாய் அலறுகிறது.

அன்றைக்கு, அந்த ஏ.இ.ஓ. சொன்ன ஒப்பீனியன்... “தெளிவும் தன்னம்பிக்கையும் உள்ள நல்ல ஆசிரியருக்கு பிரம்பு எதுக்கு?”

அப்போ எங்கிட்ட தெளிவில்லையா? தன்னம்பிக்கை யில்லையா? நேர்மை மிக்க அவருக்குள் கேள்விகள். தன்னைத்தானே விசாரித்துக் குடைகிற கேள்விகள்...

இப்போது—

சால்வை முள்முள்ளாக உறுத்துகிறது. வேக்காடாகப் புழுங்கி வியர்க்கிறது. சால்வையின் சுமை தாளாமல் அவர் திணறினார்.

திங்கட்கிழமை வழக்கம் போல நாலாப்புக்குள் நுழைந்தார். மேஜையில் கிடந்த பிரம்பை ஒடித்து, குப்பைக் காகிதச் சுருள்களோடு சேர்ந்து, பள்ளி ஜன்னல் வெளியே வீசியெறிந்தார், பரமசிவம் வாத்தியார்.

‘புதிய ஆசிரியன்’ — பொங்கல் மலர் — 1994

திருவரசு புத்தக நிலையம்